# ஸ்ரீ கீதைப்பாட்டு

## (கீதைத் தாழிசை)

வடமொழி மூலம் - தாழிசை - பாரதியார் மொழிபெயர்ப்பு




பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

ஸ்ரீ

# கீதைப் பாட்டு

## கீதைத் தாழிசை

*(வடமொழி மூலம் - தாழிசை - பாரதியார் மொழிபெயர்ப்பு)*

*ஆசிரியர்:*

**அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்**

**சேது சமத்தான மகா வித்துவான்**

**பாஷா கவிசேகரர்**

**ரா. இராகவையங்கார்**

*பதிப்பாசிரியர்:*

**பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை**

*(தமிழ்ப் பல்கலைக் கழகம் - ஓய்வு)*

**பாரதி புத்தகாலயம்**

ஜி-7, அமுதம் குடியிருப்பு

தெற்கு போக் சாலை

தியாகராய நகர்

சென்னை - 600 017

# நூல் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கீதைப் பாட்டு |
| ஆசிரியர் | : | ரா. இராகவையங்கார் |
| பதிப்பாசிரியா | : | பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் |
| வெளியீட்டு நாள் | : | அக்டோபர் – 1997 |
| உரிமை | : | டாக்டர். ரா. விஜயராகவன் |
| பதிப்புரிமை | : | பாரதி புத்தகாலயத்தாருக்கு |
| நூல்கட்டு | : | தாள் அட்டை |
| தாள் | : | 10.5 வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18.5 செ.மீ. x 12.5 செ.மீ. |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 288 |
| படிகள் | : | 1000 |
| மின் அச்சுக் கோர்ப்பு | : | பிரிண்ட் பாய்ண்ட் கிராபிக்ஸ் சென்னை - 20. ☎ 443 0828 |
| அச்சிட்டோர் | : | மோனார்க் ஆஃப்செட், சென்னை - 14. |
| வெளியீட்டாளர் | : | பாரதி புத்தகாலயம் ஜி-7, அமுதம் குடியிருப்பு தெற்கு போக் சாலை தியாகராய நகர், சென்னை - 17 |
| பொருள் | : | தத்துவம் |
| விலை | : | ரூ. 55.00 |

# பதிப்புரை

*பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை*

'வில்பெரு விழவும், கஞ்சனும், மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னை, புரமெரி செய்த
சிவன்உறு துயர்களை தேவை,
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்தன் தேர்முன் நின்றானை,
சிற்றவை பணியால் முடிதுறந் தானை,
திருவல்லிக் கேணிக் கண்டேனே!'

இவ்வாறு அர்ச்சுனனாகிய பார்த்தனது தேரின்முன் குதிரையோட்டும் கோலைக் கையில் கொண்டு நின்ற கண்ணனின் திருவுருவைக் கண்டு களிக்கிறார் திருமங்கையாழ்வார் (பெரியதிருமொழி: 2-3). திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டருளும் எம்பெருமான் திருநாமம் பார்த்தசாரதி. பார்த்தசாரதி திருவாய் மலர்ந்தருளியது கீதை.

கீதை என்பது உத்தம தர்மங்களைக் கூறும் தெய்வப் பாடல் ஆகும். அதாவது தெய்வமே முன்னின்று அருளிய ஞானோபதேசம் ஆகும். பகவான் கண்ணன் அருச்சுனனுக்கு அருளியது பகவத்கீதை என்று போற்றப் பெறுகிறது. ஈசுர கீதை, ரிபு கீதை முதலிய நூல்களும் தமிழில் உள்ளன.

கண்ணன் பாண்டவர் ஐவருக்கும் துரியோதனன் முதலிய கௌரவர் நூற்றுவர்க்கும் நிகழ்ந்த பெரும் போரில் ஈடுபட்டு ஐவரையும் வாழ்வித்தான் என்பது உலகம் அறிந்தது. இப்போரில் அருச்சுனனாகிய பார்த்தனுக்குத் தேரோட்டினான் கண்ணன், பார்த்தசாரதி என்னும் திருப்பெயரையும் பெற்றான். போர்த் தொடக்கத்தில் உற்றார் உறவினருக்கு எதிராகப் போரிடுவது முறையா என்னும் எண்ணத்தில் உள்ளம் கலங்கிச் சோர்வுற்று சோக வயத்தனானான் பார்த்தன். அவனுக்குக் 'கடமையைச் செய்! - 'பயனை எதிர்பாராதே!' என்று கீதையாகிய ஞானாமுதை வழங்கினான் கண்ணன். இக்கீதை எங்கும்

எல்லாராலும் போற்றிக் கற்கப்படுவது. இதனைப் பக்தர்கள் நியமமாகப் பாராயணம் செய்து வருவதும் உண்டு.

தமிழில் திருக்குறள் போன்று வடமொழியில் சிறப்பாகப் போற்றப் பெறும் ஞானநூல் பகவத்கீதை. இந்நூலும் உலகில் பற்பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுப் பலரும் படித்துப் போற்றி வருகின்றனர்.

> **'தொல் ஆணை நல்ஆசிரியர்**
> **புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்**
> **நிலந்தரு திருவின் நெடியோன்'**

எனவரும் 'மதுரைக்காஞ்சி' யடிகளின் (761-763) உரையில் கீதை அருளிச் செய்த நிகழ்ச்சி புலப்படும் என்கிறார் நச்சினார்க்கினியர்.

> **'எல்லா நிலத்தையும் தன்னிடத்தேகாட்டின**
> **பெருஞ் செல்வத்தையுடைய மாயோனைப்**
> **போலத் தொல்லாணையை உடைய நல்லாசி**
> **ரியர் என்றது, கண்ணன் எப்பொருளும்**
> **தானாயிருக்கின்ற படியைக் காட்டி ஸ்ரீகீதை**
> **அருளிச் செய்து எல்லாரையும் போதித்தாற்**
> **போலப் போதிக்க வல்ல ஆசிரியர்'**

என்பது அவர்தம் விளக்கம். ஆசிரியருடைய போதனைக்குக் கீதையை இவர் எடுத்துக் காட்டுதலால் அதன் சிறப்பு விளங்கும்.

'வியாசர் இயற்றிய ஒரு லக்ஷம் சுலோகங்களையுடைய மஹாபாரதத்திலே, பீஷ்ம பருவத்தில், பிரம வித்தையைப் புலப்படுத்துவதும், யோக சாஸ்திர மானதும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமாக வந்துள்ளது பகவத்கீதை என்னும் உபநிஷத்' என்று குறிக்கப்படுகிறது. பாரதியார் தம்முடைய கீதை மொழிபெயர்ப்பில், **'உபநிஷத்தும் பிரம்மவித்தையும் யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்பாஷணையுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதை'** என்று அத்தியாயந் தோறும் இறுதியில் தெரிவிக்கிறார்.

ஸ்ரீ சங்கராச்சாரியர், ஸ்ரீ இராமாநுஜர், ஸ்ரீ மத்வாச்சாரியர் முதலியோரால், பாஷ்யம் (விரிவுரை) வழங்கப் பெற்ற பெருஞ் சிறப்பினைப் பெற்றது இந்நூல்.

உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை ஆகிய மூன்றும் 'பிரஸ்தானத்திரயம்' (முடிவான பிரமாணமாக அமைந்த மூன்று) என்று போற்றப்படுகின்றன.

பகவத் கீதைக்குத் தமிழிலே பாடல்களாகவும் உரைநடையாகவும் பல மொழி பெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. உரைநடை மொழி பெயர்ப்புகளுள் இனிமையும் எளிமையுமான விளக்கமான மொழிபெயர்ப்பு மகாகவி சுப்பிரமணிய பாரதியாருடையதே. பாரதியார் தம் மொழி பெயர்ப்பு நூலுக்கு அருமையான விரிவான முன்னுரை தந்திருக்கிறார். அதில் கீதையின் சாரம் குறித்து அவர் எழுதியுள்ள பகுதி வருமாறு:

"ஈசனைச் சரணாகதியடைந்து இகலோகத்தில் மோட்ச சாம்ராஜ்யத்தை எய்தி நிகரற்ற ஆனந்தக் களியில் மூழ்கி வாழும்படி வழிகாட்டுவதே பகவத் கீதையின் முக்கிய நோக்கம். ஆதலால், இஃது கர்ம சாஸ்திரம்; இஃது பக்தி சாஸ்திரம்; இஃது யோக சாஸ்திரம்; இஃது ஞான சாஸ்திரம்; இஃது மோக்ஷ சாஸ்திரம்; இஃது அமரத்துவ சாஸ்திரம்.

"உலகமெல்லாம் கடவுள் மயம் என்ற உண்மையான வேதாந்தத்தைக் கீதை ஆதாரமாக உடையது. மாயை பொய்யில்லை. பொய் தோன்றாது. பின் மாறுகிறதே எனில், மாறுதல் மாயையின் இயற்கை. மாயை பொய் இல்லை. அது கடவுளின் திருமேனி. இங்குத் தீமைகள் வென்றொழித்தற்கு உரியன. நன்மைகள் செய்தற்கும் எய்துதற்கும் உரியன. சரணாகதியால் கடவுளிடம் தீராத மாறாத பக்தியால் யோகத்தை எய்துவீர்கள். எல்லா ஜீவர்களையும் சமமாகக் கருதக் கடவீர்கள். அதனால், விடுதலையடைவீர்கள். சத்ய விரதத்தால் ஆனந்தத்தை அடைவீர்கள். இல்லறத் தூய்மையால் ஈசத் தன்மை அடைவீர்கள். இந்த மகத்தான உண்மையையே கீதை உபதேசிக்கிறது."

இந்தக் 'கீதைப்பாட்டு' என்னும் 'கீதைத் தாழிசை' நூலினை ஆக்கியவர் சேது சமஸ்தான மகாவித்துவான் பாஷா கவிசேகரர் ரா. இராகவையங்கார். இவர் தமிழ், வடமொழிக் கடலைக் கடந்து கரை கண்டவர். இப்பேராசிரியர் சிறந்த மொழி பெயர்ப்பாசிரியருமாவர். வடமொழியிலுள்ள வால்மீகி ராமாயணத்தில் சில பகுதிகளையும், இரகு வம்சத்திலுள்ள சில சருக்கங்களையும் தாழிசைப் பாவில் மொழி

பெயர்த்துள்ளார். மகாகவி காளிதாசர் இயற்றிய வடமொழி 'அபிஜ்ஞான சாகுந்தலம்' என்னும் நாடக நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பகவத் கீதை சுலோகங்கள் முழுமையும் அழகிய சந்தமுடைய தாழிசைப் பாவில் ஆக்கியளித்துள்ளார். இதற்குக் 'கீதைப் பாட்டு,' 'கீதைத் தாழிசை' என்னும் பெயர்களைச் சூட்டியுள்ளார். மகாவித்வான் முதல் கையெழுத்துப் பிரதியில் 'கீதைப்பாட்டு' என்றே தலைப்பிட்டுள்ளார். நூல் தமிழ்த் தாழிசைப் பாவால் ஆகியது. பின்னால் எழுதப்பட்ட சில பிரதிகளில் 'கீதைத் தாழிசை' என்னும் தலைப்பு காணப்படுகிறது. எனவே, இந்த இரு பெயரும் நூலில் குறிப்பிடலாயிற்று.

மொழிபெயர்ப்பு நூல்களைப் போலவே தமிழிலும், 'பாரிகாதை', 'திருவேங்கடமாயோன் மாலை', 'திருவடி மாலை', 'திருப்புல்லாணியமக வந்தாதி', 'புவியெழுபது', 'தொழிற்சிறப்பு' முதலிய பல கவிதை நூல்களை யாத்துள்ளார். தம்மை ஆதரித்த வள்ளல் சேதுபதி மீது பாடிய, 'இராஜராஜ சேதுபதி ஒரு துறைக் கோவை' மிகச் சிறந்த இயற்றமிழ் நூலாகும். உரைநடையில், 'வஞ்சிமாநகர்', 'சேதுநாடும் தமிழும்' முதலிய பல ஆராய்ச்சி நூல்களையும் யாத்துள்ளார்.

இக் 'கீதைப்பாட்டு' உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ V.S. ஸ்ரீநிவாஸையங்கார் நன்முயற்சியில் மயிலாப்பூரில் கூட்டப் பெற்ற பேரவையில், 1933 ஆம் ஆண்டு அரங்கேற்றப் பெற்றது. இரு மொழி வல்லார் பலராலும் பாராட்டப் பெற்றது. தமது சொற்பொழிவுகளி லும் இக் 'கீதைப் பாடல்'களை மேற்கோள் காட்டிப் பேசியிருக்கிறார். இதனால், இந்நூல் அச்சாகாவிடினும் தமிழறிஞர் பலரும் அறிந்த ஒன்றாகும்.

**'சந்தமுறு ரகுவமிசம் சாகுந்தலம் கீதை சாரமெல்லாம்**
**தந்திடுவான்'**

என்று கரந்தைத் தமிழ்ச் சங்க வரவேற்புரையில் கூறப்பட்டுள்ளது.

**'கீதை தமிழில் கிளந்தான் வேள்பாரி**
**காதை நலங்கனியக் கட்டு ரைத்தான்'**

என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையும்,

**'கீதை மொழிபெயர்த்தான் கேடில் புகழ்காளி**
**தாதனார் சாகுந்தலத்தைத் தமிழ் செய்தான்'**

என்று பேராசிரியர் மு. இராகவையங்காரும் புகழ்ந்துள்ளார்கள்.

என் இனிய நண்பர் அமரர் க.சி. கமலையா அவர்கள் வழியாக மகாவித்துவானின் தவப் புதல்வர் வித்துவான். ரா. இராமானுஜையங்கார் அவர்களின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. நாங்கள் மகாவித்துவான் நூல்களை வெளியிட முயன்றோம். நான் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்து வந்தபோது, மகாவித்துவான் யாத்த, 'இராஜராஜ சேதுபதி ஒரு துறைக் கோவை' நூற்பிரதியைப் பெற்றுக் குறிப்புரையுடன் சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகத்தின் வழி 1984 இல் வெளிவரச் செய்தேன். அதன்பின் 'ஆத்திசூடி உரை' யைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வழி 1985 இல் வெளியிட்டேன். அப்போதே 'கீதைத்தாழிசைப் பிரதியையும் ரா. இராமானுஜையங்கார் வெளியிட என்னிடம் தந்திருந்தார். அவர் மறைவிற்குப் பின்னரே மேலே சுட்டிய முதல் இரண்டு நூல்களும் வெளிவந்தன.

மகாவித்துவானின், 'குறுந்தொகை விளக்கம்' என்னும் நூலின் பிரதி முழுமையையும் அவரது பேரன் திரு. ரா. விஜயராகவன் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தினரிடம் வெளியிட ஒப்படைத்திருந்தார். இந்நூல் வெளியீட்டின் பதிப்புக்குழுவில் நானும் இடம் பெற்றிருந்தேன். அக்குழு கேட்டுக் கொண்டதின்படி நூலின் மூலப்படியை நன்கு ஒப்புநோக்கி நல்ல முறையில் பதிப்பித்து உதவினேன். இந்நூல் 1993 இல் வெளியாயிற்று.

மகாவித்துவானின் பேரனாகிய திரு. ரா. விஜயராகவன் மும்பை டாட்டா ஆராய்ச்சிக் கழகத்தின் விஞ்ஞானி ஆவார். இவரும் அவர் தந்தையார் காலத்திலேயே எனக்கு அறிமுகமாயிருந்தார். இவர் சென்ற ஆண்டு (1996) மகாவித்துவானின் அச்சில் வாராத நூற்பிரதிகளையெல்லாம் என்னிடம் ஒப்படைத்திருந்தார். அவர் இந்தியன் வங்கியின் உதவிபெற்று 'இன்கவித்திரட்டு' என்னும் நூல் வெளிவர உதவினார். இத்திரட்டில், 'திருவேங்கடமாயோன் மாலை', 'திருவடிமாலை', 'திருப்புல்லாணியமக வந்தாதி' என்னும் நூல்கள் அடங்கியுள்ளன. இவற்றுள், 'திருப் புல்லாணியமகவந்தாதி' என்னும் நூலுக்கு மகாவித்துவான் எழுதி வைத்திருந்த விளக்கவுரையும் இடம் பெற்றுள்ளது. இவ்வுரை பண்டைய நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோரின் உரையை ஒத்து அமைந்துள்ளது. ஆனால், இந்நூற்றாண்டின் முற்பகுதியில் உருவான 'கீதைப் பாட்டு' வெளிவரும் நிலை இறையருளால் இப்பொழுதுதான் வாய்க்கப் பெற்றது.

இதனை வெளியிட முன்வந்தவர் 'பாரதி புத்தகாலயம்' உரிமையாளர் அன்பர் திரு. வெங்கட் அவர்களுக்கும், மேலாளர் திரு. வ. முனிசாமி அவர்களுக்கும், மகாவித்துவான் குடும்பத்தினர் சார்பாகவும், என் சார்பாகவும் முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். சென்ற ஆண்டு வெளிவந்த 'இன்கவித்திரட்டு' நூல் வெளிவர அச்சில் உதவியவரும் இவர்களே. தொடர்ந்து மகாவித்துவானின் நூல்களை வெளியிடவும் இவர்கள் முன்வந்துள்ளார்கள்.

மகாவித்துவான் எழுதிவைத்திருந்த 'கீதைப்பாட்டு'ப் பிரதி பற்றிச் சில வார்த்தை. நல்ல பைண்டிங் செய்யப்பட்ட ஒரு நோட்டுப் புத்தகம். அதில் கிரந்த லிபியில் பகவத்கீதை சுலோகங்கள் அச்சிட்ட தாள்களை மேலே ஒட்டி, அதன்கீழே அந்தச் சுலோகத்திற்குரிய தாழிசைப் பாடலை எழுதியுள்ளார். 13ஆம் அத்தியாயம் முதல் சுலோகத்திற்கு மட்டும் மகாவித்துவானின் மொழிபெயர்ப்புத் தாழிசை இல்லை. இதுபற்றி மகாவித்துவான் புதல்வர் அவர்களிடம் உசாவிய போது அவர் தந்த விளக்கம் வருமாறு:

"ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமாநுஜர் ஆகியோர் எழுதிய பாஷ்யங்களில் 13ஆம் அத்தியாயம் முதல் சுலோகம் 'ப்ரக்ருதிம்' என்பது இல்லை! 'இதம் சரீரம்' என்று தொடங்கும் சுலோகம் முதல் எண்ணாக உள்ளது. 'ப்ரக்ருதிம்' என்று தொடங்கும் சுலோகம் இருவர் பேருரைகளிலும் இல்லாமையால் தந்தையார் அதற்குத் தாழிசைப் பாடல் எழுதவில்லை" என்று விளக்கம் தந்துள்ளார். மேலும், 'சித்பவானந்தா விரிவுரைப் பதிப்பில், 'பல பதிப்புகளில் இச்சுலோகம் காணப் பெறவில்லை' என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

இப்பதிப்பின் அமைப்பைக் குறித்துச் சில வார்த்தை. மகாவித்துவான் கைப் பிரதியில் கண்டபடி 'கீதைப்பாட்டு' என்றே இந்நூலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. சில பிரதியில் 'கீதைத்தாழிசை' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில் இந்த இரு பெயர்களையும் பயன்படுத்தியுள்ளோம். நூலிற்குரிய பாயிரமாக மகாவித்துவான் கடவுள் வாழ்த்து, அவையடக்கம் முதலானவற்றை அமைத்துள்ளார். நூலுள் 18 அத்தியாயங்களும் தனித்தனியாக அமையுமாறு அச்சில் தரப்பட்டுள்ளது.

106 [illegible] ।
[illegible] ॥ ௧॥

[illegible]

[illegible] ।
[illegible] ॥ ௨॥

[illegible]

[illegible] ।
[illegible] ॥ ௩॥

[illegible]

[illegible] ।
[illegible] ॥ ௪॥

[illegible]

107

[illegible] |
[illegible] ‖ ௫ ‖

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] |
[illegible] ‖ ௬ ‖

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] |
[illegible] ‖ ௭ ‖

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] |
[illegible] ‖ ௮ ‖

[illegible]
[illegible]

மகாவித்துவான் கைப் பிரதியில் கண்டவாறு கிரந்தலிபியில் அச்சிடாமல் வடமொழிச் சுலோகம் தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது. அடுத்து மகாவித்துவான் படைத்த தாழிசைப்பாட்டு இடம் பெறுகிறது. பாடலின் இறுதியில் தொடர் எண் தரப்பட்டுள்ளது. நூலில் இடம் பெற்ற தாழிசை 702.

தாழிசைப் பாடலின் பின் மகாகவி பாரதியாரின் உரைநடை மொழிபெயர்ப்பு அமைகிறது. இது ஒரு வகையில் பாடலுக்கு உரைபோல உள்ளது.

ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் கீதை இயற்பொருள் விளக்கம் பற்றிய மகாவித்துவானின் பாடல் அமைகிறது. அதனையடுத்துப் பாரதியாரின் பாயிரவுரை இடம் பெறுகிறது.

'கீதைப் பொருட்டொகை' என்னும் தலைப்பில் காணும் வெண் பாக்கள் நூல் முதலிலும், இறுதியிலும், ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்குரிய தொடர் எண்ணும் தனித்துத் தரப்பட்டுள்ளது. நூல் முழுமைக்கும் கீதைப் பொருட்டொகைப் பாக்கள் மொத்தம் 32 உள்ளன.

நூலிறுதியில் கண்ணன் திருவருள் போற்றும் பாடல்கள் ஆறு அமைந்துள்ளன. பாட்டு முதற்குறிப்பு அகராதியும் நூலின் இறுதியில் தரப்பட்டிருக்கிறது.

கீதைப்பாட்டு நூலின், தமிழ் எழுத்தில் அமைந்த வடமொழி சுலோகங்களைச் சரிபார்த்து உதவிய என் ஒரு சாலை ஆசிரிய நண்பர் கே. பார்த்தசாரதி அவர்களுக்கு மிக்க நன்றி.

பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் நல்ல நண்பர். சிறந்த தமிழறிஞர். 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் பெருநாவலர்' எனப் பாராட்டப் பெறுபவர். வைணவ சம்பிரதாயங்களையும் கோட்பாடுகளையும் நன்கறிந்தவர். கம்பனில் பேரீடுபாடு உடையவர். பட்டி மன்றங்களில் பாங்குடன் வாதிப்பவர். தமிழ் உலகம் நன்கறிந்தவர். இவர்களிடம் அணிந்துரை பெறுவது பொருத்தமாகும் என நானும் பதிப்பகத்தாரும் கருதினோம்.

பேராசிரியர் அவர்களை அணுகி அணிந்துரை கேட்ட போது தயக்கமின்றி ஒப்புக்கொண்டார்கள். தமது பல பணிகளுக்கு இடையிலும் நூலைக் கூர்ந்து. படித்து அருமையான ஓர் அணிந்துரையை வழங்கியுள்ளார்கள். இவ்வுரை, நூலுக்கு ஏற்புடைய ஓர் அறிமுக உரையாகும். கீதைப்பாட்டு நூலின் அமைப்பையும் மகாவித்துவானின் தாழிசைப் பாட்டுகளின் அமைப்பையும் போக்கையும் சிறப்புற எடுத்து விளக்கியுள்ளார்கள். பேராசிரியர் அவர்களுக்கு நானும் பதிப்பகத்தாரும் பெரிதும் நன்றிக் கடப்பாடு உடையோம்.

கீதைப்பாட்டு நூலைப் பதிப்பிட எடுத்துக் கொண்டு சீரிய முறையில் பதிப்பித்த பாரதி புத்தகாலயத்தாருக்கு மீண்டும் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாவித்துவான் ரா. இராகவையங்கார் கீதைப்பாட்டு தமிழ் உலகத்திற்குக் கிடைத்த அரிய கருவூலம். இந்நூலைத் தமிழன்பர்கள் பெற்றுப் பயன் கொள்வார்களாக!

கவிமணி நிலையம் *மு. சண்முகம் பிள்ளை*

15-08-97

# அணிந்துரை

***பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம்***
தமிழ்த்துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி - சென்னை - 30

வான்மீகி ராமாயணமும் வியாச பாரதமும் பாரத நாட்டின் பழம்பெருஞ் செல்வங்கள். இவற்றுள், இராமாயணத்தில் 'ஆதித்ய ஹிருதயமும்', பாரதத்தில் 'பகவத் கீதை'யும் இடம் பெற்றுள்ளன. இவ்விரு பகுதிகளையும் இன்றும் பலர் பாராயணம் செய்து வருகின்றனர். 'ஆதித்ய ஹிருதயம்' சூரியனைப் போற்றிப் பரவுவது. ஆனால், 'பகவத்கீதை' ஆன்மீகக் கருத்துகளைத் தெளிவாகப் புகல்வ்து. 'ஆதித்ய ஹிருதயத்தினும்', 'பகவத்கீதை' பெரிதும் போற்றிக் கொண்டாடப் படுகிறது. 'பாரதத்தினிடையே பொதிந்து வைக்கப்பட்டுள்ள விலை மதிப்பற்ற மாணிக்கம் கீதை' என்று மனிதர்குல மாணிக்கம் ஜவர்ஹர்லால் நேரு தம் மகளுக்கு எழுதிய கடிதம் ஒன்றுள் குறித்துள்ளார்.

தத்துவ உலகத்திலும் கீதைக்குத் தனியிடம் உண்டு. கொள்கை விளக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த மூன்று நூல்களைப் 'பிரஸ்தானத்திரயம்' என்பர். 'உபநிடதங்கள்', 'பிரம்மசூத்திரம்', 'பகவத்கீதை' ஆகிய மூன்றும் 'பிரஸ்தானத்திரயம்' எனப்படும். தத்துவ ஆராய்ச்சியில் உபநிடதங்களின் போக்கு எத்தகையது என்று இயம்புவது 'பிரம்ம சூத்திரம்'. உபநிடதக் கருத்துகளை எல்லாம் தெளிவாக விளக்குவது 'பகவத்கீதை'. உபநிடதங்களாகிய பசுவினிடமிருந்து பெற்ற இனிய பால் 'கீதை' எனலாம்.

தத்துவ உலகில் மூன்று முதன்மையான கோட்பாடுகள் குறிக்கப்படுகின்றன. அவை, 'அத்வைதம்', 'விசிட்டாத்வைதம்', 'துவைதம்' என்பன. இக்கோட்பாடுகள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டன. இறைவன் ஒருவனே உள்ள பொருள்; மற்ற அனைத்தும் அவன் நிழல் என்பது அத்வைதம். இக்கோட்பாட்டினை வற்புறுத்தியவர் ஆதி சங்கரர். இறைவன் (ஈஸ்வரன்) உயிர் (சித்) உலகம் (அசித்) மூன்றும் உள்ள பொருள்கள். உயிரையும் உலகத்தையும் தனக்கு உடலாகக் கொண்டு

இவற்றோடு கூடியுள்ள இறைவன் ஒருவன் என்பது 'விசிட்டாத்வைதம்'. இராமாநுசரால் இக்கோட்பாடு ஊக்கத்தோடு பரப்பப்பட்டது. இறைவன் ஒளி போன்றவன்; ஏனைய பொருள்கள் இருள் போன்றன. பரம்பொருளும் உயிரும் முற்றிலும் மாறுபட்ட தன்மைகள் கொண்டவை என்பது 'துவைதம்'. இந்நெறியினை எடுத்து விளக்கியவர் மத்வாச்சாரியார். இம்மூன்று பெருமக்களுமே தங்கள் கொள்கையினை விளக்கக் கீதையினைத் துணையாகக் கொண்டனர். 'பகவத்கீதை'க்கு இம் மூவருமே உரைவிளக்கம் தந்துள்ளனர். இது 'பகவத்கீதை'க்குரிய தனிச்சிறப்பு என்று குறிக்கலாம்.

பிரஸ்தானத்திரயங்களுக்குள் பகவத்கீதைக்குத் தான் மிகப்பல விரிவுரைகள் உள்ளன; பல மொழி பெயர்ப்புகள் உள்ளன. ஆன்மீக வாதிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஆர்வமும் எழுச்சியும் ஊட்டுவதாகப் 'பகவத்கீதை' அமைந்தது. அண்ணல் காந்தியடிகள் அதனைத் தம்மை வளர்க்கும் தாய்ப்பாலாகக் கருதினார். நாள்தோறும் கீதையின் செய்யுட்களை மனப்பாடஞ் செய்தார். திலகர் பெருமான் விளக்கம் எழுதினார். வைணவப் பெரியார்களுள் ஒருவராகத் திகழ்ந்த பராசரபட்டர் முதல் தேசிய கவிஞரான பாரதியார் வரை பலர் பகவத்கீதையைத் தமிழில் பாட்டு வடிவிலோ உரைநடை வடிவிலோ மொழிபெயர்த்துத் தந்துள்ளனர். உலக மொழிகள் பலவற்றுள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சிறப்பு 'விவிலியம்', 'திருக்குறள்', 'பகவத்கீதை' ஆகிய மூன்று நூல்களுக்கே உண்டு.

இராமகாதையைத் தமிழில் தந்த கம்பநாடரும் பகவத் கீதையின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்துள்ளார். 'பரித்ராணாய ஸாதூணாம்' என்னும் கீதைச் செய்யுளை அநுமன் கூற்றாக இனிய செய்யுளாகப் படைத்துள்ளார். "நல்லாரைக் காப்பதற்கும், கெட்டவரை அழிப்பதற்கும், அறத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் பிறக்கிறேன்" (4:8) என்பது அச்செய்யுளின் கருத்து. இதனைக் கம்பர்,

**'அறம்தலை நிறுத்தி, வேதம்**
**அருள்சுரந் தறைந்த நீதித்**
**திறம்தெரிந் துலகம் பூணச்**
**செந்நெறி செலுத்தித் தீயோர்**

**இறந்துக நூறித் தக்கோர்**
**இடர்துடைத் தேக ஈண்டுப்**
**பிறந்தனன் தன்பொற் பாதம்**
**ஏத்துவார் பிறப்ப றுப்பான்'**

*(பிணிவீட்டுப்படலம்:81)*

என்று தமிழாக்கம் செய்துள்ளார்.

பெரும்புலவரும் கவிஞருமாகத் திகழ்ந்த பேராசிரியர் ரா. இராகவையங்கார் பகவத்கீதையினைத் தாழிசை யாப்பில் மொழி பெயர்த்துள்ளார். அவர் மறைந்து பல்லாண்டுகளுக்குப் பின் இப்பொழுது அது 'கீதைப்பாட்டு' என்னும் பெயரில் அச்சேறி வெளிவருகிறது. 'கீதைப்பாட்டு' முதலில் பாயிரம் என்னும் பகுதியையும் அதனைத் தொடர்ந்து பதினெட்டு அத்தியாயங்களையும் கொண்டு விளங்குகிறது. நூலாசிரியர், பாயிரத்தில், கலைமகள், கண்ணபிரான், வேதவியாசர், வைணவ ஆசாரியர்கள், தமக்குத் தமிழ் புகட்டிய ஆசிரியர், நல்வாழ்வு அளித்த திருவனை அதிபதி ஆகியோரைப் போற்றி அவையடக்கம் சொல்லி, தம் வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவித்து இறுதியில் கீதையின் நூற்பகுப்பினையும் பொருளினையும் வகுத்துரைத்துள்ளார். ஒவ்வோர் அத்தியாயத்தின் முதலிலும், கீதை இயற்பொருள் விளக்கம் என்னும் தலைப்பில் அவ்வத்தியாயத்தின் கருத்துச் சுருக்கமாகப் பாட்டு வடிவிலும் பின்பு உரைநடை வடிவிலும் தரப்பட்டுள்ளது. இது கற்பார்க்குப் பெருந்துணையாய் அமைகிறது. அடுத்து, கீதையின் சுலோகங்கள் தமிழில் தரப்பட்டு, அவற்றின் பின் செய்யுளில் அமைந்த தமிழாக்கமும் இறுதியில் உரைநடையில் சுலோகத்தின் பொருளும் தரப்பட்டுள்ளன.

நூலாசிரியர் ரா. இராகவையங்கார் செழுந்தமிழில் கீதையினை மொழி பெயர்த்துள்ளார். அங்கங்கே சந்த இனிமை நிறைந்து கவிதை உயர்ந்து நிற்கிறது.

**'தீதுவினை சூழவரு போதுகுல மாதர்**
**தீமைமிக மேவியவர் ஆவர்; உயர் கண்ண!**
**யாதவ! நன் மாதர்மிக வேதம் உளர் ஆயின்**
**எவ்வருண மும்கலவல் எய்துறும் அரோதான்'.**

*(அர்ஜுன விஷாத யோகம் :41)*

**'ஞான தவத்தினில் ஆகிய சுத்தியின்**
**ராகப யத்தொடு கோபம் விடுத்தொரு**
**வேளைஅ டுத்தெனை யேநினை வாயவர்**
**எத்துணை யோர்என் இயற்கையை எய்தினர்'**

*(ஞானயோகம்:10)*

போன்ற தாழிசைகள் ஓசைநயம் சிறந்து பயில்வார்க்கு இன்பம் நல்குகின்றன.

பேராசிரியர் பெரும்பாலும் கட்டளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார் எனினும் அங்கங்கே எளிமை நலமும் காணப்படுகிறது.

**'என்கணேபுக உய்ப்பை நெஞ்சினை;**
**என்கணே வைக்க உணர்ச்சியை;**
**என்கணே நிலைசெய்; இதன்மிசை**
**என்க ணேஉளை, ஐயம்இல்.'**

*(பக்தியோகம்:8)*

**'அவமானமும் மானமும்ஓர் படியாய்**
**அற்றாருடன் உற்றவர்கண் சமமாய்த்**
**தவஆள் வினையாவும் ஒழித்தஅவன்**
**தான்தாயவன் என்பன் குணங்களையே!'**

*(குணத்ரயவிபாகயோகம்:25)*

என்னும் தாழிசைகள் எளிமை அழகுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள்.

பேராசிரியரின் இருமொழிப் புலமை வடசொற்களுக்கு மிகப் பொருத்தமான சொற்களைக் கண்டு கவிதையில் பெய்யத் துணையாக அமைந்துள்ளது. **'க்ஷமா, த்த்ருதி'** என்பவற்றைப் (சுலோகம் 575) **'பொறைக்கண்நிலை, திடம்'** என்று மொழிபெயர்த்துள்ளார். **'சமம், தமம்'** என்பவற்றை (சுலோகம் 666) முறையே **'பொறியொடுங்குவது, மனன் அடங்குவது'** என்றும் தமிழாக்கம் செய்துள்ளார். **'ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு,**

அர்த்தார்த்தி, ஞானி' ஆகிய சொற்களை முறையே 'துன்பினன், தன்னைத் தெரிபவன், செல்வம் சூழ்பவன், என்னைத் (இறைவனை) தெளிபவன்' (சுலோகம் 296) என்றும் பொருள் விளங்கத் தமிழாக்கம் செய்துள்ளார். 'ஸர்வதர்மான்' என்னும் சுலோகம் சிறப்பானது. வைணவர் கள் மூன்று மந்திரங்களுள் ஒன்றாக அதனைக் குறிப்பர். அதனை,

> **'அறம்அ னைத்தையும் அறவிடுத்தெனை**
> **ஒருவ னைச்சரண் அடைக; யான்**
> **மறம்அ னைத்தினும் உனைவிடுத்தல்செய்**
> **குவன்; இடர்ப் படுவது செயாய்'**

*(மோக்ஷ சந்யாச யோகம்:66)*

என்று மொழி பெயர்த்துள்ளமை சிறப்பாக அமைந்துள்ளது.

பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை பதிப்புத்துறையில் வல்லவர். தமிழ்நலமே தம்நலம் என்று வாழ்பவர். அவர்தம் தள்ளாத வயதில் எப்படியேனும் பெரும்புலவர் ரா. இராகவையங்காரின் 'கீதை' மொழிபெயர்ப்பு வெளிவருதல் வேண்டும் என்று அரும்பாடு பட்டு இதனை வெளிக் கொண்டு வந்துள்ளார்.

'பகவத்கீதை' இவ்வுலக வாழ்வுக்கும் மறுவுலக வாழ்வுக்கும் வழிகாட்டும் உயரிய நூல். இம்மொழி பெயர்ப்போ பெரும்புலவரால் நல்லதமிழில் ஆக்கியது. இதனைப் பதிப்பிப்பவரோ முதுபெரும் பேராசிரியர். இத்தகைய தகுதிமிக்க இந்நூல் இறை ஆர்வலர்களாலும், தமிழன்பர்களாலும் பெரிதும் போற்றப்படும் என்பது எளியேன் துணிபு.

சென்னை - 101
09.06.97

அன்பன்,
*தெ. ஞானசுந்தரம்*

# ஆசிரியர் அறிமுகம்

## மகாவித்துவான்
## ரா. இராகவையங்கார்
## (1870-1946)

ஆசிரியர் மகாவித்துவான் ரா. இராகவையங்காரின் முன்னோர்கள் காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள திருப்புட் குழியில் வாழ்ந்தவர்கள். இவ்வூர் பல நூற்றாண்டுகள் வடமொழி, தென்மொழி வல்ல புலவர்கள் வசித்த இடம். பின்னர் இவர்களில் ஒரு சிலர் வேதம் தமிழ் செய்த நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரிக்குக் குடியேறினார்கள். நைத்ருவ காசிப கோத்திர வைணவ அந்தணர்களுக்கு அத்தலத்து எப்பெருமானார் ஜீயர் மடாதிபத்யம் உரியதாகும். கட்டுரை ஆசிரியரின் குடும்பத்தார் பின் சேது நாடு வந்து தமிழ், வடமொழி வல்லவராய்த் திகழ்ந்தனர்.

1870 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாள் பிறந்த ஆசிரியரின் பெற்றோர் இராமாநுஜ ஐயங்கார்-பத்மாசனி ஆவர். பிறந்த ஊர் சிவகங்கை அருகில் உள்ள தென்னவராயன் புதுக்கோட்டை. இளமையி லேயே தந்தையை இழந்து மாமா சதாவதானம் முத்துசுவாமி ஐயங்கார் ஆதரவில் தமிழ் இலக்கியங்களைக் கற்றார். தமிழார்வத்தால் உந்தப்பட்டு பள்ளிப் படிப்பை நடுவிலே விட்டு, தமிழை ஆதரிக்கும் வள்ளல்களிடம் தம் தமிழறிவைக் காட்டி அவர்களால் ஆதரிக்கப்பெற்றார்.

மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சிலகாலம் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். திருமணத்துக்குப்பின் திருச்சி தேசிய உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார். இவர் தமிழார்வத்தி னால் பெரிதும் ஊக்கப்பட்டு, இவர்மாணவர்களில் பலர், தமிழையே வாழ்க்கைத் துணையாக எடுத்துக் கொண்டார்கள். இக்காலத்தில் தான் டாக்டர் உவே. சாமிநாதையரவர்களுடன் குடந்தையில் தொடர்பு ஏற்பட்டது. இருவருக்கும் சங்க நூல்கள் பதிப்பிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது.

இராமநாதபுரம் சேதுபதிகள் தமிழை நன்கு வளர்த்த வள்ளல்கள். நவராத்திரித் திருவிழாவில் பல புலவர்களையும், அருங்கலை விநோதர்களையும் அழைத்துப் பரிசுகள் வழங்குவதுண்டு. பாஸ்கர சேதுபதி தம் அவையில் அமர்ந்திருந்த இராகவய்யங்காரின் புலமையில் ஈடுபட்டு அவரைத் தம் சமஸ்தான வித்துவானாக இருக்கப் பணித்தார். இது போலவே இசைத் துறையில் தேர்ந்த பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் சமஸ்தான வித்வானாக உபசரிக்கப் பெற்றார். சுவாமி விவேகானந்தர் சிகாகோ செல்ல விரும்பிய பொழுது பலநாட்கள் இராமநாதபுரத்தில் தங்கி, சேதுமன்னரின் பொருளுதவியால் அமெரிக்கா சென்றார். அவர் அவைக்களப் புலவர்களோடு இந்து சமயம் பற்றிய சர்ச்சைகள் பல செய்து இன்புற்றது உண்டு.

சேதுபதியின் உறவினரான பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை 1901 இல் நிறுவி, இராகவய்யங்கரைச் "செந்தமிழ்" என்னும் ஆராய்ச்சி இதழுக்கு ஆசிரியராக்கினார்.

**"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்"**

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் குறளைக் குறிக்கோளாகக் கொண்ட "செந்தமிழ்" என்னும் தமிழ் ஆராய்ச்சி மாத இதழைத் தொடங்கியவர் என் அருமைப்பாட்டனார் மகா வித்துவான், பாஷா கவிசேகரர் ரா. இராகவையங்கார் அவர்கள்.

இதன் மூலம் தமிழன்னை பெற்ற ஆராய்ச்சி முத்துக்கள் எண்ணிலடங்கா. விஞ்ஞான, பகுத்தறிவுக்கு ஏற்பத் தமிழாராய்ச்சி செய்தற்குத் தம் கட்டுரைகளின் மூலம் இலக்கணம் வகுத்தார்.

சில ஆண்டுகளுக்குப்பின் தம் தாய் மாமன் மைந்தரும், தமிழ்ப் பெரும் புலவருமான மு. இராகவையங்காரிடம் ஆசிரியப் பொறுப்பை அளித்தார். மீண்டும் சேது சமஸ்தான அவைக்களப் புலவரானார்.

அண்ணாமலை நகரில் 1935 ஆம் ஆண்டு தமிழராய்ச்சிப் பகுதி திறக்கப்பட்டு, அப்பகுதித் தலைவராக நியமிக்கப் பெற்றார். இதுவரை சொந்த முயற்சியால் நூல்கள் வெளியிட்டும், சொற்பொழிவுகள் புரிந்தும் தமிழுக்குத் தொண்டுபுரிந்தவர்க்கு இப்பகவி மூலம் மிக விரிவாகத்

தமிழாராய்ச்சி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. தம் 65 ஆம் வயதில் அளிக்கப் பெற்ற பெரும் பொறுப்பை மிகச்சிறப்பாக ஆறு வருடங்கள் நிறைவேற்றினார். இக்காலத்தில் இவர் செய்த சொற்பொழிவுகளைக் கேட்டு மயங்கியவர்களில் டி.கே.சி., ராஜாஜி, சத்யமூர்த்தி, நீதிபதிகள், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் போன்றோர் பலர். தமிழ் வரலாறு, பாரிகாதை, தித்தன் கோசர், பட்டினப்பாலை உரை, பெரும் பாணாற்றுப் படை ஆராய்ச்சி, அபிஜ்ஞான சாகுந்தலம் இந்த ஐந்தாண்டுகளில் வெளியானவை. 'குறுந்தொகை விளக்கம்' என்னும் பேருரை இங்கு உருவாகியது.

இவ்வாறு தென்னாட்டுத் தமிழ்த் திலகமாய் விளங்கிய புலவர் பெருமான் 1946 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் நாள் தமது 77 ஆம் வயதில் தம் இராமநாதபுரத்து இல்லத்தில் காலமானார். பரிமேலழகரை "ஈசனதருளால் உய்த்து உணர்வுடையவோர் உண்மையாளன்" என்பர். அத்தகைய "அநுக்ரகசத்தி" இம் மகாவித்துவானிடம் அமைந்திருந்தது.

இப்புலவர் பெருமானின் மகன் வழிப் பேரன் நான். எனவே பிள்ளைப் பிராயம் தொடங்கும் பொழுதே இவரால் பேணி வளர்க்கப்பட்டவன். பல பெரும்புலவர்களும், அறிஞர்களும் இவருடன் உரையாடும் பொழுது அவர் மடியிலும், அருகிலும் அமர்ந்து தமிழ் இன்பம் நுகர்ந்தவன். வாழ்க்கைக்கு விஞ்ஞானத் துறையை நான் மேற்கொண்டாலும், தமிழ்ப் பற்றும், ஆராய்ச்சி முறையும் இளமையிலேயே அவரால் எனக்கு அளிக்கப்பட்ட **பெரும்** பரிசுகள். என்னை நிலைக்களனாக வைத்து அவர் பாடிய பாடல் இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

**"சங்குச் சக்கரச் சாமி வந்து**
**சிங்கு சிங்கென ஆடுமாம்!**
**அது சிங்கு சிங்கென ஆடுமாம்!**

**உலகம் மூன்றும் அளக்குமாம்-அது**
**ஓங்கி வானம் பிளக்குமாம்;**
**கலகல எனச் சிரிக்குமாம்-அது**
**காணக்காண இனிக்குமாம்!**

கொட்டு கொட்டச் சொல்லுமாம்-அது
கூத்தும் ஆடப்பண்ணுமாம்;
எட்டு எழுத்துச் சொன்ன பேர்க்கு
எந்த வரமும் அளிக்குமாம்!

யாரும் காண அரியதாம்-அது
யாரும் காண எளியதாம்;
பேரும் ஊரும் உள்ளதாம்-அது
பெரிய பெருமை கொண்டதாம்!

ஆதிமூலம் என்று சொன்ன
யானை முன்பு வந்ததாம்!
ஜோதி ரூபம் ஆனதாம்; அது
தூய வீடு தருவதாம்! (சங்குச்...)

இப்பாட்டுக்குக் காலில் வெள்ளிக் கொலுசுடன் அவர் கைபிடித்து ஆடிய பேறு பெற்றவன் நான்.

சங்கச் செய்யுளில் குறிக்கப்பெறும் வஞ்சிமாநகர் பற்றிய சர்ச்சை பலகாலம் நடந்தது. கொங்கு நாட்டுக் கருவூரே வஞ்சி என்று அவர் நிலை நிறுத்தி அவர் வாதம் செய்யும் பொழுதே நான் இளநிலைப்பள்ளி மாணவன். உண்மையை நிலை நிறுத்துவதில் இறைவனோடு வாதம் புரிந்த நக்கீரனை அவர் எனக்கு நினைவில் நிறுத்தினார். இன்று அகழ்வாராய்ச்சிக்காரர்கள் அவர் கூறியதை அப்படியே ஒப்புக் கொண்டுள்ளனர். வளரும் பருவத்தில் என் உறவினர் மூலம் அவர் செய்த சொற்பொழிவுகளின் ஒரு சில துளிகள் என் மனத்தில் பசுமையாய் அமைந்துள்ளன. நகைச்சுவை ததும்பப் பேசுவதிலும், அங்கதம் (Satire) முறையைக் கையாளுவதிலும் அவருக்கு நிகர் யாருமில்லை.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்கு ஆண்டு தோறும் சென்று சொற்பொழிவாற்றுவார். கூட்டம் கலையும் போல் இருந்தால் சாதுரியமாக தஞ்சை சரசுவதி மகாலில் கண்ட தனிப் பாடல்களை எடுத்து விளக்கி யாவரையும் மயக்கி விடுவார்.

**"பிரம்பைக் கரம்பற்றிப் பின்னிஅந்தக் கூடை**
**நிரம்பக் கவியை நிரப்பி - சிரம்பற்றிக்**
**கற்றார்கள் வாழும்தஞ் சைக்கடை யெலாம்கூவி**
**விற்றாலும் கொள்ளார் விலைக்கு"**

என்று தஞ்சைவாசிகள் தமிழ் அறிவு இல்லாதவர்கள் என்பது போல இது அமைந்தாலும், உண்மையில் கொல்லன் உலையில் ஊசி விற்பது போல், கவிகள் நிரம்பிய தஞ்சை வாசிகள் மத்தியில் எந்தக் கவியும் விலை போகாது என்று கூறி மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

**மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்**
**மைந்தர் வயிற்றினராய் வாழ்வின ராயதிலே**
**திங்கள் நிறைந்துவரும் சேயிழையார் நடைபோல்**
**தென்றல் அசைந்துவரும் செந்தமிழ் நாடுடையாய்**
**(சரசுவதிமகால் படிப்பகம்)**

என்ற அருமையான பாடலின் முதல் இரண்டடியைக் கூறி "வாழ்வினராயதிலே" என்பதற்கு அழகான விளக்கம் கூறினார். வீரர்கள் யுத்தத்தின் பொருட்டு வெளிநாடு செல்லாமல் மனைவிமார் கணவரை விட்டுப் பிரியாமல் இருவரும் ஒருங்கே சேர்ந்து வாழ்வதைக் குறிப்பிடுகிறார் கவி. (இதற்கு எதிர்ப்பதம் வாழாவெட்டி) என்று நயத்தை விளக்கினார்.

இது போல் பல துணுக்குள் என் மனத்தில் பசுமையாய் உள்ளன.

**"நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்**
**இடை நிகழ்ந்த ராமாவதாரப் பேர்த்**
**தொடை நிகழ்ந்த தோமறு மாக்கதை"**

*- கம்பராமாயணம்.*

என்ற பாடலில் இரு அரிய செய்திகள் உள்ளன. பரசுராம, இராம, பலராம என்ற மூன்று ராம அவதாரங்களில் இடையில் உள்ளது இராமாவதாரம். கம்பன் தன் காவியத்துக்கு இட்ட பெயர் இராமாவதாரம்.

இது போன்றே தம் வட மொழிப் புலமையால், சாகுந்தலம், வால்மீகி இராமாயணம், காளிதாசன் காவியங்கள், மகாபாரதம், பாகவதம்

போன்ற இனிய, இலக்கிய, இலக்கண நூல்களை அலசி ஆராயும் வாய்ப்பு அமைந்தது. சாகுந்தலத்தை மொழி பெயர்க்கும் பொழுது ஒவ்வொரு வார்த்தைக்கும் தக்க தமிழ் வார்த்தை கண்டு பிடிக்கப் பல இரவு தூங்காமல் இருந்ததுண்டு. பல பெரியோர்களுடன் கலந்துரையாடியது முண்டு:

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுது எழுவாள்" என்ற குறளை ஒட்டி அமைந்த வால்மீகி இராமாயண சுலோகம் ஒன்றை அவர் விவரித்தது இன்று போல் உள்ளது. (அபியா நீர் நமஸ்காரா) துஷ்யந்தன் சகுந்தலையின் தலையைச் சிறிதே நிமிர்த்தி முத்தமிடப் போகும் தறுவாயிலே இடையூறு ஏற்பட்டதாகக் கூறிக் காளிதாசன் தன் திறமையையும் நாயக நாயகி ரூபாஸமீபத்தையும் சிருங்கார ரசம் ததும்பக் கூறி துஷ்யந்தன் பிரிவிலே கூறியதாக அகத்திணை இலக்கணம் அமையக் கூறினான். இதே போல் வால்மீகியும் லட்சுமணனிடம் இராமன் வாக்காக கடற்கரையில் சீதையை நினைத்துக் கூறுவதும் அமைந்துள்ள தாக விளக்கினார் (ஈஷதுன்னம்ய பாஸ்யாமி ரஸாயன மிவாதுர). வடமொழி, தென்மொழி இரண்டிலும் புலமை இருந்தாலன்றி எந்த ஒரு மொழி இலக்கியத்தையும் பூரணமாக உணர முடியாது என்பதை அவர் பன்முறை உதாரணங்களுடன் தெளிவு படுத்தியுள்ளார்.

சங்க இலக்கியங்களைப் போல் கரடு முரடான கவிகளைப் பாடுவதில் வல்லவராயிருந்தும் எளிய இனிய நாடோடிப்பாடல்களில் மனத்தைப் பறிகொடுப்பார். இரயில் வண்டிகளில் கையினால் ஓசை எழுப்பிச் சிறுமிகள் பாடும்,

**"சந்தனம் அள்ளிய கையால்**
**சாணி வாரலாச்சே!**
**குங்குமம் அளைந்த கையால்**
**குப்பை வாரலாச்சே!"**

போன்ற அவலச்சுவை நிறைந்த பாடல்களை மிகவும் பாராட்டுவார். முத்தொள்ளாயிரம், ஐந்திணை ஐம்பது போன்ற எளிய சங்க இலக்கியங்களை உலகுக்கு அறிமுகப் படுத்தியவர் இவரே. இதில் இவர் பாலை நிலத்தைப் பற்றிய ஒரு பாட்டில் மனமுருகிப்போவார்.

**"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாது என்றுஎண்ணிப்
பிணைமான் இனிதுஉண்ண வேண்டி - கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"**

*(ஐந்திணை ஐம்பது)*

ஆண்மான் தன் இணையான பெண்மானுக்காகச் செய்யும் தியாகம் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளது. சிறிய அளவில் உள்ள தண்ணீரைத் தான் குடிப்பது போல் பாவனை செய்கிறதாம். பிணையும் அதை நம்பி முழு நீரையும் குடித்து விடுகிறதாம். விலங்கிற்கே இவ்வளவில் அன்பு இருந்தால் மனிதர்க்கு எம்மட்டில் இருக்கும்?

இது போல் சொல்லிக் கொண்டே போகலாம். இவர் சுதந்திரமான சிந்தனையாளர். விஞ்ஞான பூர்வமான தமிழாராய்ச்சிக்கு வழி வகுத்தவர். மாற்றுக் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து, அதைப் பலரறிய ஒத்துக் கொள்ளும் பெரும் உள்ளம் உண்டு. நச்சினார்க்கினியர் உரையை மறுக்கும் அதே நேரத்தில், புது மாணாக்கர்களின் கருத்துக்கு மதிப்பும் தருவார். சமரச சன்மார்க்கவாதி, பிறப்பில் வைணவ அந்தணராயினும், ஆண்டுதோறும் சைவ சிந்தாந்தக் கழகச் சொற்பொழிவுகளில் சைவ சமயக் குரவர்களின் பேரிலக்கியத்தைப் புகழ்வார். தானம், தயை, தபஸ் என்ற மூன்றும் இஸ்லாமிய அன்பர்களின் பெருநாள் நோன்பில் எவ்வாறு வெளிப்படுகிறது என்று காட்டுவார். தேம்பாவணி போன்ற கிறிஸ்துவ இலக்கியத்தைப் பெரிதும் பாராட்டுவார். எல்லாவித உண்மைகளைவும், எங்கிருந்தாலும் அறியும் ஆர்வம் இருந்தது.

வாழ்க்கையில் வறுமையால் பன்முறை அல்லற்பட்ட பொழுதும் ஆராய்ச்சியையும், பதிப்பித்தலையும் விட்டதே இல்லை. வேடிக்கை யாகப் பகவானே மகாபலியிடம் மூன்றடி மண் யாசித்த பொழுது உடல் குறுகி பிறந்தவர்களே நகையாடும்படியான தோற்றத்தில் வாமனனாய் அமைந்தான் என்றால் சாதாரண மனிதர்கள் எவ்வளவு கூனிக் குறுக வேண்டும் என்று கூறிக் கம்பராமாயணத்தில் அப்பகுதியைக் காட்டுவார். தம்மைப் புரந்த சேதுபதி மன்னர்களையும், இராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரையும், கம்பன் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்தது போல் கவிபாடி நன்றிக் கடனைத் தீர்த்தார். பெண்களிடமும், பெண்கல்வியிலும்

பெருமதிப்பு வைத்தவர். சங்க இலக்கியத்தில் கண்ட பெண் புலவர்களை "நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்" என்ற நூலை எழுதி உலகக்கு அறிவித்தார்.

இவர் சிறந்த நாவலர். மகாவித்வான் என்ற பட்டம் தமிழ்த்தாத்தா உவே. சாமிநாதையரால் அளிக்கப்பட்டது. வடமொழி அன்பர்கள் நிறைந்த சமஸ்கிருத சமிதி "பாஷா கவிசேகரா்" பட்டம் அளித்துக் கௌரவித்தது. மூன்று சோழப் பேரரசர்கள் அவையில் ஆஸ்தான வித்துவானாக இருந்த ஒட்டக்கூத்தன் போல் இவரும் மூன்று சேதுமன்னர்கள் அவைப்புலவராக அமைந்தார். சங்ககாலக் குறுநில மன்னர்களான வேளிர், கோசர், பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவருடைய சுதந்திரமான தனிவழிப்பாதை காண்பதில் உள்ள ஆர்வத்தைப் புலப்படுத்தும். தித்தன் வேளிர் குறுநில மன்னன். வஞ்சியருகில் வதிந்தவன் என்பதைச் சமீபத்தில் கருவூர் அமராவதிப் படுகையில் கிடைத்த தித்தன் பெயர் பொறித்த நாணயம் வலியுறுத்தும். கோசர் வேளிரை அடுத்துத் தமிழ்நாடு வந்தவர். கோசர் புத்தூர் பின்பு கோயம்புத்தூர் எனத் திரிந்தது; வேளிர் காச்மிர நாட்டிலிருந்து மிகப் பழைமையான காலத்தில் தமிழ்நாடு போந்தவர். பொருநராற்றுப் படைத் தலைவன் கரிகாலன், பட்டினப்பாலைத் தலைவன் திருமாவளவன் என்றும் இன்னோரன்ன புதிய செய்திகளை வெளியிட்டவர். இவற்றில் சில காலத்தால் வேறுபடலாம்.

பேராசிரியர் மு.சண்முகம் பிள்ளை, 'புலவர் மணி', 'பதிப்புச் செம்மல்', 'செந்தமிழ்ச்செம்மல்' என்னும் விருதுகளைப் பெற்றவர். சென்னை, மதுரை, தஞ்சை பல்கலைக்கழகங்களில் பணிபுரிந்தவர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையிடம் பதிப்பு முறைகளை அறிந்தவர். பல நூல்களைப் பதிப்பித்தவர். என் தந்தையார் இராமாநுஜையங்கார் காலம் முதல் எங்கள் குடும்பத்தின் ஒருவராக கருதத்தக்கவர். மகாவித்துவான் நூல்களைப் பதிப்பிப்பதில் பேரார்வம் உடையவர். சென்ற ஆண்டு என் பாட்டனார் மகாவித்துவான் ரா. இராகவையங்காரின் இதுவரை அச்சில் வாராத நூற்படிகளை எல்லாம் ஒப்படைத்து, அவை அச்சில் வர ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். 'இன்கவித் திரட்டு' என்னும் நூலைச் சென்ற ஆண்டு வெளியிட்டு உதவினார். இப்பொழுது பாரதி புத்தகாலயத்தாரைக் கொண்டு 'கீதைப் பாட்டு' என்னும் இந்த

அரிய நூலை வெளியிட ஏற்பாடு செய்தார். நூலை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கு என் நன்றியும் பாராட்டும். இம்முதற்பதிப்பை பதிப்பகத்தாருக்கு உரிமையாகத் தந்துள்ளேன். கைம்மாறாக நூற்படிகள் பெற்றுக்கொள்கிறேன். இவ்வாறு மகாவித்துவானின் வெளிவாராத பிறநூல்களையும் பதிப்பகத்தார் வெளியிட முன்வரின் நன்றாகும்.

புலவர் பெருமான் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளைக்கு நானும் என் குடும்பத்தாரும் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவராவோம். அவர் சீரிய முயற்சியால்தான் இந்நூல் வெளிவருகிறது.

***டாக்டர் ரா. விஜயராகவன்***
(சிறப்புப் பேராசிரியர்)
டாடா ஆராய்ச்சிக் கழகம்

மும்பை
14-06-97

# பொருளடக்கம்★

**1. அர்ஜுன விஷாத யோகம் 40**

திருதராஷ்ட்ரரது வினா - சுலோகம் -1- போருக்கு இருதரத்தாரும் அணிவகுத்திருப்பதை ஸஞ்ஜயர் விளக்குகிறார் 2-20 - தன்னை எதிர்ப் பவர்களைக் காண அர்ஜுனன் தவிக்கிறான் 21-23 - அர்ஜுனன் எதிரிகளுக்குப் பதிலாக உறவினர்களையே காண்கிறான் 24-27; அர்ஜுனனது தடுமாற்றம் 28-30; அர்ஜுனனது போலி வேதாந்தம் 31-40.

**2. ஸாங்கிய யோகம் 54**

பலவான் ஆவது குறிக்கோள் 2-3; பெரியோரோடு போர் புரியேன் என்கிறான் அர்ஜுனன் 4-6; அருள் பெறுவதற்கு ஏற்ற மனநிலை 7-8; அருள் சுரப்பதன் அறிகுறி 10; யோகத்துக்கு அஸ்திவாரம் 11; ஆத்மா வுக்கு அழிவில்லை 12; மரணத்தின் கூறு 13; குளிரும் வெப்பமும் உட லுக்கு உண்டு 14-15; ஸத் எது? அஸத் எது? 16-20; வினையில் பற்று அற்று இரு 21; மறுபிறப்பு 22; ஆத்மா நிஷ்பிரபஞ்சப் பொருள் 23-25; ஆத்மா அழிகிறது என்றாலும் வருந்துவது பொருந்தாது 26-28; ஆத்மா மனம் மொழிக்கு எட்டாதது 29-30; கடமையினின்று வழுவலாகாது 31-37; கர்மத்தைக் கர்ம யோகமாக்கு 38 -41; உலகத்தவர் போக்கு 42-44; யோகத்துக்குத் திறவுகோல் 45 -53; நிறைஞானியின் லக்ஷணம் 54-72.

**3. கர்மயோகம் 78**

அர்ஜுனனுக்கு ஏற்பட்ட ஐயம் 1-2; ஒன்றை ஒன்று அனுசரித்து இரண்டு மார்க்கங்கள் உள 3-8; யக்ஞத்தின் சிறப்பு 9-13; பிரவிருத்திச் சக்கரம் 14-16; ஆத்ம நிஷ்டனுக்குக் கர்மமில்லை 17-18; சாதன தசையில் இருப்பவன் செய்ய வேண்டியது 19-26; அஹங்காரத்தை அகற்றும் விதம் 27-32; சுபாவத்துக்கு ஏற்ற சாதனம் 33-35; பாபத்துக்குப் பிறப்பிடம் 36-48.

**4. ஞான யோகம் 92**

ஞானகுரு சிஷ்ய பரம்பரை 1-3; அவதார மூர்த்தியின் மஹிமை 4-9; ஞானயோகத்தின் சிறப்பு 10; எல்லா மார்க்கங்களும் இறைவனைப் போய்ச் சேர்கின்றன 11; சிறு தேவதைகளின் வழிபாட்டின் பயன் 12; நான்கு வர்ணமும் கர்மமும் 13-15; கர்ம தத்துவம் 16-22; விதவிதமான

---

★ ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தரின் பகவத் கீதை விரிவுரைப் பதிப்பிலிருந்து எடுத்துத் தரப்பெற்றது. ஸ்ரீமத் சுவாமிகளுக்கு வணக்கம், நன்றி.

யக்ஞங்கள் 23-33; குரு சிஷ்ய இணக்கம் 34; ஞானத்தின் உயர்வு 35-39; சந்தேகம் உதவாது 40-42.

5. ஸந்நியாஸ யோகம் 106

கர்மயோகமே கர்ம ஸந்யாஸமாகிறது 1-13; கர்மம் பிரகிருதிக்கு உரியது; ஆத்மாவுக்குக் கர்மம் இல்லை 14-17; சமதிருஷ்டி ஞானத்தின் விளைவு 18-19; விஷய சுகம் வேறு, பிரம்மசுகம் வேறு 20-29.

6. தியான யோகம் 116

யோகமும் ஸந்யாஸமும் ஒன்றே 1-9; யோகத்துக்கு ஏற்ற சூழ்நிலை 10-11; யோகம் பயிலும் முறை 12-15; முன்னேற்றத்துக்கு நிபந்தனைகள் 16-20; யோகத்தில் முன்னேற்றம் 21-28; யோக ஸித்தி 29-32; அடங்காத மனத்தை அடக்க வேண்டும் 33-36; யோகப் பிரஷ்டனது கதி 37-45;- யோகம் ஒப்பற்றது 46-47.

7. ஞான விஞ்ஞான யோகம் 130

ஈசனும் அவருடைய சேதன அசேதன பிரகிருதிகளும் 1-7; பூதங்களின் தன் மாத்திரைகளாயிருப்பவர் ஈசன் 8-9; உயிர்களின் சிறப்பு கள் ஈசனிடத்திருந்து வந்தவை 9-12; முக்குண மயமான மாயை 13-15; நான்கு வித நல்லார்கள் 16-19; சிறு தேவதைகளிடம் காமிய உபாஸனை 20-23; பகவானது பாங்கு 24-26; அறிவிலிகளும் அறிஞரும் 27-30.

8. அக்ஷர பிரஹ்ம யோகம் 140

சகுணப்பிரம்ம உபாஸனை 1-8;- மரணத்தின் பொழுது இருக்க வேண்டிய மனநிலை 9-13;- மீண்டும் பிறவாநிலை 14-16; சிருஷ்டி கர்த்தாவின் இரவு பகல் 17-19; மரணமிலாப் பெருநிலம் 20-22; ஒளி மார்க்கமும் இருள் மார்க்கமும் 23-26; யாண்டும் யோகியாயிரு 27-28.

9. ராஜவித்தியா ராஜரகசிய யோகம் 149

சகுண பிரம்மத்துக்கும் பிரகிருதிக்குமுள்ள தொடர்வு 1-10; அறிவிலிகளது தரம் 11-12; பக்தர்களது போக்கு 13-15; அனைத்து மாயிருப்பவன் ஈசன் 16-19; யோகப் பிரியர்களின் பாங்கு 20-21; வந்தனைக்கேற்ற விளைவு 22-25; இறை வணக்கம் மிக எளிது 26-28; நடுநிற்கும் இறைவன் இறைஞ்சுவார்க்கு எளியன் 29-34.

## 10. விபூதி யோகம் 161

அனைத்துக்கும் ஆதி மூலமாயிருப்பவர் பகவான் 1-6; ஈசனது விபூதியைப் பற்றிய ஞானம் பக்தியை வளர்க்கிறது 7-9; அதனால் புத்தியோகம் உண்டாகிறது 10-11; தெவிட்டாத இன்பம் தருவது பகவானது விபூதி 12-18; தமது சிறப்பு இயல்புகளைப் பகவான் விளக்குகிறார் 19-40; விபூதிகளின் ஸாரம் 41-42.

## 11. விசுவ ரூப தரிசன யோகம் 174

அர்ஜுனனது வேண்டுதல் 1-4; ஞானக் கண்ணை வழங்குதல் 5-8; அனைத்தும் ஈசன் எனத் தொகுத்துக் காணுதல் 9-14; தான் கண்ட விசுவரூபத்தை அர்ஜுனன் விளக்கியுரைத்தல் 15-31; கால சொருபியாகிய ஈசன் தமது செயலைத் தாமே செய்து முடிக்கிறார் 32-34; அர்ஜுனன் செய்கிற ஸ்துதி 36-44; அர்ஜுனன் விசுவரூபதரிசனம் தனக்குப் போதுமென்றது. 45-46; அர்ஜுனனுக்குக் கிட்டிய தனி வாய்ப்பு 47-49; மீண்டும் எடுத்த சாந்த சொரூபம் 50-51; வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டிய முறை 52-55.

## 12. பக்தியோகம் 195

சகுண நிர்க்குண பிரம்ம உபாஸனைகள் 1-5; சகுண பிரம்ம உபாஸனை முறைகள் 6-12; பக்தனது பேரியல்புகள் 13-20.

## 13. க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம் 202

இருப்பதெல்லாம் பிரகிருதி புருஷன் மயம் 1-3; இவைகளைப் பற்றிய உண்மை வெளியாகிய விதம் 4; க்ஷேத்திரத்தின் பாகுபாடுகள் 5-6; ஞானத்துக்கு ஏதுவாயிருப்பவைகள் 7-11; பிரம்மம் எத்தகையது 12; ஞான பரிபாகத்தின் விளைவு 13-15; ஒன்று பலவாகத் தோன்றுகிறது 16-17; பக்தியினின்று ஞானம் வருகிறது 18; புருஷனும் பிரகிருதியும் யாண்டும் உள 19-20; பிறவிக்கு வித்து 21; பிரம்ம ஞானம் பிறவிப் பெருங்கடலை அகற்றுகிறது 22-23; நான்கு யோகங்கள் 24-25; ஒன்று என்று அறிவது முக்தி 26-28; காமம் பிரகிருதிக்கு உரியது 29-30; பிரம்மம் தன் மயம் 31.34.

## 14. குணத்ரய விபாக யோகம் 213

பிரம்ம ஞானம் மோக்ஷத்துக்கு ஏதுவாகிறது 1-2; பிறவிக்கு மூலகாரணம் 3-4; குணங்களின் செயல் 5-10; குணங்களின்

முன்னீட்டத்தை அறிவது எப்படி 11-18; குணாதீதம் முக்தி நிலை 19-20; குணங்களைக் கடந்தவனது லக்ஷணம் 21-27.

15. புருஷோத்தம யோகம் 222

ஸம்ஸார விருக்ஷம் 1-2; மரத்தை வெட்டி மோக்ஷத்தை நாடு 3-4; எத்தகையவர் மோக்ஷமடைகின்றனர் 5; பரமதம் மேலும் விளக்கப்படுகிறது 6; ஜீவதத்துவ விளக்கம் 7-9; ஞானக்கண் 10-11; பரமாத்மனது சொரூபம் 12-15; ஜீவன் - ஈசுவரன் - பிரம்மம் 16-20.

16. தைவாசுர சம்பத் விபாக யோகம் 230

தெய்விக இயல்பு 1-3; அஸுர இயல்பு -4 இரு இயல்புக்குரிய விளைவுகள் 5-6; அஸுர இயல்புகளின் விஸ்தரிப்பு 7-18; அஸுரனது வீழ்ச்சி 19-21; அஸுர இயல்பினின்று விடுதலை 22; சாஸ்திரத்தின் பிரயோஜனம் 23-24.

17. சிரத்தாத்ரய விபாக யோகம் 238

மூன்று வித சிரத்தை 1-7; மூன்று வித உணவு 8-10; மூன்று வித ஆராதனை 11-13; மூன்று வித்த் தபசு 14-19; மூன்று வித தானம் 20-22; குறைகளை நிறையாக்குதல் 23-28.

18. மோக்ஷ சந்யாச யோகம் 248

ஸந்யாஸத்துக்கும் தியாகத்துக்கும் விளக்கம் 1-6; தாமஸ் ராஜஸ தியாகம் உதவாது 7-8; ஸாத்விக தியாகம் வேண்டும் 9-12; கர்மத்துக்கு ஹேதுக்களாவன 13-16; ஆத்மாவுக்குக் கர்மம் இல்லை 17; முக்குணங்கள் கர்ம வகைகளுக்கு வேகம் தருகின்றன 18-40; நான்கு வர்ண தர்மத்தின் விளக்கம் 41-48; கர்மயோகமே கர்மஸந்யாஸமாகிறது 49-57; அஹங்காரம் கொடியது 58-60; எல்லாம் ஈசன் செயல் 61-62; உண்மையை அலசி ஆராய்வதற்கு அனுமதி 63; சரணாகதி தத்துவம் 64-66; கீதைக்கு அதிகாரி யார்? 67-71; ஞானோதயம் 72-73; ஸஞ்ஜயர் முடிவுரை 74-78.

கீதைப் பொருட்டொகை 271
கண்ணன் திருவருள் போற்றல் 274
பாட்டு முதற்குறிப்பு அகராதி 275

# கீதைப் பாட்டு

ஶ்ரீ

# கீதைப் பாட்டு

## பாயிரம்

### குரு பரம்பரை

1. பிரக லாதர்நா ரதர்பராசரர்
பெருவியாசர்வீ டுமர்சுகாதியோர்
குரவர் தூயவாழ் வார்கள் தாடொழுங்
குருபரம்பரைக் குளதெனன் பரோ.

### கலைமகள்

2. தவள மேனிநில விருளை யோவவரு சகல காவிய கலாமயில்
தகவெ னாவினட மிடுக ழற்கணொலி தமிழ்கொ
டாழினசக ளாம லால்
உவமை யோதரிய பிரம மானசுட ருலகெலா நிறையு முழுமுதல்,
உதவு ஞானநிதி யனைய கீதைதமிழுரைசெய்
வாயுடைய னாவலோ.

### கண்ணபிரான்

3. சிந்தை யநதிததி பாண்ட னாநியர்தஞ் செனன
வெஞ்சிறை விடுக் கவும்,
செகமெனும் வனிளத பாவ வன்சிறை சிதைந்து
தன்மநிலை நிற்கவும்,
சந்த மாமறை குதர்க்க மென்சிறை தவிர்ந்து
தன்னையறி விக்கவும்,
தந்தை தாயர்சிறை வந்துவாழ் வருள்செய்
தைவ மேசர ணுயிர்க்கெலாம்.

4. பாரையு நடாவிமிசை வானையு நடாவியிழி
பாதலமெ லாநடாவிப்
பல்சுடர்கள் பூதமுயிர் யாவையு நடாவியயர்
பங்கயத் தயனை முதலா

யாரையு நடாவுமொரு தெய்வம், விசயற்கினிது
தேரையு நடாய கருணை
ஞானிவினை யோகரடி யாரையு முருக்கியறி
யேனையு முருக்கிய தரோ.

5. பாராசரி யன்னசிதன் றேவலர் நாரதர்
பாகிரதி நன்மக னாதொண்சுகர் நெஞ்சொடு
சிரார்விச யன்றிக*ழ் தேர்மீது மமர்ந்தொளிர்
தேவேசன் விளங்குக சீகீதை விளங்கவே.

6. பாடுபெறு வேதமுடி பைப்பசுவ தாக்கிப்
பற்குன்னை யற்பின்வளர் கன்றென வணைத்துக்
கேடில்கட வுள்ளிடைய னாநனி கறந்தான்
கீதையெனு மாரமுத மேதைய ரருந்த.

## வேதவியாசர்

7. தெருளதாய் மறைவரும் புனலினைப் பிரமசூத்
திரமெனுங் குளனுறக் கரையெனும் மிருதிகண்
டொருபதி னெண்புரா ணம்படி பாரதம்
உயர்துறை யெனவருள் முனிபதம் பரவுதும்.

## சடகோபர்

8. ஆதிபர னோதுமுயர் கீதையிது தாழிசையி
னாகவடி யேன் முயல்வதோ
வேதகவி யேறுசட கோபமுனி பாதமலர்
மேயபின ராய துணிவே.

## யாமுனா சாரியர்

9. நாதமுனி பேரர் யாமுநய தீசர்
ஞானநிதி போல்வ ரருளானே
சாதனமி லாது தேவனருள் கீதை
தாழிசையி னாக முயல்வேனால்.

## இராமாநுசனார்

10. வேதவுரை கொண்டுநல கீதைபொருள் கண்டு
    வியாசர்மதம் விண்டுபர வாதியரை வென்று
தீதிலுப தேசநெறி யோதிநமர் வாழத்
    தேவனடி சூடுமெதி ராசனடி யோமே

## குல குரு இளையவில்லியார்

11. பார்முழுது ஞானவொளி பாவுமெதி ராச
    பாநுபர வீடுபுக லானது கனாவால்
நீர்மையி னுணர்ந்துடல மேநழுவ வானி
    னீடி ளைய வில்லியிரு தாடொழுவல் யானே.

## உலோகாசாரியர்

12. முந்து ஞான சீவசன பூடணம்
    முதல மூவறு பனுவ லோதிய
வந்த பிள்ளைலோ காரி யன்பதம்
    வாழி யென்றபின் னேழை யுய்ந்ததே

## வேங்கடநாதாரியர்

13. செகமாந்தர் பராவமிழ் தெனமாந்த நிலாவிய
    தெருள்வாய்ந்தொளிர் கீதையை யிசைபாட
நிகமாந்த கலாமணி நெடுவேங்கட நாதனை
    நினைவேன்றகு பாவினம் வருமாலோ.

## வரவரமுனிவர்

14. பலது றைக்குளு முயிர்பர னருள்புகும்
    படியிருப்பது பழுதறு துறையென
உலகு ணர்த்துநல் வரவர முனிவர
    னுதவி யெப்பொழு தினுமுள நினைவலே.

## திருமந்திர ஆசிரியர்

15. வளையொடு சக்கரமும் வளர்புய மிட்டுமறை
    மனநிறையச் செவியின் வழியி னருத்தியவன்
இளையவி விக்கடிமை யெனவெனை வைத்தவிதி
    இயவுள்சொ லைத்தமிழி னிசைசெய வைத்ததுவே.

## தமிழாசிரியர்

16. என்றாய்பது மாசனியின் னுடன்வந்
திசைநீ டியசேட விசேட னெனக்
கொன்றோ தினனன் றதுவே புலமைக்
குயர்விற் பனர்முன் னெனைவைத் ததுவே.

## செய்ந்நன்றியறிதல்

17. எவரிடத்தினு மினியிரப்பதில் லெனவிருப்புற வெனைநிறீஇ
இயவுணற்கலை பயிலவைத்தவர் திருவணைக்கதி பதியர்நீ
டவரளித்தபல் வளன்மிசைப்பெரு கதிசயக்கவி மகிமையிங்
கனைவருக்குமுள் ளுணர்தரற்கிதை யணிவனச் சுதனடியினே.

## அவையடக்கம்

18. ஆழமொடு நீளமு மரும்பொருளு மோரான்
ஆழிவிழி கண்டன னெனும்மவனை யொப்ப
ஏழையடி யேனரிய கீதையிது கண்டேன்
ஏழுலகொ டுங்குதிரு வாய்மலர்வ தெண்ணேன்.

19. சிறையிற்றிகழ் போதுந்தன திறைமைப்படி குன்றாத்
தெய்வந்தரு செம்மைப்பொருள் சிறுபுன்சொல் பொதிந்தேன்
தறையிற்புதை தலினான்மணி தன்னீர்கெட லுண்டோ
தவறிப்புனை தலினான்மலர் தணவல்லிலை மணமே.

## வாழ்த்து

20. இருவினைத்தளை பாறிய ஞானிய ரிருதயத் துணிலாய பராபரன்
இனிய பற்குன னார்கொள வோதிய விணையிலற்புத
கீதையை மேதகும்
ஒருநயித்ருவ காசிபன் மாமர புதயமுற்றவி ராகவ நாவலன்
உயர்த மிழ்ப்பெய்த தாழிசை யாமிவை யுலகுவப்புற
வூழியும் வாழ்கவே

21. வாழிய மேதைச் சாகர கீதை
வாழிய மேதக் கோர்தொழு தேவன்
வாழிய கீதைப் பாட லெநாளும்
வாழிய கேடற் றாருயிர் யாவும்.

## ஆக்கியோன் பிறப்பு முதலியன

22. பூசைகொ ணயித்துருவ காசிப குலத்தினொளிர்
பூசுர னிராமாநுசற்
காசில்குண மிக்கபது மாசனிவயிற்றுதய
மாகிவளர் சீராகவன்
தேசவரசர்க்குளுயர் சேதுபதி கட்கினிய
தீந்தமிழினுக்கொ ராசான்
காசிலமு தத்தைநிகர் கீதை யிவணர்க் கெளிது
காணவிசை கண்டன னரோ

23. குருகை யம்பதி வாழ்வுறுஞ்சட கோபநம்பிதன் கோயிலிற்
குலவு மாயிர வர்க்கமாகிய பரிசனர்க்குயர் முதல்வராய்ப்
பெருமுதன் மரியாதை பெற்றொளிர் பெரியர் பாடிய காரர்பேர்
பேணு மாமுனி வோர்பரம்பரை காணு தூய குலத்தவன்
திருநயித்ருவ காசிபன் வழி திகழிராகவன் மாதுலச்
சேடநாம விசேடனுக் கொரு சீடன் வைணவர் சேவடி
தருவெனப் பொலி சேது காவலர் வாசல் வித்துவ சம்பனன்
தாழிசைத் தமிழ் வைத்தனனமிழ் தாகுமற்புத கீதையே.

24. ஆதிபர னேவிசயன் மீதருள் சுரந்தவன
தாழியந் தேர்நடவுநாள்
ஓதுபதி னுலுலகு முள்ளதிரு வாய்மல
ருதித்துவளர் கீதையரசி
சேதுபதி யாசிரியன் வேதியர் குலாதிபன்
சீராகவன் புனைதல்செய்
கோதில் கவியாமிரத மேறியிவ ணெங்குங்
குலாவுற வுலாவருவளால்.

## கீதைப் பகுப்பு

25. முன்விசயன்றுயரம் பின்னது சாங்கியநன்
மூன்று கன்மந் தெருணான் கைந்துகன் மம்விடலா
றென்பது நெஞ்கொடுங்க லேழுவிஞ் ஞானவகை
எட்டினி லக்கரமா மொன்ப திறைக்க லைபத்
துன்னும் விபூதி பதி னொன்றுரு பத்தியிரா
றொண்பதின் மூன்றுயிர்மெய் யோர்பதினான்கு குணம்
இன்புருடோத்தமன் மூவைந்து தெய்வா சுரமீ
ரெட்டுச் சிரத்தை பதினேழ் துறவீ ரொன்பதே

26. அருச்சு னற்கிடர் சாங்கியம் வினைதெருள்
அதிற்கன் மம்விட லான்ம சம்யம்முயர்
தெருட்டொ டக்கர மாம்பர மிறைவர்தம்
தெருட்சி பற்பல்விபூதியொ டிறையுரு
பொருத்தும் பத்திமை சேத்திர மறியுயிர்
புகுத்தும் பல்குண பாகமும் புருடரை
இருத்து முத்தமன் றேவர சுரரியல்
இனச் சிரத்தைகள் வீடுற விடல் சொலும்.

27. முனர்ச்சோகம் பினர்ச்சாங்கியம் வினைப்பாங்கின் மேன்மை
முறைப்போதம் பினைத்தீர்வு மனத்தோய்தல் தெருட்பால்
செனிக்காவக்கரப் பேசூறா டறைக்காய கலைப்பால்
திருத்தேவன் விபுச் சீர்மை ஒருச்சீர் பத்திமைச்சீர்
தனித்தேக மதிச்சிவன் குணப்பான்மை புருடோத்
தமச் சீர்மை சுரர்க்காசுரருக் கான பொருட்பால்
வினைக்காய சிரத்தாத் திரயப் பாகுபாடு
விடற்காய சநியாச மெனக் கீதை வகுப்பாம்.

## கீதைப்பொருள்

28. பத்நியினுக்குயிரை யுத்தம னுற்றருள்வன்
பத்தி செயத்து ணைதன் சுத்தி தனைத் தெரிதல்
சுத்தி யுறற்கு நல்யோ குற்றகம் பற்றறுதல்
சுத்தியி னிற்குமுயிர் தற்றெரி தற்கறிவின்
வைத்திய னிட்டைகரு மத்திய னிட்டை வழி
மற்றிவை யுட்கரும நிட்டைசெ யற்கெளிதென்
றுய்த்தெது தன்பமும்விட் டுத்தம னைச் சரண்புக்
குட்டுயர் தள்ளெனல் கீதைப்பொரு ளென்பதுவே.

## கீதைப் பொருட்டொகை

### காப்பு

திருவைத் திருமாலைக் கவிதைக்கோ யிலுள்வைத்துச்
சித்தித் திரயத் தாலெயில் சூழப் புரிவித்துப்
பெருமைப் பரனுரை யாகம முழுதும் பிரமாணம்
பேணுமெனு நூலானொரு பெருவாயில் வகுத்துப்

புருடந் நிருணய மென்றுயர் பொற்கோபு ரமிட்டுப்
புலமிக் கவிர்கீதைப் பொருடொக வுய்த் தொளிர்தீபம்
இருமைப் பிணியார் நெஞ்சிரு ளேகித் தொழவேற்றும்
யமுனைந் துறைவனை யல்லதியாரைத் தொழுவேனே.

## கீதைநூற்பொருள்

தத்தங் கருமந் தலைநின் றறிவெய்திச்
சித்த நிராசை திகழேக – பத்திக்கே
நண்ணும் பரப்பிரமம் நாரணனென் றோதுவதே
புண்ணியநற் கீதைப் பொருள். (1)

## முன்னாறியற் பொருள்

துன்னிய நல் யோகத்தாற் றூயவுயிர் தான்றன்னை
மன்னி யநுபவிக்கும் வாழ்வுதவு – நன்ஞான
யோக மொடுகன்ம யோக நிட்டை யோதுவன
ஏகம் முதலா றியல். (2)

## இடையாறியற் பொருள்

பரதத் துவத்தின் படியுள்ள வாறு
விரவி யநுபவித்தல் வேண்டிக் – கரவில்
திடஞான கன்மமுண்டு செய்பத்தி யோக
நடுவான வாறோது நன்கு. (3)

## பின்னாறியற் பொருள்*

பகடி யுயிர்கள் பகடிவினை தெய்வ
மிகுமற் றிவற்றின் விவேகம் – தகுகன்ம
ஞானபத்தி யாதி நவின்றமுன்னுக் கெஞ்சியன
ஈனுரைத்த பின்னா றியல். (4)

---

* இதன்பின் அத்தியாயப் பொருளை அவ்வவ் அத்தியாத்தின் இறுதியில் காண்க

# கீதைப் பாட்டு

## முதலாம் அத்தியாயம்

## அர்ஜுன விஷாத யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

*உறவே தகவில் லாருளாழ யுறுநண்பினொ டருளால்*
*மறமேகுல வறமென்றுள மருள்வான் வெருள்தரலால்*
*அறவே தனையுள்னா யடியடை யர்ச்சுனனுக்கு*
*மறையே யவதாரஞ் செயவிளற வாய்மலர் வதுமுன்.*

குருக்ஷேத்திரப் போர் நடக்கையில் கண்ணில்லாத திருதராஷ்டிர ராஜன் தான் அங்கு செல்லக் கூடாமையால் அஸ்தினாபுரத்தில் தனதரண்மனையில் இருந்துகொண்டே போர்க்களத்தில் நடக்கும் செய்திகளைத் தனக்குச் சொல்லும்படி சஞ்ஜயன் என்ற மந்திரியை நியமிக்கிறான். வேத வியாசரருளால் ஞானதிருஷ்டி பெற்றவனாய் சஞ்ஜயன் போர்க்களத்துச் செய்திகளை திருதராஷ்டிரனுக்குச் சொல்லுகிறான். கண்ணனுக்கும் பார்த்தனுக்கும் போர்த் தொடக்கத்தில் நிகழ்ந்த சம்பாஷணையை சஞ்ஜயன் கூறுவதாகச் சமைக்கப்பட்ட பகவத்கீதைக்கு இந்த முதலத்தியாயம் பாயிரமாகக் கருதத்தகும்.

த்ருதராஷ்ட்ர உவாச :

**தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:**
**மாமகா: பாண்டவாச்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய!**

தரும மாநிலக் குருவின் மாநிலந்
தனிலென் மைந்தர்பாண் டவர்கள் தாமுமே
பொருவ தாசையா னெதிர்கு ழீஇயினார்
புரிய லாயின தெதுகொல் சஞ்சய!

*திருதராஷ்டிரன் சொல்லுகிறான் :*

சஞ்ஜயா, அற நிலமாகிய குரு நிலத்தில் போர் செய்ய விரும்பித் திரண்ட நம்மவர்களும் பாண்டவரும் என்ன செய்தனர்?

*ஸஞ்ஜய உவாச :*

**த்ருஷ்ட்வா து பாண்டவானீகம் வ்யூடந் துர்யோதனஸ்ததா**
**ஆசார்ய-முபஸங்கம்ய ராஜா வசன-மப்ரவீத்**

2. *ஒரு பாண்டு மகாரணி செய் படைகண்*
*ணுறவப் பொழு தோதுரி யோதனனாம்*
*அரசன்குரு வின்னரு கிற்புகல்புக்*
*கனனாயறை தந்தன னால் வசனம்.* 2

*சஞ்சயன் சொல்லுகிறான் :*

அப்போது துரியோதனராஜன் அணிவகுத்து நின்ற பாண்டவர் படையைப் பார்த்துவிட்டு, ஆசாரிய (துரோண) னிடம் போய் (ப் பின்வரும்) வார்த்தை சொல்லலாயினன் :

**பச்யைதாம் பாண்டுபுத்ராணா-மாசார்ய மகதீஞ் சமூம்**
**வ்யூடாந் த்ருபதபுத்ரேண தவ சிஷ்யேண தீமதா**

3. *குருவே நினதடி பயில்வோன் றுருபத*
*குமரன் மதியுடை யவனாலே*
*ஒருபாண் டுவின் வளர் புதல்வோ ரணிசெய்த*
*வுயர்வா கியபடை யிது பாராய்* 3

"குருவே, துருபதன் மகனும் நின் சீடனுமாகிய நிபுணனால் வகுப்புற்ற இப்பெரிய பாண்டவப் படையைப் பார்!

**அத்ர சூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுன ஸமா யுதி**
**யுயுதானோ விராடச்ச த்ருபதச்ச மஹாரத:**

4. *இசையும்மிட னிதினின்றவர் தறுகண்மை நிறைந்தோர்*
*இணையில் சிலை வலியானுயர் வினையெய்தின ரிகலில்*
*விசயன்னுடன் வீமன் னென வேயன்னவ ரம்மா*
*விராடன்யுயு தானன்றுரு பதமாரத னுடனே.* 4

இங்கு சூரரும் பெரிய வில்லாளிகளும் போரில் வீமனையும் பார்த்தனையும் நிகர்த்தவருமாகிய பலர் இருக்கிறார்கள் — யுயுதானன்; விராடன்; மகாரதனாகிய துருபதன்;

**த்ருஷ்டகேதுச் சேகிதான: காசிராஜச்ச வீர்யவான்**
**புருஜித் குந்தி போஜச்ச சைப்யச்ச நரபுங்கவ:**
**யுதாமந்யுச்ச விக்ராந்த உத்தமௌஜாச்ச வீர்யவான்**
**ஸௌபத்ரோ த்ரௌபதேயாச்ச ஸர்வ ஏவ மஹாரதா:**

*5,6. காசிக் கதிபதி காமர் துரோபதை மாமகார்*
*காசில் சுபத்திரை சேய்குந்தி போசனல் வெற்றி யுதாமன்யு*
*ஆசற்று வீறுத்த மோசசோடாயி புருசித்து, திட்டகே*
*தண்ணல் சயிப்பியன் சேகிதானாதி யெலோருமே மாரதர். 5-6*

திருஷ்டகேது; சேகிதானன்; வீரியமுடைய காசிராஜன்; புருஜித்; குந்தி போஜன்; மனிதரேறாகிய சைவியன்.

வலிமை மிக்க யுதாமந்யு; உத்தமௌஜா என்ற வீரன்; சுபத்திரை மகன்; திரௌபதி மக்கள்; எல்லோருமே மகாரதர்.

**அஸ்மாகந் து விசிஷ்டா யே தாந்-நிபோத த்விஜோத்தம**
**நாயகா மம ஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தான் ப்ரவீமி தே**

*7. என்ப டைக்கெவர் நாயகங் கொள்வார்*
*எவர்ந மக்குள் விசேட ராயுளார்*
*இன்ன ரைக் குறிக்கொள வுரைப்பல்நிற்*
*கிருபி றப்பினுத் தமநி னைத்தியால்.*

இனி, எனது படைக்கு நாயகராய், நம்முள்ளே சிறந்தோரையுந் தெரிந்து கொள். இருபிறப்பாளரில் மேம்பட்டவனே, குறிப்பின் பொருட்டாக அவர்களை உனக்குச் சொல்லுகிறேன்.

**பவான் பீஷ்மச்ச கர்ணச்ச க்ருபச்ச ஸமிதிஞ்ஜய:**
**அச்வத்தாமா விகர்ணச்ச ஸௌமதத்திஸ்-ததைவச**

*8. நின்னுடன் வீடுமர் கன்னனோ டேயிகல்*
*நேரானரை வெல்கிருபன்*
*தன்னுடன் சோமதத் தன்மக னச்சுவத்*
*தாமன் விகன்ன னன்னார். 8*

நீ; பீஷ்மன்; கர்ணன்; பொருநர் கூட்டத்தை வெல்வோனாகிய கிருபன்; அசுவத்தாமன்; விகர்ணன்; சோமதத்தன் மகன்;

**அன்யே ச பஹவ: சூரா மதர்த்தே த்யக்த ஜீவிதா:**
**நானா சஸ்த்ர-ப்ரஹரணா: ஸர்வே யுத்த-விசாரதா:**

9. இன்னும் வேறுபல சூர ரும்முளா
ரென்பொருட்டுயிர் விட்ட பான்மையார்
மின்னுபல்படைத் தொடைவ லாளர்போர்
விரக ராலிவ ரனைவ ரும்மரோ. 9

இன்னும் வேறு பல சூரர்; என் பொருட்டு வாழ்க்கையைத் துறந்தோர்; பல விதமான ஆயுதங்களும் அம்புகளுமுடையோர்; எல்லோருமே போரில் நிபுணர்.

**அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம்**
**பர்யாப்தந்த்வித-மேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம்**
**அயனேஷு ச ஸர்வேஷு யதாபாக-மவஸ்த்திதா:**
**பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி**

10,11. வீடுமர் காத்தது சேனைந மக்கிது போதுமெ னற்கிலையால்
வீம ளளித்தது சேனையவர்க்கிது போதுமெ னப்படலால்
வீடுமர் மட்டிலே நீவிர்குறித் தனைவீருமே காத்தல் கடன்
வேறுபடுத்துள வாயில னைத்தினு மேவி வகுத்ததுபோல். 10-11

(எனினும்) பீஷ்மனால் காக்கப்படும் நமது படை (கண்ணுக்கு) நிறைந்திருக்கவில்லை. வீமனால் காக்கப்படும் இவர்களுடைய படையோ நிறைந்திருக்கிறது.

நீங்களனைவரும் வகுப்புகளின்படி எல்லா இடங்களிலும் நின்றுகொண்டு பீஷ்மனையே காக்கக் கடவீர்.

**தஸ்ய ஸஞ்ஜனயன் ஹர்ஷங் குருவ்ருத்த: பிதாமஹ:**
**ஸிம்ஹநாதம் விநத்யோச்சை: சங்கந்தத்மௌ ப்ரதாபவான்**

12. உரைய வற்குமகி ழுளம்வி ளைப்பது செய்
தொளிறு நற்றகை பிதாமகன்
குருகு லக்கிழவ னரிமு ழக்கு குரல்
கொண்டு சங்க நனி யூதினான். 12

(அப்போது) துரியோதனனுக்கு மகிழ்ச்சி விளைவிக்குமாறு கீர்த்திமிக்க கௌரவர் கிழவனாகிய பாட்டன் உயர்ந்த குரலில் சிங்க நாதம் புரிந்து சங்கை யூதினான்.

**தத: சங்காச்ச பேர்யச்ச பணவாளககோமுகா:**
**ஸஹஸைவாப்யஹன்யந்த ஸ சப்தஸ் - துமுலோ பவத்**

*13. பின்பு சங்குபல கோமு கங்கள்பல*
*பேரி பல்பணவ மாநகம்*
*இன்ன போதுட னிசைக்க வந்தவொலி*
*யெங்க ணும்பரவ லாயதே. 13*

அப்பால், சங்குகளும், பேரிகைகளும், தம்பட்டங்களும், பறைகளும், கொம்புகளும் திடீரென ஒலித்தன. அஃது பேரோசையாயிற்று.

**தத: ச்வேதைர்-ஹயைர் யுக்தே மஹதி ஸ்யந்தனே ஸ்த்திதௌ**
**மாதவ: பாண்டவச்சைவ திவ்யௌ சங்கௌ ப்ரதத்மது:**

*14. பினர் வெண் பரிகள் பலபூ ணுவதாய்ப்*
*பெருமைக் குரிதா கியதேர் மிசையே*
*மனுமாதவனும் வதிபாண் டவனும்*
*வளர்திப் பியநல் வளையூ தினரால். 14*

பின்பு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய பெருந் தேரில் நின்ற மாதவனும் பார்த்தனும் (தம்முடைய) தேவச் சங்குகளை யூதினர்.

**பாஞ்சஜன்யம் ஹ்ருஷீகேசோ தேவதத்தந் தனஞ்ஜய:**
**பௌண்ட்ரந் தத்மௌ மஹாசங்கம் பீமகர்மா வ்ருகோதர:**

*15. பஞ்சச னுடற்கண்வரு சங்கிருடி கேசன்*
*பண்ணவர ளித்தது தனஞ்சய னொலிக்க*
*அஞ்சவினை யாளன் விரு கோதரனென் வீமன்*
*அங்க ணொர்ப வுண்டரவ ளைப்பெரி தொலித்தான். 15*

கண்ணன் பாஞ்சஜன்யத்தை யூதினான்; தேவ தத்தம் என்ற சங்கை தனஞ்ஜயன் ஒலித்தான்; அஞ்சுதற்குரிய செயல்களையுடைய ஓநாய் வயிற்று வீமன் பௌண்ட்ரம் என்ற பெருஞ்சங்கை யூதினான்.

**அனந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்ட்டிர:**
**நகுல: ஸஹதேவச்ச ஸுகோஷ-மணிபுஷ்பகௌ**

*16. குந்திவயின் வந்தவனு திட்டிரம கீபன்*
*குறித்தன னநந்தவிச யப்பெயர் கொள் சங்கம்*
*அந்தினகு லன்னவன் சுகோட மொலி செய்ய*
*அம்மசக தேவன் மணி புட்பக மொலித்தான். 16*

குந்தி மகனாகிய யுதிஷ்டிர ராஜன் அநந்த விஜயம் என்ற சங்கையும், நகுலனும் சகதேவனும் முறையே சுகோஷம், மணிபுஷ்பகம் என்ற சங்குகளையும் ஊதினர்.

**காச்யச்ச பரமேஷ்வாஸ: சிகண்டீ ச மஹாரத:**
**த்ருஷ்டத்யும்னோ விராடச்ச ஸாத்யகிச்சா பராஜித:**
**த்ருபதோ த்ரௌபதேயாச்ச ஸர்வச: ப்ருதிவீபதே**
**ஸௌபத்ரச்ச மஹாபாஹு: சங்கான் தத்மு: ப்ருதக் ப்ருதக்**

17,18. வில்லிற் றலைமைகொள் காசியாள் வேந்தன்
சிகண்டியென் மாரதன்
விராடன் றுரோபதை மைந்தர்தோள் வீங்குசு
பத்திரை சேயொனார்
வெல்லற்கரியவன் சாத்தகி மேயது
ருபதன் திட்டத்துய்ம்
மன்னனனை வருமன்னவ வேறுவே
றேவளை யூதினார். 17-18

வில்லாளிகளில் மிகச்சிறந்த காசிராஜனும், மகாரதனாகிய சிகண்டியும், திருஷ்டத்யுந்நனும், விராடனும், வெல்லப்படாத ஸாத்தியகியும்,

துருபதனும், துரோபதை மக்களும், பெருந் தோளுடையவனாகிய சுபத்திரை மகனும், தனித்தனியே தத்தம் சங்குகளை ஒலித்தனர். பூமிக்குத் தலைவனே! [இங்கு பூமிக்குத் தலைவன் என்று திருதராஷ்டிரனை, கதை சொல்லிவரும் சஞ்ஜயன் விளிக்கிறான்]

**ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானி வ்யதாரயத்**
**நபச்ச ப்ருதிவீஞ்சைவ துமுலோ வ்யனுநாதயன்**

19. தரைவி சும்பெலா மெதிரொ லிக்கவே
தாவி யெங்கணும் போயு மவ்வொலி
திருத ராட்டிரன் சிறுவர் நெஞ்சைமாத்
திரம டுத்துழிப் பிளவு செய்ததே. 19

அந்தப் பெருமுழக்கம் வானையும் மண்ணையும் உடனொலிக்கச் செய்வதாய், திருதராஷ்டிரக் கூட்டத்தாரின் நெஞ்சுகளைப் பிளந்தது.

**அதவ்யவஸ்த்திதான் த்ருஷ்ட்வா தார்த்தராஷ்ட்ரான் கபித்வஜ:**
**ப்ரவ்ருத்தே சஸ்த்ரஸம்பாதே தனுருத்யம்ய பாண்டவ :**

*20. இதன்பின்க விக்கேத னன்பாண்டு மைந்தன்*
*எறியப்பல் படைகள் கொளாநின்ற வங்கண்*
*முதிர்தந்தை சேயா- யிருந்தே முனைந்து*
*முன்னின்ற பேர்கண்டு தன்வில் லுயர்த்தி. 20*

அப்பால், (இரு திறத்தும்) அம்புகள் பறக்கத் தலைப்பட்டன. அப்போது குரங்குக் கொடியுயர்ந்த பார்த்தன் திருதராஷ்டிரக் கூட்டத்தாரை நோக்கி வில்லை யேந்திக் கொண்டு, கண்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான் :

*அர்ஜுந உவாச :*

**ஹ்ருஷீகேசந் ததாபாக்ய-மிதமாஹ மஹீப தே**
**ஸேனயோ-ருபயோர்-மத்த்யே ரதம் ஸ்த்தாபய மேSச்யுத**

*21. எனது தேரையிரு படையினூடு கொடு*
*நிறுவுவாய் நழுவிடாதவ*
*எனவவ் வேளையிது வசன மோதல் செய்வ*
*னிருடி கேசனோ டிர ாசனே 21*

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

"அச்சுதா, படைகளிரண்டுக்கும் நடுவே என் தேரைக் கொண்டு நிறுத்துக" என்று. [கேளாய், திருதராஷ்டிரராஜனே!]

**யாவதேதாந் நிரீக்ஷேஹம் யோத்துகா-மான வஸ்த்திதான்**
**கைர்-மயா ஸஹ யோத்தவ்ய-மஸ்மின் ரணஸமுத்யமே**

*22. இகல்தொ டங்குமிவ ணெவர்த மோடு மெதி*
*ரேன்றியா னிகல்வதென்பதற்*
*கிகல்செயும் விழைவி னுடனமர்ந்தவிவ*
*ரெவரையும் விழிகொ டறிவல்யான் 22*

சமரை விரும்பி நிற்கும் இவர்களை நான் பார்க்க வேண்டும். இந்தப் போர்த் தொடக்கத்தில் என்னோடு போர் செய்யக் கடவோர் யாவர்?

**யோத்ஸ்யமானா-னவேக்ஷேSஹம் ய ஏதேSத்ர ஸமாகதா:**
**தார்த்தராஷ்ட்ரஸ்ய துர்ப்புத்தேர்-யுத்தே ப்ரிய சிகீர்ஷவ:**

*23. புந்தி கெட்டவன் றிருத ராட்டிரன்*
*புதல்வ னாசையே புரிதல் வேட்டிகல்*
*முந்து மிக்களன் வந்து தொக்கமர்*
*முயல்வ ரேவர்யா னவரை நோக்குவேன். 23*

"கெட்ட மதிகொண்ட துரியோதனனுக்குப் பிரீதி செய்யும் வண்ணம், இங்கு போர் செய்யத் திரண்டு நிற்போரை நான் காண வேண்டும்?" என்றான்.

**ஸஞ்ஜய உவாச :**

**ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ குடாகேசேன பாரத**
**ஸேனயோ-ருபயோர்-மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம்**

*24. துயிலை யாளு மவனி தோத*
*விருடி கேச னிருபதேர்*
*உயர்வின் வீறியதைந டாவி*
*யுபய சேனை யிடை நிறீஇ. 24*

***சஞ்சயன் சொல்லிக்கொண்டு வருகிறான் :***

(கேளாய்) பரத நாட்டரசே, இங்ஙனம் பார்த்தனுரைத்தது கேட்ட கண்ணன் மிகவும் மேன்மை கொண்ட அத்தேரை இரண்டு படைகளுக்குமிடையே கொண்டு நிறுத்தினான்.

**பீஷ்மத்ரோண ப்ரமுகத: ஸர்வேஷாஞ் ச மஹீக்ஷிதாம்**
**உவாச பார்த்த பச்யைதான் ஸமவேதான் குரூனிதி**

*25. வீடுமர் துரோணர் முதலாய பெரியோர்க்கு*
*மேதினி புரப்ப ரனைவர்க்கு மெதிரேதான்*
*கூடுகுரு வின்மரபு ளாரிவரை நோக்கிக்*
*கொள்கபிரு தைக்கொரு குமாரவென விண்டான். 25*

பீஷ்மனுக்கும் துரோணனுக்கும் மற்றெல்லா வேந்தருக்குமெதிரே தேரை நிறுத்திக்கொண்டு: "பார்த்தா! இங்கு கூடி நிற்கும் கௌரவரைப் பார்!" என்றான்.

**தத்ராபச்யத் ஸ்த்திதான் பார்த்த: பித்ரூனத பிதா மஹான்**
**ஆசார்யான் மாதுலான் ப்ராத்ரூன் புத்ரான் பௌத்ரான்**
**ஸகீன்-ஸ்ததா**

*26,27 பிருதைமக னங்கண் ணிருபடையு ணின்ற*
*பிதிரர் குரவோர் பிதாமகர் பல்பேரர்*
*ஒருதுணைவர் சேய்பெண் ணுதலியவர் தோழ*
*ருடன்வயிறு ளார்மா துலரைவிழி கண்டான். 26, 27*

அங்கு பார்த்தன் தன்னுடைய தந்தையாரும், பாட்டன் மாரும், குருக்களும், மாதுலரும், அண்ணன் தம்பிகளும், மக்களும், பேரரும், தோழர்களும் நிற்பது கண்டான்.

**ச்வசுரான் ஸுஹ்ருதச்சைவ ஸேனயோ-ருபயோ-ரபி**
**தான் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வான் பந்தூ-னவஸ்த்திதான்**
**க்ருபயா பரயாSSவிஷ்டோ விஷீதன்-னித-மப் ரவீத்**

*27,. குந்தி சேயவ னங்கண் மேயவக்*
*28 கூடு சுற்றமெல் லாமு நன்குகண்*
*டந்தி லாரருள் வந்து சூழநின்*
*றதிவ ருத்தமொ டிதையு ரைத்தனன். 27-28*

அங்ஙனமே மாமன்மாரும், நண்பர்களும், உறவினரெல்லாரும் இரண்டு படைகளிலும் நிற்கக் கண்டு, குந்தி மகனாகிய அப் பார்த்தன் - மிகவும் இரக்கமுற்றவனாய்த் துயருடன் சொல்லுகிறான்:

*அர்ஜுன உவாச :*

**த்ரு ஷ்ட்வேமம் ஸ்வஜனம் க்ருஷ்ண யுயுத்ஸும் ஸமுபஸ்திதடம்**
**ஸீதந்தி மம காத்ராணி முகஞ்ச பரிசுஷ்யதி**
**வேபதுச்சசரீரே மே ரோமஹர்ஷச்ச ஜாயதே**

*28,29. போர்பொருவ திற்பெரிது மார்வமுள ராகிப்*
*புக்கிவ ணெருங்கியுள விக்கிளைஞ ரைக்கண்*
*டாருட லொடுங்கிமுக மாங்குலரு வேனெற்*
*காடுவது தேகமயிர் குச்செறிவ தாகும். 28-29*

அர்ஜுனன் சொல்லுகிறான்.

"கண்ணா, போர் செய்ய வேண்டி இங்கு திரண்டு நிற்கும் சுற்றத்தார் களைக் கண்டு,

என் அவயவங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. என்னுடம்பு நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது.

**காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ பரிதஹ்யதே**
**ந ச சக்னோம்-யவஸ்த்தாதும் ப்ரமதீவ ச மே மன:**

*30. காண்டிவமென் கைப்பிடி கழன்றுவிழு மம்ம*
*காந்தியெரி கிற்பதுட லேந்துதசை யுந்தான்*
*ஈண்டென்மன முஞ்சுழலு கின்றதென வுள்ளேன்*
*இங்கணிலை நிற்கவு மெனுக்குவலி யின்றே. 30*

காண்டீவம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சலுண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழலுகிறது. [காண்டீவம் என்பது அர்ஜுனனுடைய வில்லின் பெயர்]

**நிமித்தானி ச பச்யாமி விபரீதானி கேசவ!**
**ந ச ச்ரேயோऽனுபச்யாமி ஹத்வா ஸ்வஜன-மாஹவே**

31. கேசவ நிமித்தமென லாயபல வுந்தாங்
கேடுகுறி செய்வவிழி யூடுதெரி வேனால்
பூசல்விளை யுங்களனிடைத்தம ருளாரைப்
பொன்றுவது செய்வதினொர் நன்றுமறி யேனே. 31

கேசவா, விபரீதமான சகுனங்கள் பல காண்கிறேன். போரிலே சுற்றத்தார் களை மடிப்பதில் எனக்கு நன்மை தோன்றவில்லை.

**ந காங்க்ஷே விஜயங் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகானி ச**
**கிந்நோ ராஜ்யேன கோவிந்த கிம் போகைர் ஜீவிதேன வா**

32. அரசுஞ் சுகத்தோ டவாவேன் வெலல்வேண்
டலனாவல் கோவிந்த நலநாம கண்ண
தரையாள்வ தாலென் சுகத்தாலென் வாழ்வு
தன்னானு மேயாக என்னா நமக்கே. 32

கண்ணா, நான் வெற்றியை விரும்புகிலேன்; ராஜ்யத்தையும், இன்பங் களையும் வேண்டுகிலேன். கோவிந்தா, நமக்கு ராஜ்யத்தால் ஆவதென்? இன்பங்களால் ஆவதென்? உயிர் வாழ்க்கையாலேனு மாவதென்னே?"

**யேஷாமர்த்தே காங்க்ஷிதந் நோ ராஜ்யம் போகா: ஸுகானி ச**
**த இமேऽவஸ்த்திதா யுத்தே ப்ராணான்ஸ்-த்யக் த்வா தனானி ச**

33. எவர்க்காக யாம்ராச போகம் சுகம்வேண்
டினமாவ மின்னோர் தனந்தம்ம தோடு
தவத்தம் பிராணன் னெனத்தக்க வற்றைத்
தனிவிட் டமர்க்கட் சமைந்தே யமர்ந்தார். 33

யாவர் பொருட்டு நாம் ராஜ்யத்தையும் போகங்களையும் இன்பங்களை யும் விரும்புகிறோமோ, அவர்கள் உயிரையும் செல்வங்களையும் துறந்தோராய் இங்கு வந்து நிற்கிறார்கள்.

**ஆசார்யா: பிதர: புத்ராஸ்-ததைவ ச பிதாமஹா:**
**மாதுலா: ச்வசுரா: பௌத்ரா: ஸ்யாலா: ஸம்பந்தி னஸ்-ததா**

34. ஆசாரியர் தாதையர் புத்திரரங்
ஙனமேய பிதாமகர் மாதுலர்கள்
மாசாலர்கள் பேரர் மகட்டருவோர்
மருவும் முறவாளரு மப்படியே. 34

குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதுலரும், மாமன்மாரும், பேரரும், மைத்துனரும், சம்பந்திகளும், (இங்குளர்).

**ஏதாந் ந ஹந்து-மிச்சாமி க்னதோऽபி மதுஸூதன**
**அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோ: கிந் நு மஹீக்ருதே**

35. *என்னைமது சூதன கொலப்புகுவ ரேனு*
*மீண்டுலக மூன்றரசி னேதுவிது வேனும்*
*இன்னவரை யானுமெதிர் கொல்லவிழை கில்லேன்*
*இச்சிறும ணெய்தவஃ தென்னைபுரி வேனோ.* 35

மதுசூதனா, யான் கொல்லப்படினும் இவர்களைக் கொல்ல விரும்புகிலேன். மூவுலகின் ஆட்சி பெறுதற்கெனினும் (இது செய்யேன்!) பூமியின் பொருட்டுச் செய்வனோ?

**நிஹத்ய தார்த்தராஷ்ட்ராந் ந: கா ப்ரீதி: ஸ்யாஜ்-ஜனார்த்தன**
**பாபமேவாச்ரயே-தஸ்மான் ஹத்வைதா-னாததாயின:**

36. *ஏதுதான் விழைவினைச் செய்யுமோ திருதராட்*
*டிரன்மகா ரிளைவதிப் பதுசநார்த் தனவெமக்*
*காததா யிகளெனா வுளவினோர் தமையெதிர்ந்*
*தடுதலா னமையறங் கடையுமே யடையுமே.* 36

ஜநார்த்தன! திருதராஷ்டிரக் கூட்டத்தாரைக் கொன்று நாம் என்ன இன்பத்தை யடையப் போகிறோம்? இந்தப் பாதகரைக் கொல்வதானால் நம்மைப் பாவமே சாரும்.

**தஸ்மாந்-நார்ஹா வயம் ஹந்தும் தார்த்தராஷ்ட்ரான் ஸ்வபாந்தவான்**
**ஸ்வஜனம் ஹி கதம் ஹத்வா ஸுகின: ஸ்யாம மாதவ**

37. *சுற்றத் தொடுந்திருத ராட்டிரன் மகாரைத்*
*துணித்தற் கிதாலுரிய மில்லையல மேயாம்*
*மற்றுற்ற நந்தமரை யட்டபினெவ் வாறு*
*மாதவநல் வாழ்வுடைய மாதுமென லாமே.* 37

ஆதலால், சுற்றத்தாராகிய திருதராஷ்டிர வர்க்கத்தாரைக் கொல்வது நமக்குத் தகாது. மாதவா, பந்துக்களைக் கொன்றபின் நாம் இன்புற்றிருப்பதெப்படி?

**யத்யப்யேதே ந பசயந்தி லோபோபஹத-சேதஸ:**
**குலக்ஷயக்ருதந் தோஷம் மித்ரத்ரோஹே ச பாதகம்**

38. *குடிதீய விளைகுற்ற முதுநட்பின் வஞ்ச*
*வினைகூர் பாவமிப்*
*பிடிவாத லோபத்தி னழிநெஞ்சர் தேறப்*
*பெறாரேனுமென்.* 38

அவாவின் மிகுதியால் அறிவிழந்த இவர்கள் குலத்தையழிப்பதில் விளையும் தீங்கையும், நண்பருக்குச் சதி செய்வதிலுள்ள பாதகத்தையும் காண்கிலராயினும்,

**கதம் ந ஜ்ஞேய-மஸ்மாபி: பாபாதஸ்மாந்-நிவர்த்திதும்**
**குலக்ஷயக்ருதந் தோஷம் ப்ரபச்யத்பிர் ஜனார்த்தன**

*39. குலநாசம் விளைகுற்ற மறிவுற்ற*
*யாமிக்கொ டும்பாவமிங்*
*கிலமாத லெவ்வாறு தெரிகிற்ப*
*திலைசென்மம் மிலை செய்பவ. 39*

ஜநார்த்தன! குலநாசத்தால் ஏற்படுங் குற்றத்தை உணர்ந்த நாம் இப் பாவத்தினின்று விலகும் வழியறியாதிருப்பதென்னே?

**குலக்ஷயே ப்ரணச்யந்தி குலதர்மா: ஸநாதனா:**
**தர்மே நஷ்டே குலங்-க்ருத்ஸ்ன-மதர்மோ பிபவத்யுத**

*40. துன்னுகுல நாசமுறு மென்னி னிதனோடு*
*தொன்மைவர லாயகுல தன்மமிலை யாகும்*
*தன்மமிலை யாகியதன் பின் மரபெலாமும்*
*சாடிமற மேமிகவு மூடுவது முண்டால். 40*

குல நாசத்தால் என்றுமுள்ள குலதர்மங்கள் அழிகின்றன. தர்மம் அழிவதனால் குலமுழுதையும் அதர்மம் சூழ்கிற தன்றே?

**அதர்மாபிபவாத் க்ருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்திரிய:**
**ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர:**

*41. தீதுவினை சூழவரு போதுகுல மாதர்*
*தீமைமிக மேவியவ ராவருயர் கண்ண*
*யாதவநன் மாதர்மிக வேதமுள ராயி*
*னெவ்வருண முங்கலவ லெய்துறு மரோதான். 41*

கண்ணா, அதர்மம் சூழ்வதனால் குல ஸ்திரீகள் கெட்டுப் போகிறார்கள். விருஷ்ணி குலத் தோன்றலே, மாதர் கெடுவதனால் வர்ணக் குழப்பமுண் டாகிறது.

**ஸங்கரோ நரகாயைவ குலக்னானாம் குலஸ்ய ச**
**பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்த-பிண்டோதக-க்ரியா:**

*42. குலனோடு குடிகொன்ற பேருக்கு நரகே*
*கொண்டுய்ப்ப தற்காகு மந்தோ கலப்பு*
*சலமோடு பிண்டங் கன்மத்திற் பெறாமே*
*தாம்வீழ்வ ரன்றோ விவர்க்குப் பிதிர்க்கள். 42*

அக் குழப்பத்தால் குலத்தார்க்கும் அதனை அழித்தார்க்கும் நரகமேற்படுகிறது. இவர்களுடைய பிதிர்க்கள் பிண்டமும் நீருமின்றி வீழ்ச்சி பெறுகிறார்கள்.

**தோஷைரேதை: குலக்னானாம் வர்ணஸங்கர- காரகை:**
**உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாச்ச சாச்வதா:**

*43. குடிகெ டுத்தவர் வருணமொன்று*
*படுத்து மிப்பிழை கோளினால்*
*நெடுநி லைப்புள குலவறத்தொடு*
*நின்ற சாதிதன் மங்கெடும். 43*

வர்ணக் குழப்பமுண்டாகும்படி குலக்கேடர் செய்யும் இக்குற்றங்களால் ஜாதி தர்மங்களும் தொன்று தொட்டுள்ள குலதர்மங்களும் எடுபட்டுப் போகின்றன.

**உத்ஸன்ன குலதர்மாணாம் மனுஷ்யாணாஞ் ஜனார்த்தன**
**நரகே நியதம் வாஸோ பவதீத்-யனுசுச்ரும**

*44. குலவ றங்கெட நின்ற மானிடர்*
*குடியிருப்பிரு ளாவதோ*
*உலைவி லாதமெய் யென்று பன்முறை*
*யோர்த்த லுண்டு சநார்த்தன. 44*

ஜநார்த்தன, குலதர்மங்கள் எடுபட்டுப்போன மனிதருக்கு எக்காலும் நரகத்தில் வாசமென்று கேள்விப்படுகிறோம்.

**அஹோ பத மஹத்பாபம் கர்த்தும் வ்யவஸிதா வயம்**
**யத்ராஜ்ய-ஸுக-லோபேன ஹந்தும் ஸ்வஜன-முத்யதா:**

*45. ஐயோ பெரும்பாவஞ் செய்யத் துணிந்தோம்*
*அதிதுக்க மிதுவம்ம வெதனான்மண் ணெல்லாம்*
*கையாள் சுகத்தாசை யானம்மி னத்தோர்*
*களையாம் வதித்தற் கெழுந்தோ மதாலே. 45*

அந்தோ! அரசவின்பத்தை விழைந்து சுற்றத்தாரைக் கொல்ல முற்படும் நாம் பெரிய பாவஞ்செய்யத் தலைப்பட்டோம்!

**யதிமா-மப்ரதீகாரம் அசஸ்த்ரம் சஸ்த்ரபாணய:**
**தார்த்தராஷ்ட்ரா ரணே ஹன்யுஸ்-தன்மே க்ஷேம தரம் பவேத்**

46. திடமு டைப்படை யுடைய கையினர்
திருத ராட்டிரன் மக்கடாம்
படைவி டுத்தெதி ராவெ னைக்கள
னடினெ னக்குயர் நலமதாம். 46

கையிலாயுதமில்லாமல், எதிர்க்காமல் நிற்குமென்னை இந்த திருதராஷ்டிரக் கூட்டத்தார் ஆயுதபாணிகளாய்ப் போரில் மடித்துவிடினும் அது எனக்குப் பெரிய நன்மையேயாம்.

**ஏவமுக்த்வா அர்ஜுன: ஸங்க்யே ரதோபஸ்த உபாவிசத்**
**விஸ்ருஜ்ய ஸசரம் சாபம் சோக-ஸம்விக்ன-மானஸ:**

47. இடர்வ ருத்துமன மொடுக ளத்தினிடை
யிவையுரைத்து பினரர்ச்சுனன்
தொடுக ணைச்சிலையை நழுவ விட்டிரத
நடுவி ருப்பது செய்தானரோ. 47

***சஞ்ஜயன் சொல்லுகிறான் :***

செருக்களத்தில் இவ்வாறு சொல்லிவிட்டுப் பார்த்தன் அம்புகளையும் வில்லையும் எறிந்து போட்டுத் துயரில் மூழ்கிய மனத்தனாய்த் தேர்ப் பீடத்தின் மேலுட்கார்ந்து கொண்டான்.

முதலாம் அத்தியாயம் நிறைவேறியது.

## கீதைப் பொருட்டகை

நள்ளா விடத்துச்செய் நண்பாற் கருணையினாற்
றள்ளா வறத்தைமறந் தானாகக் — கொள்பயத்தாற்
சஞ்சலித்துத் தற்சேர் தனஞ்சயனை நோக்கியிறை
செஞ்சொலவ தாரஞ் செயும். (5)

# கீதைப் பாட்டு

## இரண்டாம் அத்தியாயம்

## ஸாங்கிய யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

இரண்டெனிய னித்தமுயி ரின்கணிலை யுள்ளந்
தெருண் டுவளர் சாங்கியமெனுந் திறல்கொள் புத்தி
இருண்டபசை யற்றகன்ம யோகமெனும் புத்தி
மருண்டவர் தெளிந்துகொள வாய்மொழிவ தாகும்.

*போர்புரிய மனம் வராமல் திகைத்துத் தன்னைச் சரணடைந்த அர்ஜுனனை நோக்கிக் கண்ணன் உரைக்கின்றான் : -"அர்ஜுனா, நீ வருந்துவது முற்றிலும் தவறு. எதிரிகளின் ஆன்மாவைப் பற்றி வருந்துகின்றாயா, அல்லது அவர்களின் உடலைப் பற்றி வருந்துகின்றாயா? இரண்டும் சரியல்ல. ஆன்மா என்றும் அழிவற்றது. அதைக் கத்தியால் வெட்டவும் தீயினால் எரிக்கவும் முடியாது. உடலோ அழியும் இயல்பு வாய்ந்தது. நீ அழிக்காவிடினும் அதுதானே அழிய வேண்டியதுதான். ஆன்மாவுக்கு ஒருடல் அழிந்ததும், மற்றொருடல் தானே வந்து சேரும். ஆத்மாவின் இயற்கையை எண்ணி உனக்கு ஏற்படுத்தப்பட்ட செயல்களை நீ செய்தே தீரவேண்டும். அச்செயல்களைச் செய்யுங்கால், நாம் செய்யவேண்டியதைச் செய்கிறோம். அதுவும் ஈசுவரப் பிரீதிக்காகவே, என்று எண்ணிச் செய். இதனால் ஆத்மஞானம் பெருகி அதில் நிலை பெற்று நற்கதியடைவாய். ஈசுவரப் பிரீதியைத் தவிர மற்ற பலனைக் கோரினால் சம்சாரக் கட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது.*

*ஸஞ்ஜய உவாச :*

**தம் ததா க்ருபயாவிஷ்ட-மச்ருபூர்ணாகுலேக்ஷணம்**
**விஷீதந்த-மிதம் வாக்ய-முவாச மதுஸூதன:**

1. *அவ்வா றருளா லறவூர் பவனா*
*யழுநீர் முழுதா யலமந் தனனோ*
*டிவ்வா றயர்வா னவனுக் குரையோ*
*திதையோ தினனான் மதுசூ தனனே.* 48

*சஞ்ஜயன் சொல்லுகிறான் :*

அவ்வண்ணம் இரக்கமிஞ்சியவனாய் நீர் நிரம்பிய சோக விழிகளுடன் வருந்திய அர்ஜுனனை நோக்கி மதுசூதனன் சொல்லுகிறான் :

*ஸ்ரீ பகவானுவாச :*

**குதஸ்-த்வா கச்மல மிதம் விஷமே ஸமுபஸ்த்திதம்**
**அனார்யஜுஷ்ட-மஸ்வர்க்ய-மகீர்த்திகர-மர்ஜுன**

2. *மடவர் படைப்பது வான மறுப்பது*
*வன்பழி யுய்ப்பதிந் நோய்*
*இடனி விடத்துனை யேனனிபற்றி*
*யிருப்ப தருச்சுனனே.* 49

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

இந்த முட்டுதலில் இவ்வுள்ளச் சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இஃது ஆரியருக்குத் தகாது. வானுலகைத் தடுப்பது; அபகீர்த்தி தருவது - அர்ஜுனா!

**க்லைப்யம் மாஸ்மகம: பார்த்த நைதத் த்வய்யுப பத்யதே**
**க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்ப்பல்யந் த்யக்த்வோத் திஷ்ட்டபரந்தப**

3. *பிருதைசேய் பரந்தப விடற்படேல்*
*பெருநி னக்கிதோ தகுவ தில்லையால்*
*இருத யத்திலே தயிரி யம்மிலா*
*வியல்பி கழ்ச்சிமற் றெழுக விட்டுநீ.* 50

பார்த்தா, பேடித்தன்மையடையாதே! இது நினக்குப் பொருந்தாது. இழி பட்ட மனத் தளர்ச்சியை நீக்கி எழுந்து நில், பகைவரைச் சுடுவோனே!

*அர்ஜுன உவாச :*

**கதம் பீஷ்ம-மஹம் ஸங்க்யே த்ரோணஞ்ச மதுஸூதன**
**இஷுபி: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதன**

4. *வென்றுபகை கொன்றமது சூதன நன்னாம*
*வீடுமர்து ரோணர் வழிபாடுதகு வாரை*
*நன்றிரண பூமியிடை நின்றுகணை கொண்டு*
*நானுமெதிர் தந்திகலெவ் வாறுபுரி வேனோ.* 51

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

மதுசூதனா, பீஷ்மனையும், துரோணனையும் போரில் அம்புகளால் எப்படி எதிர்ப்பேன்? இவர்கள் தொழுதற்குரியர்; பகைவரை யழிப்போய்!

**குரூ-னஹத்வா ஹி மஹானுபாவான்**
**ச்ரேயோ போக்தும் பைக்ஷ்ய-மபீஹ லோகே**
**ஹத்வார்த்த-காமாம்ஸ்து குரூ-னிஹைவ**
**புஞ்ஜீயபோகான் ருதிர-ப்ரதிக்தான்**

5. *பெருக்குமகி மைக்குரவ ரைக்கொலைசெ யாதே*
*பிச்சையுணி னும்புவியிதிற் பெருமை யன்றோ*
*அருத்திபொரு ளிற்செய்குர வோர்கொலைசெய் தன்னார்*
*அரத்தமெழு குஞ்சுகம ருந்தலெவ னிங்கே.* 52

பெரியோராகிய குருக்களைக் கொல்லாமல், உலகத்தில் பிச்சையெடுத்துண்பதும் நன்று. பொருளை விரும்பும் குருக்களைக் கொன்று நாம் துய்க்கும் இன்பங்கள் உதிரத்திற் (ரத்தத்தில்) கலந்தனவாம்.

**நசைதத் வித்ம: கதரந்நோ கரீயோ**
**யத்வா ஜயேம யதி வா நோ ஜயேயு:**
**யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாமஸ்-**
**தேவஸ்த்திதா: ப்ரமுகே தார்த்தராஷ்ட்ரா:**

6. *யாம்வெல் லுதுமோ வெமைவெல் லுவரோ*
*எதுமே லறியே மிவிரண் டுளமக்*
*கியாமே வரைவென் றிவண்வா ழவெணேம்*
*எதிர்நின் றுளர்நம் முதிர்தந் தைமகார்.* 53

மேலும், நாம் இவர்களை வெல்லுதல், இவர்கள் நம்மை வெல்லுதல் - இவற்றுள் எது நமக்கு மேன்மையென்பது விளங்கவில்லை. எவரைக் கொன்றபின் நாம் உயிர்கொண்டு வாழ விரும்போமோ, அத்தகைய திருதராஷ்டிரக் கூட்டத்தார் போர் முனையில் வந்த நிற்கிறார்கள்.

**கார்ப்பண்ய-தோஷோபஹத-ஸ்வபாவ:**
**ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா:**
**யச்சரேயஸ்யாந்-நிச்சிதம் ப்ரூஹி தன்மே**
**சிஷ்யஸ்தேSஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம்**

*அறமோ தெரியா மதியே னிவறும்*
*அரிலா வழியு மியல்பே னின்வினா*
*வுறுமெற் குயர்வே ததுதேர் புரையான்*
*உனதா ளுனையெய் தினனே வெனையே.* 54

சிறுமையாகிய குறையால் இயல்பு அழிந்தவனாய் அறம் இன்னது என்றுணராமல் மயங்கிய அறிவுடன், யான் உன்னைக் கேட்கிறேன். எது நன்றென்பதை எனக்கு நிச்சயப்படுத்திச் சொல்லுக. நான் உன் சீடன். உன்னையே சரணமெனப் புகுந்தேன். கட்டளை தருக.

**ந ஹி ப்ரபச்யாமி மமாபனுத்யாத்**
**யச்சோக-முச்சோஷண-மிந்த்ரியாணாம்**
**அவாப்ய பூமாவஸபத்னம்ருத்தம்**
**ராஜ்யம் ஸுராணா-மபிசாதிபத்யம்**

8. *புவியிற் பகையடு நிதிபெற் றரசொடு*
*புலவர்க் கரசது பெறினும் மென்*
*அவியப் பொறிதெறு மிடரைக் களைவுறும்*
*அஃதெப் படியென வறியேனே.* 55

பூமியின் மேல் நிகரில்லாத செல்வமுடைய ராஜ்யம் பெறினும், அன்றி வானோர்மிசை ஆட்சி பெறினும் புலன்களை அடக்கும் இயல்புடைய இந்தத் துயர் எம்மைவிட்டு நீங்குமென்று தோன்றவில்லை.

***ஸஞ்ஜய உவாச :***

**ஏவமுக்த்வா ஹ்ருஷீகேசம் குடாகேச: பரந்தப:**
**ந யோத்ஸ்ய இதி கோவிந்த-முக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ**

9. *இருடீ கேசகோ விந்த னாரிடன்*
*இவைமொ ழிந்தியா னிகல்கி லெனென*
*உரைவி டுத்துவா யுரையி லாயினன்*
*உயர்ப ரந்தபன் றுயிலை வென்றவன்.* 56

*சஞ்ஜயன் சொல்லுகிறான் :*

"பகைவரைக் கொளுத்தும் பார்த்தனங்கு பசுநிரை காக்கும் பகவனை நோக்கிப் "போரினிப் புரியேன்" என்று வாய் புதைந்திருந்தான்."

**தமுவாச ஹ்ருஷீகேச: ப்ரஹஸன்னிவ பாரத**
**ஸேனயோ-ருபயோர்-மத்த்யே விஷீதந்த-மிதம் வச:**

*10. இருத ளத்துநாப் பண்ணி ருந்திட*
*ரெய்து வானையவ் விருடி கேசனும்*
*பரிக சிப்பவ னென்ன விம்மொழி*
*பன்னி னானரோ பரத வீரனே. 57*

பாரதா, அப்போது கண்ணன் புன்னகை பூத்து, இரண்டு படைகளுக்கும் நடுவே துயருற்று நின்ற பார்த்தனை நோக்கி இவ்வசனமுரைக்கிறான் :

*ஸ்ரீ பகவானுவாச :*

**அசோக்யா-னன்வசோசஸ்-த்வம் ப்ரஜ்ஞா வாதாம்ச்ச பாஷஸே**
**கதாஸூ-நகதாஸூம்ச்ச நானுசோசந்தி பண்டிதா:**

*11. சோகிக்க வொண்ணாத வற்றிற்கு நீதான்*
*சோகிப்பை ஞானத்திலுஞ் சொல்வை வாதம்.*
*போகுற்ற மெய்யோடு போகா வுயிர்க்கும்*
*புன்கண்பொ ருந்தார்மெய் கண்டார்க ளம்மா. 58*

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

"துயரப்படத் தகாதார் பொருட்டுத் துயர்ப்படுகின்றாய். ஞானவுரைகளு முரைக்கிறாய்! இறந்தார்க் கேனும் இருந்தார்க் கேனுந துயர் கொளார் அறிஞர்."

**நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜனாதிபா:**
**ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்**

12. யானுள்ள னில்லையென லேயில்லை யென்றைக்கும்
நீயுள்ளை யில்லை யிலைவேந்
தீனுள்ள ரில்லையிலை யினிமேலும் யாமுற்றும்
இலமாவ மெனலு மிலையே. 59

இதன் முன் எக்காலத்திலும் நான் இல்லாதிருந்திலேன். நீயும் இங்குள்ள வேந்தர் யாவரும் அப்படியே. இனி நாம் என்றைக்கும் இல்லாமற் போகவும் மாட்டோம்.

**தேஹினோஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா**
**ததா தேஹாந்தரப்ராப்திர்-தீரஸ்-தத்ர ந-முஹ்யதி**

13. இவ்வுட லிளமையவ் வனங்கிழ
மிம்மெயி லுளவுயிர்க் கெவ்விதம்
அவ்விதம் பிறிதுட லடைவதா
மதிலுயர் மேதையர் பேதுறார். 60

ஆத்மாவுக்கு இவ்வுடலில் எங்ஙனம் பிள்ளைப் பிராயமும், இளமையும், மூப்புந் தோன்றுகின்றனவோ, அங்ஙனமே மற்றொரு சரீரப் பிறப்புந் தோன்றுகிறது. தீரன் அதில் கலங்கமாட்டான்.

**மாத்ரா-ஸ்பர்சாஸ்து கௌந்தேய சீதோஷ்ணஸுக து: க்கதா;**
**ஆகமாபாயினோநித்யாஸ்-தான்ஸ்-தி திக்ஷஸ்வ பாரத**

14. குந்திமக னாகிவரு பாரத புலங்கள்
கொண்டுதொட வெம்மைகுளிர் துன்பமுட னின்பாம்
வந்திடையி னேயழிவ மன்னுநிலை யில்ல
மற்றவைய னைத்தையும் வகிப்பது செய்வாயால். 61

குந்தியின் மகனே, குளிரையும் வெப்பத்தையும், இன்பத்தையும் துன்பத்தையும் தரும் இயற்கையின் தீண்டுதல்கள் தோன்றி மறையும் இயல்புடையன, என்று மிருப்பனவல்ல. பாரதா, அவற்றைப் பொறுத்துக்கொள்.

**யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப**
**ஸமது: க்கஸுகந் தீரம் ஸோம்ருதத்வாய கல்பதே**

15. *எத்தயிரி யத்தனை வருத்தலிவை யில்லை*
*இடரைம கிழ்வைச் சமமெனா நினைவ னன்னோன்*
*செத்திட விலாதநிலை சேருதல் பொருட்டுத்*
*திறனுடைய னாவனுள புருடர்களி லேறே.* 62

யாவன் இவற்றால் துயர்ப்படான், இன்பமுந் துன்பமும் நிகரெனக் கொள்வான், அந்த தீரன், சாகாதிருக்கத் தகுவான்.

**நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத:**
**உபயோரபி த்ருஷ்டோऽந்தஸ்-த்வனயோஸ் தத்வதர்சிபி:**

16. *இருப்ப சத்தினுக் கெய்த வில்லைமற்*
*றின்மை சத்தினுக் கென்ப தில்லையிவ்*
*விரட்டை யிற்குமிம் முடிபு தத்துவத்*
*தியல்பு ணர்ந்துளோர் தெளிவ டைந்ததே.* 63

இல்லாதது உண்மை யாகாது. உள்ளது இல்லாத தாகாது. உண்மையறிவார் இவ் விரண்டுக்குமுள்ள வேற்றுமை யுணர்வார்.

**அவிநாசி து தத்வித்தி யேந ஸர்வமிதந் ததம்**
**விநாச-மவ்யயஸ்யாஸ்ய ந கச்சித் கர்த்து-மர்ஹதி**

17. *எதனால்நி றைந்த தாழிவ் வனைத்து*
*மதுவோகெ டாதென் றறிகேடி லாத*
*இதனுக்கு நாசம் புரிவிப்ப தற்கொன்*
*றேனும்மு ரித்தா யினதில்லை யம்ம.* 64

இவ்வுலக முழுதிலும் பரந்து நிற்கும் பொருள் அழிவற்ற தென்றறி; இது கேடற்றது; இதனை யழித்தல் யார்க்கும் இயலாது.

**அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: சரீரிண:**
**நாசிநோऽப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்த்யஸ்வ பாரத**

18. *கெடுவிக்க வியலாத தளவைக்கு முடியாது*
*கிளர்நிச்ச லுளதென்ற தேகிக்கென*
*இடனுற்ற வித்தேக முடிபுற்று விழலாகு*
*மியல்புற்ற திதனானு மிகல் பாரத.* 65

ஆத்மா (சரதன்) நித்தியன்; அழிவற்றான்; அளவிடத்தகாதான். எனினும் அவனுடைய வடிவங்கள் இறுதியுடையன என்பர். ஆதலால், பாரதா, போர் செய்.

**ய ஏனம் வேத்தி ஹந்தாரம் யஸ்சைனம் மன்யதே ஹதம்**
**உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹன்யதே**

19. *இதுகொ லும்மென வெண்ணு வானெவ*
*னிதுகொ லப்படு மென்றெ ணும்மெவன்*
*மதியி லார்களவ் விருவ ரும்மிது*
*மாய்வ தில்லைமாய்ப் பதுவு மிஃதிலை.*

இவன் கொல்வானென்று நினைப்போனும், கொல்லப் படுவானென்று நினைப்போனும் - இருவரும் அறியாதார். இவன் கொல்லுவதுமில்லை கொலையுண்பதுமில்லை.

**ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்**
**நாயம் பூ த்வா பவிதா வா ந பூய:**
**அஜோ நித்ய: சாச்வதோSயம் புராணோ**
**ந ஹன்யதே ஹன்யமானே சரீரே**

20. *இவனெப் பொழுதத்து முதிப்பதிலை*
*இறக்கின்றது மில்லுள னாயிலனில்*
*இவனித் தியனென்று மசன்பழையன்*
*இவன் மெய்யட லுற்று மடப்படலில்.* 67

இவன் பிறப்பது மில்லை; எக்காலத்திலும் இறப்பது மில்லை. இவன் ஒரு முறையிருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றான்; அனவரதன். இவன் சாசுவதன்; பழையோன்; உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படான்.

**வேதாவிநாசினம் நித்யம் ய ஏன-மஜ-மவ்யயம்**
**கதம் ஸ புருஷ: பார்த்த கங் காதயதி ஹந்தி கம்**

21. *இவ னிறப் பதிலை பிறப்பதிலை யழிக்க உரியனில்*
*லெனவு நித்தனெனவு மற்றையெவ னுணர்ச்சி யுறுவனோ*
*அவனொருத்த னெவனை யெப்படிக் கொல்விப்பனாவனால்*
*அன்றியு மெவன்றனைக் கொல்கிற்பனாவன் பிருதைசேய்.* 68

இப்பொருள் அழிவற்றது, பிறப்பற்றது, என்று முளது - இங்ஙனமுணர்வான் கொல்வதெவனை? அவன் கொல்விப்பதெவனை?

**வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய**
**நவானி க்ருஹ்ணாதி நரோSபராணி**
**ததா சரீராணி விஹாய ஜீர்ணான் –**
**யன்யானி ஸம்யாதி நவானி தேஹீ**

*22. கந்தை யாயதுகில் விட்டுவேறு புதி*
*தெந்தவாறு நரன்கைக் கொள்வன்*
*அந்த வாறுகிழ மெய்யை விட்டு நவ*
*மாயவே றடைவ தாமுயிர்.* 69

நைந்த துணிகளைக் கழற்றி யெறிந்துவிட்டு, மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல, ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எய்துகிறான்.

**நைநஞ் சிந்தந்தி சஸ்த்ராணி நைநன் தஹதி பாவக:**
**ந சைனங் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத:**

*23. இவனைப் படைகள் சிதையச் செயலில்*
*லிவணத் தழலோ சுடுதற் கிலையால்*
*இவனைப் புனலு நனையச் செயலில்*
*லிலையே வளியும் முலரச் செயலே.* 70

இவனை ஆயுதங்கள் வெட்ட மாட்டா; தீ எரிக்காது, நீர் இவனை நனைக்காது, காற்று உலர்த்தாது.

**அச்சேத்யோயS-மதாஹ்யோSய-மக்லேத்யோ Sசோஷ்ய ஏவ ச**
**நித்ய:ஸர்வகத: ஸ்த்தாணு-ரசலோSயம் ஸநாதன:**

*24. இவன்வெட் டுறாதவ னனையப்ப டாதவன்*
*எரிதற்கொ ணானிவ னுலரற்கு மேயிலன்*
*எவையிற்று மேவினன் சலனத்தை மேவலன்*
*இவனித்தன் றாணுவொ டொருமற் றநாதியே.* 71

பிளத்தற் கரியவன்; எரித்தற்கும், நனைத்தற்கும், உலர்த்துதற்கும் அரியவன்; நித்தியன்; எங்கும் நிறைந்தவன், உறுதியுடையான், அசையாதான், என்றும் இருப்பான்.

**அவ்யக்தோயS-மசிந்த்யோயS-மவிகார்யோயS-முச்யதே**
**தஸ்மா-தேவம் விதித்வைநம் நானுசோசிது-மர்ஹஸி**

25. இவன்பு லப்படா னிவனெ ணப்படா
னிவன்வி காரமே லானெ னப்படும்
இவைகு றித்திவ்வா றிவனை யுற்றுணர்ந்
திடரை மேவநீ கடவை யில்லையால். 72

"தெளிதற் கரியான் சிந்தனைக் கரியான் மாறுத லில்லாதா னென்ப! ஆதலால் இவனை இங்ஙனம் அறிந்து நீ துயர்ப் படா திருக்கக் கடவாய்."

**அத சைனம் நித்யஜாதம் நித்யம் வா மன்யஸே ம்ருதம்**
**ததாபி த்வம் மஹாபாஹோ நைநம் சோசிது-மர்ஹஸி**

26. பின்னு நிச்சலும் மிவைபி றப்பவாய்ப்
பிறிது நிச்சலு மிவையி றப்பவாய்
உன்னு வாயெனி னும்பெ ரும்புயா
உறுக ணீதுற வுரியை யாகிலாய். 73

அன்றி, நீ இவனை நித்தமும் பிறந்து நித்தமும் மடிவானென்று கருதினால், அஃபோதும், பெருந் தோளுடையாய், நீ இவன் பொருட்டுத் துயருறல் தகாது.

**ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர்-த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச**
**தஸ்மா-தபரிஹார்யேSர்த்தே ந த்வம் சோசிது-மர்ஹஸி**

27. ஒருபி றப்பினை யுளதி றப்பதோ
வுறுதி செத்ததும் வருதல் மெய்ம்மையாம்
பரிசு ரிக்கவொண் ணாத தற்குநீ
பருவ ரற்படற் குரியை யில்லையால். 74

பிறந்தவன் சாவது உறுதியெனில், செத்தவன் பிறப்பது உறுதியெனில், இந்த விலக்கொணாச் செய்திக்கு நீ அழுங்குதல் தகுதியன்று.

**அவ்யக்தாதீனி பூதானி வ்யக்த-மத்யானி பாரத**
**அவ்யக்த-நிதனான்யேவ தத்ர கா பரிதேவனா**

28. புலப்ப டாமுதற் படுவ பூதமோ
புலப்ப டும்மிடை நிலையை யுள்ளன
புலப்ப டாதவீ றுடைய வேயிதிற்
புன்க ணெய்துவ தென்கொல் பாரத. 75

பாரதா, உயிர்களின் ஆரம்பம் தெளிவில்லை; நடுநிலைமை தெளிவுடை-யது; இவற்றின் இறுதியுந் தெளிவில்லை. இதில் துயர்ப்படுவதென்னே

**ஆச்சர்யவத் பச்யதி கச்சிதேனம்**
**ஆச்சர்யவத் வததி ததைவ சான்ய:**
**ஆச்சர்யவச்சைன-மன்ய: ச்ருணோதி**
**ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கச்சித்**

*29. ஒருவன்வி யப்புள தெனவிது காணும்*
*ஒருவன்வி யப்புள தெனுமது விதம்வே*
*றொருவன்வி யப்புள தெனவிது கேட்கும்*
*ஒருவனு முற்றுணர் கிலனிது கேட்டும்.* 76

இந்த ஆத்மாவை, "வியப்பென ஒருவன் காண்கிறான், வியப்பென ஒருவன் சொல்லுகிறான், வியப்பென ஒருவன் கேட்கிறான், கேட்கினும், இதனை அறிவான் எவனுமிலன்."

**தேஹீ நித்ய-மவத்யோSயம் தேஹே ஸர்வஸ்ய பாரத**
**தஸ்மாத் ஸர்வாணி பூதானி ந த்வம் சோசிது-மர்ஹஸி**

*30. எல்லா ரதுமெய்கொலை யுண்டுநிதம்*
*இத்தேகி கொலப்படி வில்லதனால்*
*எல்லாவித சீவர்க ளுக்குமிடர்*
*எய்தத்தகு வாயலை பாரதநீ.* 77

பாரதா, எல்லாருடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்ல முடியாதவன், ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா!

**ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிதுமர்ஹஸி**
**தர்ம்யாத்தி யுத்தாச்-ச்ரேயோSன்யத் க்ஷத்ரியஸ்ய ந வித்யதே**

*31. உனக்குரிய தன்மம் மெனக்கருதி யேனும்*
*உளப்பெரு நடுக்க முறற்குரியை யல்லை*
*எனைத்தறமு முய்க்குஞ் செருக்குயரு மற்ற*
*நிறைக்குடியின் வந்த வனுக்கிலை மெய்யன்றோ.* 78

ஸ்வதர்மத்தைக் கருதியும் நீ நடுங்குதல் இசையாது. அறப் போரைக் காட்டிலும் உயர்ந்ததொரு நன்மை மன்னர்க்கில்லை.

**யத்ருச்சயா சோபபன்னம் ஸ்வர்க்கத்வார-மபாவ்ருதம்**
**ஸுகின: க்ஷத்ரியா: பார்த்த லபந்தே யுத்த-மீத்ருசம்**

*32. முயற லின்றியு மியற லாயது*
*முன்றி றந்தவான் வாயி லாயதில்*
*வியல்பி னமைபோர் பிருதை செய்சுகம்*
*எய்து மன்னரே பெற்றி னெய்துவார்.* 79

தானே வந்தெய்வது, திறந்து கிடக்கும் பொன்னுலக வாயில் போன்றது. இத்தகைய போர் கிடைக்கப் பெறும் மன்னர் இன்பமுடையார்!

**அத சேத் த்வமிமமம் தர்ம்யம் ஸங்க்ராமமம் ந கரிஷ்யஸி**
**தத: ஸ்வதர்மம் கீர்த்திஞ் ச ஹித்வா பாப-மவாப்ஸ்யஸி**

*33. அறமார்செரு விதுநீபுரி யலையேலத னாலுன்*
*அறமோபுக முடனேகெட மறமேவுவை யாலோ.* 80

அன்றி நீ இந்தத் தர்ம யுத்தத்தை நடத்தாமல் விடுவாயானால், அதனால் ஸ்வதர்மத்தையும் கீர்த்தியையும் கொன்று பாவத்தை யடைவாய்.

**அகீர்த்திஞ்சாபி பூதானி கதயிஷ்யந்தி தேSவ்யயாம்**
**ஸம்பாவிதஸ்ய சாகீர்த்திர்-மரணா-ததிரிச்யதே**

*34. குறைத்தலிலாப் பழிப்பினைநிற் குறித்துயிர்க ணிகழ்த்தும்*
*சிறப்புடையாற் கிழிப்புரைமற் றிறப்பினதி சயிக்கும்.* 81

உலகத்தார் உனக்கு மாறாத வசையுமுரைப்பார்கள். புகழ் கொண்டோன் பின்னரெய்தும் அபகீர்த்தி மரணத்திலுங் கொடிதன்றோ?

**பயாத்-ரணா-துபரதம் மம்ஸ்யந்தே த்வாம் மஹாரதா:**
**யேஷாஞ் ச த்வம் பஹுமதோ பூத்வா யாஸ்யஸி லாகவம்**

*35. யாருக்கு மதிப்பவ னாகிமிக*
*எளியன்னென வாகுவை நீயதனாற்*
*சீருற்ற மகாரத ராமவர்நீ*
*செருவோய்தல் பயத்தினெனத் தெரிவார்.* 82

நீ அச்சத்தால் போரை விட்டு விலகியதாக மகாரதர் கருதுவார்கள். அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்ற நீ இதனால் சிறுமை யடைவாய்.

**அவாச்ய-வாதாம்ச்ச பஹூன் வதிஷ்யந்தி தவாஹிதா:**
**நிந்தந்தஸ்-தவ ஸாமர்த்யம் ததோ து: க்கதரம் நு கிம்**

*36. நின்னிடத் திதமிலார் நின்னுடைத் தறுகணை*
*நிந்தையே செய்குவா ராகுவார் பற்பல*
*பன்னருந் தீச்சொலும் பன்னுவார் மற்றதிற்*
*பருவரன் மிக்கதும் மெதுகொலோ வுளதரோ.* 83

உனக்கு வேண்டாதார் சொல்லத் தகாத வார்த்தைகள் பல சொல்லுவார்கள். உன் திறமையைப் பழிப்பார்கள். இதைக் காட்டிலும் அதிகமான துன்பமெது?

**ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்க்கம் ஜித்வா வா**
**போக்ஷ்யஸே மஹீம்**
**தஸ்மா-துத்திஷ்ட்ட கௌந்தேய யுத்தாய க்ருதநிச்சய:**

37. *கொலப்படுவை யாயினுங் கொளப்பெறுவை வானம்*
*கொளச்செய மெய்தின் னநுபவிப்பை புவிதானிந்*
*நிலக்க ணுண்மை யானிலைகொள் நிச்சயமு ளாயாய்*
*நின்றுபொரு தற்கெழுக குந்திமக னாவாய்.* 84

கொல்லப்படினோ வானுல கெய்துவாய். வென்றால் பூமியாள்வாய். ஆதலால் போர் செயத் துணிந்து நீ எழுந்து நில்.

**ஸுகது:க்கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ**
**ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாப-மவாப்ஸ்யஸி**

38. *துன்ப மின்பமோ டிழவு பேறெனத்*
*தோல்வி வென்றிக ளென்பவுஞ்சமம்*
*என்ப தாநினைந் தியைக போர்பொரற்*
*கிதனி னெய்துவா யில்லை பாவமே.* 85

இன்பம், துன்பம், இழவு, பேறு, வெற்றி, தோல்வி இவற்றை நிகரெனக்கொண்டு, நீ போர்க்கொருப்படுக. இவ்வணம் புரிந்தால் பாவமெய்தாய்.

**ஏஷா தேऽபிஹிதா ஸாங்க்யே புத்திர்-யோகே த்விமாம் ச்ருணு**
**புத்த்யா யுக்தோ யயா பார்த்த கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி**

39. *இதுசாங் கியபுத்தி யுனக்குரை தந்தேன்*
*யோகிடை யோவித னைச்செவிகேள்*
*எதுபுந்தி யுடன்னினை தந்துவினையின்கட்*
*டறுவாய் பிருதைக் கொருசேய்.* 86

இங்ஙனம் உனக்கு சாங்கிய வழிப்படி புத்தி சொன்னேன். இனி யோக வழியால் சொல்லுகிறேன்; கேள். இந்தப் புத்தி கொண்டவன் கர்மத் தளைகளைச் சிதறி விடுவான்.

**நேஹாபிக்ரம-நாசோSஸ்தி ப்ரத்யாவாயோ ந வித்யதே**
**ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்**

40. இதன்கட் டொடக்கங் கெடற்காவ தில்லை
இடைவிட்ட போழ்தத்தொர் குற்றம் புகாதால்
இதுதன்ம மோவற்ப மேயென்னி னுந்தான்
இரக்கிக்கு மிக்குள்ள வச்சத்தி னின்றே. 87

இதில் முயற்சிக்கு அழிவில்லை. இது வரம்பு மீறிய செய்கையுமன்று. இந்தத் தர்மத்தில் சிறிதிருப்பினும், அஃதொருவனைப் பேரச்சத்தினின்று காப்பாற்றும்.

**வ்யவஸாயாத்மிகா புத்தி-ரேகேஹ குருநந்தன**
**பஹுசாகா ஹ்யனந்தாச்ச புத்தயோSவ்யவஸாயினாம்**

41. உயிரின் கணோர்நிச் சயமுள் ளவறி
வொன்றே குருநந் தனவிவ் விடனில்
உயிரின் கணோர்நிச் சயமில் லரறி
வொன்றல பலசாகைய வெண்ணிலவால். 88

குருகுலத் தோன்றலே! உறுதியுடைய புத்தி இவ்வுலகத்தில் ஒருமையுடையது. உறுதியில்லாதோரின் மதி பல கிளைப்பட்டது. முடிவற்றது.

**யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்-யவிபச்சித:**
**வேதவாதரதா: பார்த்த நான்ய-தஸ்தீதி வாதின:**

42. வேதஞ்சொ லப்பெற்ற வற்றாசை யுற்றார்
வேறில்லை யென்றோது கிற்பா ரெதோவிப்
போதே மலர்ந்தன்ன சொல்லோது வார்தாம்
புந்திக்கு ளோரார்கள் குந்திக்கு மைந்த. 89

வேதங்களின் வெளியுரையில் மகிழ்வார் சிலர். பூக்களைப் போன்ற (அலங்காரச்) சொற்கள் பேசுகிறார்கள். தமது கொள்கை யொழிய மற்றது பிழையென்கிறார்கள்.

**காமாத்மான: ஸ்வர்க்கபரா ஜன்மகர்மபலப்ரதாம்**
**க்ரியாவிசேஷபஹுலாம் போகைச்வர்யகதிம் ப்ரதி**

43. பிறப்பிற் கன்மத்திற் புகுத்தும் பயன்கள்
பெறச்செய் பல்கன்மச் சிறப்புள்ள போக
வெறுக்கைக் குறும்பல் கதிக்காக வுள்ளம்
விழைந்தோர் துறக்கஞ் சிறப்பென் றுளாரே. 90

இவர்கள் காமிகள்; சுவர்க்கத்தைப் பரமாகக் கொண்டோர். பிறப்புக்கும் தொழிலுக்கும் பயன் வேண்டுவோர்; போகத்தையும் ஆட்சியையும் வேண்டுவோர்; பலவகையான கிரியைகளைக் காட்டிப் பேசுகிறார்கள்.

**போகைச்வர்ய-ப்ரஸக்தானாம் தயாபஹ்ருத சேதஸாம்**
**வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ ந விதீயதே**

44. போகமொடு செல்வமிசை யாசைமிகு வாரப்
பூநிகர்சொ லானபக ரித்தவறி வோருக்
கேகவுயிர் நிச்சயமெ னத்தெளி யுணர்ச்சி
இதயமிசை யேயுளதெ னப்படுத லில்லை. 91

இவர்கள் சொல்லுவதைக் கேட்டு மதிமயங்கி, போகத்திலும் ஆட்சியிலும் பற்றுறுவோருடைய நிச்சய புத்தி சமாதியில் நிலை பெறாது.

**த்ரைகுண்யாவிஷயா வேதாநிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன**
**நிர்த்வந்த்வோ நித்யஸத்வஸ்த்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவான்**

45. மறைமுக் குணமுற் றவரைக் கருதா
வருமர்ச்சுன முக்குண மற்றுறவற்
றுறுசத்துவ நிச்ச னிலைத் துயிரோ
டுறைகிற்பை படைப்பொ டளிப்பிலையாய். 92

மூன்று குணங்களுக்குட்பட்டனவற்றைக் குறித்து வேதங்கள் பேசுகின்றன. அர்ஜுனா, நீ மூன்று குணங்களையுங் கடந்தோனாகுக. *இருமைகளற்று, எப்போதும் உண்மையில் நின்று, யோக க்ஷேமங்களைக் கருதாமல், ஆத்மாவை வசப்படுத்தியவனாகுக. [இருமைகள் : நன்மை, தீமை; ஒளி, இருள்; குளிர், வெப்பம் போன்ற இரட்டை நிலைகள்.]

**யாவாநர்த்த உதபானே ஸர்வத: ஸம்ப்லுதோதகே!**
**தாவான் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:**

*46. யாங்க னம்புன னிறைதடத்தினு*
*ளெத்து ணைப்பய னோவதே*
*பாங்க றிந்துள வைதி கர்க்குறு*
*பயனெ லாமறை யின்கணும். 93*

எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு சிறு குட்டம் என்ன பொருளுடையது; அன்ன பொருளே ஞானமுடைய பிராமணனுக்கு வேதங்களுமுடையன.

**கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன**
**மா கர்மபலஹேதுர்ப்பூர்-மா தே ஸங்கோSஸ்த்-வகர்மணி**

*47. வினையி லேயதி காரநிற்குறு*
*பயனி லேயொரு பொழுதுமில்*
*வினைப யன்களி லேதுவாகலை*
*வினைசெய் யாமை விரும்பல்நீ. 94*

தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரமுண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் செய்யாமலுமிராதே.

**யோகஸ்த்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய1**
**ஸித்த்யஸித்த்யோ: ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே**

*48. கிட்டியத னஞ்சய விருப்பமற விட்டுக்*
*கிடைத்தல் கிடை யாமையிடை யொப்ப வுளையாகி*
*உட்டிகழும் யோகநிலை நின்றுவினை செய்யில்*
*வொத்தபடி நிற்பதனை யோகமென லுண்டால். 95*

தனஞ்ஜயா, யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றி தோல்விகளை நிகரெனக்கொண்டு தொழில்களைச் செய்க. நடுநிலையே யோகமெனப் படும்.

**தூரேண ஹ்யவரம் கர்ம புத்தியோகாத் தனஞ்ஜய**
**புத்தௌ சரண-மந்விச்ச க்ருபணா: பலஹேதவ:**

49. புத்தி யோகினிற் றூர மாய்வினை
போயி ழிந்த தன்றோ தனஞ்சய
புத்தி யிற்சரண் புகல்வி ரும்புக
புகுப யன்னிப முடையார் பற்றார். (நிபம்-ஏது) 96

தனஞ்ஜயா, "புத்தி யோகத்தைக் காட்டிலும் கர்மம் நெடுந்தொலை தாழ்ந்தது. புத்தியைச் சரணடை. பயனைக் கருதுவோர் லோபிகள். [புத்தியோகம் - புத்தியில் லயித்து நிற்றல், கர்மம் - தொழில்].

**புத்தியுக்தோ ஜஹாதீஹ உபே ஸுக்ருததுஷ்க்ருதே**
**தஸ்மாத்-யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு கௌசலம்**

50. இந்தக் கன்மத்தின்க ணேபுத்தி யோகுற்
றிருப்பான் விடுப்பா னலந்தீங் கிரண்டும்
அந்தத் திறத்திற் றொடங்கியோ குறற்கென்
றறச்சாது ரியமாம் வினைக்கண் ணியோகம். 97

புத்தியுடையவன் இங்கு நற்செய்கை, தீச்செய்கை இரண்டையுந் துறக்கி றான். ஆதலால் நீ யோகத்திலே பொருத்திவிடு. யோகம் செயல்களில் திறமையாம்.

**கர்மஜம் புத்தியுக்தா ஹி பலம் த்யக்த்வா மநீஷிண:**
**ஜன்மபந்த-விநிர்முக்தா: பதம் கச்சந்த்-யனாமயம்**

51. வினையுண்டு பண்ணும் பயன்விட்டு மேதை
மிசையோக முற்ற மதிவாழ்ந ரன்றோ
செனனப் பிணிப்பை யறவிட்டு நாசத்
தினையெய்தி லாத பதமெய்து வாரால். 98

புத்தியுடைய மேதாவிகள் செய்கையில் விளையும் பயனைத் துறந்து, பிறவித் தளை நீங்கி, ஆனந்தப் பதவி அடைகிறார்கள்.

**யதா தே மோஹகலிலம் புத்திர்-வ்யதிதரிஷ்யதி**
**ததா கந்தாஸிநிர்வேதம் ச்ரோதவ்யஸ்ய ச்ருதஸ்ய**

52. மோகக் கலக்கமுன் புத்தியெப் போது
முற்றுங்க டப்பது மற்றந்தப் போது
சோகப் படப்புகு வாயிவை கேட்ட
தொட்டும்பின் கேட்பன தொட்டுநி னைத்துள்

உனது புத்தி மோகக் குழப்பத்தைக் கடந்து செல்லுமாயின், அப்போது கேட்கப்போவது கேட்கப்பட்டது என்ற இரண்டிலும் உனக்கு வேதனையேற்படாது.

**ச்ருதிவிப்ரதிபன்னா தே யதா ஸ்த்தாஸ்யதி நிச்சலா**
**ஸமாதாவசலா புத்திஸ்-ததா யோக-மவாப்ஸ்யஸி**

*53. உன்றன் னிதயத் துறுகேள் வியினா*
*லுறுதிப் படலா யொருதன் மையதாய்*
*என்றெய் துவைபுத் திசலிப் பிலதா*
*யன்றெய் துவையா குவையோ கமதை.* 100

உனது புத்தி கேள்வியிலே கலக்கமுறாததாய், உறுதிகொண்டு, சமாதி நிலையில் அசையாது நிற்குமாயின், அப்போது யோகத்தை அடைவாய்.

*அர்ஜுன உவாச :*

**ஸ்த்திதப்ரஜ்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்த்தஸ்ய கேசவ**
**ஸ்த்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம்**

*54. நிலையாய சமாதிகொ ணிட்டையிலே*
*நிலையாய நினைப்பி னவற்கெது பேர்*
*நிலையா மறிவோ னெதையோ துமெதை*
*நினைவா னெதையெய் துவன்கே சவனே.* 101

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

கேசவா, உறுதிகொண்ட அறிவுடன் சமாதியில் நிற்போன் எவ்வாறு பேசுவான்? ஸ்திர புத்தியுடையவன் என்ன சொல்வான்? எப்படி யிருப்பான்? எதனை யடைவான்?

**ப்ரஜஹாதி யதா காமான் ஸர்வான் பார்த்த மனோகதான்**
**ஆத்மன் யேவாத்மனா துஷ்ட: ஸ்த்திதப்ரஜ்ஞஸ் - ததோச்யதே**

*55. நின்றுயிரை யேநினையு நெஞ்சின்மகிழ் வோனாய்*
*நெஞ்சு புகு காமமுழு துந்தொலைவ தென்றோ*
*அன்றுநிலை யாயவுணர் வொன்றியவ னென்ன*
*அப்பெயர் சொலற்குரிய னற்பிருதை மைந்த.* 102

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

பார்த்தா, ஒருவன் தன் மனதில் எழும் விருப்பங்களனைத்தையும் துறந்து தன்னிலே தான் மகிழ்ச்சி பெறுவானாயின், அப்போது ஸ்திர புத்தியுடைய வனென்று சொல்லப்படுகிறான்.

**து:க்கேஷ்வனுத்விக்னமனா: ஸுகேஷுவிகத-ஸ்ப்ருஹ:**
**வீதராகபயக்ரோத: ஸ்த்திததீர்-முனிருச்யதே**

*56. துயரினசை யாத மனமுடைய னாகிச்*
*சுகநசை யுறாது விழைவொடு குரோதம்*
*பயமிவைகள் போகி மனனமுள னானோன்*
*பகர்தல்பெறு வானா னிலையுமறி வோனா.* 103

துன்பங்களிலே மனங்கெடாதவனாய், இன்பங்களிலே ஆவலற்றவனாய், அச்சமும் சினமுந் தவிர்த்தவனாயின், அம்முனி, மதியிலே யுறுதி வாய்ந்தவனென்ப.

**ய: ஸர்வத்ராநபிஸ்நேஹஸ் தத்தத்ப்ராப்ய சுபாசுபம்**
**நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்ட்டிதா**

*57. எவனெ வற்றினும் மதிக நண்பிலான்*
*எதுசு பாசுபம் மடைய வும்மகிழ்*
*பவன்வெ றுப்பவன் னெனவி லன்னவன்*
*அறிவ ரோதிட நிலைய டைந்ததே.* 104

எவன் நல்லதும் கெட்டதும் வருமிடத்தே எதனிலும் வீழ்ச்சியற்றவனாய், ஆவலுறுவதும் பகைப்பதுமின்றி யிருப்பானோ, அவனுடைய அறிவே நிலை கொண்டது.

**யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்கானீவ ஸர்வச:**
**இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ்-தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்ட்டிதா**

*58. எப்போது புலங்க டொடும் பொறிக*
*ளிவனாமை யுறுப்பி னெலா வகையும்*
*அப்போது சுருக்குவ னோவவனுக்*
*கறிவோர் நிலையாக வமர்ந்ததுவே.* 105

ஆமை தன் அவயங்களை இழுத்துக் கொள்ளுவது போல், எப்புறத்தும் விஷய பதார்த்தங்களினின்று புலன்களை யொருவன் மீட்க வல்லானா யின் அவனறிவே நிலைகொண்டது.

**விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹின:**
**ரஸவர்ஜம் ரஸோSப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே**

*59. துய்ப்பதொழி வுற்றுட லிருக்குமுயி ருக்குத்*
*தொலைவ விடயம்பல வவாவொழிய வன்னான்*
*னைத்துள வவாவுமுயர் வாகியது கண்டு*
*தன்னிலையி னிற்றிரும மன்னுவது மாதோ.* 106

தம்மைக் கவராத ஜீவனிடமிருந்து விஷயங்கள் தாமே விலகிக்கொள்ளுகின்றன. எனினும் அவற்றிடமுள்ள சுவையை இவன் மறப்பதில்லை. பரம்பொருளைக் காண்பானாயின், அச்சுவையுந் தீர்ந்துவிடும்.

**யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித:**
**இந்த்ரியாணி ப்ரமாதீனி ஹரந்தி ப்ரஸபம் மன:**

*60. அறிதந் தவனாய் முயல்கின் றவனே*
*ஆவா னெனினும் புருடன் வலிசெய்*
*பொறிகள் பலவும் வலிசெய் துளனைப்*
*பொருதுங் கவர்கின் றனகுந் தியின்செய்.* 107

குந்தியின் மகனே, (தவ) முயற்சியுடைய புருஷனிடத்திலேகூட இந்திரியங்கள் வரம்பு கடந்து செல்லும்போது தம்முடன் மனத்தையும் வலிய வாரிச் செல்கின்றன.

**தானி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர:**
**வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்ட்டிதா**

*61. உவைய னைத்தையுந் தவவ டக்கியென்*
*னுழைம னத்தைவைத் தியோகொ டார்கமற்*
*றெவன் வயத்தினைம் பொறிக ளுள்ளவோ*
*இனித வன்கணே மதிநி லைத்ததே.* 108

அவற்றையெல்லாம் நன்றாக அடக்கி, யோகத்தில் அமர்ந்தவனாய், என்னைப் பரமாகக் கொண்டு, புலன்களை வசப்படுத்தி வைத்திருப்பவன் எவனோ, அவனுடைய அறிவே நிலைகொண்டது.

**த்யாயதோ விஷயான் பும்ஸ: ஸங்கஸ்தேஷூபஜாயதே**
**ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோऽபிஜாயதே**

*62. விடயங் கருதும் புருடற் கவைதம்*
*மிசைவந் துபொருந் தலுறுந் தொடர்பு*
*தொடர்பின் விழைவென் பதுவந் தடையுந்*
*தொடரும் விழைவின் மிகும்வெஞ் சினமே.* 109

மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் விருப்பமுண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது.

**க்ரோதாத் பவதிஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸம்ருதிவிப்ப்ரம:**
**ஸ்ம்ருதிப்ப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி**

*63. நெடுநீள் சினனான் மருளா மருளா*
*னினைவோ தடுமா றுதலா நினைவின்*
*தடுமா றுதலான் மதிகே டடையுந்*
*தவவே கெடுமே மதிகே டதனான்.* 110

சினத்தால் மயக்கம்; மயக்கத்தால் நினைவுத் தவறுதல்; நினைவுத் தவறுதலால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அழிகிறான்.

**ராகத்வேஷ-வியுக்தைஸ்து விஷயா-னிந்த்ரியைச்-சரன்**
**ஆத்மவச்யைர்-விதேயாத்மா ப்ரஸாத-மதிகச்சதி**

*64. தன்வ யப்படும் பொறிக ளால்விட*
*யங்க ளைக்கடந் தியலு கிற்பனாய்*
*மன்வெ றுப்பொடும் விழைவ றுத்ததன்*
*வயம னத்தினன் மருவு நிர்மலம்.* 111

விழைதலும் பகைத்தலுமின்றித் தனக்கு வசப்பட்ட புலன்களுடன் விஷயங்களிலே ஊடாடுவோனாய்த் தன் விதிக்குத் தான் உட்பட்ட மனிதன் ஆறுதலடைகிறான்.

**ப்ரஸாதே ஸர்வது:க்கானாம் ஹானி-ரஸ்யோபஜாயதே**
**ப்ரஸன்ன-சேதஸோ ஹ்யாசு புத்தி:பர்யவதிஷ்ட்டதே**

*65. இதயந் நிருமல மடையின் னிவனுக்*
*கெதுதுன் பமுமொழி வுறுதல் பிறக்கும்*
*இதயந் நிருமல முடையற் கலவோ*
*இனிதின் விரைவின் மதிநிலை நிற்கும்.* 112

சாந்தி நிலையில் மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிகின்றன. சித்தம் சாந்தி பெற்ற பின் ஒருவனுடைய புத்தி விரைவிலே நிலைப்படுகிறது.

**நாஸ்திபுத்தி-ரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவனா**
**ந சாபாவயத: சாந்தி-ரசாந்தஸ்ய குத: ஸுகம்**

*66. எற்புண ராதவ னுக்கிலை புத்தி*
*எற்புணர் புத்தியி லற்கில தியானம்*
*சற்றுந் தியானமி லற்கிலை சாந்தி*
*சாந்தியி லாதவற் கேதுசு கந்தான்.* 113

யோகமில்லாதவனுக்குப் புத்தியில்லை. யோகமில்லாதவனுக்கு மனோ பாவனையில்லை. மனோபாவனையில்லாதவனுக்குச் சாந்தியில்லை. சாந்தியில்லாதவனுக்கு இன்பமேது?

**இந்த்ரியாணாம் ஹி சரதாம் யன்மனோऽனுவிதீயதே**
**ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்-நாவமிவாம்பஸி**

*67. பற்றி னிற்பெயரு மைம்பொ றிக்குமுடன்*
*படுவ தெந்தமன மம்மனம்*
*மற்றி வன்றனுணர் வைப்புணர் புணையை*
*வளிவ லித்தென வலிக்குமே.* 114

இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின், அம்மனம் கடலில் தோணியைக் காற்று மோதுவதுபோல் அறிவை மோதுகிறது.

**தஸ்மாத் யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதானி ஸர்வச:**
**இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்ப்யஸ்-தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்ட்டிதா**

*68. எவன தைம்பொறிகள் பொறிய ருந்தும்விட*
*யங்கணின் றெதுவி தத்தினும்*
*தவம டங்கலுறு வனவவன் னுணர்வு*
*தங்கி நின்றன தடக்கையோய்.* 115

ஆதலால், பெருந்தோளாய், யாங்கணும் விஷயங்களினின்றும் இந்திரியங்களைச் சுருக்கிக்கொண்டவன் எவனோ, அவனறிவே நிலைகொண்டது.

**யா நிசா ஸர்வபூதானாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ**
**யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிசா பச்யதோ முனே:**

69. எலாவு யிர்க்குமிர வெதுவதிற்பொறி
யினைய டக்கினன் விழிக்குமற்
றெலாவு யிர்க்குமெது நனவ தாகுமஃ
திரவு காணுறு முனிக்கரோ. 116

எல்லா உயிர்களுக்கும் இரவாகிய நேரத்தில், (தன்னைக் கட்டிய) முனி விழித்திருக்கிறான். மற்ற உயிர்கள் விழித்திருக்கும் நேரமெதுவோ அதுவே முனிக்கிரவு.

**ஆபூர்யமாண-மசலப்ரதிஷ்ட்டம்**
**ஸ்முத்ரமாப: ப்ரவிசந்தி யத்வத்**
**தத்வத் காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே**
**ஸ சாந்தி-மாப்னோதி ந காமகாமீ**

70. நிறைந்தசைவி லாதுநிலை யாயகட லின்கண்
நீர்நனியொ டுங்குவதெவ் வாறுகொலவ் வாறே
உறைந்தெவனு ளேவிடயம் யாவையு மொடுங்கும்
உவனடைவன் சாந்தி நசையினை விழைவ னெய்தான். 117

கடலில் நீர்த் தொகுதிகள் வந்து விழுகையில் அது மேன்மேலும் நிரப்புதற்குரிதாய் அசையா நிலை கொண்டிருப்பது போலே, விருப்பங்கள் தன்னுள்ளே புகும்போது இயல்வான் எவனோ அவன் சாந்தியடைகிறான். விருப்பங்களை விரும்புவோன் அதனை அடையான்.

**விஹாய காமான் ய: ஸர்வான் புமான்ச்-சரதி நிஸ்ப்ருஹ:**
**நிர்மமோ நிரஹங்கார: ஸ சாந்தி-மதிகச்சதி**

71. பற்றற்குறு விடயங்களை முற்றும்மற விட்டுப்
பசையற்றவ னாயுந்தன தெனலற்றவ னாயும்
மற்றுந்தனை யறவிட்டவ னாயும்மியல் வானெம்
மனிதன்னவ னேசாந்தியை நனியெய்துவ னாகும். 118

இச்சையற்றான் எல்லா இன்பங்களையும் துறந்தான், என தென்பதற்றான், யானென்பதற்றான், அவனே சாந்தி நிலை அடைகிறான்.

**ஏஷா ப்ராஹ்மீஸ்த்திதி: பார்த்த நைநாம் ப்ராப்ய விமுஹ்யதி**
**ஸ்த்தித்வாஸ்யா-மந்தகாலேSபி ப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி**

72. பிரமமடை விக்குமிது நிலைமையிதை யெய்திப்
பிருதைமக னாகியவ மருளுறுவ தில்லை
சரமதரு ணத்துமிது நிலைமையி லிருந்தே
தழுவுவன ரோபிரம மருவுநிரு வாணம். 119

பார்த்தா, இது பிரம்ம ஸ்திதி. இதையடைந்தோன் பிறகு மயங்குவதில்லை. இறுதிக் காலத்திலேனும் இதில் நிலைகொள்வோன் பிரம்ம நிர்வாண மெய்துகிறான்.

இரண்டாம் அத்தியாயம் நிறைவேறியது.

## கீதைப் பொருட்கை

நித்த வுயிர்க்க ணிலைக்கு மதிகுறித்த
பொத்தில்லாச் சாங்கியமாம் புத்தியொடு - நத்தியபற்
றில்லாத கன்ம மிழையோக புத்திமரு
ளில்லாமே தேற்று மிரண்டு. (6)

# கீதைப் பாட்டு

## மூன்றாம் அத்தியாயம்

## கர்ம யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

மூன்றெனியல் பாரொடு முயங்கியது காத்தற்
கேன்று குணனில் வினைகளிற் றலைமை வைத்தே
ஆன்ற கடவுள்ளுழை யருப்பணஞ்செய் தெல்லாச்
சான்ற வினையும் புரிதலைப் புகல்வ தாகும்.

கர்ம யோக ஞான யோகங்களுள் ஞானயோகமே கடுகப் பலனை யளிக்குமென்றாலும் கர்ம யோகமே செய்யத் தக்கது. ஆக்கையிருக்கும் வரையில் மனிதனுக்கு ஏதாவதொரு தொழிலைச் செய்வதே இயற்கையாயிருக்கும். அவன் துணிந்து வேறு துறைகளிலிழிந்த போதிலும் புலன்கள் அவனை இழுத்துச் செய்கையிலேயே கொண்டு வந்து நிறுத்தும். இந்திரியங்களை அடக்கி ஞான நிலையில் நிற்கும் திறமை வாய்ந்தவனும் கர்மங்களையே செய்யக் கடவன். ஏனெனில், இவனது உண்மை நிலையறியாத பாமரர்களும் இவனைக் கண்டு தாங்களும் கர்மங்களை விட்டு ஞானத்துறையில் துணிவுறுவார்கள். அதனால் அவர்கள் கர்மயோகத்தை யிழந்ததுமன்றி ஞானயோகத்தையுமிழந்து முன்னிலும் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் கெடுவதற்கு இவனே காரணமாவான். ஆகையால் ஞானயோகத்தில் திறமையுள்ளவனுக்கும் திறமையில் லாதவனுக்கும் கர்ம யோகமே மேலானது. கர்மங்களைச் செய்யும்போது, 'இந்நிலைமை எனக்கு பிரகிருதி சம்பந்தத்தால் வந்தேறியதென்றும் ஈசுவரனுடைய கட்டளையினால் அவனுதவியைக் கொண்டு அவனுடைய பிரீதிக்காகவே செய்கிறோம்,' என்றும் எண்ணிச் செய்ய வேண்டும்.

*அர்ஜுன உவாச :*

**ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்–தே மதா புத்திர்-ஜனார்த்தன**
**தத் கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேசவ**

1. புத்தி வினைக்குயர்வா நிற்குமத மெனினப்
 பொழுதுபயங் கரகன்மத் தெனையே வுதியேன்
 உத்தம வேதனையு மெத்திய வீசனையும்
 உள்ளவ சென்மமெலா மில்லைசெய் கிற்பவனே. 120

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

ஜநார்த்தன, செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்ததென்பது நின் கொள்கையாயின் இந்தக் கொடிய செய்கையில் என்னைப் புகுத்துவதென்னே, கேசவா?

**வ்யாமிச்ரேணேவ வாக்யேன புத்திம் மோஹயஸீவ மே**
**ததேகம் வத நிச்சித்ய யேன ச்ரேயோऽஹ மாப்னுயாம்**

2. ஒப்பில்க லப்புடைய விப்பலு ரைக்கணெனை
 உள்ளம யக்குவைபோ லுள்ளனை யாதலின்யான்
 செப்புறு மெச்சொலினா னிச்சய மெய்திநலஞ்
 சேர்வது செய்குவலவ் வோருரை கூறுதியால். 121

குழப்பமான பேச்சினால் என் புத்தியை மயங்கச் செய்கிறாய். ஆதலால் எது எனக்கு நன்மை தருமென்பதை உறுதிப்படுத்தி ஒரே வார்த்தையாகச் சொல்.

*ஸ்ரீ பகவானுவாச :*

**லோகேऽஸ்மின் த்விவிதா நிஷ்ட்டா புரா ப்ரோக்தா மயானக**
**ஜ்ஞானயோகேன ஸாங்க்யானாம் கர்மயோகேன யோகினாம்**

3. சாங்கி யர்க்கென ஞான யோகினே
 தத்தங் கன்மயோ கத்தின் யோகியர்க்
 கீங்கு யிர்க்கிரண் டியல்பி னிட்டையுண்
 டென்ன லாயின தநக முன்னெனால். 122

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

பாபமொன்று மில்லாத அர்ஜுன, இவ்வுலகத்தில் இரண்டுவித நிஷ்டை முன்னர் என்னாற் கூறப்பட்டது. சாங்கியர்களின் ஞான யோகத்தால் எய்துவது, யோகிகளின் கர்ம யோகத்தால் எய்துவது என.

**ந கர்மணா-மனாரம்பாந்-நைஷ்கர்ம்யம் புருஷோऽச்னுதே**
**ந ச ஸந்ந்யஸனாதேவ ஸித்திம் ஸமதிகச்சதி**

*4. செயன்மு டித்துவிடு பவன்ம னத்தகைமை*
*செயல்தொ டங்கலில தாலெய்தான்*
*செயல்தொ டங்கிவிட லானு மேபுருடன்*
*சித்தி யெனபதடை கிற்கிலான். 123*

தொழில்களைத் தொடங்காமலே யிருப்பதனால் மனிதன் செயலற்ற நிலை அடைவதில்லை. துறவினாலேயே மனிதன் ஈடேற்றம் பெற்றுவிட மாட்டான்.

**ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட்டத்-யகர்மக்ருத்**
**கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ:ப்ரக்ருதிஜைர்-குணை**

*5. ஒருவ னொருக்காலும் வினையை யியற்றாமல்*
*ஒருசில் கணத்தேனு முளனிலை மந்றேனோ*
*ஒருபக டிப்பாலாங் குணனுட னுற்றன்றோ*
*உறுவய மற்றியாரும் வினைசெய் திருப்பாரால். 124*

எவனும் ஒரு கணப்பொழுதேனும் செய்கையின்றியிருப்பதில்லை. இயற்கையில் விளையும் குணங்களே எல்லா உயிர்களையும் அவசர மாகத் தொழில் புரிவிக்கின்றன.

**கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன்**
**இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே**

*6. எவன்வினைசெ யும்பொறிக டமைநனியொ டுக்கிமன*
*தினில்விடய முற்று நினைவாய்*
*இவனுளன வன்பெரிது மறிவழிம னத்தனொழு*
*கியதுபொய் யெனப்ப டுவனால். 125*

கர்மேந்திரியங்களை அடக்கிக்கொண்டு, ஆனால், இந்திரிய விஷயங் களை மனதால் ஸ்மரித்துக் கொண்டிருப்போனாகிய மூடாத்மா பொய்யொழுக்கமுடையவனென்று சொல்லப்படுகிறான்.

**யஸ்த்விந்த்ரியாணி மனஸா நியம்யாரபதேऽர்ஜுன**
**கர்மேந்த்ரியை: கர்மயோக-மஸக்த: ஸ விசிஷ்யதே**

*7. பொறிதாம் மனதா னியமித் தெவனோ*
*புரிபற் றெதுவும் மிலனாய் வினைசெய்*
*பொறியால் வினையோ கயர்வா னவனே*
*புகழ்தக் கவனா மிகவர்ச் சுனனே. 126*

அர்ஜுனா, எவன் இந்திரியங்களை மனதால் கட்டுப்படுத்திக் கொண்டு, கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் பண்ணுகிறானோ, அவன் சிறந்தவன்.

**நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண:**
**சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யே-தகர்மண:**

8. *விடவொ ணாதவினை புரிக நீவினையை*
*விடுவ தின்வினைமை மேலெனோ*
*உடலு லாவுவது முள்ள தில்லைவினை*
*யொன்று மேசெயலி லுன்கணே.* 127

விதிக்கப்பட்ட தொழிலை நீ செய். தொழில் தொழிலின்மையைக் காட்டிலும் சிறந்ததன்றோ? தொழிலின்றி இருப்பதால் உடம்பைக் கொண்டு செலுத்துதல்கூட உனக்கியலாமல் போய்விடும்.

**யஜ்ஞார்த்தாத் கர்மணோऽன்யத்ர லோகோऽயம் கர்மபந்தன:**
**ததர்த்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர**

9. *வேள்விப் பொருட்டுள்ள வினையன்றி வேறே*
*வினைசெய்யி லிம்மண் வினைக்கட் டுணுந்தான்*
*வேள்விப் பொருட்டுள்ள வினைபற்று விட்டே*
*மிகவுஞ்செய் வாய்குந்தி மகவென்று வந்தோய்.* 128

வேள்வியின் பொருட்டென்று செய்யப்படுவது தவிர மற்றைத் தொழில் மனிதருக்குத் தளையாகிறது. ஆதலால், குந்தி மகனே, பற்றைக் களைந்து தொழில் செய்து கொண்டிரு.

**ஸஹ யஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி:**
**அனேன ப்ரஸவிஷ்யத்வ-மேஷவோऽஸ்த்விஷ்ட காமதுக்**

10. *உயிர்கட் கிறைமுனம் வேள்வியி னோடும்*
*உயிரைத் தரல்செய்வதிவ் வேள்வியினாலே*
*உயர்வுற் றுமைவளர் விக்க விதுங்கட்*
*குனுமிச் சைசுடர வாகுக வென்றான்.* 129

முன்பு பிரம்மதேவன் வேள்வியுடனே உயிர்க் குலத்தை ஒருமிக்கப் படைத்துச் சொல்லினான்: "இதனால் பல்குவீர்கள், நீங்கள் விரும்பும் விருப்பங்களையெல்லாம் உங்களுக்கிது கறந்து தரும்".

**தேவான் பாவயதாSனேன தே தேவா பாவயந்து வ:**
**பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரமவாப்ஸ்யத**

11. *உண்பிக்க விண்ணோரை யிதனாலவ் விண்ணோர்*
*உண்பிக்க வுந்தம்மை யொருவர்க் கொருத்தர்*
*உண்பித்தல் செய்திட் டுயர்ந்தஃ தெனப்பே*
*ருரைதக்க மேல்வீடு மருவிக்கொள் வீரால்.* 130

இதனால் தேவர்களைக் கருதக் கடவீர்; அந்தத் தேவர் உங்களைக் கருதக் கடவர். (இங்ஙனம்) பரஸ்பரமான பாவனை செய்வதனால் உயர்ந்த நலத்தை எய்துவீர்கள்.

**இஷ்டான் போகான் ஹி வோ தேவா தாஸ்யந்தே ஜ்ஞபாவிதா:**
**தைர்-தத்தா-னப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தேன ஏவ ஸ:**

12. *ஆராத னம்வேள்வி யானெய்தும் வானோ*
*ரவாவும்பல் போகந்நு மக்கீவ ரன்றோ*
*ஆரன்னர் தந்துள்ள வெல்லா மவர்க்கே*
*அளியாம லுண்பா னவன்கள்வ னேயால்.* 131

வேள்வியில் பாவனை செய்யப்பட்ட தேவர் உங்களுக்கு விரும்பிய போகங்களையெல்லாந் தருவர். அவர்களுக்குக் கைம்மாறு செலுத்தாமல் அவர்கள் கொடுப்பதை உண்போன் கள்வனே யாவான்.

**யஜ்ஞசிஷ்டாசின: ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை:**
**புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்-யாத்மகாரணாத்**

13. *யாகத்தி னைப்பண்ணி யெஞ்சுற்ற-தைத்துய்த்*
*திருப்பார்வி டப்பட்டு ளார்பாவ முற்றும்*
*பாகத்தி னைத்தம்பொ ருட்டேவர் செய்வார்*
*பாவத்தி னைத்துய்ப்ப ரப்பாவி யோரே.* 132

வேள்வியின் மிச்சத்தை யுண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள். தம்பொருட்டென்று மாத்திரமே உணவு சமைக்கும் பாவிகள் பாவத்தை உண்ணுகிறார்கள்.

**அன்னாத்-பவந்தி பூதானி பர்ஜன்யா-தன்னஸம்பவ:**
**யஜ்ஞாத்பவதி பர்ஜன்யோ யஜ்ஞ: கர்மஸமுத்பவ:**

14. *உணவா லுயிரின் னுடலுள் ளனவாம்*
*உணவும் முகிலா லுளதா முகிலும்*
*பனும்வேள் வியினா லுளதா மதுதான்*
*பயிலும் வினையா லுளவேள் வியுமே.* 133

அன்னத்தால் உயிர்கள் சமைகின்றன. மழையால் உணவு தோன்றுகிறது. மழை வேள்வியால் ஆகிறது. வேள்வி செய்கையினின்று பிறப்பது.

**கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம்**
**தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்ட்டிதம்**

*15. உடலான் வினையோ வுளதா மெனவோர்*
*உடலும் முயிரா னுளதா மதனால்*
*இடனா முழுதும் மடையும் முடலும்*
*எதுபோ தினும்வேள் வியினா னிலையும்.* 134

செய்கை பிரம்மத்தினின்றும் பிறப்பதென்றுணர். பிரம்மம் அமிர்தத்தில் தோன்றுவது. ஆதலால் எங்கும் நிறைந்த பிரம்மம் எப்போதும் வேள்வியில் நிலைபெற்றது.

**ஏவம் ப்ரவர்த்திதஞ் சக்ரம் நானுவர்த்தயதீஹ ய:**
**அகாயு-ரிந்த்ரியாராமோ மோகம் பார்த்த ஸ ஜீவதி**

*16. எவனிவ் விதமே சுழலா ழியினை*
*இவணே தொடரா னவனா யுளெலாம்*
*பவமே வியவன் பொறிபைம் பொழில்போல்*
*பவன்வாழ் வதுவீண் பிருதைக் கினியோய்.* 135

இங்ஙனம் சுழலும் வட்டத்தை இவ்வுலகில் பின்பற்றி ஒழுகாதோன் பாபவாழ்க்கை யுடையோன்; புலன்களிலே களித்தான்; பார்த்தா, அவன் வாழ்க்கை விழலேயாம்.

**யஸ்த்வாத்ம-ரதிரேவ ஸ்யா-தாத்ம-த்ருப்தச்ச மானவ:**
**ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ் தஸ்ய கார்யம் ந வித்யதே**

*17. மனிதன் னெவனோ வுயிரே விழைவன்*
*மகிழ்பன் னுயிருள் ளுயிரின் னிறைவோன்*
*எனவா குவனன் னவனுக் கொருகா*
*ரியமுஞ் செயவேண் டியதில் லையரோ.* 136

தன்னிலே தான் இன்புறுவான், தன்னிலே தான் திருப்தியடைவான், தன்னிலே தான் மகிழ்ந்திருப்பான், அவனுக்குத் தொழிலில்லை.

**நைவ தஸ்ய க்ருதேனார்த்தோ நாக்ருதேனேஹ கச்சன**
**ந சாஸ்ய ஸர்வபூ தேஷு கச்சிதர்த்த-வ்யபாச்ரய:**

18. செய்ததி னவற்கொரு பயன்புகுத லில்லை
செய்கிலதி னானுமொரு தீமையயு மிங்கே
எய்தலிலை பூதமுழு தின்கணு மிவற்கோ
இனபயன் குறித்தடைவ தேதுமிலை மாதோ. 137

அவனுக்குச் செய்கையில் யாதொரு பயனுமில்லை; செயலின்றி யிருப்பதிலும் அவனுக்குப் பயனில்லை. எவ்விதப் பயனையுங் கருதி அவன் எந்த உயிரையுஞ் சார்ந்து நிற்பதில்லை

**தஸ்மா-தஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர**
**அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷ:**

19. இதனால் விழைவற்று நிதஞ்செய வேண்
டியதென்று கன்மத்தினை நன்கயர்வாய்
மதியாசை யறுத்தவ னாய்வினைசெய்
மனிதன் னவனோ பரமெய்துவனால் 138

ஆதலால் எப்போதும் பற்று நீங்கிச் செய்யத்தக்க தொழிலைச் செய்துகொண்டிரு. பற்றில்லாமல் தொழில் செய்து கொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்துகிறான்.

**கர்மணைவ ஹி ஸம்ஸித்தி-மாஸ்த்திதா ஜனகாதய:**
**லோகஸங்க்ரஹ-மேவாபி ஸம்பச்யன் கர்த்துமர்ஹஸி**

20. நலசித் தியினை வினையொன் றுகொடே
நணினா ரலரோ சநகன் முதலோர்
உலகம் மொருமைப் படன்மட் டினுமே
உணர்தந் தெனினும் முரியாய் புரிய. 139

ஜனகன் முதலியோர் செய்கையாலேயே சித்தி பெற்றார்கள். உலக நன்மையைக் கருதியும் நீ தொழில் புரிதல் தகும்.

**யத்யதாசரதி ச்ரேஷ்டஸ் தத்ததேவேதரோ ஜன:**
**ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ்-ததனுவர்த்ததே**

21. எதுவோ துயர்வோன் செய்வனவ்
வதுவே பிறரும் [illegible]
எதுவோ பிரமாணஞ் செய்வன்
அதுவே புவி தொடரும். 140

எதனை யெதனை உயர்ந்தோன் செய்கிறானோ, அதையே மற்ற மனிதர் பின்பற்றுகிறார்கள். அவன் எதை பிரமாணமாக்குகிறானோ, அதையே உலகத்தார் தொடருகிறார்கள்.

**ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன**
**நா நவாப்த-மவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி**

*22. திரிலோகு முளனாமெனக் கொன்று செயவேண்*
*டியதில்லை யிதுகாறு மெய்தாம லினிமேல்*
*வரவாகு வனவில்லை யெனினும் வினைக்கண்*
*மருவிக்கொ டேநிற்பல் பிருதைக்கு மகனே.* 141

பார்த்தா, மூன்றுலகத்திலும் எனக்கு யாதொரு கடமையுமில்லை. நான் பெற்றிராத பேறுமில்லை. எனினும் நான் தொழிலில்தான் இயங்குகிறேன்.

**யதிஹ்யஹம் ந வர்த்தேயம் ஜாது கர்மண்-யதந்த்ரித:**
**மம வர்த்மானுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச:**

*23. மடியி லாமெலெப் பொழுதும் யான்வினை*
*மருவி லேனெனிற் பிருதை சேயெலாப்*
*படியி னாலுமா னிடர்க ளாயுளார்*
*படர்வ ராவர்யான் படர்நெ றிப்படி.* 142

நான் சோம்பரில்லாமல் எப்போதும் தொழில் செய்து கொண்டிராவிடின், பார்த்தா, எல்லாப் பக்கங்களிலும் மனிதர் என் வழியையே பின்பற்றுவார்கள்.

**உத்ஸீதேயு-ரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம்**
**ஸங்கரஸ்ய ச கர்த்தாஸ்யா-முபஹன்யா-மிமா: ப்ரஜா:**

*24. யானேகன் மத்தைச் செயேனே லுலோகர்*
*இவரோவி நாசத்தை யேயெய்து வாரால்*
*யானே கலப்பைச் செய் தேனாகு வேன்மற்*
*றிச்சிவர் தம்மைக் கெடுத்தேனு மாவேன்.* 143

நான் தொழில் செய்யாவிட்டால், இந்த ஜனங்களெல்லோரும் அழிந்து போவார்கள்; குழப்பத்தை நான் ஆக்கியோன் ஆவேன்; இந்த மக்களை யெல்லாங் கொல்வோனாவேன்.

**ஸக்தா: கர்மண்-யவித்வாம்ஸோ யத॥ குர்வந்தி பாரத**
**குர்யாத் வித்வாம்ஸ்-ததா஽ஸக்தச்சிகீர்ஷுர் லோகஸங்க்ரஹம்**

25. *தெரியார் கருமத் தினிலா சையராய்ச்*
*செய்கின்றன ரெவ்வித மவ்விதமே*
*தெரிவான் விழைவற் றுலகொன் றுவதைச்*
*செயுமா சையினே செய்கபா ரதனே.* 144

பாரதா, அறிவில்லாதார் செய்கையில் பற்றுடையோராய் எப்படித் தொழில் செய்கிறார்களோ, அப்படியே அறிவுடையோன் பற்றை நீக்கி உலக நன்மையை நாடித் தொழில் செய்ய வேண்டும்.

**ந புத்திபேதம் ஜனயே-தஜ்ஞானாம் கர்மஸங்கினாம்**
**ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வான் யுக்த: ஸமாசரன்**

26. *அறியா தவராய் வினைபற் றினருக்*
*கறிவிற் சிதைவைப் பெறுவிப் பதொணா*
*தறிவானி யைபா லொழுகா வினையெல்*
*லாவற் றினுமன் புவிளைக் கவரோ.* 145

அறிவுடையோன் தொழிலிற் பற்றுதல் கொண்ட அஞ்ஞானிகளுக்குப் புத்தி பேதம் விளைவிக்கக்கூடாது. அவன் யோகத்தில நின்று தொழில் செய்து எல்லாத் தொழில்களையும் கவர்ச்சியுடையனவாக்க வேண்டும்.

**ப்ரக்ருதே: க்ரியமாணானி குணை: கர்மாணி ஸர்வச:**
**அஹங்கார-விமூடாத்மா கர்த்தாஹமிதி மன்யதே**

27. *புகுங்கு ணத்தினாற் பகுடி முற்றவும்*
*புரிய லாயபல் வினைக ளுக்குமே*
*அகங்க ரிப்பினாற் றனைய றிந்திலா*
*தவுனி னைப்பன்யான் றலைவ னென்னவே.* 146

எங்கும் தொழில்கள் இயற்கையின் குணங்களால் செய்யப்படுகின்றன. அகங்காரத்தால் மயங்கியவன், "நான் செய்கிறேன்" என்று நினைக்கிறான்.

**தத்வவித்து மஹாபாஹோ குணகர்ம-விபாகயோ:**
**குணா குணேஷுவர்த்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே**

*28. குணத்தின்கன் மத்தின் பிரிப்புக்க வின்மெய்*
*குறிக்கொண் டவன்றா னெனிற்றங் கன்மத்தே*
*குணக்கூ றிருக்கின்ற வென்றெண்ணி யாசை*
*கூர்கிற்ப தோவில்லை பேர்பெற்ற புயனே.* 147

குணம், செய்கை இவற்றுடைய பிரிவுகளின் உண்மையறிந்தோன், 'குணங்கள் குணங்களில் இயலுகின்றன' என்று கருதிப் பற்றற்றிருப்பான்.

**ப்ரக்ருதேர்-குணஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு**
**தானக்ருத்ஸனவிதோ மந்தான் க்ருத்ஸ்னவிந்-ந விசாலயேத்**

*29. பகடிக்குண ணானேவினை தேறார்குண வினையிற்*
*பற்றுற்றவ ராகின்றனர் முற்றுந்தெரி யாராய்*
*மிகுமந்த மனத்தன்னரை முழுதுந்தெரி வந்தான்*
*வீண்சஞ்சல முறுமாறு செய்வித்த விலனாக.* 148

இயற்கையில் குணங்களால் மயங்கியவர்கள் குணங்களிலும் தொழில்களிலும் பற்றுதலடைகிறார்கள். சிற்றறிவுடைய அந்த மந்தர்களை முழுதுணர்ந்த ஞானி உழல்விக்கக்கூடாது.

**மயி ஸர்வாணி கர்மாணி ஸந்த்யஸ்யாத்ம-சேதஸா**
**நிராசீர்-நிர்மமோ பூத்வா யுத்த்யஸ்வ விகதஜ்வர:**

*30. ஆன்மா வினிலா மறிவா லெனிடன்*
*அனைத்துக் கருமங் களும்விட் டுநசை*
*தானில் லவனாய்த் தனதற் றவனாய்ச்*
*சந்தா பமிலா தவனாய்ச் சமர்செய்* 149

எல்லாச் செய்கைகளையும் உள்ளறிவினால் எனக்கு அர்ப்பணமாகத் துறந்துவிட்டு, ஆசை நீங்கி, எனது என்பது அற்று, மனக் காய்ச்சல் தீர்ந்தவனாய்ப் போர் செய்யக்கடவாய்.

**யே மே மதமிதம் நித்ய-மனுதிஷ்ட்டந்தி மானவா:**
**ச்ரத்தாவந்தோSனஸூயந்தோ முச்யந்தே தேSபி கர்மபி:**

*31. எவர்மானிட ரென்மத மீதுநித*
*மிறியல் கிற்குந ரேவர் சிரத்தையுளார்*
*எவர்தாமு மசூயையி லாரவரும்*
*இருபால்வினை யாலும் விடப்படுவார்.* 150

என்னுடைய இந்த நித்தியமான கொள்கையை எந்த மனிதர் சிரத்தை யுடையோராய்ப் பொறாமை யின்றிப் பின்பற்றுகிறார்களோ, அவர்களும் தொழில்களிலிருந்து விடுபடுகிறார்கள்.

**யேத்வேத-தப்யஸூயந்தோ நானுதிஷ்ட்டந்தி மே மதம்**
**ஸர்வஜ்ஞானவிமூடான்ஸ்-தான் வித்தி நஷ்டா-னசேதஸ:**

32. *எவரென் மதமீ தொழுகா துளரோ*
*எவர்தாமு மசூயை நிறைந்தவரோ*
*அவரெவ் வறிவின் கணுமூ டர்கெடு*
*வார் நன்மன மில்லவ ரென்றறிவாய்.* 151

என்னுடைய இக்கொள்கையை யாவர் பொறாமையால் பின்பற்றாது விடுகிறார்களோ, எவ்வித ஞானமு மில்லாத அம்மூடர்களை நாசமடைந் தோராகவே தெரிந்துகொள்.

**ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர்-ஜ்ஞானவானபி**
**ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ கிம் கரிஷ்யதி**

33. *தெரிதந் தவனுந் தனதா யபய*
*திக்கொத் தபடிப் புரிகிற் பனரோ*
*தருபல் லுயிர்தம் மியல்பே தொடருந்*
*தடையா யுளதென் செயவல் லதுவே.* 152

ஞானமுடையவன் கூடத் தன் இயற்கைக்குத் தக்கபடியே நடக்கிறான். உயிர்கள் இயற்கைப்படி நடக்கின்றன. அடக்குதல் பயன்படாது.

**இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்த்திதௌ**
**தயோர்-ந வசமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ**

34. *ஒவ்வொரு பொறிக்குமுரி மைப்பலனி லாசை*
*யோடுளம்வெ றுத்தலுள வஃகுமவை தாமே*
*இவ்வுயிரி னுக்குறுப கைத்தொகையி தாலே*
*யிவற்றின்வய மாதலையெய் தாதொழிக மாதோ.* 153

இந்திரியத்துக்கு இந்திரிய விஷயத்தில் விருப்பு வெறுப்புக்கள் ஏற்ப ட்டிருக்கின்றன. இவ்விரண்டுக்கும் ஒருவன் வசப்படலாகாது. இவை இவனுக்கு வழித்தடைகளாம்.

**ச்ரேயான் ஸ்வதர்மோவிகுண: பரதர்மாத் ஸ்வனுஷ்ட்டிதாத்**
**ஸ்வதர்மே நிதனம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ:**

35. *நன்றொழுக லுற்றுவிடு மந்நியதன் மத்தி*
*னன்மைகுறை யுந்தனது தன்மமிக மேலாம்*
*தன்றரும நின்றுமர ணம்பெறுதன் மேலச்*
*சந்தருவ தாகுமய லானுடைய தன்மம்.* 154

நன்றாகச் செய்யப்படும் பர தர்மத்தைக் காட்டிலும், குணமற்ற தெனினும் ஸ்வதர்மமே சிறந்தது. ஸ்வதர்மத்தில் இறந்துவிடினும் நன்றேயாம். பர தர்மம் பயத்துக்கிடமானது.

*அர்ஜுன உவாச :*

**அத கேன ப்ரயுக்தோளுயம் பாபஞ் சரதி பூருஷ:**
**அனிச்சன்னபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:**

36. *ஆவற் படுகில் லனுமாய்ப் பினரிவ்*
*வான்மா வெதனா னனியே வுதல்பெற்*
*றேவப் படுவா னைநிகர்த் துவலிந்*
*தேபா வமியற் றுவன்யா தவனே.* 155

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

விருஷ்ணி குலத் தோன்றலே, மனிதனுக்கு இச்சையில்லாதபோதும் அவனை வலியக்கொண்டு புகுத்துவதுபோல் தூண்டிப் பாவம் செய்விப்பது யாது?

*ஸ்ரீ பகவானுவாச :*

**காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ:**
**மஹாசனோ மஹாபாப்மா வித்த்யேந-மிஹ வைரிணம்**

37. *இதுகாமம் ரசோ குணனால் விளைவா*
*கியதா முணவோ மிகவுண்பதுவாம்*
*இதுகோப மிகைப்படு பாவமுள*
*திதனைப் பகையென் றெணுவா யிவனே.* 156

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

இஃது விருப்பமும் சினமும்; ரஜோ குணத்திற் பிறப்பது; பேரழிவு செய்வது; பெரும்பாவம். இதனை இங்கு சத்துருவாகத் தெரிந்து கொள்.

**தூமேனாவ்ரியதே வஹ்னிர்-யதாதர்சோ மலேன ச**
**யதோல்பேநாவ்ருதோ கர்ப்பஸ்-ததா தேனேதமாவ்ருதம்**

38. *எரியெவ் வணமறை யுண்பது புகையான் மலமதனால்*
*எழிலாடியு மறையுண்ப தெவ்வணமோ யிவையன்றிக்*
*கருவெவ்வண மறையும் பையினாலவ்வண மேதான்*
*காமம்மத னானேயினவ மறையுண்பன மாதோ.* 157
*(இவை உயிர்கள்)*

புகையினால் தீ சூழப்பட்டிருப்பது போலவும், கண்ணாடி அழுக்கால் மாசு படுவது போலவும், கர்ப்பத்தைக் கருப்பை சூழ்ந்திருப்பது போலவும் இது இவ்வுலகைச் சூழ்ந்திருக்கிறது.

**ஆவ்ருதம் ஜ்ஞானமேதேன ஜ்ஞானினோ நித்யவைரிணா**
**காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணானலேன ச**

39. *நிரப்புதற்கரிது போது மென்கிலது*
*நீடு காமவடி வாய்நிதந்*
*திரப்படும் பகையி தாலுணர்ப்புளது*
*தெருண்ம றைத்துளது குந்திசேய்.* 158

குந்தியின் மகனே, விருப்ப மெனப்படும் இந் நிரப்பொணாத் தீ ஞானிக்கு நித்தியப் பகையாம் ஞானத்தைச் சூழ்ந்து நிற்கிறது.

**இந்த்ரியாணி மனோபுத்தி-ரஸ்யாதிஷ்ட்டான-முச்யதே**
**ஏதைர்-விமோஹயத்-யேஷ ஜ்ஞான-மாவ்ருத்ய தேஹினம்**

40. *இதய மோடுபொறி புத்தியென்பன*
*விதற்கி ருப்பிட மெனப்படும்*
*வதியுமீ திவைகள் கொண்டு தேகியை*
*மயக்கு ஞான மறையச் செய்தே.* 159

இந்திரியங்களும், மனமும், புத்தியும் இதற்கு நிலைக்களன் என்பர். இவற்றால் இது ஞானத்தைச் சூழ்ந்து மனிதனை மயங்குவிக்கிறது.

**தஸ்மாத்-த்வமிந்த்ரியாண்-யாதௌ நியம்ய பரதர்ஷப**
**ப ப்மானம் ப்ரஜஹி ஹ்யேனம் ஜ்ஞான-விஜ்ஞான-நாசனம்**

41. *ஆத லிற்பொறி முன்னடக் கிநீ*
*யறிவை யும்பகுத் தறிவையும்*
*வீத லைப்புரி பாவமீதற*
*வெல்க பாரதா விடையனாய்.* 160

ஆதலால் பாரத ரேறே, நீ தொடக்கத்தில் இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் அழிப்பதாகிய இந்தப் பாவத்தைக் கொன்றுவிடு.

**இந்த்ரியாணி பராண்-யாஹுரிந்த்ரியேப்ப்ய: பரம்மன:**
**மனஸஸ்து பரா புத்திர் யோ-புத்தே: பரதஸ்து ஸ:**

42. பொறிக டாமுதன்மை யெனமொழிந் தனர்கள்
பொறிக டம்மின்மன முதன்மையாம்
அறிவு தான்மனனின் முதன்மை யாகுமறி
வதனினும் முதன்மை யெதுவதே. 161

[அது - காமம். எ-று.]

*இந்திரியங்களை உயர்வுடையன வென்பர். அவற்றிலும் மனம் மேல்; மனதைக் காட்டிலும் புத்தி மேல்; புத்திக்கு மேலே அவன் (ஆத்மா).*

**ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்ப்யாத்மான-மாத்மனா**
**ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்**

43. இவ்வா றறிவின் முதன்மைத் தெனவோர்ந்
திதயம் மறிவா னிலைசெய் துவெலற்
கொவ் வாதது காமமெ னப்பெயர் கொள்
குவதா மிகல்வெல் கபெரும் புயனே. 162

இங்ஙனம் புத்திக்கு மேலான பொருளை (ஆத்மாவை) உணர்ந்து, தன்னைத்தான் உறுதிப்படுத்திக்கொண்டு, வெல்லற் கரிய விருப்பமாம் பகையைக் கொல்லக் கடவாய், பெருந்தோளுடையாய் !

*மூன்றாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## *கீதைப் பொருட்டொகை*

இணங்கிப் புவிபுரப்ப தெண்ணிப்பற் றின்றிக்
குணங்கட் குறுத லைமை கொள்வித் - தெனுங்கடவுள்
தன்கட் சமர்ப்பித்துத் தன்கரும மத்தனையு
முன்னர்ச் செயப்புகலு மூன்று (7)

# கீதைப் பாட்டு

## நான்காம் அத்தியாயம்

## ஞான யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

நான்கெ னியலிற்பி ருதை நன்மகன் வினாவத்
தான்செய் யவதார முரைதந் துநிதந் செய்தற்
கேன்ற வினையின்கண் வினையின் மையும் வினைக்கண்
ஆன்ற வகையும் மதிலடங் கறிவுந் சொல்வான்.

'அர்ஜுனா, உன்னை ஏமாற்றிச் சண்டையில் உற்சாகமூட்டுவதற்காக உன்னைக் கர்ம யோகத்தில் தூண்டுகிறேன் என்று எண்ணாதே. உலகத்தைப் படைக்கும் போதே இக் கர்ம யோகத்தை நான் மனுவுக்கு உபதேசித்தேன். பிறகு மனுவின் வழியாக உலகில் அது பரவிற்று' என்று சொல்லிக் கண்ணன் தமது அவதார ரகசியத்தைக் கூறுகிறார். பிறகு கர்ம யோகத்தின் பிரிவுகளையும் அவற்றுள் அடங்கிய ஆத்ம ஞானத்தின் பெருமையையும் விளக்குகிறார். கர்ம யோகம் ஞான பாகத்தை உள்ளடக்கிக் கொண்டிருப்பதால் அதுவே ஞான யோகத்தின் பலனையும் அளிக்கும் என்று கூறுகிறார்.

*ஸ்ரீ பகவானுவாச :*

**இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவா-னஹ-மவ்யயம்**
**விவஸ்வான் மனவே ப்ராஹ மனு-ரிக்ஷ்வாகவே஽ப்ரவீத்**

1. நான்வி வச்சு வாவுக் குரைத்தனன்
நாச மற்றதோர் யோக மற்றிதை
ஈன்வி வச்சுவா சொற்ற னன்மநுக்
கிக்கு வாகுவுக் கோதி னன்மநு. 163

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

இந்த அழிவற்ற யோகத்தை நான் முன்னர் விவஸ்வானுக்குச் சொன்னேன். விவஸ்வான் மனுவுக்குச் சொன்னான். மனு இக்ஷ்வாகு ராஜனுக்குக் கூறினான்.

**ஏவம் பரம்பரா-ப்ராப்த-மிமம் ராஜர்ஷயோ விது:**
**ஸ காலேனேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப**

2. பரம்பரையி னிவ்வணம டைந்தவிதை ராச
பரம்பரையி லேயிருடி யாயினர்தெ ரிந்தார்
பரந்தப விவண்புவியி லேநெடிய காலம்
பட்டொழிய யோகமது கெட்டதுமன் மாதோ. 164

இவ்வாறு பரம்பரையாகக் கிடைத்த இதனை ராஜரிஷிகள் உணர்ந்திருந்தனர். பரந்தபா, அந்த யோகம் கால மிகுதியால் இவ்வுலகத்தில் இழக்கப்பட்டது.

**ஸ ஏவாயம் மயா தே ऽத்ய யோக:ப்ரோக்த;புராதன:**
**பக்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேத-துத்தமம்**

3. அப்பழைய தாகியுள யோகமிது வேயெற்
கன்புடைமை தோழமையு முள்ளையென வென்னால்
இப்பொழு துனக்குரை விரித்துதவ லாயிற்
றித்தகைய துத்தம மறைப்பவையு ளன்றோ. 165

அந்தப் பழைய யோகத்தையே இன்று நான் உனக்குச் சொன்னேன் . நீ என் பக்தனும் தோழனு மென்பது கருதி. இது மிகவும் உயர்ந்த ரகசியம்.

*அர்ஜுன உவாச :*

**அபரம் பவதோ ஜன்ம பரம் ஜன்ம விவஸ்வத:**
**கதமேதத் விஜானீயாம் த்வமாதௌ ப்ரோக்தவானிதி**

4. பிந்தி யாயது நின்பி றப்புமுன்
பேவி வச்சுவ தன்பிறந்தது
முந்தி யோதினை நீயெனும் மிதை
முன்னு கிற்பது மெந்தவாறுகாண் 166

*அர்ஜுனன் சொல்லுகிறான்:*

உன் பிறப்புப் பிந்தியது; விவஸ்வானுடைய பிறப்பு முந்தியது. நீ இதை ஆதியில் சொன்னவனென்று நான் தெரிந்து கொள்வதெப்படி?

***ஸ்ரீ பகவானுவாச :***

**பஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன**
**தான்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப**

5. *உன்னொப்ப வெனக்கு மநேக சென்மம்*
*ஒழிவுற் றனமற் றவையா வையும் யான்*
*நன்னர்த்தெரி வுற்றன னீயறியாய்*
*நல்லர்ச் சுன்னான பரந்தபனே.* 167

***ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்-***

அர்ஜுனா, எனக்குப் பல ஜன்மங்கள் கழிந்திருக்கின்றன. உனக்கும் அப்படியே, பரந்தபா, நான் அவற்றை எல்லாம் அறிவேன்; நீ அவற்றை அறிகிலை.

**அஜோऽபி ஸன்-னவ்யயாத்மா பூதானா-மீச்வரோऽபிஸன்**
**ப்ரக்ருதிம் ஸ்வா-மதிஷ்ட்டாய ஸம்பவாம் - யாத்மமாயயா**

6. *பிறவா துளனா கியுநாச மிலாப்*
*பெற்றிக்க ணிருப்பவ னாயுமுயிர்க்*
*கிறையா யுளனா கியுமென் னியல்பேய்ந்*
*தென்றன் னுணர்வா லுதயம் புரிவேன்.* 168

பிறப்பேற்ற னெனினும், அழிவற்றே னெனினும், உயிர்களுக்கெல்லாம் ஈசனே யெனினும், யான் எனது பிரகிருதியில் நிலைபெற்று ஆத்ம மாயையால் பிறப்பெய்துகிறேன்.

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்-ப்பவதி பாரத**
**அப்ப்யுத்தான-மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்**

7. *எவ்வெக் காலத்திற் றன்மத் திற்குத் தளர்*
*வெய்தும், பாவத்திற் கேற்றமுன் டாகுறும்*
*அவ்வக் காலத்தில் யானேயென் றன்னையிங்*
*கவத ரிப்பிக்கின் றேனொரு பாரத.* 169

பாரதா, எப்போதெப்போது தர்மம் அழிந்துபோய் அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன்.

**பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்**
**தர்ம-ஸம்ஸ்த்தாபனார்த்தாய ஸம்ப்பவாமி யுகே யுகே**

*8. சாதுக்க ளைப்பரி பாலிக்க வுங்கெடு*
*தற்றொழி லாரைச் செற்றிட வுந்தான்*
*மேதக்க தாக வறத்தை நிறுத்தவு*
*மேவுவ லுற்பவ மூழியொ டூழி.* 170

நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்.

**ஜன்ம கர்ம ச மே திவ்ய-மேவம் யோ வேத்தி தத்வத:**
**த்யக்த்வா தேஹம் புனர்-ஜன்ம நைதி மாமேதி ஸோSர்ஜுன**

*9. என்றிப்பிய சென்மமும் வினையு மிவ்வா*
*றெவனுள் ளபடிக் குணர்வன் னவன்மெய்*
*பொன்றித் திருமச் சென்னம் புகுதான்*
*புகுவானெ னையம்ம வருச்சுனனே.* 171

எனது தெய்வத்தன்மை கொண்ட பிறப்பும் செய்கையும் இங்ஙன மென்பதை உள்ளபடி யுணர்வோன் உடலைத் துறந்த பின்னர் மறு பிறப்பு எய்துவதில்லை. அர்ஜுனா! அவன் என்னை எய்துகிறான்.

**வித-ராக-பய-க்ரோதா மன்மயா மாமுபாச்ரிதா:**
**பஹவோ ஜ்ஞான-தபஸா பூதா மத்பாவ-மாகதா:**

*10. ஞான தவத்தினி லாகிய சுத்தியின்*
*ராகப யத்தொடு கோபம் விடுத்தொரு*
*வேனைய டுத்தெனை யேநினை வாயவர்*
*எத்துணை யோரென் னியற்கையை யெய்தினர்.* 172

விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும் துறந்தோராய், என் மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து ஞானத்தவத்தால் தூய்மைபெற்று என்னியல்பு எய்தினோர் பலர்.

**யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்-ததைவ பஜாம்யஹம்**
**மம வர்த்மானுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச:**

*11. யாரெப் படியென் னைநினைத் தடைவார்*
*யானப் படியே யவருக் கெதிர்வேன்*
*ஆர்வப் பிருதைக் கொருசேய் நரரெல்*
*லாவற் றினுமென் வழியிற் றொடர்வார்.* 173

யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ, அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன். பார்த்தா, மனிதர் யாங்கணும் என் வழியையே பின்பற்றுகிறார்கள்.

**காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா:**
**க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்-ப்பவதி கர்மஜா**

*12. வினையி னாகுபயன் மனித லோகமிதில்*
*விரைவி னேவிளையு மேதுவால்*
*வினையி னாகுபயன் விழைதல் செய்தவர்கள்*
*விபுதர் தம்மைவழி படுவரால்* 174

தொழில்களில் வெற்றியை விரும்புவோர் இங்கு தேவதைகளைப் பூஜை செய்கிறார்கள். மனிதவுலகத்தில் தொழிலினின்றும் வெற்றி விரைவில் விளைவதன்றோ!

**சாதுர்-வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண-கர்மவிபாகச:**
**தஸ்ய-கர்த்தாரமபி மாம் வித்த்யகர்த்தார-மவ்யயம்**

*13. குணத்தினும் வினைக்கணு மிகுத்தபல வேறு*
*கூறுகொ டெனால்வருண நாலுமுள வான*
*இணக்குமத னுக்கொரு கருத்தனென வாயும்*
*எனைத்தெரி கருத்தனலன் கேடில னெனத்தான்.* 175

குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களைச் சமைத்தேன். செய்கை யற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்றைச் செய்தோனென்றுணர்.

**ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா**
**இதி மாம் யோSபிஜானாதி கர்மபிர் ந ஸ பத்த்யதே**

*14. கன்மத் தொகையெற் றொடலில் லையெனக்*
*கன்மப் பயனா சையெனக் கிலென*
*என்னைத் தெரிகிற் பவனே யவவன்*
*இருபால் வினையானு மொர்கட் டடையான்.* 176

என்னைக் கர்மங்கள் ஒட்டுவதில்லை. எனக்குக் கர்மப் பயனில் விருப்ப மில்லை. இங்ஙனம் என்னை யறிவோன் கர்மங்களால் கட்டப்பட மாட்டான்.

**ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வை-ரபி முமுக்ஷுபி:**
**குரு கர்மைவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம்**

*15. எனையிப்படி யோர்ந்துநல் வீடு விரும்*
*பியமுன்னவ ரானுமி யற்றியது*
*வினைமற்ற றதனான் முனையோர் செய்ததாய்*
*மிகவும் பழைதாம் வினையே புரிநீ.* 177

முற்காலத்தில் முக்தியை வேண்டினோரும் இதையுணர்ந்து தொழிலே செய்தனர். ஆதலால், முன்னோர்கள் முன்பு செய்தபடி, நீயும் தொழிலையே செய்யக்கடவாய்.

**கிம் கர்ம கிமகர் மேதி கவயோऽப்யத்ர மோஹிதா:**
**தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யத் ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽசுபாத்**

*16. யாதுவினை யாதுவினை யில்லறிவி தன்கண்*
*எத்தகைய பண்டிதனு மேமருளு வானால்*
*ஏதுவினை தேரினசு பத்தின்விடு கிற்பை*
*யானது கன்மத்தினை விள்வேனனி நினக்கே.* 178

'எது தொழில்; எது தொழிலல்லாதது' என்ற விஷயத்தில் ஞானிகளும் மயக்கமெய்துகிறார்கள். ஆதலால் உனக்குத் தொழிலினியல்பை உணர்த்துகிறேன். இதை அறிவதனால் தீங்கினின்றும் விடுபடுவாய்.

**கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யஞ்ச விகர்மண:**
**அகர்மணச்ச போத்தவ்யம் கஹனா கர்மணோ கதி:**

*17. அறிய வேண்டுவது வினையுடன் புணர்வ*
*தறிய வேண்டுவது வினைவகை*
*அறிய வேண்டுவது வினையி லாமை நுழை*
*வரிதலோ வதனின் வினைநெறி.* 179

தொழிலின் இயல்புந் தெரிய வேண்டும்; தொழிற்கேட்டின் இயல்புந் தெரிய வேண்டும்; தொழிலின்மையின் இயல்புந் தெரிய வேண்டும். கர்மத்தின் நடை மிகவும் சூழ்ந்தது.

**கர்மண்-யகர்ம ய: பச்யே-தகர்மணி ச கர்ம ய:**
**ஸ புத்திமான் மனுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்ன-கர்ம-க்ருத்**

*18. எவன்வினை யிலேவினையி வாவறிவு தேர்வன்*
*எவன்வினையி லாவறிவி லேவினையை யோர்வன்*
*அவன்மனித ருண்ணனி புணர்ந்தவ னவன்வி*
*டைபவ னெலாவினை களுஞ்செய்து முடித்தோன்.* 180

செய்கையில் செயலின்மையையும், செயலின்மையில் செய்கையையும் எவன் காணுகிறானோ, அவனே மனிதரில் அறிவுடையோன்; அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்திலிருப்பான்.

**யஸ்ய ஸர்வே ஸமாரம்ப்பா: காமஸங்கல்ப-வர்ஜிதா:**
**ஜ்ஞானாக்னி-தக்த-கர்மாணம் தமாஹு:பண்டிதம் புதா:**

*19. எவனதெல் லாவினை யின்றொடக்கங்களும்*
*இச்சையோ டேபலத் தெண்ணமற் றுள்ளவத்*
*தவவுணர்ந்த வனையே ஞானியர் ஞானமென்*
*தழலினால் வெந்துபோம் வினையனென் றோதுவார்.* 181

எவனுடைய செய்கைத் தொடக்கங்களெல்லாம் விருப்ப நினைவு தவிர்ந் தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத் தீயால் எரிக்கப்பட்டனவாம்; அவனை ஞானிகள் அறிவுடையோ னென்கிறார்கள்.

**த்யக்த்வா கர்ம பலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராச்ரய:**
**கர்மண்-யபிரவ்ருத்தோऽபி நைவ கிஞ்சித் கரோதி ஸ:**

*20. எவன்கன்ம பலங்களி லாசை விடுத்*
*தென்றும்முள சீவனி லுள்ள மகிழ்ந்*
*தெவைபேறு மெனானவன் கன்ம முனைந்*
*தியலும் மெனினுந் செய்கிலா னெதையும்.* 182

கர்மப் பயனிலே பற்றுக் களைந்தவனாய் எப்போதும் திருப்தியுடை யோனாய் எதனிலும் சார்பற்று நிற்போன் செய்கை செய்து கொண்டிருக் கையிலும் செயலற்றவனாவான்.

**நிராசீர்-யதசித்தாத்மா த்யக்த-ஸர்வ-பரிக்ரஹ:**
**சாரீரம் கேவலம் கர்ம குர்வன்-னப்னோதி கில்பிஷம்**

*21. எல்லாவபி மானமும் விட்டுநசை*
*யில்லாம லடக்கிய சிந்தைமனம்*
*வல்லா னுடலே T டியைபா யவினை*
*மட்டும்புரி தந்து பவம் மடையான்.* 183

ஆசையற்றவனாய், சித்தத்தை ஆத்மாவால் கட்டுப்படுத்தி, எவ்வித தானங்களும் வாங்குவதைத் துறந்து, வெறுமே சரீரத் தொழில் மாத்திரம் செய்து கொண்டிருப்போன் பாவத்தையடைய மாட்டான்.

**யத்ருச்சா-லாப-ஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர:**
**ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்த்யதே**

22. எடுத்துமுய லாதெது கிடைக்கினு முவப்போன்
இரட்டைக டொடற்கரியன் மற்சரமி லாதோள்
கிடைத்தல் கிடையாமையினு மொப்பவுள னானோன்
கிட்டி வினை செய்துமொரு கட்டுறுத வில்லை. 184

தானாக வந்தெய்தும் லாபத்தில் சந்தோஷ முறுவோனாகி, இருமைகளைக் கடந்து, பொறாமையற்றவனாய், வெற்றியிலும் தோல்வியிலும் சமநிலை பெற்றான் தொழில் செய்தாலும் அதனால் கட்டுப்படுவதில்லை.

**கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்ஞானாவஸ்த்தித சேதஸ:**
**யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே**

23. ஞானநிலை நின்றமன னோடுதொடர் பற்றே
யாவையும் விடுத்தவனும் வேள்வியின் பொருட்டுத்
தானொழுகு வானுடைய தொல்வினை முற்றும்
சாருத விலாதபடி சாவடையு மாதோ. 185

பற்றுதலகன்றான், விடுதலை கொண்டான், ஞானத்தில் மதி நிலைக்கப்பெற்றான், வேள்வியெனக் கருதித் தொழில்புரிவான் அவனுடைய கர்மமெல்லாம் தானே நழுவிப்போய் விடுகிறது.

**ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம-ஹவிர் ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணா ஹுதம்**
**ப்ரஹ்மைவ தேன கந்தவ்யம் ப்ரஹ்மகர்ம-ஸமாதினா**

24. பிரமக் கருவிப் பிரமச் சருவைப்
பிரமத் தழலிற் பிரமத் திடலாய்ப்
பிரமங் கருமம் மெனவெண் ணவனஃ
பிரமம் மதுவே பெறல்தக் கதரோ. 186

பிரம்மத்துக்கு அர்ப்பணமாக பிரம்ம அவியை, பிரம்மத் தீயில் பிரம்மத்தால் ஓமம் பண்ணுவோன், பிரம்மத்தின் செய்கையில் சமாதானமெய்தினோன், அவன் பிரம்மத்தை அடைவான்.

**தைவமேவாபரே யஜ்ஞம் யோகின: பர்யுபாஸதே**
**ப்ரஹ்மாக்னாவபரே யஜ்ஞம் யஜ்ஞேனை வோபஜுஹ்வதி**

25. *சிலர்யோகியர் தெய்வத வேள்வியையே*
*திடமாக வுபாசனை செய்வரரோ*
*சிலர்வேள் வியினே பிரமத் தழலிற்*
*செய்வேள்வியவிப் பொருள்பெய் குவரால்.* 187

சில யோகிகள் தேவருக்குச் செய்யப்படும் வேள்வியை வழிபடுகிறார்கள். வேறு சிலர் பிரம்மத் தீயில் வேள்வியையே ஆகுதி செய்து வேட்கின்றனர்.

**ச்ரோத்ராதீ-னிந்த்ரியாண்-யன்யே ஸம்யமாக்னிஷு ஜுஹ்வதி**
**சப்தாதீன் விஷயானன்ய இந்ரித்யாக்னிஷு ஜுஹ்வதி**

26. *காதாதிய பொறியை யடக்கமெனுங்*
*கனலின்னிடை யாகுதி செய்வர்பிறர்*
*போதோசை முனாயபு லன்களை யைம்*
*பொறியாரழ லாகுதி செய்வர்பிறர்.* 188

வேறு சிலர் உட்கரணத்தை யடக்குதலாகிய சம்யமம் என்ற தீயில் செவி முதலிய இந்திரியங்களை ஆகுதி செய்கிறார்கள். வேறு சிலர் இந்திரியங்களாகிய தழல்களில் ஒலி முதலிய விஷயங்களைச் சொரி கிறார்கள்.

**ஸர்வாணீந்த்ரிய-கர்மாணி ப்ராண-கர்மாணி சாபரே**
**ஆத்ம-ஸம்யம-யோகாக்னௌ ஜுஹ்வதி ஜ்ஞானதீபிதே**

27. *அறிவா னொளிர்வுற்ற மனத்தை யடக்*
*கந்தா னெனு மாரழ லின்னிடையே*
*பொறியார் செயல் யாவும் பிராணனுடைப்*
*புரியுஞ் செயலோடு மவிப்பர் பிறர்.* 189

வேறு சிலர் ஞானத்தால் கொளுத்துண்ட தன்னாட்சியென்ற யோகத் தீயில் எல்லா இந்திரியச் செயல்களையும் உயிர்ச் செயல்களையும் ஓமம் பண்ணுகிறார்கள்.

**த்ரவ்யயஜ்ஞாஸ்-தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்-ததாபரே**
**ஸ்வாத்த்யாய ஜ்ஞானயஜ்ஞாச்ச யதய: ஸம்சிதவ்ரதா:**

*28. நிலையாக விரதம் முயல்வேறு ளாரோ*
*நிதிவேள்வி யார்நற் றவவேள்வி யார்பிற்*
*சிலர்யோக வேள்வி யார்வேத மேயோ*
*தியவேள்வி யாரத் தெருள் வேள்வி யாரே. 190*

விரதங்களை நன்கு பாதுகாக்கும் முனிகளில் வேறு சிலர் திரவியத்தால் வேள்வி செய்வோர்; சிலர் தவத்தால் வேட்போர்; சிலர் யோகத்தால் வேட்போர்; சிலர் கல்வியால் வேட்போர்; சிலர் ஞானத்தால் வேட்போர்.

**அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணே஽பானம் ததாபரே**
**ப்ராணாபான-கதீ ருத்த்வா ப்ரணாயாம-பராயணா:**

*29, பிராண னெனப்படு வாயுதடுத்தல்*
*30. பெருங்கதி யென்றியல்வோர்*
*பிராணனை மற்றோர் பிராணனி லாகுதி*
*பெய்வரவ் வாறுபிறர்*
*பிராண னிடத்தி லபானனை யீவர்*
*பிராணன பானன் வெளிப்*
*பெயர்தல் தடுத்துணல் குறைவர் பிராணன்*
*பிராணனி லீவர் சிலர். 191-192*

இனி வேறு சிலர் பிராணாயாமத்தில் ஈடுபட்டவர்களாய், பிராணன், அபானன் என்ற வாயுக்களின் நடையைக் கட்டுப்படுத்தி அபான வாயுவில் பிராண வாயுவையும், பிராண வாயுவில் அபானத்தையும் ஆகுதி பண்ணுகிறார்கள்.

**அபரே நியதாஹாரா: ப்ராணான் ப்ராணேஷு ஜுஹ்வதி**
**ஸர்வேப்யேதே யஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபித-கல்மஷா:**

*30. வேள்விதெரி வுற்றியலு மிவ்வனைவ ருந்தாம்*
*31. வேள்வியின் மறத்தையொழி வித்தவர்க ளாகி*
*வேள்வியினி லெஞ்சுமமிழ் தந்தினை மிசைந்து*
*மேவுவ ரநாதி யுளதாயபி ரமத்தை. 192-193*

வேறு சிலர் உணவை ஒழுங்குபடுத்தி உயிரை உயிரில் ஆகுதி செய்கிறார்கள். இவ்வனைவரும் வேள்வி நெறியுணர்ந்து வேள்வியால் பாவமற்றுப் போயினோர்.

**யஜ்ஞ-சிஷ்டாம்ருத-புஜோ யாந்தி ப்ரஹ்ம-ஸநாதனம்**
**நாயம் லோகோSஸ்த்-யயஜ்ஞஸ்ய குதோSன்ய: குருஸத்தம**

31. குருமரபி னல்லவரு ளுத்தம விவ்வேள்வி
ஒருவின வனுக்கிவ் வுலகில்லை பிறிதேது. 193

வேள்வியில் மிஞ்சிய அமுதை யுண்போர் என்று முளதாகிய பிரம்மத்தை எய்துகிறார்கள். வேள்வி செய்யாதோருக் கிவ்வுலகமில்லை. அவர்களுக்குப் பரலோகமேது. குருகுலத்தாரில் சிறந்தோய்?

**ஏவம் பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே**
**கர்மஜான் வித்தி தான் ஸர்வான் ஏவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே**

32. பிரம வாயிலாய்ப் பிரிபல் வேள்விதாம்
பெருக விவ்விதம் புகற லாயதால்
கரும மேவிநின் றவையெ லாம்வரல்
காண்க கண்டிவ்வா றடைவை வீடரோ. 194

பிரம்மத்தின் முகத்தில் இங்ஙனம் பலவித வேள்விகள் விரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் தொழிலிலே பிறப்பன வென்றுணர். இவ்வாறுணர்ந்தால் விடுதலை பெறுவாய்.

**ச்ரேயான் த்ரவ்யமயாத்-யஜ்ஞாத் ஜ்ஞானயஜ்ஞ: பரந்தப**
**ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞானே பரிஸமாப்யதே**

33. பொருண் மயத்தவேள் வியினு மிக்கது
புத்தி வேள்வியெத் தகைய கன்மமுஞ்
சருவ மும்மறி வினின்மு டிந்திடும்
தருப ரந்தப பிருதை தந்தவ. 195

பரந்தபா, திரவியத்தைக் கொண்டு செய்யப்படும் வேள்வியைக் காட்டிலும் ஞான வேள்வி சிறந்தது. பார்த்தா, கர்மமெல்லாம், முற்றிலும், ஞானத்தில் முடிவு பெறுகிறது.

**தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா**
**உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானினஸ் - தத்வதர்சின:**

34. மண்ணிற் பணிவுற்று வினாவுவதால்
வழிபாடு நிகழ்த்துவ தாலதையோர்
உண்மைப் பொருள்கண் டுணர்ஞா னியர்தாம்
ஓதித் தெரிவிப் பருனக் கறிவே. 196

அதனை வணக்கத்தாலும், சூழ்ந்த கேள்வியாலும், தொண்டு புரிவதாலும் அறிந்துகொள். உண்மை காணுதி ஞானிகள் உனக்கு ஞானத்தை உபதேசிப்பார்கள்.

**யத் ஜ்ஞாத்வா ந புனர்மோஹ-மேவம் யாஸ்யஸி பாண்டவ**
**யேன பூதான்-யசேஷேண த்ரயக்ஷ்யஸ் - யாத்மன்யதோ மயி**

*35. ஏதறிந்து திரும்ப விவ்வண*
*மோக மெய்தலை பாண்டவ*
*யாதி னாலுள பூதம் யாவையு*
*நின்க ணோர்வை பினென்கணே.* 197

அந்த ஞானம் பெறுவதனால், பாண்டவா, நீ அப்பால் இவ்வித மயக்கமெய்த மாட்டாய். இதனால் நீ எல்லா உயிர்களையும், மிச்சமின்றி நின்னுள்ளே காண்பாய். அப்பால் அவற்றை என்னுள்ளே காண்பாய்.

**அபி சேதஸி பாபேப்ய ஸர்வேப்ய: பாபக்ருத்தம:**
**ஸர்வம் ஜ்ஞான-ப்லவேனைவ வ்ருஜினம் ஸந்தரிஷ்யஸி**

*36. பாவ காரியர் யாரினும் முயர்*
*பாவ காரிய னேனுநீ*
*பாவம் யாவையு ஞான மாகிய*
*நாவ மேகொடு தாவுவாய்.* 198

பாவிகளெல்லாரைக் காட்டிலும் நீ அதிகப் பாவியாக இருந்தாலும், அப் பாவத்தையெல்லாம் ஞானத் தோணியால் கடந்து செல்வாய்.

**யதைதாம்ஸி ஸமித்தோக்னிர்-பஸ்மஸாத் குருதேSர்ஜுன**
**ஜ்ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா**

*37. எங்ஙனம்பல விறகை நீறுசெய்*
*கிற்ப தர்ச்சுன வளர்தழல்*
*அங்ஙனங்கரு மம்மெ லாமறி*
*வாரழல் செய்பு நீறுதான்.* 199

நன்கு கொளுத்துண்ட தீ விறகுகளைச் சாம்பராக்கி விடுதல் போலவே, அர்ஜுனா, ஞானத் தீ எல்லா வினைகளையும் சாம்பராக்கிவிடும்.

**ந ஹி ஜ்ஞானேன ஸத்ருசம் பவித்ர-மிஹ வித்யதே**
**தத்-ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேனாத்மனி விந்ததி**

*38. ஞான மோடுநிக ரான தூய்மையது*
*ஞால மீதினிலை யல்லவோ*
*ஆன யோகி னதை யெய்தி னானுரிய*
*வமைய மெய்துவன் சுயந்தனில்* 200

ஞானத்தைப் போல் தூய்மை தரும் பொருள் இவ்வுலகத்தில் வேறெதுவு மில்லை. யோகத்தில் நல்ல சித்தியடைந்தவன் தானாகவே தக்க பருவத்தில் அதைத் தனக்குள் கிடைக்கப் பெறுகிறான்.

**ச்ரத்தாவான் லபதே ஜ்ஞானம் தத்பர: ஸம்யதேந்த்ரிய:**
**ஜ்ஞானம் லப்த்வா பராம் சாந்திம் அசிரேணாதிகச்சதி**

*39. பொறி யைந்து மடக்கிய தேதலையாய்ப்*
*புகுகின் றசிரத் தையன் ஞானமெய்தும்*
*அறிவெய் திவிளம் பமிலா தபடி*
*அடைவா னுயர்வா கியசாந் தியையே.* 201

பிரம்மத்தைப் பரமாகக் கொண்டு, இந்திரியங்களைக் கட்டுப்படுத்திய வனாய், சிரத்தையுடையோன் ஞானத்தையடைகிறான். ஞானத்தை யடைந்தபின் விரைவிலே பர சாந்தி பெறுகிறான்.

**அஜ்ஞச்-சாச்ரத்த தானச்ச ஸம்சயாத்மா விநச்யதி**
**நாயம் லோகோSஸ்தி ந பரோ நஸுகம் ஸம்சயாத்மன:**

*40. தெரிந்து கொள லில்லவன் சிரத்தையும் விடுத்தோன்*
*சிந்தைதனி லையமுடை யன்கெடுவ னம்மா*
*இருந்தபுவி யீதுமிலை மேலுலக மில்லை*
*இன்பமு மிலைச்சமு சயங்கொள் மனவற்கே.* 202

அறிவும் சிரத்தையுமின்றி ஐயத்தை இயல்பாகக் கொண்டோன் அழிந்து போகிறான். ஐயமுடையோனுக்கு இவ்வுலகுமில்லை; மேலுலகு மில்லை; இன்பமு மில்லை.

**யோக-ஸந்ந்யஸ்த-கர்மாணம் ஜ்ஞான-ஸஞ்ச்சின்ன-ஸம்சயம்**
**ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தனஞ்ஜய!**

41. ஞானத்தி னாலைய மற்றோனை யோகி
 னால்விட்ட கன்மத்து ளோனைத்த னுள்ளம்
 தான்தன் வயப்பட்டு ளோனைக் கன்மங்கள்
 தாங்கட்டு வனவல்ல தனம்வென்ற பெயரோய். 203

யோகத்தால் செய்கைகளைத் துறந்து, ஞானத்தால் ஐயத்தை அறுத்துத் தன்னைத்தான் ஆள்வோனை, தனஞ்ஜயா! கர்மங்கள் கட்டுப்படுத்த மாட்டா.

**தஸ்மா-தஜ்ஞான-ஸம்பூதம் ஹ்ருத்ஸ்த்தம் ஜ்ஞானாஸி-னாத்மன:**
**ச்சித்த்வைனம் ஸம்சயம் யோக-மாதிஷ்ட்டோத்-திஷ்ட்ட பாரத**

42. அதனா லுயர்பா ரதஞா னமிலா
 மையினால் விளைவா யகமீ துறையும்
 இதசீ வனையொட் டியவையமறி
 வெனும்வா ளினறுத் தெழுயோ குசெய்வாய். 204

அஞ்ஞானத்தால் தோன்றி நெஞ்சில் நிலை கொண்டிருக்கும் இந்த ஐயத்தை உன் ஞான வாளால் அறுத்து யோக நிலைகொள். பாரத, எழுந்து நில்.

நான்காம் அத்தியாயம் நிறைவேறியது

## கீதைப் பொருட்டொகை

கேட்கவவ தாரங் கிளந்தோதி நிச்சலுமே
வேட்டும் வினையின் வினையில்லாக் - கோட்பாடோ
டான வினைவகைமை அவ்வினையி னுள்ளடங்கு
ஞான மகிமைசொலு நான்கு (8)

# கீதைப் பாட்டு

## ஐந்தாம் அத்தியாயம்

## ஸந்நியாஸ யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

ஐந்தெனிய விற்கரும யோகின் செயலெண்மை
முந்து விரை விற்றர முதிர்ந்தபய னுண்மை
அந்தி லதனுக் கவயவங்கள் சிலவற்றைத்
தந்துபிர மத்தெருள் சிறப்பொடு தருந்தான்.

கர்ம யோகத்தில் ஞான பாகமடங்கி இருப்பதாலும் ஞான யோகத்தில் கர்ம பாகமடங்கியிருப்பதாலும் இரண்டும் ஒன்றே. அவை இரண்டும் ஒரே விதமான பலனைக் கொடுக்கக் கூடியவை. அவை வெவ்வேறு பலனை அளிக்கும் என்று கூறுபவர் பலர். அவர்கள் அறிவில் தேர்ச்சி பெறாதவர்கள். ஆனால், கர்ம யோகமின்றி ஞான யோகத்தைப் பெற இயலாது. சுக துக்கங்களைப் பொருட்படுத்தாமல் கர்ம யோகத்தையே தழுவியிருந்தால் பலனைக் கஃடுகப் பெறலாம். எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரியானவை. தோற்றும் வேறுபாடுகளெல்லாம் தேக சம்பந்தத்தால் வந்தவை என்ற உணர்வு வேண்டும்.

அர்ஜுன உவாச :

**ஸந்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புனர்-யோகஞ்ச சம்ஸஸி**
**யச்ச்ரேய ஏதயோ-ரேகம் தன்மே ப்ரூஹி ஸுநிச்சிதம்**

கன்மம் விடுஞா னமுமீ ளவும் யோ
கமுநீ புகழ்கின் றனைகண் ணபிரான்
என்னொடர் றிவைதம் முளுயர்ந் தநுநன்
கெண்ணித் துணிதந் ததையெற் குரையாய்.

*அர்ஜுனன் சொல்லுகிறான்:*

கண்ணா, செய்கைகளின் துறவைப் புகழ்ந்து பேசுகிறாய்; பின்னர் அவற்றுடன் கலப்பதைப் புகழ்கிறாய். இவ்விரண்டில் எதுவொன்று சிறந்ததென்பதை நன்று நிச்சயப்படுத்தி என்னிடஞ் சொல்.

*ஸ்ரீ பகவானுவாச :*

**ஸந்ந்யாஸ: கர்மயோகச்ச நி: ச்ரேயஸ-கரா-வுபௌ**
**தயோஸ்து கர்மஸந்ந்யாஸாத் கம்யோகோ விசிஷ்யதே**

2. *வினையோ கமுடன் சநியா சமுமிவ்*
*விருயோ கமுமேன் மைதருந் தகைய*
*வினைவீ டுவதா மதியோ கமதின்*
*வினையோ கமுயர்ந்த தவைக் குளரோ.* 206

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:*

துறவு, கர்ம யோகம் - இவ்விரண்டும் உயர்ந்த நலத்தைத் தருவன. இவற்றுள் கர்மத் துறவைக் காட்டிலும் கர்ம யோகம் மேம்பட்டது.

**ஜ்ஞேய: ஸ நித்ய-ஸந்ந்யாஸீ யோ நத்வேஷ்டி ந காங்க்ஷதி**
**நிர்த்வந்த்வோ ஹி மஹாபாஹோ ஸுகம் பந்தாத் ப்ரமுச்யதே**

3. *பெரும்புய முனிந்திலன் விழைந்ததிலன் றொந்தம்*
*பேணவிலனோ எவன்னவன் றுறவியென்றும்*
*தெரிந்தெனை யுறுந்தகைய னென்னையெனி னன்னான்*
*றிண்பிணியி னின்றுசுக மெய்தல னகன்றோன்.* 207

பகைத்தலும் விரும்புதலுமில்லாதவனை நித்திய சந்யாசி என்றுரைக்கக் கடவாய். பெருந்தோளுடையாய், இருமை நீங்கி அவன் எளிதில் பந்தத்தினின்று விடுபடுகிறான்.

**ஸாங்க்யயோகௌ ப்ருதக் பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா:**
**ஏக-மப்-யாஸ்த்தித: ஸம்யகுபயோர் விந்ததே பலம்**

4. *சாங்கியமும் யோகமுமெ னத்தகு மிரண்டைத்*
*தனித்தனி பயன்றருவ சாதனமென் பார்தாம்*
*ஈங்கிளையர் பண்டிதர்க ளல்லரிவ் விரண்டுள்*
*ஏதெனினு மொன்றையினி தேய்வன்பய னெய்தும்.* 208

சாங்கியத்தையும் யோகத்தையும் வெவ்வேறென்று சொல்வோர் குழந்தைகள்; பண்டிதர்கள் அங்ஙனம் கூறார். இவற்றுள் யாதேனுமொன்றில் நன்கு நிலைபெற்றோன் இரண்டின் பயனையும் எய்துகிறான்.

**யத்ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்த்தானம் தத்-யோகைரபி கம்யதே**
**ஏகம் ஸாங்க்யஞ்ச யோகஞ்ச ய: பச்யதி ஸ பச்யதி**

5. *எவ்வோர்நிலை சாங்கி ரெய்துவதோ*
*அவ்வோர்நிலை யோகிய ரும்புகலாம்*
*இவ்வோர்படி யோகமும் சாங்கியமும்*
*எவன்காண் பவனோ வவன்காண் பவனால்* 209

சாங்கியர் பெறும் நிலையையே யோகிகளும் பெறுகிறார்கள். சாங்கியத்தையும் யோகத்தையும் எவன் ஒன்றாகக் காண்பானோ, அவனே காட்சியுடையான்.

**ஸந்த்யாஸஸ்து மஹாபாஹோ து:க்கமாப்து-மயோகத:**
**யோகயுக்தோ முனிர்-ப்ரஹ்ம நசிரேணாதிகச்சதி**

6. *வினையோக மில்லாது சநியாச யோகோ*
*விரவற் கிடர்ப்பட்ட துயர்வுற்ற புயனே*
*வினையோகு புணர்வுற்று முநியாயி ருப்போன்*
*வெகுகால மாகாம லடைகிற்பன் பிரமம்.* 210

பெருந் தோளாய், யோகமில்லாதவன் சந்நியாசம் பெறுதல் கஷ்டம். யோகத்தில் பொருந்திய முனி விரைவில் பிரம்மத்தை அடைகிறான்.

**யோகயுக்தோ விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய:**
**ஸர்வபூதாத்ம-பூதாத்மா குர்வந்நபி ந லிப்யதே**

7. *மனம்வென்று பொறிவென்று பரிசுத் திமண்டு*
*மனமொன்றி வினையோகு புணர்கின்ற வன்றான்*
*தனிலெந்த வுயிருஞ் சமங்கண் டுணர்ந்தோன்*
*தனுவொட்டு கிலனம்ம வினைதொட்டு நின்றும்.* 211

யோகத்தில் மருவித் தூய்மை யுற்றோன், தன்னைத் தான் வென்றோன், இந்திரியங்களின் மீது வெற்றி கொண்டோன், எல்லா உயிர்களுந் தானே யானவன் - அவன் தொழில் செய்து கொண்டிருப்பினும், அதில் ஒட்டுவதில்லை.

**நைவ கிஞ்சித் கரோமீதி யுக்தோ மன்யேத தத்வவித்**
**பச்யன் ச்ருண்வன் ஸ்ப்ருசன் ஜிக்ரன்-னச்னன் கச்சன் ஸ்வபன் ச்வஸன்**
**ப்ரலபன் விஸ்ருஜன் க்ருஹ்ணன் னுந்மிஷந் நிமிஷன்னபி**
**இந்த்ரியாணீந்த்ரியார்த்தேஷு வர்த்தந்த இதி தாரயன்**

8,9. கண்டு கேட்டுணர்வுற்று மோந்
துணவுண் டியங்கி யுறங்கியும்
கழித்து மூச்சுவி டுத்திமைத்து
விழித்தெடுத்து விளம்பியும்
மண்டு பல்பொறி புலனி லேயுள
வென்று கொண்டியல் யோகனாய்
மருவி யொன்று மியற்றி லேனென
நினைக வாய்மை யுணர்ந்தவன். 212-213

உண்மை அறிந்த யோகி, 'நான் எதனையுஞ் செய்வதில்லை' என்றெண்ணக் கடவான். காண்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், உண்பினும், நடப்பினும், உயிர்ப்பினும், உறங்கினும்,

புலம்பினும், விடினும், வாங்கினும், இமைகளைத் திறப்பினும், மூடினும், எதிலும் "இந்திரியங்கள் தம்முடைய விஷயங்களில் சலிக்கின்றன" என்று கருதியிருக்கக் கடவான்.

**ப்ரஹ்மண்-யாதாய கர்மாணி ஸங்கந் த்யக்த்வா கரோதி ய:**
**லிப்யதே ந ஸ பாபேன பத்மபத்ர-மிவாம்பஸா**

10. பிரம மென்பதில் வினையை வைத்திவண்
பிணைதல் விட்டெவன் புரிய கிற்பனோ
பரவு நீர்கொள்தா மரையி லைப்படி
பாவ மேயிழுக லன்ன வன்னரோ. 214

செய்கைகளை யெல்லாம் பிரம்மத்தில் சார்த்திவிட்டுப் பற்றுதலை நீக்கி எவன் தொழில் செய்கிறானோ, அவன், நீரில் தாமரை யிலைபோல், பாவத்தால் தீண்டல் பெறுவதில்லை.

**காயேன மனஸா புத்த்யா கேவலை-ரிந்த்ரியை-ரபி**
**யோகின: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மசுத்தயே**

11. உடலத்தின் மனத்தினோர் புத்தியினால்
உறுகே வலமைம் பொறியா னும்வினை
தொடர்விட் டுநிகழ்த் துவர்யோ கியர்கள்
சூழ்தம் முயிர்தூய் மையுறக் கருதி. 215

யோகிகள் பற்றுதலைக் களைந்து, ஆத்ம சுத்தியின் பொருட்டாக உடம்பாலும், மனத்தாலும், புத்தியாலும், அன்றி வெறுமே இந்திரியங்களாலும் தொழில் செய்வார்.

**யுக்த: கர்மபலந் த்யக்த்வா சாந்தி-மாப்னோதி நைஷ்ட்டிகீம்**
**அயுக்த: காமகாரேண பலே ஸக்தோ நிபத்த்யதே**

*12. உயிரிற் புணர்வுள் ளவன்கன் மபலன்*
*உளம்விட் டடைவன் றிரசாந் தியினை*
*உயிரிற் புணர்வில் லவனோ நசையே*
*வுதலிற் பயன்வேட் டவன்பந் தமுறும்.* 216

யோகத்தில் பொருந்தியவன் கர்மப் பயனைத் துறந்து நிஷ்டைக்குரிய சாந்தியை அடைகிறான் யோகத்தில் இணங்காதோன் விருப்பத்துக்கு வசமாய்ப் பயனிலே பற்றுதல் கொண்டு தளைப்படுகிறான்.

**ஸர்வகர்மாணி மனஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வசீ**
**நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வந் ந காரயன்**

*13. துளையொன் பதுடைப் புரியின் மனனாற்*
*றொழில் யாவையும் வைத்தொருதே கிவினை*
*விளையான் விளைவிக் கலன்றன் வயமே*
*வினனாய் மகிழ்வின் னுளனா குகவே.* 217

தன்னை வசங்கொண்ட ஆத்மா, எல்லாக் கர்மங்களையும் மனதால் துறந்து, எதனையும் செய்வதுமின்றிச் செய்விப்பதுமின்றி, ஒன்பது வாயில் கொண்ட உடற்கோட்டையில் இன்புற்றிருக்கிறான்.

**ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு:**
**ந கர்மபல-ஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே**

*14. வினையிற் றலைமைப் படலின் னுலகில்*
*விளையுண் டுபணா தவனோ பிரபு.*
*வினையிற் பயனோ டுபுணர்ப் பிலனாய்*
*வினைவா சனையே முளைக்கிறப துவால்.* 218

செய்கைத் தலைமை, செய்கை, செய்கைப் பயன் பெறுதல்—இவற்றுளெதனையும் கடவுள் மனிதனுக்குத் தரவில்லை. இயற்கையே இயல் பெறுகிறது.

**நாதத்தே கஸ்யசித் பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு:**
**அஜ்ஞானே-னாவ்ருதம் ஜ்ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ:**

*15. ஒருவன் பவ மொழிவிக்கலன்*
*நலம் வவ்வலன் விபுவே*
*இருளின் மறை வடையுந்தெரு*
*ளிதனின்றுயிர் மருளும். 219*

எவனையும் பாவி அல்லது நற்செய்கையுடையோனென்று கடவுள் ஏற்பதில்லை. அஞ்ஞானத்தால் ஞானம் சூழப்பட்டிருக்கிறது. அதனால் ஜந்துக்கள் மயக்க மெய்துகின்றன.

**ஜ்ஞானேன துதஜ்ஞானம் யேஷாம் நாசித-மாத்மன:**
**தேஷா-மாதித்யவத் ஜ்ஞானம் ப்ரகாசயதி தத்பரம்**

*16. எவர்கட் குயிர்பற் றியநல் லுணர்வால்*
*இரிபட் டுளதவ் விதவல் லுணர்வோ*
*அவர்கட் குயர்வா கியவவ் வுணர்வோ*
*ஆதித் தனையொத் தொளிசெய் வதுவே. 220*

அந்த அஞ்ஞானத்தை ஆத்ம ஞானத்தால் அழித்தவர்களுடைய ஞானம் சூரியனைப் போன்றதாய்ப் பரம்பொருளை ஒளியுறக் காட்டுகிறது.

**தத்புத்தயஸ்-ததாத்மானஸ்-தந்நிஷ்ட்டாஸ்-தத்பராயணா:**
**கச்சந்த்-யபுனராவ்ருத்திம் ஜ்ஞான-நிர்த்தூத-கல்மஷா:**

*17. அதிற்புத்தி யுற்றா ரதிற்சித்தம் வைத்தார்*
*அதைப்பே றெனக்கொண் டதின்னிட்டை பெற்றார்*
*அதைக் கண்ட தாலே யழுக்கைத் துடைத்தார்*
*அவர் மற்று மீளா நிலைச்சேரு வாரால். 221*

*[அது – உயிர்]*

பிரம்மத்தில் புத்தியை நாட்டி, அதுவே தாமாய், அதில் நிஷ்டை யெய்தி, அதில் ஈடுபட்டோர், தம்முடைய பாவங்களெல்லாம் நன்கு கழுவப் பெற்றோராய், மீளாப் பதமடைகிறார்கள்.

**வித்யா-விநய-ஸம்பன்னே ப்ராஹ்மணே கவி ஹஸ்தினி**
**சுனிசைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சின:**

*18. விநயம் வித்தைக ணிறைவுறு பனவனில்*
*வெறுமை மெய்ப்பன வனிலொரு பசுவினில்*
*வனைகளிற்றினின் ஞமலியின் ஞமலியுண்*
*மனித னிற்சம நினைகுவ ரறிவினர். 222*

கல்வியும் விநயமும் நன்கு கற்ற பிராமணனிடத்திலும் பசுவினிடத்தும் யானையினிடத்தும், நாயினிடத்தும் நாயைத் தின்னும் புலையனிடத்தும் பண்டிதர் சமப்பார்வையுடையோர்.

**இஹைவ தைர்ஜித: ஸர்க்கோ யேஷாம் ஸாம்யே ஸ்த்திதம்மன:**
**நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணி தே ஸ்த்திதா:**

*19. ஒத்துள் ளுணர்வின் னெவருள் ளமுளார்*
*உவரான் வெலலாய பிறப்பிவணே*
*ஒத்துக் கரிசில் லதன்னோ பிரமம்*
*உவரோ பிரமத் துளரா லதனால்.* 223

மனம் சம நிலையில் நிற்கப்பெற்றோர் இவ்வுலகத்திலேயே இயற்கையை வென்றோராவர். பிரம்மம் மாசற்றது. சம நிலையுற்றது. ஆதலால் அவர்கள் பிரம்மத்தில் நிலை பெறுகிறார்கள்.

**ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்யசாப்ரியம்**
**ஸ்த்திரபுத்தி-ரஸம்மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி ஸ்த்தித;**

*20. பிரமந் தெரிந்தோன் பிரமத் திருப்போன்*
*பிறமூட மில்லோன் றிரபுத்தி யுள்ளோன்*
*பிரியம் புகுந்து மகிழற்க விகழப்*
*பெறுமஃத டைந்தும் வெருளற்க வம்மா.* 224

விரும்பிய பொருளைப் பெறும்போது களி கொள்ளான்; பிரியமற்றதைப் பெறும்போது துயர்ப்பட மாட்டான்; பிரம்மஞானி ஸ்திர புத்தி யுடையோனாய், மயக்கம் நீங்கி, பிரம்மத்தில் நிலை பெறுகிறான்.

**பாஹ்ய-ஸ்பர்சேஷ்-வஸக்தாத்மா விந்தத்-யாத்மனி யத் ஸுகம்**
**ஸ ப்ரஹ்மயோக-யுக்தாத்மா ஸுகமக்ஷய-மச்னுதே —**

*21. வெளியிற்பொறி தொடுதற்குள நசையற்றவ னுயிரின்*
*மிசையேசுக மடைகிற்பவ னெவனோவவ னம்ம*
*உளனிற்பிர மத்தைப்புணர் வுற்றுப்புரி யோகன்*
*ஒருநாளினு மழியாதுடை சுகமுண் பவனாவன்.* 225

புறத் தீண்டுதல்களில் பற்றுதல் கொள்ளாமல் தனக்குள்ளே இன்பத்தைக் காண்போன் பிரம்ம யோகத்தில் பொருந்தி அழியாத இன்பத்தை எய்துகிறான்.

**யே ஹி ஸம்ஸ்பர்சஜா போகா து: க்க-யோனய ஏவ தே**
**ஆத்யந்தவந்த: கௌந்தேய ந தேஷு ரமதே புத:**

*22. விடய மைந்து பொறிகொடுங்கண் விளைசு கங்களெவையவை*
*விழுமமென்ப துதயமாகு முழுமை யேது வேயலோ*
*அடியுமுள்ள முடிவுமுள்ள வாகுமன்ன வற்றிலே*
*அகம் விரும்ப விலை தெளிந்த வறிவன்குந்தி புதல்வனே. 226*

புறத் தீண்டுதல்களில் தோன்றும் இன்பங்கள் துன்பத்துக்குக் காரணங்களாகும். அவை தொடக்கமும் இறுதியுமுடையன. குந்தி மகனே, அறிவுடையோன் அவற்றில் களியுறுவதில்லை.

**சக்னோதீஹைவ ய: ஸோடும் ப்ராக் சரீர- விமோக்ஷணாத்**
**காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த: ஸ ஸுகீ நர:**

*23. தன்மெய் விடுமுன் னெவனிப் பொழுதே*
*தன்கா தல்சினன் விளைவே கமதை*
*மன்னுந் தடைசெய் யும்வலத் தவனோ*
*மனிதன் னவன்யோ கியவன் சுகியால். 227*

சரீரம் நீங்குமுன்னர் இவ்வுலகத்திலேயே விருப்பத்தாலும் சினத்தாலும் விளையும் வேகத்தை எவன் பொறுக்கவல்லானோ அந்த மனிதன் யோகி, அவன் இன்பமுடையோன்.

**யோSந்த: ஸுகோSந்தராராமஸ்-ததாந்தர்-ஜ்யோதிரேவ ய:**
**ஸ யோகீ ப்ரஹ்ம நிர்வாணம் ப்ரஹ்மபூதோ Sதிகச்சதி**

*24. எவன்மகிழ்வ னோதனது ளெவன் பொழிலு ளானவிதம்*
*எவன்றனது ளேயொளிர் வனோ*
*அவன்பிரம மாகியவன் பிரம நிரு வாணமதை*
*அடைவதுறும் யோக முடையோன். 228*

தனக்குள்ளே இன்பமுடையவனாய், உள்ளே மகிழ்ச்சி காண்பவனாய், உள்ளே ஒளி பெற்றவனாகிய யோகி, தானே பிரம்மமாய், பிரம்ம நிர்வாணமடைகிறான்.

**லபந்தே ப்ரஹமநிர்வாணம் ருஷய: க்ஷீணகல்மஷா:**
**ச்சின்னத்வைதா யதாத்மான: ஸர்வபூதஹிதே ரதா:**

*25. இருமைவிட லாயினவ ருயிருண்மன மேயவ*
*ரெலாவுயி ரிதங்கருது வோர்*
*இருடியர்கள் பாவமிலை யாகியவர் பிரமநிரு*
*வாணமதை யெய்துவரரோ.* 229

இருமைகளை வெட்டி விட்டுத் தம்மைத் தாம் கட்டுப்படுத்தி, எல்லா உயிர்களுக்கும் இனியது செய்வதில் மகிழ்ச்சி யெய்தும் ரிஷிகள் பாவங்களொழிந்து பிரம்ம நிர்வாணம் அடைகிறார்கள். [இருமைகள்: நன்மை, தீமை; குளிர், சூடு; இன்பம், துன்பம்; என எல்லாப் பொருள்களையும் பற்றி நிற்கும் இரட்டைகள்]

**காம-க்ரோத-வியுக்தானாம் யதீனாம் யதசேதஸாம்**
**அபிதோ ப்ரஹ்மநிர்வாணம் வர்த்ததே விதிதாத்மனாம்**

*26. புரிவை முனிவைப் புணர்த லிலர்முயற லிற்படுவர்*
*புகமன மடக்கு பவராய்ப்*
*பெரிதகம்வெ லப்பெறுவ ரருகினி லிருப்பதொரு*
*பிரமசுக வைப்பு மனரோ.* 230

விருப்பமும், சினமும் தவிர்ந்து சித்தத்தைக் கட்டுப்படுத்திய ஆத்ம ஞானிகளாகிய முனிகளுக்கு பிரம்ம நிர்வாணம் அருகிலுள்ளது.

**ஸ்பர்சான் க்ருத்வா பஹிர்-பாஹ்யான்ச்**
**சக்ஷுச்சைவாந்தரே ப்ருவோ:**
**ப்ராணாபானௌ ஸமௌ க்ருத்வா**
**நாஸாப்ப்யந்தர-சாரிணௌ**

*27. புறனிற் பொறி தொடலைப்புற னுறவிட் டிருவிழியைப்*
*புருவங்களி னிடைவைத் திருநாசித் துளைவழியின்*
*முறையிற்கெட நடைபெற்றபி ராணன்னொ டபானன்*
*முறையிற் சமவளவிற் புறன் விடலுட்புகல் செய்து.* 231

புறத்தீண்டுதல்களை அகற்றிப் புருவங்களுக்கிடையே விழிகளை நிறுத்தி மூக்கினுள்ளே இயங்கும் பிராண வாயுவையும் அபான வாயுவையும் சமமாகச் செய்து கொண்டு;

**யதேந்த்ரிய-மனோ-புத்திர் முனிர்-மோக்ஷபராயண:**
**விகதேச்சா-பய-க்ரோதோ ய: ஸதா முக்த ஏவ ஸ:**

*28. பொறியும்மன மும்புத்தியு மியலாம லொடுக்கிப்*
*புரிவும்பய முங்கோபமும் விட்டுப்பெரு வீடு*
*செறியும்பய னென்றெண்ணின னாகித்தனை மனனஞ்*
*செய்வோ னெவன் னவனெப்பொழு தினுமுத்திய னேதான். 232*

புலன்களை, மனத்தை, மதியையும் கட்டி விடுதலை யிலக்கெனக் கொண்டு விருப்பமும் அச்சமும் சினமும் தவிர்ந்தான். முக்தனே யாவான் முனி.

**போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோக-மஹேச்வரம்**
**ஸுஹ்ருதம் ஸர்வபூதானாம் ஜ்ஞாத்வா மாம் சாந்திம்ருச் சதி**

*29. எல்லா வுலகுக்கு மகே சுரனும்*
*இயல்வேன விதவம்பல வுண்பவனும்*
*எல்லா வுயிருக்கு நல்நண்பனு மென்*
*றெனையெண் ணினனெய் துவன் சாந்தியையே. 233*

வேள்வியுந் தவமும் மிசைவோன் யானே- உலகுகட்கெல்லாம் ஒரு பேரரசன்; எல்லா உயிர்கட்கு நண்பன் யான்' என்றறிவான் அமைதி யறிவான் [மிசைவது — உண்பது]

*ஐந்தாம் அத்தியாயம் நிறைவேறியது*

## கீதைப் பொருட்டொகை

*செய்கரும யோகின் செயற்கெளிமை வல்விரைவிற்*
*பெய்யும் பயனுடைமை பேர்த்துமதற் - கெய்தும்*
*உறுப்புச் சிலவற்றோ டொண்பிரம ஞானச்*
*சிறப்புவகை செப்புமைந்து தேர்ந்து. (9)*

# கீதைப் பாட்டு

## ஆறாம் அத்தியாயம்

## தியான யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

ஆறனியல் யோகு பயிறற்கு விதி யோகர்
கூறவரு நால்வகை குலாய நல யோகிற்
கேறு துணையோ கினியல் சித்தியுயர் கண்ணன்
தேறியவ ருத்தம ரெனத்தெரிவ தோதும்.

*கர்ம யோக ஞான யோகங்களில் சித்தி பெற்றவனுக் குண்டாகும் ஆத்மானுபவம் இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது. இவ்வாத்மா னுபவத்தில் ஈடுபட்டு ஆதியிலேயே திருப்தியடைந்தவன் வேறு விஷயங்களில் மனதைச் செலுத்தமாட்டான். அவனுக்குத் தோழன், பகைவன், பந்து, நல்லவன், கெட்டவன் என்று வேறுபாடின்றி எல்லோரிடமும் ஒரேவிதமான மனப்பான்மை ஏற்படும். அவன் ஜனங்களுடைய சேர்க்கையை வெறுத்துத் தனிமையிலேயே விருப்பமுற்றுத் திடமான ஆசனத்திலமர்ந்து தனது ஆத்ம சொரூபத்தை எண்ணி எண்ணி மகிழ்வான். இவ்வாத்மானுபவமே பேரானந்தமென்று எண்ணியிருப்பான். எல்லா ஆத்மாக்களும் தேக சம்பந்தத்தை நீக்கிப் பார்த்தால் ஒரு வகைப்பட்டவை என்று எண்ணி, முடிவில் கடவுளும் அவ்வாத்மாக்களும் ஒருவகைப் பட்டவர்களென்று உணர்வான். இந்நிலை பெற்றவனே யோகிகளில் சிறந்தவன்.*

*ஸ்ரீ பகவானுவாச :*

**அனாச்ரித : கர்மபலம் கார்யம் கர்ம கரோதி ய:**
**ஸ ஸந்த்யாஸீ ச யோகீ ச ந நிரக்னிர் ந சாக்ரிய:**

*1. வினையின் பயனைக் கருதா தெவனோ*
*விதிசெய் துளபல் வினையும் புரிவான்.*
*அனையன் சநியா சியும்யோ கியும்மாம்*
*அழலில் வனுமில் வினையில் லனுமில்.* *234*

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

செய்கையின் பயனில் சார்பின்றிச் செய்யத்தக்கது செய்வோன் துறவி; அவனே யோகி, தீ வளர்க்காதவனும் கிரியை செய்யாதவனும் அவன் ஆகார்.

**யம் ஸந்ந்யாஸமிதி ப்ராஹுர் யோகம் தம் வித்தி பாண்டவ**
**நஹ்-யஸந்ந்யஸ்த-ஸங்கல்போ யோகீ பவதி கச்சன**

*2. எதனைச் சநியா சமெனச் சொல்வரஃ*
*தினையோ கமெனத் தெரிபாண் டவபற்*
*றதனைத் துறவா தவனே வனும்யோ*
*கதுசெய் பவனா தலிலன் னலனோ.* *235*

பாண்டவா, எதனை சந்தியாச மென்கிறார்களோ, அதுவே யோகமென்றறி. தன் கோட்பாடுகளைத் துறக்காத எவனும் யோகியாக மாட்டான்.

**ஆருருக்ஷோர்-முனேர்-யோகம் கர்மகாரண-முச்யதே**
**யோகாரூடஸ்ய தஸ்யைவ சம: காரண-முச்யதே**

*3. யோகினேற விழை முனிவ னுக்குவினை*
*யொழுகல் காரண மெனப்படும்*
*யோகினேறிய வவற்கு மட்டும் வினை*
*பொழிதல் காரண மெனப்படும்.* *236*

யோக நிலையில் ஏற விரும்பும் யோகிக்குத் தொழிலே கருவியாகக் கூறப்படுகிறது. அந்நிலையில் ஏறியபின் அவனுக்கு சாந்தம் கருவியாகிறது.

**யதா ஹி நேந்த்ரியார்த்தேக்ஷு ந கர்மஸ்வனுஷஜ்ஜதே**
**ஸர்வஸங்கல்ப-ஸந்ந்யாஸீ யோகாரூடஸ்-ததோச்யதே**

4. *என்று தான் பொறி விடய மீதினும்*
*வினையினும் விழை வில்லையோ*
*அன்ற லோ நசை முற்றும் விட்*
*டவன் யோகியேறின னாவனால்.* 237

ஒருவன் எல்லாக் கோட்பாடுகளையுந் துறந்து விட்டுப் புலன்களிலேனும் செயல்களிலேனும் 'பற்றுதலின்றி யிருப்பானாயின், அப்போதவன் 'யோகநிலையில் ஏறியவன்' என்று சொல்லப்படுகிறான்.

**உத்தரே-தாத்மனாத்மானம் நாத்மான-மவஸாதயேத்**
**ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து-ராத்மைவ ரிபு-ராத்மன:**

5. *உளனாலுயிர் கரையேற்றுக*
*உயிரைத்துய ராழ்த்தல்*
*உளனேயுற வுயிருக்கிகல்*
*உளனேயுயி ருக்கே.* 238

தன்னைத் தான் உயர்த்திக்கொள்க; தன்னைத் தன்னால் இழிவுறுத்த வேண்டா; தனக்குத்தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன்.

**பந்து-ராத்மாத்மனஸ்-தஸ்ய யேனாத்மைவாத்மனா-ஜித:**
**அனாத்மனஸ்து சத்ருத்வே வர்த்தேதாத்மைவ சத்ருவத்**

6. *தன்னான்மனம் வென்றவ னேவனவன்*
*தனதின்கிளை தன்மன னம்மனனைத்*
*தன்னான் வெலல் செய்கில னுக்கெனினோ*
*சமர்கொள்வது தன்மன னேபகைபோல்.* 239

தன்னைத் தான் வென்றவனே தனக்குத் தான் நண்பன்; தன்னைத் தான் வெல்லாதான் தனக்குத் தான் பகைவன் போற் கேடு சூழ்கிறான்.

**ஜிதாத்மன: ப்ரசாந்தஸ்ய: பரமாத்மா ஸமாஹித:**
**சீதோஷ்ண-ஸுகது: க்கேஷு ததா மனாபமானயோ:**

7. [illegible]
[illegible]
[illegible]
[illegible] 240

தன்னை வென்று ஆறுத லெய்தியவனிடத்தே சீதோஷ்ணங்களிலும், சுக துக்கங்களிலும் மானாபமானங்களிலும் சம நிலைப்பட்ட பரமாத்மா விளங்குகிறது.

**ஜ்ஞான-விஜ்ஞான-த்ருப்தாத்மா கூடஸ்த்தோ விஜிதேந்த்ரிய:**
**யுக்த இத்-யுச்யதே யோகீ ஸம-லோஷ்டாச்ம-காஞ்சன:**

8 *அறிவிற் பகுத்தறிவி னிறைவுற்ற சித்தமுட*
*னசைவற்ற கூட மொத்துப்*
*பொறியைச் சயித்துநிதி சுடுமட் சில் கற்குநிகர்*
*புரியோகி யென்ப தக்கோன்.* 241

ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் திருப்திகொண்டவனாய், மலை முடியில் நிற்பான் போன்று, புலன்களை வென்று ஓட்டையும் கல்லையும் பொன்னையும் ஒன்றுபோலே காணும் யோகியே யோக நிலையுற்றா னெனப்படுவான். [ஞானம் என்பது கடவுளியலைப் பற்றிய அறிவு. விஞ்ஞானம் என்பது உலகவியலைப் பற்றியது]

**ஸுஹ்ருன்-மித்ரார்-யுதாஸீந மத்த்யஸ்த்த-த்வேஷ்ய பந்துஷு**
**ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்-விசிஷ்யதே**

9. *நலவிருப்புளார், நடுவ ணோரயல்*
*நண்பர் வெம்பகை தமர்வெ றுப்பவர்*
*அலசெய் வார்கள் சாதுவர்கள் பாலுமே*
*அகனி லொப்பவே நினைவன் மேலவன்.* 242

அன்பர், நட்டார், பகைவர், ஏதிலர், நடுவர், எதிரிகள் சுற்றத்தார், நல்லோர், தீயோர், எல்லோரிடத்தும் சமபுத்தியுடையோன் மேலோனா வான்.

**யோகீ யுஞ்ஜீத ஸதத-மாத்மானம் ரஹஸி ஸ்த்தித:**
**ஏகாகீ யத-சித்தாத்மா நிராசீ-ரபரிக்ரஹ:**

10. *மனம் விழைவறுத் தெதினு மெனதெனும் விருப்பம்விட*
*மனநினைவொ டுக்கும் யோகி*
*தனிமை யினிலெப் பொழுதும் ரகசிய தலத்தினமர்*
*தருபுதனை வைக்க யோகின்.* 243

மறைவிடத்தில் இருந்து கொண்டு, தனியனாய் உள்ளத்தைக் கட்டி, ஆசையைத் துறந்து, ஏற்பது நீங்கி எப்போதும் ஆத்மாவில் யோகமுறக் கடவான்.

**சுசௌ தேசே ப்ரதிஷ்ட்டாப்ய ஸ்த்திர-மாஸன-மாத்மன:**
**நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சைலாஜின-குசோத்தரம்**

11. *சுசியா மிடத்தினிலை யதிநீச முச்சமில*
*துணிதோல் தருப்பை முறையாய்*
*மிசையே பரப்பியுள மணையா மிருக்கையினை*
*விதியே தனக்கு வைத்து.* 244

சுத்தமான இடத்தில் அதிக உயரமில்லாமலும் அதிகத் தாழ்வில்லாமலும், துணி, மான் தோல், தர்ப்பை இவற்றின் மீது தனக்கோர் உறுதியான, ஆசனம் சமைத்துக் கொண்டு,

**தத்ரைகாக்ரம் மன: க்ருத்வா யத-சித்தேந்த்ரியக்ரிய:**
**உபவிச்யாஸனே யுஞ்ஜ்யாத் யோக-மாத்ம-விசுத்தயே**

12. *அணையி ருந்துமன னொருமு கங்கொளல்செய்*
*தேக மொ டைம்பொறிதம் வினைகளிற்*
*பிணைத லின்றியுயிர் சுசியடைந் தொளிர்தல்*
*பெறவ வண்புணர்க யோகமே.* 245

அங்கு மனதை ஒருமுகமாக்கி, உள்ளத்தையும் புலச்செயல்களையும் நன்கு கட்டுப்படுத்தி, ஆசனத்தமர்ந்து ஆத்மா நன்கு தூய்மையடையும் படி யோகத்திலே பொருந்தக் கடவான்.

**ஸமங் காய-சிரோ-க்ரீவம் தாரயன்-னசலம் ஸ்த்திர:**
**ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திசச்-சானவலோகயன்**

13. *அசைதலை கிரீவமிவை சமநிலை நிறீஇ யசைவ*
*தறவுறுதி யாயமர்ந்தே*
*ஒருதனது நாசிநுனி யிருவிழிகள் காணவெளி*
*யுறுவது மிலாது திசைகள்.* 246

உடம்பையும், தலையையும், கழுத்தையும் சமமாக அசைவின்றி வைத்துக்கொண்டு, உறுதி சான்றவனாய், மூக்கு நுனியைப் பார்த்துக்கொண்டு, திசைகளை நோக்காமல்,

**ப்ரசாந்தாத்மா விகதபீர் ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்த்திர:**
**மனஸ்-ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர:**

14. *மிருதுசமன மனமுடனு மச்சமற விட்டும்*
*விரதிப்ரம சரியவிர தத்துநிலை யுற்றும்*
*அகநியம மடைவதொடு சித்தமெனை வைத்தும்*
*அகிலமென வெனையெணி யிருக்கவிலை புற்றே.* 247

நன்கு சாந்த மெய்தியவனாய், அச்சத்தைப் போக்கி, பிரம்மசாரி விரதத்தில் நிலைகொண்டு, மனதை வசப்படுத்தி, என்னிடத்தே சித்தத்தை இசைத்து எனக்கு ஈடுபட்டு யோகத்திலிருக்கக் கடவான்.

**யுஞ்ஜன்-னேவன் ஸதாத்மானம் யோகீ நியத-மானஸ:**
**சாந்திம் நிர்வாண-பரமாம் மத்-ஸம்ஸ்த்தா-மதிகச்சதி**

*15. அகமிப்படி யெப்பொழு தத்துமியைந்*
*தசையா மனமேவிய யோகியெனா*
*தகமுற்ற சகத்தி னுயர்ச் சியதா*
*யவிர் சாந்தியை யெய்துவ னாவனரோ.* 248

இங்ஙனம் எப்போதும் மனதைக் கட்டுப்படுத்தி, ஆத்மாவில் யோகமுற்றிருக்கும் யோகி என்பதால் நிலைபெற்றதாகிய மிகச்சிறந்த விடுதலையிலுள்ள ஆறுதலை யறிவான்.

**நாத்யச்னதஸ்து யோகோSஸ்தி நசைகாந்த-மனச்னத:**
**ந சாதி ஸ்வப்னசீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுன**

*16. மிகவி டுப்பவற் குளதில் யோகுணா*
*மிகம டுப்பவற் கென்னி னோவிலை*
*மிகவு றங்கியல் புடைய னுக்குமில்*
*விசய கண்விழிப் பவன்ற னக்குமில்.* 249

மிகைபட உண்போனுக்கு யோகமில்லை; உணவற்றோனுக்கும் ஏகாந்த நிலை எய்தாது, மிகுதியாக உறங்குவோனுக்குமில்லை; அர்ஜுனா, மிகுதியாக விழிப்போனுக்கும் அஃதில்லை.

**யுக்தாஹார-விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு**
**யுக்த-ஸ்வப்னாவபோதஸ்ய யோகோ பவதி து:க்கஹா**

*17. அயிறன்மித மாகிவினை யாடன்மித மானோன்*
*அவ்வினை செயற்கண்முய றன்மிதம தானோன்*
*துயிறன் மித மாகிநன வும் மிதம தானோன்*
*சோகமிலை யாகியுள யோகமுழு தெய்தும்.* 250

ஒழுங்குக்குட்பட்ட உணவும், விளையாட்டும் உடையோனாய், வினைகளில் ஒழுங்குக்குட்பட்ட நடைகளுடையவனாய் உறக்கத்திலும் விழிப்பிலும் ஒழுங்குக்குட்பட்டானாயின், அவனுடைய யோகம் துயரை அழிக்கிறது.

**யதா விநியதம் சித்த-மாத்மன்யே-வாவதிஷ்ட்டதே**
**நி:ஸ்ப்ருஹஸ் ஸர்வகாமேப்ப்யோ யுக்த இத்யுச்யதே ததா**

*18. எந்தப் பொழுதத் தினுளஞ் சலியா*
*வியல்பா னிலைகொள்வ னுயிர்க் கிடையே*
*அந்தப் பொழுதத் தினெலா விழைவும்*
*அறுவான் சொலலா குவன்யோ கியெனா.* 251

உள்ளம் கட்டுக்கடங்கித் தனதுள்ளேயே நிலைபெற, ஒருவன் எந்த விருப்பத்திலும் வீழ்ச்சியற்றானாயின், யோகமுற்றானெனப்படுவான்.

**யதா தீபோ நிவாதஸ்த்தோ தேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா**
**யோகினோ யத சித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மன:**

*19. எடுக்கும் மருத்தில் லிடத்தெப்ப டித்தான்*
*இருக்கும் விளக்குச் சலிக்கிற்ப தின்றோ*
*ஒடுக்கும்ம னத்தியோ கொடுங்கூடும் யோகி*
*யுயிருக் கெணப்பட்ட தொப்பாக வஃதே.* 252

சித்தத்தைக் கட்டி ஆத்ம யோகத்தில் கலந்து நிற்கும் யோகிக்குக் காற்றில்லாத இடத்தில் அசைவின்றி நிற்கும் விளக்கை முன்னோர் உவமையாகக் காட்டினர்.

**யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோக ஸேவயா**
**யத்ர சைவாத்ம-னாத்மானம் பச்யன்-னாத்மனி துஷ்யதி**

*20. யோக சேவையா லேதடுப்புறாஉ*
*முள்ள மற்றெதிற் கொள்ளு மின்பமெவ்*
*யோகி னெஞ்சினா லுயிர நிந்துகொண்*
*டுயிரி னேமகிழ் வுறுவ னாவனோ.* 253

எங்கு சித்தம் யோக ஒழுக்கத்தில் பிடிப்புற்று ஆறுதலெய்துமோ, எங்கு ஆத்மாவினால் ஆத்மாவை யறிந்து ஒருவன் ஆத்மாவில் மகிழ்ச்சியடைகிறானோ,

**ஸுக-மாத்யந்திகம் யத்தத் புத்தி-க்ராஹ்ய-மதீந்த்ரியம்**
**வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்த்திதச் சலதி தத்வத:**

*21. எதுவோ சுகந்தான் முடிவின்று பொறிகட்*
*கெய்தாத தறிவிற் கெய்துந் தகைத்தாம்*
*அதையாதி னுள்ள படிதேறு கிற்பான்*
*அசைவே யிலாமன் னிலைபேறு [illegible]* 254

புத்தியால் தீண்டத்தக்கதும் புலன்களைக் கடந்து நிற்பதுமாகிய பேரின்பத்தை எங்குக் காண்பானோ, எங்கு நிலைபெறுவதால் இவன் உண்மையினின்றும் வழுவுவதில்லையோ,

**யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத:**
**யஸ்மின் ஸ்த்திதோ ந து: க்கேன குருணாபி விசால்யதே**

*22. எதனையெய்திவே றதனின் மிக்கபே*
*றெனநி னைப்பது மில்லை யாகுமோ*
*எதிலி ருப்பவன் பெரிய தாகிய*
*இடரினுஞ்சலிப் படைகி லானரோ.* 255

எதனை யெய்தியபின், அதைக் காட்டிலும் பெரிய லாபம் வேறிருப்பதாகக் கருதமாட்டானோ, எங்கு நிலைபெறுவதாய்ப் பெரிய துக்கத்தாலும் சலிப்பெய்த மாட்டானோ,

**தம் வித்யாத்து:க்க-ஸம்யோக-வியோகம் யோகஸம்ஜ்ஞிதம்**
**ஸ நிச்சயேன யோக்தவ்யோ யோகோநிர்விண்ண சேதஸா**

*23. அதையோக மென்னும் பெயருள்ள தோடும்*
*அஞர்கூட னின்றும் பிரிவிப்ப தாவோர்*
*அதுயோக நிச்சயத்தோடு துன்பம்*
*அறுமின்ப நெஞ்சான் முயலத்த குங்காண்.* 256

அந்நிலையே துன்பத்துடன் கலத்தலை விடுதலாகிய யோக நிலை யென்று உணர். உள்ளத்தில் ஏக்கமின்றி, உறுதியுடன் அந்த யோகத்தை ஒருவன் பற்றி நிற்கக் கடவான்.

**ஸங்கல்ப ப்ரபவான் காமான் த்யக்த்வா ஸர்வா-னசேஷத:**
**மனஸை-வேந்த்ரிய-க்ராமம் விநியம்ய ஸமந்தத:**

*24. சிந்திப்பின் விளைகின்ற வெல்லா வவாவுஞ்*
*சேடம்மி லாதுள்ள மேகொள்ள விட்டே*
*ஐந்திந் திரியமும் மெலாவைம் புலன்க*
*ளவைநின்று முள்ளத்தி னாலேயடக்கி.* 257

சங்கல்பத்தினின்றும் எழும் எல்லா விருப்பங்களையும் மிச்சமறத் துறந்துவிட்டு, எல்லாப் பக்கங்களிலும் மனதால் இந்திரியக் குழாத்தைக் கட்டுப்படுத்தி, [சங்கல்பம் — மனத்தீர்மானம்]

**சனை:சனை-ருபரமேத் புத்த்யா த்ருதி-க்ருஹீதயா**
**ஆத்ம-ஸம்ஸ்த்தம் மன: க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத்**

25. வீரியத்தி னாலெய்து புத்தியால் மெல்ல
மெல்லவோய் வடைய வேண்டுமால்
ஆரு யிர்க்கணன் குளமி ருப்பதா
வவணியற்றிவே றெதையு மெண்ணலே. 258

துணிந்த மதியுடன் மனதை ஆத்மாவில் நிறுத்தி மெல்ல மெல்ல ஆறுதல் பெறக்கடவான்; எதற்கும் கவலையுறாதிருக்கக்கடவான்.

**யதோ யதோ நிச்சரதி மனஸ்-சஞ்சல மஸ்த்திரம்**
**ததஸ்-ததோ நியம்யைத-தாத்மன்யேவ வசம் ந யேத்**

26. எவ்வெவ் விதத்திற் சலிப்பா னிலைப்பே
யிலாநெஞ்சு மேசஞ்ச ரிக்கிற்கு மோதான்
அவ்வவ் விதத்தி லிதைக்கொண் டடக்கி
யான்மா விடத்தே வயஞ்செய்க மாதோ. 259

எங்கெங்கே மனம் சஞ்சலமாய் உறுதியின்றி உழலுகிறதோ, அங்கங்கே அதைக் கட்டுப்படுத்தி ஆத்மாவுக்கு வசமாக்கிக் கொள்க.

**ப்ரசாந்த-மனஸம் ஹ்யேனம் யோகினம் ஸுகமுத்தமம்**
**உபைதி சாந்தரஜஸம் ப்ரஹ்மபூத-மகல்மஷம்**

27. அயலிற் சலியா மனனான் மறமே
யறயோ கினிலைத் திரசோ குணனி
னியல்பட் டவனாய்ப் பிரமம் மெனவா
மிவனைப் புகுமே சுகசித் தம்மே. 260

மனம் சாந்தமாய், ரஜோ குணம் ஆறி, மாசு நீங்கி பிரம்மமேயாகிய இந்த யோகிக்கு மிகச் சிறந்த இன்பம் கிடைக்கிறது.

**யுஞ்ஜன்-னேவம் ஸதாத்மானம் யோகீ விகதகல்மஷ:**
**ஸுகேன ப்ரஹ்ம-ஸம்ஸ்பர்ச-மத்யந்தம் ஸுகமச்னுதே**

28. திரமியையு மாறுயிரை யிப்படி விராவிச்
சிறியதொரு பாதகமு மற்றியலும் யோகி
பிரம மொடு தழுவுமள வற்றசுக மீது
பெறுசிரம மெய்துகில னெப்பொழுதும் மேவும். 261

குற்றங்களைப் போக்கி இங்ஙனம் எப்போதும் ஆத்மாவில் கலப்புற்றிருப்பானாயின், அந்த யோகி பிரம்மத்தைத் தொடுவதாகிய மிக உயர்ந்த இன்பத்தை எளிதில் துய்க்கிறான்.

**ஸர்வபூதஸ்த்த-மாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி**
**ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்சன:**

*29. எங்குஞ் சமநோக்கிய யோகுபுணர்*
*இதயத் தவனெந் தவுயிர்க் கணுந்தான்*
*தங்கும் மியல்பா கவுமெவ் வுயிருந்*
*தனகண் ணுளவா கவுநோக் குவனால். 262*

யோகத்தில் கலந்தவன் எங்கும் சமப் பார்வையுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானிருப்பதையும் தன்னுள் எல்லா உயிர்களுமிருப் பதையும் காணுகிறான்.

**யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வஞ்ச மயி பச்யதி**
**தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி ஸ ச மே ந ப்ரணச்யதி**

*30. எவனென்னை எல்லா விடத்துங்கண் காணும்*
*என்கண் ணெலா வற்றையுங் காண கிற்கும்*
*அவனுக்கு யானோ மறைந்தேனு மாகேன்.*
*அவனும் மெனக்கே மறைந்தானு மாகான். 263*

எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்லாப் பொருள்களையும் என்னிடத்தே காண்கிறானோ, அவனுக்கு நான் அழியமாட்டேன்; எனக்கவன் அழியமாட்டான்.

**ஸர்வபூதஸ்த்திதம் யோ மாம் பஜத்-யேகத்வ-மாஸ்த்தித:**
**ஸர்வதா வர்த்தமானோபி ஸ யோகீ மயி வர்த்ததே**

*31. எவனொன்று படுதன்மை யினிதெய்தி யுயிர்க*
*ளெவைகண்ணு முளவென்னை வழிபட்டு ளானோ*
*அவன்யோகி யெந்தெந்த விதமா யிருக்கின்*
*றவனேனு மென்கண் ணிருக்கின்ற வன்காண். 264*

ஒருமையில் நிலைகொண்டவனாய் எல்லா உயிர்களிடத்திலுமுள்ள என்னைத் தொழுவோன், யாங்கனும் சென்றபோதிலும், அந்த யோகி என்னுள்ளேயே இயலுகிறான்.

**ஆத்மௌபம்யேன ஸர்வத்ர ஸமம் பச்யதி யோऽர்ஜுன**
**ஸுகம் வா யதி வா து:க்கம் ஸ யோகீ பரமோ மத:**

*32. ஒப்புமை யுயிர்க்குடைமை யாலெவ்விட னுஞ்சேர்*
*புற்றசுக துக்கமவை யிற்றிலெதை யேனும்*
*ஒப்புமையி னோக்குப வனேயனவன் யோகி*
*உத்தமனெ னப்படுவ னர்ச்சுன வரோதான். 265*

இன்பமாயினும், துன்பமாயினும்-எதிலும் ஆத்ம சமத்துவம் பற்றி சமப் பார்வை செலுத்துவானாயின், அவன் பரமயோகியாகக் கருதப்படுவான்.

*அர்ஜுன உவாச :*

**யோऽயம் யோகஸ்-த்வாய ப்ரோக்த: ஸாம்யேனமதுஸூதன**
**தஸ்யாஹம் ந பச்யாமி சஞ்சலத்வாத் ஸ்த்திதிம் ஸ்த்திராம்**

*33. மதுசூதன சமமாதல குறித்தெவ்*
*விதுயோகமு னானுவல் வுற்றதுவோ*
*இதுயோகம தற்குமனோ சலனத்*
*தியல் பானிலை யாய விருப்பிறியேன். 266*

*அர்ஜுனன் சொல்லுகிறான்:*
மதுசூதனா, இங்ஙனம் நீ சமத்துவத்தால் ஏற்படுவதாகச் சொல்லிய யோகம் ஸ்திரமான நிலையுடையதாக எனக்குத் தோன்றவில்லை, எனது சஞ்சலத் தன்மையால்.

**சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்-த்ருடம்**
**தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்**

*34. இருப்பற் றியங்கும் மனம் வன்றிடத்தோ*
*டிகற்கொண் டலைக்கும் படித்தம்ம கண்ண*
*மருத்தின தைக்கொண் டடக்குந் திறந்தான்*
*மனுந்துட் கரமென்றகத் தெண்ணுவன்யான். 267*

கண்ணா, மனம் சஞ்சலமுடையது; தவறும் இயல்பினது, வலிது; உரனுடையது. அதைக் கட்டுப்படுத்துதல் காற்றைக் கட்டுவதுபோல் மிகவும் கஷ்டமான செய்கையென்று நான் மதிக்கிறேன்.

*ஸ்ரீ பகவானுவாச :*

**அஸம்சயம் மஹாபாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம்**
**அப்யாஸேன து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே**

*35. சலிக்கின்ற நெஞ்சைத் தடுத்துக் கொளற்குத்*
*தானில்லை யாமென்ப தற்கைய மில்லை*
*வலித்துப் பயின்றும் மவாவற்று மெனினோ*
*மாகுந்தி சேய்வெல் புயாகொள்ள லாகும். 268*

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

பெருந்தோளாய், மனம் கட்டுதற்கரிதுதான். சலனமுடையதுதான்; ஐயமில்லை. ஆனால், குந்தியின் மகனே, அதைப் பழக்கத்தாலும், விருப்பின்மையாலும் கட்டி விடலாம்.

**அஸம்யதாத்மனா யோகோ துஷ்ப்ராப இதி மே மதி:**
**வச்யாத்மனா து யததா சக்யோSவாப்து-முபாயத:**

*36. அகமடக்கமில னாலியோகடைத*
*லரிய தென்பதென தெண்ணமால்*
*அகம்வயப்படுத லுடைய னாய்நெறி*
*யின் முயல்வனோ வடைய வலியனே. 269*

தன்னைக் கட்டாதவன் யோக மெய்துதல் அரிதென்று நான் கருதுகிறேன். தன்னைக் கட்டியவன் முயற்சியாலும் உபாயத்தாலும் அதனை எய்த வல்லான்.

*அர்ஜுன உவாச :*

**அயதி: ச்ரத்தயோபேதோ யோகாச்-சலித-மானஸ:**
**அப்ராப்ய யோக-ஸம்ஸித்திம் காங் கதிங் க்ருஷ்ண கச்சதி**

*37. சிரத்தையொடு கூடியு முயற்சிகுறை பட்டோன்*
*சித்தியினை யோகினிடை யெய்துகிலன் யோகிற்*
*றிரத்துநிலை யாதுசல னப்படுவ தாய*
*சிந்தையுளன் வந்தடைவ தெந்தநிலை கண்ண. 270*

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

நம்பிக்கையுடையோ னெனினும், தன்னைக் கட்டாமையால் யோகத்தினின்றும் மனம் வழுவியவன் யோகத்தில் தோற்றுப்போய், அப்பால் என்ன கதியடைகிறான், கண்ணா?

**கச்சின்னோபய-விப்ப்ரஷ்டச் சின்னாப்ப்ரமிவ நச்யதி**
**அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண: பதி**

*38. ஒருநிலைகொ ளாதான் பிரம நெறி மேலும்*
*ஒழியுமதி மூடன் னுபயவித முங்கெட்*
*டொருவினன் சிதைந்த புயலைநிக ராக*
*ஒழிவுறுகி லானோ உயர்புயமு ளோயே. 271*

ஒருவேளை அவன் இரண்டுங் கெட்டவனாய், உடைந்த மேகம்போல் அழிகிறானோ? பெருந்தோளாய், உறுதியற்றவனாய், பிரம்ம நெறியிலே குழப்பமெய்திய மூடன் யாதாகிறான்?

**ஏதன்மே ஸம்சயம் க்ருஷ்ண சேத்து-மர்ஹஸ்-யசேஷத:**
**த்வதன்ய: ஸ்ம்ச்யஸ்யாஸ்ய ச்சேத்தா ந ஹ்யுபபத்யதே**

*39. இவ்வண்ண மாமென்ற னையத்தை யெஞ்சா*
*தீர்தல்செ யற்குக்கண் ணாவல்லை யாவை*
*இவ்வண்ண மாகின்ற ஐயத்தி னைத்தான்*
*ஈர்வா னினின்வே றுளானில்லை யன்றோ.* 272

கண்ணா, எனக்குள்ள இந்த ஐயத்தை நீ அறுத்து விடுக. நின்னை யன்றி இந்த ஐயத்தை யறுப்போர் வேறெவருமிலர்

*ஸ்ரீ பகவானுவாச :*

**பார்த்த நைவேஹ நாமுத்ர விநாசஸ்—தஸ்ய வித்யதே**
**ந ஹிகல்யாணக்ருத் கச்சித் துர்க்கதிம் தாத கச்சதி**

*40. அவற்கிவண் ணொருகேடு மேயிலை*
*யத்த மேலுலகத்து மஃதிலை*
*சுவத்தினைச் செயு மெவனுந் துர்க்கதி*
*தோய் கிலன்னரோ பிருதை தோன்றலே.* 273

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:*
பார்த்தா, அவனுக்கு இவ்வுலகிலும், மேலுலகத்திலும் அழிவில்லை; மகனே, நன்மை செய்வோன் எவனும் கெட்ட கதியடையமாட்டான்.

**ப்ராப்ய புண்யக்ருதாம் லோகா-னுஷித்வா சாச்வதீ: ஸமா:**
**சுசீனாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ப்ரஷ்டோSபிஜா யதே**

*41. யோகின் னழுவுற் றவன்புண் ணியஞ்செய்*
*குநருற்ற வுலோக மடைந்தன வின்*
*றாகும்வ ருடங்க ளமர்ந்து தயப்*
*ஆவன் திருவந்தவர் தூயர்மனை.* 274

யோகத்தில் தவறியவன், புண்ணியம் செய்வோரின் உலகங்களை யெய்தி, அங்குக் கணக்கில்லாத வருஷங்கள் வாழ்ந்து, தூய்மையுடைய செல்வர்களின் வீட்டில் பிறக்கிறான்.

**அதவா யோகினாமேவ குலே பவதி தீமதாம்**
**ஏதத்தி துர்லபதரம் லோகே ஜன்ம யதீத்ருசம்**

*42. ஈதேய லாமற் றெருண்மிக் கியோகத்*
*திருப்பார் சிறக்குங் குடிக்கே யுதிப்பான்*
*யாதிப்ப டித்தோர் பிறப்பீது லோகத்*
*தெடுக்கக் கிடைக்காத மேலாய தன்றோ.* 275

அல்லது, புத்திமான்களாகிய யோகிகளின் குலத்திலேயே பிறக்கிறான். இவ்வுலகில் இது போன்ற பிறவியெய்துதல் மிகவும் அரிது.

**தத்ர தம் புத்தி ஸம்யோகம் லபதே பௌர்வ தேஹிகம்**
**யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தன**

*43. குருதனய வதின்முன்னுடல் பயிலு மவ்யோ*
பாதி *குணர்வினையு மேவல் கொளு மவனதாலே*
*திரும முயல் வன்சித்தி யிலவ சமும்வா*
*சினைபழைய தானே யிழுபடுவ னன்றோ.* *276*

அங்கே அவன் பூர்வ சரீரத்துக்குரிய புத்தியைப் பெறுகிறான். குருநந்தனா, அப்பால் அவன் மறுபடியும் வெற்றிக்கு முயற்சி செய்கிறான்.

**பூர்வாப்ப்யாஸேன தேனைவ ஹ்ரியதே ஹ்யவசோऽபி ஸ:**
**ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய சப்தப்ரஹ்மாதிவர்த்ததே**

*44. தன்னுளத்தினில் யோகினைத் தெளி*
*தரவவாவிய வவனுமே*
*பன்மொழிப்படு பிரமமாகிய*
*பகடி யைப்புற னுய்க்குமே.* *277*

பண்டைப் பழக்கத்தால் அவன் தன் வசமின்றியும் இழுக்கப்படுகிறான். யோகத்தை அறியவேண்டுமென்ற விருப்பத்தாலேயே ஒருவன் ஒலியுலகத்தைக் கடந்து செல்லுகிறான்.

**ப்ரயத்னாத்-யதமானஸ்து யோகீ ஸம்சுத்த-கில்பிஷ:**
**அனேக-ஜன்ம-ஸம்ஸித்தஸ்-ததோ யாதி பராங்கதிம்**

*45. ஊக்கத்து டன்முயல் யோகியோ பாவம்*
*ஒன்றுமில் சுத்திய னாகிப்பல் சென்மம்*
*போக்கிச்சஞ் சித்தனு மாகிய தானே*
*புகுகிற்ப னாவன்ப ராங்கதி யம்ம.* *278*

பாவம் நீங்கியவனாய், ஊன்றி முயல்வானேயாயின், யோகி பல பிறவிகளின் வெற்றிப் பயனாகிய பரகதியை அப்போதடைகிறான்.

**தபஸ்விப்ப்யோऽதிகோ யோகீ ஜ்ஞானிப்ப்யோऽபி மதோऽதிக:**
**கர்மிப்ப்யச்-சாதிகோ யோகீ தஸ்மாத் யோகீ பவார்ஜுன**

*46. அதிகனென லாகுந் தவசியரின் யோகி*
*அதிகனென ஞானி யினுநினைய லாகும்.*
*அதிகனென லாகும் வினைஞரிலும் யோகி*
*அர்ச்சுன வதால்யோ கதுபுரிவ னாவை.* *279*

தவஞ் செய்வோரைக் காட்டிலும் யோகி சிறந்தோன்; ஞானிகளிலும் அவன் சிறந்தோனாகக் கருதப்படுகிறான்; கர்மிகளிலும் அவன் சிறந்தோன்; ஆதலால், அர்ஜுனா, யோகியாகுக.

**யோகினாமபி ஸர்வேஷாம் மத்கதேனாந்த ராத்மனா**
**ச்ரத்தாவான் பஜதே யோமாம் ஸமே யுக்த தமோமத:**

47. எவனென் னிடத்தே யிருத்துண் மனத்தால்
லெனைத்தன் சிரத்தையொடுஞ் சேவை செய்வன்
உவன்யோகி யர்க்கு மெலாமற்றை யர்க்கும்
உயர்த்திக்கொள் யோகனெனக் கொள்கையெற்கே.

மற்றந்த யோகிகளெல்லாரிலும், எவனொருவன் அந்தராத்மாவில் என்னைப் புகுத்தி என்னை நம்பிக்கையுடன் போற்றுகிறானோ, அவன் மிக மேலான யோகி யென்பது என்னுடைய கொள்கை.

ஆறாம் அத்தியாயம் நிறைவேறியது

## கீதைப் பொருட்டொகை

யோகப் பயிற்சிவிதி யோகியரு ணான்குவகை
யோகத்தின் சாதனங்கள் யோகசித்தி - யோகியர்க்குங்
கண்ணனையே யுள்ளங் கருதினர்தா முத்தமரென்
றெண்ணுவ தோதும்மா றியல். (10)

# கீதைப் பாட்டு

## ஏழாம் அத்தியாயம்

# ஞான விஞ்ஞான யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

ஏழெனிய வில்லிறைவ னேற்றமு மிதற்கு
வீழ் பகடி யாலுள மறைப்பு மதுவீயத்
தாழ்வி லிறையச் சரண் வரிப்பு மிறைபத்தர்
சூழ்வகையு ஞானியி னுயர்தத்தியொடு சொல்லும்.

பக்தி யோகத்திற்கு இலக்கான இறைவனுடைய சொரூபம், சுபாவம், மேன்மை முதலியன இந்த அத்தியாயத்தில் விளக்கிக் கூறப்படுகின்றன. மனிதன் இவைகளை அறியவொட்டாமல் பிரகிருதி சம்பந்தம் தடுத்துக் கொண்டிருப்பதால் இதை நீக்க வேண்டியது அவசியம். ஆனால், இறைவனைச் சரண் புகுந்தாலன்றி இத் தடையை நீக்க இயலாது. பக்தர்களில் துன்புற்றார், செல்வத்தை விரும்புவோர், ஞான சொரூப நிலையை விரும்புவோர், ஈசுவர தத்துவத்தை யுணர்ந்தவர் என நான்கு வகையுண்டு. அவர்களில் நான்காம் வகுப்பினரே மேலானவர். அந்த நிலையைப் பெறுவதற்கு வெகு பிறப்புகள் எடுத்தாக வேண்டும். இறைவனைத் தவிர்த்து மற்ற தெய்வங்களைத் தொழுபவர்களும் உண்மையில் இறைவனளிக்கும் பயனையேதான் பெறுகின்றனர். ஆனால், அவ்விதமான பயன் அழிவுற்றிருக்கும். இறைவனையே வணங்குகிறவர்கள் இறைவனையே யடைந்து அழிவிலா ஆனந்தத்தைப் பெறுகின்றனர்.

*ஸ்ரீ பகவானுவாச :*

**மய்யாஸக்தமனா: பார்த்த யோகம் யுஞ்ஜன் மதாச்ரய:**
**அஸம்சயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தச்ச்ருணு**

1. *எற்பற் றுளனிற் பிருதைக் கொருசேர்*
*எனையே புகலென் றெனியோ குபுணர்*
*தற்குன்னிய நீயைய மின்றி யெனைத்*
*தானோர் குவைமுற் றுமெதா லதுகேள்.* 281

***ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :***

பார்த்தா, என்பால் இசைந்த மனத்தினனாய் என்னைச் சார்ந்து, யோகத்திலே அமர்ந்தானாய் என்னை முழுதும் உணருமாறு சொல்லக் கேளாய்.

**ஜ்ஞானம் தேऽஹம் ஸ விஜ்ஞாநம் இதம் வக்ஷ்யாம் யசேஷத:**
**யஜ்ஞாத்வா நேஹ பூ யோऽந்யஜ்-ஜ்ஞாதவ்ய-மவசிஷ்யதே**

2. *எஞ்ஞான மறிந்து திரும்ப வுமே*
*யிவண்வே றறிகிற்பது மெஞ்சலிலை*
*இஞ்ஞான மனைத்தும் விஞ்ஞானமுடன்*
*யானிற்கு விளம்புவ லம்மவரோ.* 282

ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் சம்பூரணமாக உனக்குச் சொல்லு கிறேன். இதை அறிந்தால், பிறகு நீ அறிய வேண்டியது மிச்சமொன்று மில்லை.

**மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கச்சித்-யததி ஸித்தயே**
**யததாமபி ஸித்தானாம் கச்சின்-மாம் வேத்தி தத்வத:**

3. *ஓரா யிரவர் மனிதர்க் குளரோ*
*ஒருவன் முயல்கிற் பவன்சித் திமுயன்*
*றோருள் ளொருவன் னெனையோர் குவனோர்*
*வோனும் முளவா றெனையோர் குவனோ.* 283

பல்லாயிர மனிதரில் ஒருவன் சித்திபெற முயல்கிறான். முயற்சியுடைய சித்தர் பலரில் ஒருவன் என்னை உள்ளபடி அறிகிறான்.

**பூமி-ராபோऽநலோ-வாயு: க்கம் மனோ புத்தி-ரேவச**
**அஹங்கார இதீயம் மே பின்னா ப்ரக்ருதி-ரஷ்டதா**

4. *மண் புனல் தழல் வாயு விண்மனம்*
*மதியி னோடகங் கார மென்றிவா*
*றெண்விதப் பிரிப் புள்ள தாகிய*
*இப்பொருள் ளெனாதுடைமை யாலரோ.* 284

மண், நீர், தீ, காற்று, வான், மனம், மதி, அகங்காரம்-இவ்வெட்டு வகையாக என் இயற்கை பிரிந்து தோன்றுகிறது. [அகங்காரம் — எல்லாச் சேதன உயிர்களுக்குமுள்ள 'நான்' என்ற கொள்கை]

**அபரேய-மிதஸ்த்-வன்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்**
**ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்**

5. இது தாழ்ந்த துயர்ந்த புயக்குரிசில்
எதனாலுல கீது தரிப்பதுதான்
அதுவோ விதனிற் பிறிதா யுயிரா
யதுமே லதெனத் தெரியென் பகுதி. 285

இது என் கீழியற்கை. இதினின்றும் வேறுபட்ட தாகிய என்மேலியற்கையை அறி; அதுவே உயிராவது; பெருந்தோளாய், அதனால் இவ்வுலகு தரிக்கப்படுகிறது.

**ஏதத்-யோனீனி பூதானி ஸர்வாணீத்-யுபதாரய**
**அஹங் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்-ததா**

6. எல்லாப் பிராணிக்கு மிவைதா மிரண்டும்
மேதுப் பொருட்பா லெனத்தேர்தி யவ்வா
றெல்லா வுலோகங் களுக்கும் பிறக்கும்
மிடனோ டொடுங்கும் மிடன்யானரோதான். 286

எல்லா உயிர்களுக்கும் அது காரணமென்றுணர். அதனால் நான் உலக முழுமைக்கும் ஆக்கமும் அழிவுமாவேன்.

**மத்த: பரதரம் நான்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய**
**மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ**

7. மேலெனா யுயர்வ தாய தென்னைவிட
வேறு யாதுமில் தனஞ்செய
நூலி னேமணியி னிரைகள் போல வெனி
னுழைவ வாகு மிவை முழுதுமே. 287

தனஞ்ஜயா, என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவுமில்லை. நூலில் மணிகளைப்போல் இவ்வையகமெல்லாம் என்மீது கோக்கப் பட்டது.

**ரஸோSஹ-மப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி சசிஸூர்யயோ:**
**ப்ரணவ: ஸர்வவேதேஷு சப்த: க்கே பௌருஷம் ந்ருஷு**

8. குந்திதரு மைந்த புனலிற் சுவையும் யானாற்
கூரொளியு மாவல் சசி சூரியரு ளம்மா
சந்த மறை யாவையுளு மோங்கார வந்தான்
சத்தம் விசும் புக்கதனை மனிதர்க்குளுய ராண்மை. 288

நான் நீரில் சுவை; குந்தி மகனே, நான் ஞாயிற்றிலும் திங்களிலும் ஒளி; எல்லா வேதங்களிலும் நான் பிரணவம். வானில் ஒலி நான்; ஆண்மக்களிடத்து நான் ஆண்மை.

**புண்யோ கந்த: ப்ருதிவ்யாஞ்ச தேஜச்சாஸ்மி விபாவஸௌ**
**ஜீவனம் ஸர்வபூதேஷு தபச்சாஸ்மி தபஸ்விஷு**

*9. புண்ணிய மணம் புவியி லாகுவ னெருப்பிற்*
*பொங்கொளியு மாகுவல் பிராணிமுழு துக்கும்*
*உண்ணலுறு சீவனமு மாகுவல் தவத்தை*
*உஞற்று பவர்தம் முளோர்தவம் மெனவுமாவேன்.* 289

மண்ணில் தூய நாற்றமும், தீயில் சுடரும் யான். எல்லா உயிர்களிலும் உயிர்ப்பு நான், தவஞ் செய்வோரின் தவம் யான்.

**பீஜம் மாம் ஸர்வபூதானாம் வித்தி பார்த்த ஸநாதனம்**
**புத்திர்புத்திமதா-மஸ்மி தேஜஸ்-தேஜஸ்வினா-மஹம்**

*10. பிராணி முழுதுக்குமொ ரநாதி விரையாகப்*
*பிருதைவழி வந்தவ வெனைத் தெரிய கிற்பாய்*
*பராயவறி வாளரிடை யேயறிவு மாவல்*
*பாயப்புக ழாளரிடை யானொர்பிர தாபம்.* 290

எல்லா உயிர்களுக்கும் நான் சநாதனமாகிய விதையென்றுணர். பார்த்தா, புத்தியுடையோரின் புத்தி நான். ஒளியுடையோரின் ஒளி நான்.

**பலம் பலவதாமஸ்மி காமராகவிவர்ஜிதம்**
**தர்மாவிருத்தோ பூதேஷு காமோऽஸ்மி பரதர்ஷப**

*11. பரதன் வழிவந்து விடை யன்னவ வவாவும்*
*பற்றுமிலை யாம்வலியும் யான் வலியு ளார்பால்*
*தரும நெறியைப் பகைமை கொள்ளுதலி லாமற்*
*றங்கு நசை யாவலுள மன்பதைக ளின்கண்.* 291

வல்லோரிடத்தே விருப்பமும் விழைவுந் தீர்ந்த வலிமை நான். பரதரேறே, உயிர்களிடத்து நான் கடமை தவறாத விருப்பமாவேன்.

**யே சைவஸாத்விகா-பாவா ராஜஸாஸ்-தாமஸாச்ச யே**
**மத்த ஏவேதி தான் வித்தி ந த் வஹம் தேஷுதே மயி**

12. சத்துவ குணத்த பொருள் யாவை கொலிராச
சத்தபொ ருள் தாமத குணப்பொருள்கள் யாவை
அத்தனையு மென்னிட னின்றே வருவ வென்றோர்
அப்பொருள்க ளென்னுள வற்றுளிலை யானோ. 292

சத்வ ரஜஸ் தமோ குணங்களைச் சார்ந்த மன நிலைகளெல்லாம் என்னிடத்தே பிறந்தன. அவை என்னுள் இருக்கின்றன. நான் அவற்றுள் இல்லை.

**த்ரிபிர்-குணமயைர்-ப்பாவை-ரேபி: ஸர்வமிதஞ் ஜகத்**
**மோஹிதம் நாபிஜானாதி மாமேப்ய: பர-மவ்யயம்**

13. முக்குண வயத்தினுள வாம்பொருள்க ளானே
மோகமுறு மிவ்வுலகம் யாவுமிவை யிற்றின்
மிக்கவனு மெப்பொழுது மேயழிவி லாமை
மேயவனு மாயவெனை யோவறித லில்லை. 293

இந்த மூன்று குணங்களாலாகிய எண்ணங்களால் இவ்வுலகமெல்லாம் மயங்கிப்போய் இவற்றினும் மேலாம் அழியாத இயல்பு கொண்ட என்னை உணராதிருக்கிறது.

**தைவீ ஸ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா**
**மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா-மேதாம் தரந்தி தே**

14. தேவாமெ னாலுள்ள தாகிக் குணத்தாற்
றிரளீதென் மாயை கடத்தற்கி லன்றோ
ஏவர் சரண்புக்குளா ரென்னை யேதான்
இம்மாயை யன்னோர் கடப்பார்க ளம்மா. 294

இந்தக் குணமயமாகிய எனது தேவமாயை கடத்தற்கரிது. என்னையே யாவர் சரணடைவரோ, அவர்கள் இந்த மாயையைக் கடக்கின்றார்கள்.

**ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:**
**மாயயாபஹ்ருத-ஜ்ஞானா ஆஸுரம் பாவமாச்ரிதா:**

15. மூடர் நராதமர் மாயை கவர்ந்து
மூடறி வுள்ளவ ராசுரத் தன்மை
கூடின ரென்றிவர் தீது செயன்மேற்
கொள்ப ரென்னைச் சரண் புகலில்லை. 295

தீமை செய்யும் மூடர், மனிதரில் கடைப்பட்டார், மாயையால் ஞான மழிந்தோர், அசுரத் தன்மையைப்பற்றி நிற்போர், (இனையோர்) என்னைச் சரண் புகார்.

**சதுர்விதா பஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதினோSர்ஜுன
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு-ரர்த்தார்த்தீ ஜ்ஞானீ ச பரதர்ஷப**

*16. துன்பினன் றன்னைத் தெரிபவன் செல்வம்
சூழ்பவ னென்னைத் தெளிபவ னென்று
நன்செயல் நால்வகை யார்நர ரென்னை
நச்சுவ ரர்ச்சுந பாரத ரேறே.* 296

நற்செய்கையுடைய மக்களில் நான்கு வகையார் என்னை வழிபடுகின்றனர். பரதரேறே, துன்புற்றார், அறிவை விரும்புவோர், பயனை வேண்டுவோர், ஞானிகள் என.

**தேஷாம் ஜ்ஞானீ நித்த்யயுக்த ஏகபக்திர்-விசிஷ்யதே
ப்ரியோ ஹிஜ்ஞானினோSத்யர்த்த-மஹம் ஸ ச மம ப்ரிய:**

*17. எத்தருண முமமெனை யிணைந்தவொரு பத்தி
யேயுடைய ஞானி யிவருட் டலைவ னாவன்
இத்தனை யெனாமலவ னுக்கினியன் யானால்
எற்கினிய னாவனவனும் மிதுமெய் யன்றோ.* 297

அவர்களில் நித்திய யோகம் பூண்டு ஒரே பக்தி செலுத்தும் ஞானி சிறந்தவன். ஞானிக்கு நான் மிகவும் இனியவன்; அவன் எனக்கு மிகவும் இனியான்.

**உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞானீத்-வாத்மைவ மே மதம்
ஆஸ்த்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவானுத்தமாம் கதிம்**

*18. இன்னரெல் லாருமே வண்மையார் ஞானியோ
என்றனான் மாவெனல் என்மத மென்னெனின்
அன்னவன் னென்கண் வாழ் சிந்தையன் உத்தமம்
அதிகம் வேறில்லையாம் கதியெனா வதியுமே.* 298

மேற்சொல்லிய யாவரும் நல்லாரே. எனினும், ஞானியை நான் யானாகவே கொண்டுள்ளேன். அவன் யோகத்தில் இசைந்து உத்தம கதியாகிய என்னைக் கடைப்பிடித்து நிற்கிறான்.

**பஹூனாம் ஜன்மனா-மந்தே ஜ்ஞானவான் மாம் ப்ரபத்யதே
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:**

*19. சென்மத் தநேகஞ் செலநத்தின் வாசு
தேவன் னெலாமென்று ஞானம்பி றந்தே
என்னைப் புகல்புக் குளோனுள்ள மிக்கோன்
எய்தக் கிடைக்காத வன்மன்ன வன்றான்.* 299

பல பிறவிகளின் இறுதியில் ஞானவான், "எல்லாம் வாசுதேவனே" என்று கருதி என்னை அடைக்கலமாய்ப் பற்றுகிறான். அவ்வித மகாத்மா கிடைத்தற்கரியவன்.

**காமைஸ்-தைஸ்தைர்-ஹ்ருதஜ்ஞானா: ப்ரபத்யந் தேSன்யதேவதா:**
**தம் தம் நியம-மாஸ்த்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா**

*20. தந்தம் பயதிக்கு வயப்படுகின்*
*றனரவ்வவ் விருப்பி னுளங்கவர்வுற்*
*றந்தந்த விதிப்படி நின்றுபுக*
*லடைகின்றன ரந்நிய தேவரையே.* 300

வெவ்வேறு விருப்பங்களால் கவரப்பட்ட அறிவினையுடையோர் தத்தம் இயற்கையால் கட்டுண்டு, வெவ்வேறு நியமங்களில் நிற்பாராய் அன்னிய தேவதைகளை வழிபடுகின்றனர்.

**யோ யோ யாம் யாம் தனும் பக்த: ச்ரத்தயார்ச்சிது-மிச்சதி**
**தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம்**

*21. எவ்வெவ் வுருவத் தினையன் புசெய்தெவ்*
*வெவன்பூ சைசிரத்தையுடன் விழைவான்*
*அவ்வன் னவனுக் கசையா தபடி*
*யானல் குவலன் னசிரத் தையையே.* 301

எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன், எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவனவனுடைய அசையாத நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்.

**ஸ தயா ச்ரத்த்யா யுக்தஸ்-தஸ்யாராதன-மீஹதே**
**லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹி தான்**

*22. அப்படிக் குறுசிரத் தையினுடன் னவனியைந்*
*தவனதா ராதனம் புரிவதிற் பிரியனாம்*
*அப்படித் தொழுவதா லென்றனா லேதர*
*லாயபல் விதமுறுங் காமமும் மேவுமே.* 302

அவன் அந்த நம்பிக்கையுடன் கலந்து அவ் வடிவத்தை ஆராதிக்க வேண்டுகிறான். அதினின்றும் தான் விரும்பியனவற்றை எய்துகிறான்; எனினும் அவற்றை வகுத்துக் கொடுப்போன் யானே.

**அந்தவத்து பலம் தேஷாம் தத்-பவத்-யல்பமேதஸாம்**
**தேவான் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி**

*23. அறிவிற் சிறியா ரவருக் குறுபே*
*றதுவோ வழிவுற் றிறும் வானவரைப்*
*பெறவேட் பவர் வானவரைப் பெறுவார்*
*பெறுவா ரெனையென் னுடையன் பருமே.* 303

எனினும், அற்ப மதியுடைய அன்னோர் எய்தும் பயன் இறுதியுடைத்தாம். தேவர்களைத் தொழுவோர் தேவர்களை எய்துகின்றனர். என் அடியார் என்னையே எய்துகிறார்கள்.

**அவ்யக்தம் வ்யக்தி-மாபன்னம் மன்யந்தே மா-மபுத்தய:**
**பரம் பாவ-மஜானந்தோ மமாவ்யய-மனுத்தமம்**

*24. என்றுமழி வேயிலது தன்னினுயர் வில்லா*
*என்னுய ரியற்கையறி வில்லரறி யாராய்*
*என்றனை முனம்வெளி யுறாதவ னெனாவும்*
*இன்றுவெளி யாயின னெனாவுமெனு வாரால். 3-04*

மறைவும் வெளிப்படும் உடையோனாக, என்னை மதியற்றார் கருதுகின்றனர். என் அழிவற்ற, உத்தமமாகிய பர நிலையை அன்னோர் அறிகிலர்.

**நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயா ஸமாவ்ருத:**
**மூடோSயம் நாபிஜானாதி லோகோ மா-மஜ-மவ்யயம்**

*25. ஊடு போர்த்துளேன் யோக மாயையான்*
*ஒளிசெய்கிற்கில னனைவருக்குமிம்*
*மூட யோகர்தாம் பிறவி யில்லவன்*
*முடிவி லானெனா வெனையு ணர்ந்திலார். 305*

எல்லாவற்றுக்கும் ஒளியாகிய என்னை யோக மாயை சூழ்வதில்லை. பிறப்பும், கேடுமற்ற என்னை மூடவுலகம் அறியவில்லை.

**வேதாஹம் ஸமதீதானி வர்த்தமானானி சாSர்ஜுன**
**பவிஷ்யாணி ச பூதானி மாந்து வேத ந கச்சன**

*26. முன்னிருந்தன நிகழுகின்றன*
*பின்னிருப்பன வுயிரையான்*
*மன்னறிந்துள னென்னையோ*
*வொருவனுமறிந் திலனர்ச்சுனா. 306*

சென்றன, நிகழ்வன, வருவன ஆகிய உயிர்களையெல்லாம் நானறிவேன். என்னை அறிந்தோர் எவருமிலர்.

**இச்சா-த்வேஷ-ஸமுத்தேன த்வந்த்வ-மோஹேன பாரத**
**ஸர்வபூதானி ஸம்மோஹம் ஸர்க்கே யாந்தி பரந்தப**

*27. பாரத பரந்தப வெலாவகைய செந்தும்*
*ட்பறொடு வெறுப்பினுள வாகிய விரட்டை*
*சேருமியல் பைக்கொடு மயக்க வலதானே*
*சிருட்டி முதலாக வறியாமை யடைகிற்கும். 307*

விருப்பத்தாலும் பகைமையாலும் எழுந்த இருமைகளின் மயக்கத்தால், பாரதா, எல்லா உயிர்களும் மயங்கி விடுகின்றன; பகைவரைச் சுடுவோய்.

**யேஷாந்-த்வந்தகதம் பாபம் ஜனானாம் புண்யகர்மணாம்**
**தே த்வந்த்வ-மோஹ-நிர்முக்தா பஜந்தே மாம் த்ருடவ்ரதா:**

*28. புண்ணிய வினைக்குரிய ரெந்தநர ருக்கோ*
*பொன்றுநிலை யெய்துவது பாவமவர் தொந்தம்*
*பண்ணிய மயக்கின்விடு பட்டவர் திடத்துப்*
*பற்றுவிர தத்தர்வழி பட்டடைவ ரென்னை. 308*

எந்த ஜனங்கள் பாவந் தீர்ந்து புண்ணியச் செயல்கள் செய்கின்றனரோ, அவர்கள் இருமைகளின் மயக்கந்தீர்ந்து திட விரத முடையோராய் என்னை வழிபடுகின்றனர்.

**ஜரா-மரண-மோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே**
**தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்னம் அத்த்யாத்மங் கர்ம சாகிலம்**

*29. மரணத் தொடுமுடன் முதுமைத் துயர்விட*
*மருவுற்றெனை யெவர் முயல்கிற்ப வரவர்*
*பிரமப் பெயரதொ டதியாத் துமமெனல்*
*பெறுமற் றெவையொடும் வினைமுற் றுணவர்வரே. 309*

மூப்பினின்றும் மரணத்தினின்றும் விடுபடுமாறு என்னை வழிபட்டு முயற்சி செய்வோர் "அது" என்ற பிரம்மத்தை யுணர்வார்; ஆத்ம ஞான முழுதையும் உணர்வார்; செய்கை யனைத்தையு முணர்வார்.

**ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞஞ் ச யே விது:**
**ப்ரயாணகாலேऽபி ச மாம் தே விதுர்-யுக்தசேதஸ:**

*30. அதிபூத மதிதைவ முடனாகி யதியெச்ச*
*மதனோடு முளவென்னை யார்தேர் குவார்*
*மதியாய தொருவேனொ டியைபாகி வெளியேக*
*வருபோது மெனையோர்கு வார்தாமவர். 310*

பூத ஞானம், தேவ ஞானம், யாக ஞானம் இவற்றுடன் என்னை யாவர் இறுதிக் காலத்திலேனும் அறிவாரோ, யோகத்திற் பொருந்திய சித்தமுடைய அன்னோரே அறிஞர்.

ஏழாம் அத்தியாயம் நிறைவேறியது.

## கீதைப் பொருட்டொகை

இறைவ னுயர்பு மிதற்குப் பகடி
மறைவுஞ் சரண வரிப்பும்-- இறைவன்றன்
பத்தர் வகையும் பசஞானி யின்னுயர்பும்
உத்தமவே மோது மொருங்கு (7)

# கீதைப் பாட்டு

## எட்டாம் அத்தியாயம்

## அக்ஷர பிரஹ்ம யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

எட்டெனியல் செல்வ மழியா வுயிரியற்கை
மட்டில்பர தேவனடி மன்ன விழைவார்க்கே
ஒட்டுவனவும் மொழுகவுற் றனவு மாகுந்
தட்டில் வகையா னவையுந் தனிப்புகல்வ தம்மா.

முற்கூறிய நான்குவித பக்தர்களும் தனித்தனியே கைப்பற்றவேண்டிய பக்தி வழிகளும் அவைகளுக்குள் வித்தியாசமும் கூறப்படுகின்றன. ஆக்கையினின்றும் ஆவி கிளம்புங்கால் எத்தகைய எண்ணம் மனிதனின் மனதுக்குள் இருக்கின்றதோ அத்தகைய பலனையே மறுபிறவியில் பெறுவானாதலால் பக்தர்கள் இறக்கும் தருணத்தில் கடவுளைத் தியானித்திருப்பது அவசியம். வாழ்நாட்களில் மனதுக்குக் கடவுளிடம் நிலைத்திருக்கும் பழக்கத்தை உண்டுபண்ணினால்தான் அம் மனம் மரணகாலத்தில் கடவுளிடம் நிலைபெறும். ஆகையால் பக்தர் அனைவரும் தங்கள் வாழ்நாட்களில் மனதால் கடவுளைத் தியானம் செய்துகொண்டே தங்கள் கர்மங்களைச் செய்யவேண்டும். நான்காவது வகையான பக்தர்கள் பெறும் பரமபதம்தான் அழிவற்றது. மற்றப் பலனெல்லாம் அழிவுற்றது. பக்தர்கள் இறந்த பிறகு ஆத்மா செல்லும் வழி இருவகைப்பட்டிருக்கும். ஒன்றில் சென்றால் என்றைக்கும் திரும்பிவராத வீட்டைப் பெறலாம். மற்றொன்றில் சென்றால் காலக்கிரமத்தில் திரும்பி வரவேண்டிய இடத்தை அடையலாம்.

அர்ஜுன உவாச :

**கிந் தத்ப்ரஹ்ம கிமத்த்யாத்மங் கிங் கர்ம புருஷோத்தம**
**அதிபூதஞ்ச கிம் ப்ரோக்தம் அதிதைவங் கிமுச்யதே**

1. ஏதப் பிரமமதி யாத்தும மென்பதியா
தேதுக ருமம்புரு டோத்தம பின்னுமதி
பூதமெ னச்சொல்வ தியாதுகொ லோவதலாற்
புக்கதி தைவமென மற்றெது ரைப்பதுவோ. 311

அர்ஜுனன் சொல்லுகிறான் :

அந்த பிரம்மம் எது? ஆத்ம ஞானம் யாது? புருஷோத்தம, கர்மமென்பது யாது? பூத ஞானம் யாது? தேவஞானம் என்பதெதனை?

**அதியஜ்ஞ: கதங் கோSத்ர தேஹேSஸ்மின் மதுஸூதன**
**ப்ரயாணகாலே ச கதம் ஜ்ஞேயோSஸி நியதாத்மபி:**

2. இங்கிவ்வு டற்கணதி யெச்சமெ தோவதனுக்
கிப்பெய ரெய்தலெவன் னெப்படி யோமனனைத்
தங்கணொ டுக்கின ராற் சாம்பொழு தத்துநினை
தக்கவ னாவை மதுவைக்கொல் பெருந்தகையே. 312

யாக ஞானம் என்பதென்னே? தம்மைத் தாம் கட்டியவர்களால் இறுதிக் காலத்திலேனும் இவ்வுலகத்தில் நீ அறியப்படுவ தெங்ஙனே?

ஸ்ரீ பகவானுவாச :

**அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவோSத்த்யாத்ம-முச்யதே**
**பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:**

3. பரம வக்கரம் பிரம மென்பது
பயதி தானதி யாத்து மம்மெனும்
கரும மென்றபேர் பலபி ராணிமெய்
களைவி ளைக்குஞ்சுக் கிலம்வி டுத்தலே. 313

ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:

அழிவற்ற பரம்பொருளே பிரம்மம். அதனியல்பை அறிதல் ஆத்ம ஞானமெனப்படும். உயிர்த்தன்மையை விளைவிக்கும் இயற்கை கர்மமெனப்படுகிறது.

**அதிபூதம் க்ஷரோ-பாவ: புருஷச்சாதிதைவதம்**
**அதியஜ்ஞோSஹமேவாத்ர தேஹே தேஹப்ருதாம் வர**

4. அதிபூத மாறு மியல்புள்ள பொருள்கள்
அதிதைவ தந்தான் புருடன்னி வண்மெய்
வதிகின்ற யானே யதியெச்ச மென்பேன்
வனைமெய்யு ளாரு ணனிசீரி யோயே. 314

அழிவுபடும் இயற்கையைக் குறித்தது பூத ஞானம். புருஷனைப்பற்றியது தேவ ஞானம். உடம்பெடுத்தோரில் உயர்ந்தவனே, உடம்புக்குள் என்னையறிதல் யாக ஞானம்.

**அந்தகாலே ச மாமேவ ஸ்மரன் முக்த்வா கலேவரம்**
**ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்சய**

5. *அந்திமப் போழ்தத்து மென்னையே யெண்ணி*
*யாக்கை விடுத்துச்செல் கிற்பவனம்ம*
*எந்தப் புருடன வன்னென் னியற்கை*
*எய்துவன் மற்றிநிலையமொன் றில்லை.* 315

இறுதிக் காலத்தில் உடம்பைத் துறந்து எனது நினைவுடன் இறப்போன் எனதியல்பை எய்துவான். இதில் ஐயமில்லை.

**யம் யம் வாபி ஸ்மரன் பாவம் த்யஜத்-யந்தே கலேவரம்**
**தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ-பாவித:**

6. *எப்போழ் தினுமவ் வியல்பே நினைவா*
*யினனாயிறு திப்பொழு தத்தினுமெவ்*
*வெப்பானமை நினைத்துமெய் நீங்குவனவ்*
*அப்பான்மை யவன்கௌந் தேயபுகும்* 316

ஒருவன் முடிவில் எவ்வெத் தன்மையை நினைப்பானாய் உடலைத் துறக்கின்றானோ, அவன் எப்போதும் அத்தன்மையிலே கருத்துடையவனாய் அதனையே எய்துவான்.

**தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்த்ய ச**
**மய்யர்ப்பித மனோபுத்திர்-மாமேவைஷ்யஸ்-யஸம்சய :**

7. *அதனா லெனையெப் பொழுதத் துமிடை*
*யறவின் றிநினைத் திருபோ ருமுயல்,*
*இதயம் மறிவென் னிடனர்ப் பணமா*
*யெனையே யடைவா யிலையை யமரோ.* 317

ஆதலால் எல்லாக் காலங்களிலும் என்னை நினை. போர் செய். என்னிடத்தே மனத்தையும், புத்தியையும் அர்ப்பணம் செய்வதனால் என்னையே பெறுவாய்.

**அப்ப்யாஸ-யோக-யுக்தேன சேதஸா நான்யகாமினா**
**பரமம் புருஷந் திவ்யம் யாதி பார்த்தானுசிந்தயன்**

8. *பயில்வுற்ற யோகிற் பொருந்துற்று வேறே*
*படராத மனனோடு பிருதைக்கு மகனே*
*உயர்வுற்ற புருடன்னு டன்றிப்பி யன்னென்*
*றுளேனைத்தி யானித் திருந்தெய்து வானால்.* 318

வேறிடஞ் செல்லாமே யோகம் பயிலும் சித்தத்துடன் சிந்தனை செய்து கொண்டிருப்போன் தேவனாகிய பரம புருஷனை அடைகிறான்.

**கவிம் புராண-மனுசாஸிதார-**
**மணோரணீயாம்ஸ-மனுஸ்மரேத்-ய:**
**ஸர்வஸ்ய தாதார-மசிந்த்யரூப-**
**மாதித்யவர்ணந் தமஸ:பரஸ்தாத்**

*9. எணுவ தற்கரும் வடிவ னிரவி வணன்*
*இருளி னப்புற முளன்கவி பழையவன்*
*அணுவி னக்கணு முழுதுத வினன்விதி*
*யவனையெப் பொழு தினுமெவ னினைவனோ. 319*

கவியை, பழையோனை, ஆள்வோனை, அணுவைக் காட்டிலும் அணுவை, எல்லாவற்றையும் தரிப்பவனை, எண்ணுதற்கரிய வடிவுடையோனை, இருளுக்கப்பால் கதிரோனது நிறங்கொண்டிருப்பானை, எவன் நினைக்கிறானோ,

**ப்ரயாணகாலே மனஸாசலேன**
**பக்தயாயுக்தோ யோகபலேன சைவ**
**ப்ருவோர்-மத்த்யே ப்ராண-மாவேச்ய ஸம்யக்**
**ஸ தம் பரம் புருஷ-முபைதி திவ்யம்**

*10. மரணதரு ணத்து மனதுசலி யாமல்*
*மருவியுளன் யோக வலிமையுட னன்பாற்*
*புருவ நடுவிற்பி ராணனுற வைத்துப்*
*புகுவனுயர் திவிய புருட னவனைத்தான். 320*

இறுதிக் காலத்தில் அசைவற்ற மனத்துடன், புருவங்களிடையே உயிரை நன்கேற்றி, பக்தியுடனும், யோக பலத்துடனும், எவன் நினைக்கிறானோ, அவன் அந்தக் கடவுளாகிய பரமபுருஷனை அடைகிறான்.

**யதக்ஷரம் வேதவிதோ வதந்தி**
**விசந்தி யத்-யதயோ வீதராகா:**
**யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யஞ் சரந்தி**
**தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே**

*11. ஏதக்க ரம்புகல்வார் வேதந்தெ ரிந்தவர்தாம்*
*யாதுட் புகப்பெறுவா ரிச்சையறுந் துறவோர்*
*யாதிச்சை யார்பிரம சாரிய ராயியல்வார்*
*யானப்ப தஞ்சிறிதே தானிற் குரைப்பலரோ. 321*

எந்த நிலையை வேத முணர்ந்தோர் அழிவற்ற தென்பர், விருப்பமற்ற முனிகள் எதனுட் புகுவார், எதை விரும்பி பிரம்மசரிய விரதம் காக்கப்படும், அந்த நிலையை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

**ஸர்வத்வாராணி ஸம்யம்ய மனோ ஹ்ருதி நிருத்த்ய ச**
**மூர்த்த்ன்-யாதா-யாத்மன: ப்ராண-மாஸ்த்திதோயோகதாரணாம்**

12. *துளைய னைத்தையு நனிய டக்கிநெஞ்*
*சுள்ளி ருக்குமென் னிடன்மனன் னிறீஇ*
*உளம சைப்பிலா யோக தாரணத்*
*துச்சி யிற்றன்பி ராணன் வைத்தபின்.* 322

எல்லா வாயில்களையும் நன்கு கட்டி, மனதை உள்ளத்தில் நிறுத்தி, உயிரைத் தலையின் உச்சியில் நிலையுறுத்தி யோக தாரணையில் உறுதிபெற்று.

**ஓமித்-யோகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்மரன்**
**ய:ப்ரயாதி த்யஜன் தேஹம் ஸ யாதி பரமாங்கதிம்**

13. *பிரமப் பெயரைக் கொளு மோமெனவே*
*பெறுமொற் றையெழுத் தையுரைத் தெனையே*
*கருதுற் றுமெய் விட் டெவன்செல் பவனோ*
*கதியுத் தமமற் றவனெய் துவனால்.* 323

"ஓம்" என்ற பிரம்ம எழுத்தை - ஒன்றையே ஜபித்துக் கொண்டு என்னை ஸ்மரிப்பவனாய் உடம்பைத் துறப்போன் பரமகதி பெறுகின்றான்.

**அனன்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:**
**தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்ய-யுக்தஸ்ய யோகின:**

14. *எப்போதினு நித்தமும் வேறெதையும்*
*எண்ணா மனனா லெனையெண் ணினனாய்*
*எப்போது மெனைத்தழீ யுள்ள வவ்யோ*
*கிக்கியா னெளியன் பிருதைக் கினியோய்.* 324

நித்திய யோகத் திசைந்து, பிறிது நினைப்பின்றி என்னை எப்பொழுதும் எண்ணும் யோகிக்கு நான் எளிதில் அகப்படுவேன், பார்த்தா.

**மாமுபேத்ய புனர்ஜன்ம து:க்காலய-மசாச்வதம்**
**நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்திம் பரமாங்கதா:**

15. *எனையடைந்துள பெரும னத்தின*
*ரினிய சித்தியி னுயர்வையெய்*
*தினரிடர்க்கிட னாய்நிலைப்பதில்*
*செனன முற்றிலர் திருமவும்.* 325

என்னை யடைந்து பரம சித்தி பெற்ற மகாத்மாக்கள் மறுபடி நிலையற்றதும், துன்பத்தின் ஆலயமும் ஆகிய மறுபிறப்பை யடையமாட்டார்.

**ஆப்ரஹ்ம-புவனால்லோகா: புனராவர்த்திநோSர்ஜுன**
**மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜன்ம ந வித்யதே**

*16. குந்தி புத்திர னான வர்ச்சுந*
*குவலயம்மய னிலன்வரை*
*நந்தி மீள்வன மறுபி றப்பு*
*நணாதெ னைப்புக லுற்றதோ. 326*

அர்ஜுனா, பிரம்மலோகம் வரை எல்லா உலகங்களும் மறுபிறப்பு உடையன. குந்தி மகனே, என்னை அடைந்தவனுக்கு மறுபிறப்பு இல்லை.

**ஸஹஸ்ர-யுகபர்யந்த-மஹர்-யத்-ப்ரஹ்மணோ விது:**
**ராத்ரிம் யுக ஸஹஸ்ராந்தாம் தேSஹோராத்ரவிதோ ஜனா :**

*17. எதுபிர மற்குப் பகலது யுகமா*
*யிரமுடி விரவா யிரயுக முடிவென்*
*பதுதெரி கின்றனர் பகலுடனிரவென்*
*பதுதெரின் வந்துள மனிதர்க ளவரோ. 327*

பிரம்மத்துக்கு ஆயிரம் யுகம் ஒரு பகல், ஆயிரம் யுகம் ஓரிரவு. இதை யறிந்தோரே இராப் பகலியல்பறிவார்.

**அவ்யக்தாத் வயக்தய: ஸர்வா: ப்ரபவந்த்-யஹராகமே**
**ராத்ரியாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்த ஸம்ஜ்ஞகே**

*18. ஒருப கல்வரிற் புலப்ப டும்மெலாம்*
*உதய மாம்புலப் படலி லாதினின்*
*றிரவரின் னொடுங்குவ புலப்படா*
*தெனவ ழங்குபே ருளவ தன்கணே. 328*

'அவ்யக்தம்', அதாவது மறைவுபட்ட உலகத்தினின்றும் தோற்றப் பொருள்கள் வெளிப்படுகின்றன இரவு வந்தவுடன் அந்த மறைவுலகத்துகே மீண்டும் கழிந்துவிடுகின்றன.

**பூதக்ராம: ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே**
**ராத்ரியாகமேSவச: பார்த்த ப்ரபவத்-யஹராகமே**

*19. பகல்வரின் னவச மாகியவ் விவ்வுயிர்*
*பலவு மேவிளைவ பிருதைசேய்*
*மிகவு மேவிளைவ தாகி யாகிலய*
*மேவு மாலிரவு வரினரோ. 329*

இந்த பூதத் தொகுதி ஆகி யாகித் தன் வசமின்றியே இரவு வந்தவு டன் அழிகிறது; பார்த்தா, பகல் வந்தவுடன் இது மீண்டும் பிறக்கிறது. [இங்கு பகலும் இரவுமாவன மேற்கூறியபடி பிரம்மத்தின் பகலிரவுகளாகிய யுக சகஸ்ரங்கள்]

**பரஸ்தஸ்மாத்து பாவோSன் யோSவ்யக் தோSவ்ய க்தாத் ஸநாத ன:**
**ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி**

*20. அவியத் தமதிற் பிறிதா யுமுயர்*
*வாயும் மியல்போ தெரியா ததுமாய்*
*இவைபூ தமெலாங் கெடுமப் பொழுதும்*
*எதுதான் கெடலில்ல தநாதியதோ.* 330

அவ்யக்தத்தினும் அவ்யக்தமாய் அதற்கப்பால் சநாதன பத மொன்றிருக்கிறது. எல்லா உயிர்களும் அழிகையில் அப் பதம் அழியாது.

**அவ்யத்தோSக்ஷர இத்யுக்தஸ்-தமாஹு: பரமாங்கதிம்**
**யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம**

*21. மற்றஃத வியத்தமு மக்கரமு*
*மாவின் வரதைத் தலைமைக் கதியாய்ச்*
*சொற்றா ரெதை யெய்தினர் மீள்கிலரஃ*
*தோவென் னதுதாம முயர்ந்ததுவால்.* 331

அவ்யக்தம் அழிவற்ற தெனப்படும். அதனையே பரம கதி யென்பர். எதை எய்தபின் மீள்வதில்லையோ, அதுவே என் பரமபதம்.

**புருஷ: ஸ பர: பார்த்த பக்த்யா லப்ப்யஸ்-த்வனன்யயா**
**யஸ் யாந்த ஸ்த்தானி பூதானி யேன ஸர்வமிதந் ததம்**

*22. எவனுண் மன்பதையி னுறையு ளுள்ளதெவ*
*னானிறைந்தனகொ லிவை யெலாம்*
*அவன்ப ரம்புருடன் பிருதை சேய் பிறிதி*
*லன்பி னோவடைய லாவனால்* 332

வேறிடஞ் செல்லாத பக்தியால், பார்த்தா, அந்தப் பரம புருஷன் எய்தப்படுவான். அவனுள்ளே எல்லாப் பொருள்களும் நிலைகொண்டன. அவன் இவ்வுலக மெங்கும் உள்ளூரப் பரந்திருக்கிறான்.

**யத்ர காலே த்வனாவ்ருத்திம் ஆவ்ருத்திஞ் சைவ யோகின:**
**ப்ரயாதா யாந்தி தங் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப**

*23. எப்போது புறப்படும் யோகியரோ*
*இவண்மீளுவ தெய்துவர் மீளலெய்தார்*
*அப்போது வகுத்துரை செய்வல்பர*
*தர்க்குன் விடை யன்னவ னென்பவனே.* 333

யோகிகள் இறப்பதால் எக்காலத்தில் மீளா நிலையும் மீளு நிலையும் பெறுவாரோ அக்காலத்தைச் சொல்லுகிறேன்.

**அக்னிர் ஜ்யோதி-ரஹ: சுக்ல: ஷண்மாஸா உத்த ராயணம்**
**தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜனா:**

*24. அழல்சோதி பகல்லொளிர் பக்கமுடன்*
*அறுதிங்கள் கொளுத்தர வாறதனில்*
*எழுவோர் பிரமத் தினையோர்ந் தநரர்*
*என்பார் பிரமத் தினையெய் துவரால். 334*

தீ, ஒளி, பகல், சுக்கில பக்ஷம், உத்தராயணத்தின் ஆறு மாதங்கள்; இவற்றில் இறக்கும் பிரம்ம ஞானிகள் பிரம்மத்தை யடைகிறார்கள்.

**தூமோ ராத்ரிஸ்-ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயனம்**
**தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்-யோகீ ப்ராப்ய நிவர்த்ததே**

*25. புகையும் மிரவும் மவிதங் கருமை*
*புகல்பக் கமுடன் னறுதிங் கடனிற்*
*புகுதக் கணவா றதின்யோ கிமதிப்*
*புகர் பெற் றிவண்மீ ளுவனா வனரோ. 335*

புகை, இரவு, கிருஷ்ண பக்ஷம், தக்ஷிணாயணத்தின் ஆறு மாதங்கள்; இவற்றில் இறக்கும் யோகி சந்திரனொளியைப் பெற்றிருந்து மீளுகி றான்.

**சுக்ல க்ருஷ்ணே கதீ-ஹ்யேதே ஜகத: சாச்வதே மதே**
**ஏகயா யாத் யனாவ்ருத்தி-மன்யயா வர்த்ததே புன:**

*26. வழியா மொளியு மிருளும் வினவயோ*
*மனுளற் குறுதிப் படவெண் ணினவால்*
*வழியொன் றினின்மீ ளவரா மையெய்தும்*
*வழிமற் றதின்மீ ளவருந் திருமே. 336*

உலகத்தில் இந்த ஒளி வழியும், இருள் வழியும் சாசுவதமாகக் கருதப்பட்டன. இவற்றுள் ஒன்றினால் மனிதன் மீளாப் பதம் பெறுவான். மற்றொன்று மீளும் பதந்தருவது.

**நைதேஸ்ருதீ பார்த்த ஜானன் யோகீ முஹ்யதி கச்சன**
**தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுன**

*27. வழிக ளிவையுணர் யோகுடைய னொருவனுமே*
*மருளுறுவ திலையர்ச் சுந பிருதை மகனே*
*ஒழிவி லெது பொழுதுங் கெழுமியது கொடுயோ*
*கொடு புணரு நிலையே யுடைய னெனவானால். 337*

இவ் வழிகளிரண்டையும் உணர்ந்தால் அப்பால் யோகி மயக்கமுறு வதில்லை. ஆதலால், அர்ஜுன, எப்போதும் யோகத்தில் கலந்திரு

**வேதேஷு யஜ்ஞேஷு தபஸ்ஸு சைவ**
**தானேஷு யத் புண்யபலம் ப்ரதிஷ்டம்**
**அத்யேதி தத் ஸர்வ-மிதம் விதித்வா**
**யோகீ பரம் ஸ்த்தான-முபைதி சாத்யம்**

28. *வேது மீதுபல வேள்வி யீகைதவ*
*மீது தன்மபலன் யாவுள*
*ஈத றிந்தவை யெலாங் கடந்தியலும்*
*யோகி யாதிபர வீடுறும்* 338

இதனை யறிவதால் யோகி வேதங்களிலும், தவங்களிலும், தானங்களிலும் காட்டிய தூய்மைப் பயனைக் கடந்து, ஆதி நிலையாகிய பர நிலையை எய்துகிறான்.

*எட்டாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## கீதைப் பொருட்டொகை

செல்வ மழியாத சீவனிலை தேவனடி
புல்ல விரும்பினர்க்குப் புக்குணர்தற் - சொல்லுவவும்
நன்றொழுகற் கேற்றவுமா நற்பொருளின் பேதமெலாஞ்
சென்றுரைப்ப தெட்டுத் தெளித்து (12)

# கீதைப் பாட்டு

## ஒன்பதாம் அத்தியாயம்

# ராஜ வித்தியா ராஜ ரகசிய யோகம்

## கீதை இயற்பொருள் விளக்கம்

ஒன்ப தெனியற் கணிறை யொண்மகிமை யோடும்
மன்பதைமெய் யின்னி லையினும் முயர்பு மன்னல்
நன்பரம ஞானியது மன்பெரிய மேன்மை
இன்பமவிர் பத்தியெனும் யோகமொ டிசைக்கும்.

*இங்கு வித்தைகளுள் சிறந்ததும், ரகசியங்களுள் மேலானதுமான பக்தி யோகத்தின் சொரூபமும் மேன்மையும், பலன் முதலானவையும் கூறப்படுகின்றன. பக்தியோகத்தில் இறங்குவோன் அதில் முழு நம்பிக்கை கொள்ள வேண்டும். பின்வரும் கடவுள் பெருமைகளையும் நன்குணர வேண்டும்:- கடவுள் எங்கும் நிறைந்த பரம் பொருள். உலகமனைத்தும் அவரிடத்திலேயே நிலைபெற்று நிற்கிறது. கடவுளோ உலகத்தில் நிலைபெற்று நிற்பதில்லை. அவற்றின் பிரளய காலத்தில் உலகங்கள் அனைத்தும் அவற்றின் முதற்கிழங்காகிய பிரகிருதியில் மறைகின்றன. சிருஷ்டி காலத்தில் கடவுள் அவைகளை பிரகிருதியினின்றும் வெளிப்படுத்துகிறார். உலகத்திற்கு இறைவனும், இருப்பிடமும், சரணும், தோழனும் கடவுளே. பக்தர்கள் தங்கள் செயல்களனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். மற்ற விஷயங்களைத் துறந்து கடவுளையே தியானம் செய்பவன் எத்தகைய கொடிய பாவியாயினும் நல்லோன் என்றே கருதப்படவேண்டும். கடவுளிடத்திலேயே மனதைச் செலுத்த வேண்டும். கடவுளையே நேசிக்க வேண்டும். கடவுளையே வணங்க வேண்டும். இப்படி இருப்பவன் கடவுளையே அடைவான்.*

ஸ்ரீ பகவானுவாச :

**இதந்து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்-யனஸூயவே**
**ஜ்ஞானம் விஜ்ஞானஸஹிதம் யத் ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே஽சுபாத்**

1. எதை யோர்ந்த சுபத்தின் விடப்பெறுவாய்
இதுவோ மறைவாயின வற்றுயர்வாம்
இதுஞானம் விஞ்ஞான முடன்புகல்வேன்
என்றன்க ணசூயையிலாய் நினிடன். 339

**கடவுள் சொல்லுகிறான்:**

அசூயை யற்றவனாகிய உனக்கு இந்த அதி ரகசியமான ஞானத்தை விஞ்ஞானத்துடன் செல்லுகிறேன். இதையறிவதால் தீமையிலிருந்து விடுபடுவாய்.

**ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ர-மித-முத்தமம்**
**ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்து-மவ்யயம்**

2. இறைக்க லையி தாகும் மறைப் பரசதாகும்
இருப்பதற மாகும் விசுத்தியுயர் வாகும்
பொறிக்கு முணர்வாகுஞ் செயற்கெளியதாய
புதுக்குசுக மேவுங் கெடற்கிலது மாமே. 340

ராஜ வித்தை, ராஜ ரகசியம், தூய்மை தருவதில் மிக மாண்புடையது, கண்ணெதிரே காண்டற்குரியது, அறத்துக்கிசைந்தது, செய்தற்கு மிக எளிது, அழிவற்றது.

**அச்ரத்ததானா: புருஷா தர்மஸ்யாஸ்ய பரந்தப**
**அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே ம்ருத்யு-ஸம்ஸார-வர்த்மனி**

3. சிரத்தை யித்தரு மத்துறு கிலர்நரர்
செருக்க ஷூற்றிக லைத்தெற வடுபவ
மிருத்தெ னப்படு முற்பவ நெறியிடை
மிகக்கி டப்ப ரெனைப்பெறு கிலபடி. 341

பகையைச் சுடுவோய், இவ்வறத்தில் நம்பிக்கையற்ற மனிதர் என்னை எய்தாமே மீட்டும் நரக சம்சாரப் பாதைகளில் மீளுகின்றனர்.

**மயா ததமிதம் ஸர்வம் ஜக-தவ்யக்த-மூர்த்தினா**
**மத்ஸ்த்தானி ஸர்வபூதானி ந சாஹம் தேஷ்வவஸ்த்தித:**

4. உலகீதெ லாமும் புலங்கோட லில்லா
உருக்கொண்ட வென்னா னிறைந்துள்ள வென்கண்
ணிலையாகு மெல்லா விதச்சீவ னும்யான்
நிலைகொள்வ தில்லை யவற்றின்கண் மாதோ. 342

அவ்யக்த வடிவாய் நான் இவ்வுலக முழுமையும் சூழ்ந்திருக்கிறேன். என்னிடத்தே பூதங்களெல்லாம் நிலை பெற்றன. அவற்றுட்பட்டதன்று என் நிலை.

**ந ச மத்ஸ்த்தானி பூதானி பச்ய மே யோக-மைச்வரம்**
**பூதப்ருந் ந ச பூதஸ்த்தோ மமாத்மா பூதபாவன:**

5. என்னிட னுயிர்த் தொகைக ளேந்தலுற வில்லை
ஈச்சு வரனாகிய் யோகமது பாராய்
மன்னுயிர்க டாங்கியுள னாங்குயிரு ளில்லை
மற்றுயிரு ரெடுத்துநிய மிப்பதென தெண்ணம். 343

(மற்றொரு வகையால் நோக்குமிடத்தே) பூதங்கள் என்னுள் நிற்பனவுமல்ல என் ஈசுவர யோகத்தின் பெருமையை இங்கு பார். பூதங்களைத் தரிக்கிறேன். அவற்றுட்பட்டேனல்லேன். என் ஆத்மாவில் பூத சிந்தனை இயல்கிறது.

**யதாகாச-ஸ்த்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ மஹான்**
**ததா ஸர்வாணி பூதானி மத்-ஸ்த்தானீத்-யுபதாராய**

6. எந்தவிதம் வானிடை யிருந்துபெரு மாருத
மியாவை யிடையும் புகுநிதம்
அந்தவித மேயுயி ரெலாமுமெ னிடத்தினுள
வாமென வுளந்து ணிகவே. 344

எங்கும் இயல்வானும் பெரியானுமாகிய காற்று எப்படி எப்போதும் வானில் நிலைபெற்றிருக்கிறானோ, அப்படியே பொருள்களெல்லாம் என்னுள் நிலைபெற்றனவென்று தெரிந்து கொள்.

**ஸர்வபூதானி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்**
**கல்பக்ஷயே புனஸ்தானி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம்**

7. கற்ப முடியும்போதி னிற்சகல சீவ
கணமுமென தாயபக டிக்குளடைசிற்ப
பற்பல்வித மேயவைக ளைத்திரும வுங்கற்
பந்தொடர வுந்தருவல் குந்திவயின் வந்தோய். 345

குந்தி மகனே, கற்ப நாசத்தால் எல்லா உயிர்களும் என் இயல்பை எய்துகின்றன. மறுபடி கற்பத் தொடக்கத்தில் நான் அவற்றைப் படைக்கிறேன்.

**ப்ரக்ருதிம் ஸ்வா-மவஷ்ட்டப்ப்ய விஸ்ருஜாமி புன: புன:**
**பூதக்ராம-மிமம் க்ருத்ஸ்ன-மவசம் ப்ரக்ருதேர்-வசாத்**

8. *இப்பகுடி யின்வச மிருந்தவச மாகும்*
*யாவகைய சீவர்தொகை தம்மையு மெனாதாம்*
*அப்பகுடி யைப் பரிண மிக்கவிட னாக்கி*
*அடிக்கடி விசித்திர சிருட்டிபுரி வேனால்.* 346

என் சக்தியில் உறுதிகொண்டு மீட்டு மீட்டும் பூதக்தொகுதி முழுதையும் என் வசமின்றி, சக்தி, அதாவது இயற்கையின் வசத்தால் நான் படைக்கிறேன்.

**ந ச மாம் தானி கர்மாணி நிபத்னந்தி தனஞ்ஜய**
**உதாஸீனவ-தாஸீன-மஸக்தம் தேஷு கர்மஸு**

9. *அந்தக் கருமங் களிலா சையிலா*
*தயலா னைநிகர்த் துளனா யவெனை*
*அந்தக் கரும்ங்க ளொர்பந் தமுமே*
*யடைவிப் பனவல்ல தனஞ் சயனே.* 347

தனஞ்ஜயா, என்னை அத்தொழில்கள் தளையுறுத்தா. அவ்வினைகளிடையே நான் மேற்பட்டவன் போல் அமர்ந்திருக்கிறேன்.

**மயாத்த்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸ-சராசரம்**
**ஹேதுனானேன கௌந்தேய ஜகத் விபரிவர்த்ததே**

10. *உற்றி யங்கு முலகைப் பகுடிதான்*
*உண்டு பண்ணலெ லாமுங்கண் காணெனால்*
*மற்றிவ் வேதுவி னாற்குந்தி மைந்தனே*
*மாறி மாறிச் சுழல்வது லோகமால்.* 348

என் மேற்பார்வையில் *சக்தி சராசர உலகங்களைப் பெறுகிறாள். குந்தி மகனே, இந்த ஏதுவால் உலகம் சுழல்கிறது. [*சக்தி, இயற்கை, பிரகிருதி (Natue) என்ற சொற்கள் ஒரே பொருளுடையன. அஃதே, ஏது அல்லது காரணம் என்றும் சொல்லப்படும். உலகத் தோற்றத்துக்கு அதுவே காரணமாதலாலும், பிரம்மம் குணாதீத மாகையால் காரணமென்று சொல்லத் தகாதாதலாலும், பிரம்மம் பரம பொருள்; சுத்த சாக்ஷி]

**அவஜானந்தி மாம் மூடா மானுஷீம் தனு-மாச்ரிதம்**
**பரம் பாவ-மஜானந்தோ மம பூதமஹேச்வரம்**

*11. மன்னு யிர்க்குயர் தலைவ னாகியும்*
*மனிதர் மெய்யினை யெய்திய*
*என்ன தாமுய ரியல்பெ ணாதெனை*
*யிகழ்வர் மூடர்க டாமரோ. 349*

மனித சரீரந் தரித்த என்னை மூடர் புறக்கணிக்கிறார்கள். உயிர்களுக் கெல்லாம் உயர் தலைவன் நான் என்ற என் பரம நிலையை அவர்கள் அறிகிலர்.

**மோகாசா மோககர்மாணோ மோகஜ்ஞானா விசேதஸ:**
**ராக்ஷஸீ-மாஸுரீஞ்சைவ ப்ரக்ருதிம் மோஹினீம் ச்ரிதா:**

*12. மோகம் விளைப்பது மரக்கரசு ரர்க்கே*
*மொய்ப் பதுவு மாயவியல் பைப்பயில்வர் தாம்வீ*
*ணாக நசை யுற்றவ ராலாது வினை வீணர்*
*அவ்வறிவும் வீணர்தமி லெவ்வறிவு மில்லார். 350*

வீணாசை யுடையோர், வீண் செயலாளர், வீணறிவாளர், மதியற்றோர், மயக்கத்துக்கு இடமான ராக்ஷத அசுர மோகினி சக்திகளைச் சார்ந்து நிற்கின்றனர். [ராக்ஷத, அசுர, மோகினி சக்திகளாவன-அவா, குரூரம், மயக்கம் என்ற சித்த இயல்புகள்].

**மஹாத்மானஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதி-மாச்ரிதா:**
**பஜந்த்-யனன்யமனஸோ ஜ்ஞாத்வா பூதாதி-மவ்யயம்**

*13. பிருதை சேயமரர் பயதி யெய்துமதி*
*பெரிய ரோபிறிதி லுளனொடும்*
*வுருபி ராணிமுத லழிவி லானெனவுள்*
*ளுணர்வ ரென்னைவழி படுவரால். 351*

பார்த்தா, மகாத்மாக்கள் தெய்விக இயல்பைக் கைக் கொண்டு பூத முதலும் கேடற்றவனுமாகிய என்னை வேறு மனம் இன்றி வழிபடுகிறார்கள்.

**ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தச்ச த்ருடவ்ரதா:**
**நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே**

14. எப்பொழுது மற்புடைடமை யாலெனையி சைத்தும்
எய்ப்பிறிட மானவிர தத்துமுயல் வுற்றும்
இப்படி வணங்குவது செய்துமெது போதும்
என்னொடியை கின்றவ ரெனைக்கருது வாரே. 352

திட விரதத்துடன் முயற்சி புரிவோராய், எப்போதும் என்னைப் புகழ்வோராய், என்னைப் பக்தியால் வணங்குவோராய் நித்திய யோகிகள் உபாசிக்கிறார்கள்.

**ஜ்ஞானயஜ்ஞேன சாப்யன்யே யஜந்தோ மாமுபாஸதே**
**ஏகத்வேன ப்ருதக்த்வேன பஹுதா விச்வதோமுகம்**

15. சிலர்பிறர் ஞான வேள்வியின் வேட்டுச்
சிலபல வேறு பாடுகொ டெல்லா
வுலகமு மாகி யேனையவற்றோ
டொருபடி யாக வேதொழு கிற்பார். 353

வேறு சிலர் ஞான வேள்வியால் வேட்போராய், என்னை ஒருமையாகவும் பன்மையாகவும் பலவாறாக எல்லா விடத்தும் வழிபடுகிறார்கள்.

**அஹம் க்ரது-ரஹம் யஜ்ஞ:ஸ்வதாஹ-மஹ-மௌஷதம்**
**மந்த்ரோஹ-மஹ-மேவாஜ்ய-மஹ-மக்னி-ரஹம் ஹுதம்**

16. கிருது நானுயர் வேள்விதான்
சுவதாவு நானவு டதமுநான்
கிருத நான்மறை மொழியு நான்
கிளரெரியு நானிடு மவியுநான் [கிருதம்-நெய்] 354

நான் ஓமம்; நான் யாகம்; நான் 'ஸ்வதா' என்ற வாழ்த்துரை; நான் மருந்து; நான் மந்திரம்; நான் நெய்; நான் தீ; நான் அவி

**பிதாஹ-மஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ:**
**வேத்யம் பவித்ர-மோங்கார ருக்ஸாம யஜு-ரேவச**

17. சகமிதற்கி யான்பிதா
தாய்பி தாமகன் றரத்
தகுவ னோமிருக் கெசுச
சாமந் தூயதே ராவதும். 355

இந்த உலகத்தின் அப்பன் நான்; இதன் அம்மா நான்; இதைத் தரிப்போன் நான்; இதன் பாட்டன் நான்; இதன் அறியப்படு பொருள் நான்; தூய்மை செய்வது நான்; ஓங்காரம் நான்; நான் ரிக்; நான் ஸாமம்; நான் யஜுர்.

**கதிர்ப்பர்த்தா ப்ரபு: ஸாக்ஷீநிவாஸ: சரணம் ஸுஹ்ருத்**
**ப்ரபவ:ப்ரளய-ஸ்த்தானம் நிதானம் பீஜ-மவ்யயம்**

*18. கதி தரிப்பவன் பிரபொடு சரணியன்*
*கணிலெ வற்றையு மறிபவ னுறைவிடம்*
*இதநி னைப்பவன் பிரளய முதயமெய்*
*திடமதிற் பொரு ளழிவில தொருவிரை.* 356

இவ்வுலகத்தின் புகல், இதனிறைவன், இதன் கரி, இதனுறையுள், இதன் சரண், இதன் தோழன், இதன் தொடக்கம், இதன் அழிவு, இதன் இடம், இதன் நிலை, இதன் அழியாத விதை.

**தபாம்யஹ-மஹம் வர்ஷம் நிக்ருஹ்ணாம்-யுத்ஸ்ருஜாமி ச**
**அம்ருதஞ் சைவ ம்ருத்யுச்ச ஸதஸச்சாஹ-மர்ஜுன**

*19 யானெரிப்ப லருச்சுனா மழை*
*யான் விடுப்ப லடக்குவல்*
*யான் மிருத்துட னமுத மாவதும்*
*யான சத்தொடு சத்தியான்.* 357

நான் வெப்பந் தருகிறேன்; மழையை நான் கட்டி விடுகிறேன். நான் அதனைப் பெய்விக்கிறேன். நானே அமிர்தம்; நானே மரணம்; அர்ஜுனா உள்ளதும் யான், இல்லதும் யான்.

**த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா**
**யஜ்ஞை-ரிஷ்ட்வா ஸ்வர்க்கதிம் ப்ரார்த்தயந்தே**
**தே புண்ய-மாஸாத்ய ஸுரேந்த்ரலோகம்**
**அச்னந்தி திவ்யான் திவி தேவபோகான்**

*20. திரிவிதத்த கலைஞர் சோம முணலின் மற்று மறமிலார்*
*திவிசெலற்கென் றனையிரப்பர் சிலபலிட்டி யவிபெய்து*
*சுரர்த மக்கிந் திரனிருக்கும் புணிய சொர்க்க மதையெய்திச்*
*சுரர் படைத்த திவிய போகம் விணின் மடுப்ப ரவரரோ.* 358

சோம முண்டார், பாவமகன்றார், மூன்று வேதமறிந்தார், என்னை வேள்விகளால் வேட்டு வானுலகு தர வேண்டுகின்றனர். அவர்கள் புண்ணிய ஸ்தானமாகிய தேவேந்திர லோகத்தை யெய்தி, வானுலகில் திவ்யமான தேவ போகங்களைத் துய்க்கிறார்கள்.

**தே தம்புக்தவா ஸ்வர்க்கலோகம் விசாலம்**
**க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி**
**ஏவம் த்ரயீதர்ம-மனுப்ரபன்னா**
**கதாகதம் காமகாமா லபந்தே**

21. *அவரப் பெருக்கத் துறக்கம் மடுத்தே*
*யறங்கெட்ட போழ்தத்தின் மண்புக் கிருப்பர்*
*இவண் காமியத் திச்சை யார்வேத மூன்றோ*
*தியதன்ம மேயார் வரல் போத லேய்வர்.* 359

விரிவாகிய வானுலகத்திலே இன்புற்றுப் புண்ணியந் தீர்ந்தவுடன் மறுபடி அழிவுடைய மனித உலகத்துக்குத் திரும்புகிறார்கள். இப்படி மூன்று வேத முறைகளைத் தொழுவார் விருப்பங்களில் வீழ்ந்து உழல்வார்.

**அனன்யாச்சிந்தயந்தோ மாம் யே ஜனா: பர்யுபாஸதே**
**தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்**

22. *மனித ரேவரெனை யநிய மில்லபடி*
*மனனமா வரவழி படுவரோ*
*தினமு மென்னியையு மவர்க ளுக்குதவல்*
*செய்வல் யோக மொடு சேமம்யான்.* 360

வேறு நினைப்பின்றி என்னை வழிபடுவார் யாவரே அந்த நித்திய யோகிகளின் நன்மை தீமையை நான் பொறுப்பேன்.

**யேऽப்யன்யதேவதா-பக்தா யஜந்தே ச்ரத்தயான்விதா:**
**தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்-யவிதி-பூர்வகம்**

23. *இதர தேவரன் புடையர் யாவர்தா*
*மியல் சிரத்தையா லிவணெசிப்பரோ*
*விதியை முன்னிட லின்றி யென்னையே*
*வேட்ப ரன்னருங் குந்தி மைந்தனே.* 361

அன்னிய தேவதைகளை நம்பிக்கையுடன் தொழும் அன்பரும், குந்தியின் மகனே, விதி வழுவி என்னையே தொழுகின்றனர்.

**அஹம் ஹி ஸர்வயஜ்ஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச**
**ந து மாமபிஜானந்தி தத்வேனாதச்-ச்யவந்தி தே**

24. *எத்துணை வேள்விகட்குந் துய்ப்பவ னோடு பய*
*னியுந் தலைவனுமே யானலனோ வெனையே*
*தத்துவ மாகவுணர் கிற்பவ ரில்லையரோ*
*தழுவுமிவ் வேதுவினா னழுவுகின் றாரவரோ.* 362

நானே வேள்விகளில் எல்லாம் உணவு உண்பவன்; நானே தலைவன்; என்னை மனிதர் உள்ளபடி அறியார்; ஆதலால் நழுவி வீழ்வார்.

**யாந்தி தேவவ்ரதா தேவான் பித்ருன் யாந்தி பித்ருவ்ரதா:**
**பூதானி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜினோSபி மாம்**

*25. தேவரை யெய்துவர் தேவ விரதியர்*
*சேர்வர் பிதுர்விர தத்தர் பிதுர்க்களை*
*மேவுவர் பூதரைப் பூதரை வேட்பவர்*
*மேவுவ ரென்றனை வேட்பவ ரும்மெனை.* *363*

தேவ விரதிகள் தேவரை எய்துவார்; பிதிர்க்களை நோற்பார் பிதிர்க்களை யடைவார்; பூதங்களைத் தொழுவார் பூதங்களை யடைவார்; என்னை வேட்போர் என்னை எய்துவார்.

**பத்ரம் புஷ்பம் பலந் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி**
**ததஹம் பக்த்யுபஹ்ருத-மச்னாமி ப்ரயதாத்மன:**

*26. ஆரெற் கிலையைப் பூவைக் கனியை*
*அறலைத் தருவா னொருபத் தியினச்*
*சீர்மைப் பரிசுத் தமனத் தினன்பத்*
*தியினர்ப் பணமிட் டதுதுய்க் குவல்யான்.* *364*

இலையேனும், பூவேனும், கனியேனும், நீரேனும், அன்புடனே எனக்கு அளிப்பவன் ஆயின், முயற்சியுடைய அன்பவன் அன்புடன் அளித்ததை உண்பேன் யான்.

**யத்கரோஷி யதச்னாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத்**
**யத்தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மதர்ப்பணம்**

*27. எதுசெய் குதியோ வெதுவுண் குதியோ*
*எதுவேட் குதியோ எதுநல் குதியோ*
*எதுதான் றவமே வுதியோ வதையென்*
*னிடனர்ப் பணமே புரிகுந் தியின்சேய்.* *365*

நீ எது செய்யினும், எதனை நீ உண்பினும், எதை நீ ஹோமம் பண்ணினும், எதனைக் கொடுத்தாலும், எத்தவத்தைச் செய்தாலும், குந்தி மகனே, கடவுளுக்கு அர்ப்பணமென்று செய்.

**சுபாசுபபலை-ரேவம் மோக்ஷ்யஸே கர்மபந்தனை:**
**ஸந்ந்யாஸயோக-யுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி**

*28. இவ்வாறு சமர்ப்பண யோகு புணர்*
*இதயத் தவனாய் நன்மை தீமை பயன்*
*அவ்வாறு கொள் கன்மபந் தம்விடுவா*
*யடைவா யெனையம்ம விடுத்தவனாய்.* 366

இங்ஙனம் மங்களம் அமங்களமாகிய பயன்களைத் தருவனவாகிய கர்மத் தளைகளினின்றும் விடுபடுவாய். துறவெனும் யோகத் திசைந்து விடுதலை பெறுவாய், என்னையும் பெறுவாய்.

**ஸமோளுஹம் ஸர்வபூதேஷுநமேத்வேஷ்யோளுஸ்தி ந ப்ரிய:**
**யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்**

*29. ஒத்ததெவ் வகைப்பட்ட பூதத்து முளன்யான்*
*உவப்பும் வெறுப்பு மிலாவென்னை யாரோ*
*பத்தித் திறத்தா லுபாசிப்ப ரென்றன்*
*பாலுள்ள ரன்னா ரவர்பாலன் யானும்.* 367

நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன். எனக்குப் பகைவனுமில்லை, நண்பனுமில்லை. ஆனால், என்னை அன்புடன் தொழுவோர்-அன்னவர் என்னகத் தமர்ந்தார்; அவரகத்து நான் உளேன்.

**அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமனன்யபாக்**
**ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ:**

*30. தீதுசேர் துராசார னாயினுஞ்*
*சிந்தை வேறிலா தென்வணங்குமேற்*
*சாது வேயெனுந் தகவு ளானவன்*
*தான் சிறந்த நிச்சயனவன் மெய்யே.* 368

மிகவும் கொடிய நடையோனாயினும் பிறிது வழிபடாதே என்னை வழிபடுவோன் நல்லோனென்றே கருதுக; ஏனெனில், நன்கு முயல்கிறான் ஆதலின்.

**க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வச்-சாந்திம் நிகச்சதி**
**கௌந்தேய ப்ரதிஜானீஹி ந மே பக்த: ப்ரணச்யதி**

31. *தன்ம சிந்தைய னாம்விரைந் தவன்*
*சாரு வன்றிர மானசாந்தி தான்*
*என்ன தன்புகொண் டுள்ளவன் கெடா*
*னென்று நீசப தஞ்செய் குந்திசேய்.* 369

அன்னவன் விரைவிலே அறவானாவான், நித்திய சாந்தியு மெய்துவான். குந்தி மகனே; குறிக்கொள்! என தன்பன் சாகமாட்டான்.

**மாம் ஹி பார்த்த வியபாச்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோனய:**
**ஸ்த்ரியோ வைச்யாஸ்-ததா சூத்ராஸ்-தேऽபி யாந்தி பராங்கதிம்**

32. *யார்தா மெனினும் பவயோ னியர்பெண்*
*ணினர்வை சியரிவ் விதஞ்சூத் திரரெற்*
*சேர்பா யுளரோ வவரும் பிருதை*
*சேயுத்தம மாங்கதி சேர்வர் மெய்யே.* 370

பாவிகளென்னைப் பணிவாராயினும், மாதரேனும், வைசியரேனும் சூத்திரரும் பரகதி பெறுவார்.

**கிம் புனர்-ப்ராஹ்மணா: புண்யா பக்தா ராஜர்ஷயஸ்-ததா**
**அநித்ய-மஸுகம் லோக-மிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்**

33. *அறமே வியவந் தணரவ் விதம்வேந்*
*தர்க்குள் ளிருடிச் சனர்பத் தியராய்ப்*
*பிறவென் வினவல் துயரோ டுநிலைப்*
*பிலையா முலகீ துளைமெய் தெனையே.* 371

அப்படி யிருக்கத் தூய்மை யார்ந்த அந்தணரும் ராஜரிஷிகளும் எனக் கன்பராயின், என்னே! ஆதலால்; நிலையற்றதும் இன்ப மற்றதுமாகிய இவ்வுலகப் பிறவி யெய்திய நீ என்னை வழிபடக் கடவாய்.

**மன்மனா பவ மத்பத்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு**
**மாமேவைஷ்யஸி யுக்த்வைவ-மாத்மானம் மத்பராயண:**

*34. எனையுள் ளமுளோ னெனையன் புசெய் வோன்*
*எனைவேட் பவன்னா குவையெற் றொழுவாய்*
*எனைமுக் கியமேவிட மென் றுகொடிவ்*
*விதமுள் கலந்தெய் துவை யென்றனையே.* 372

மனத்தை எனக்காக்கிவிடு; பக்தியை எனக்காக்கு; என்னைத் தொழு. என்னைப் பரமாகக் கொள். இங்ஙனம் இயற்றும் தற்கலப்பு யோகத்தால் என்னையே எய்துவாய்.

*ஒன்பதாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## கீதைப் பொருட்டொகை

*இறைவன் மகிமை யிவண்மா னிடனா*
*யுறையு நிலையி னுயர்பு - நிறைமனத்த*
*ஞானிமே லாத னலபத்தி யோகிவையொன்*
*பானிலே யோதப் படும்.* (13)

# கீதைப் பாட்டு

## பத்தாம் அத்தியாயம்

## விபூதி யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

பத்தெனியல் பத்திவிளை வித்துவளர் வித்தற்கு
ஒத்துதவு கிற்குமிறை யோங்கு குணமென்றும்
அத்தனை பிராணியு மவற்குவய மென்றும்
புத்திதெளி யும்வணம் புகன்றது வெவ்வேறே.

பக்தியுடன் தியானம் செய்வதற்காகக் கடவுளின் பெருமை இதில் விரித்துக் கூறப்படுகின்றது. கடவுளே எல்லாவற்றிற்கும் பிறப்பிடம். அவரிடமிருந்தே எல்லாம் வெளிவரும். அவரே அழியா வீடு. அவரே அமரர்க்கும் முன்னோர். அவரே பிறப்பிலர். அவரே இறைவன். அவரே உயிர்களனைத்தின் உள்ளத்தில் நிறைந்திருக்கும் ஆத்மா. அவரே வேதங்களுள் சிறந்த சாம வேதம். தேவரில் இந்திரன். ருத்திரர்களில் சங்கரன். மலைகளில் மேருமலை. சப்தங்களுள் பிரணவம். தாவரங்களுள் இமயமலை. மரங்களுள் அரச மரம். மனிதர்களுள் அரசன். பசுக்களுள் காமதேனு. அசுரருள் பிரகலாதன். பறவைகளுள் கருடன். வீரர்களுள் ராமன். எழுத்துக்களுள் 'அ' என்னும் முதலெழுத்து. மாதங்களுள் மார்கழி. மேற்கூறியவை யெல்லாம் உதாரணமாக ஒவ்வொன்றிலும் சிறந்தவையாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவரின் பெருமையைத் தனித்தனியே முற்றிலும் கூறுவது இயலாத காரியம். எந்த அசைபொருளும் அசையாப் பொருளும் அவரை விட்டுத் தனித்து நிற்க முடியாது.

*ஸ்ரீ பகவானுவாச :*

**பூய ஏவ மஹாபாஹோ ச்ருணு மே பரமம் வச:**
**யத்தேऽஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா**

1. *அன்புள்ள நினக்கிதம் வேண்டியவா*
*சையினா லெதையா னறையப் புகுவேன்*
*எனறன்னுயர் வாய்மொழி மற்றையிதை*
*யினுமே செவி கொள்வை பெரும்புயனே.* 373.

***ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :***

பெருந்தோளுடையாய், பின்னு மோர் முறை நான் சொல்லப் புகும் மிகவுயர் சொல்லினைக் கேளாய்; நீ எனக்கு உகந்தவன்; ஆதலால், நினது நலம் வேண்டி இங்கதனை விளம்புவேன் நினக்கே.

**ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய:**
**அஹமாதிர்-ஹி தேவானாம் மஹர்ஷீணாஞ்ச ஸர்வச:**

2. *தேவர் சங்கமுமென் சீரறிந்ததிலை*
*தேர்கிலார் கள்மக ருசிகளும்*
*தேவருக்கு மகருசிக ளுக்குமெது*
*திறனிலும் முதல்வன் யான் மெய்யே.* 374

வானவர் கணங்கள் என் மகிமையை உணரார்; பெருந்தகை முனிவரு முணரார்; யாங்கணும், வானோர்கட்கும் மகரிஷிகட்கும் ஆதி நானே.

**யோ மாமஜமனாதிஞ் ச வேத்தி லோகமஹேச்வரம்**
**அஸம்மூட: ஸ மர்த்யேஷு ஸர்வபாபை: ப்ரமுச்யதே**

3. *எனையேவ னிவண்பிற வாதவனா*
*தியிலா னுலகிற்கு மகேச் சுரனென்*
*றுனுவோ னரரிற் சமமெண் மயலில்*
*லுவனே மறமுற்றும் விடப்படுவோன்.* 375

பிறப்பதில்லான், தொடங்குதலிலாதான், உலகின் பெரு முதலான என்றனை யுணர்வோன், மானிடருக்குள்ளே மயக்கந் தீர்ந்தான், பாவமனைத்தினும் விடுதலைப்பட்டான்.

**புத்திர்-ஜ்ஞான-மஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம: [illegible]**
**ஸுகந்து:க்கம் பவோ ऽபாவோ பயஞ் [illegible]பயமேவச**

4. *புந்தி விவேக மோகமி லாமை*
*பொறுமை மொடுண்மை சமதம மின்பம்*
*வெந்துய ருள்ளே மெலிதலி லாமை*
*மெலிதல் பயத்தோ டபயமு மேதான்.* 376

மதியும், ஞானமும், மயக்கமின்மையும், பொறுத்தலும், வாய்மையும், அடக்கமும், அமைதியும் இன்பமும், துன்பமும், உண்மையும், இன்மையும், அச்சமும், அஞ்சாமையும்.

**அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ்-தபோ தானம் யசோSயச:**
**பவந்தி பாவா பூதானாம் மத்த ஏவ ப்ருதக்விதா:**

5. இடர்செய் வதிலா வியல்புஞ் சமமும்
இசையும் வசையும் மகிழ்வும் தவமும்
கொடையும் பலவே றிவை சீவர்களிற்
குலவுந் நினைவென் னிடனே விளையும். 377

துன்புறுத்தாமையும், நடுமையும், மகிழ்ச்சியும், ஈகையும், தவமும், இகழும், புகழும் இங்ஙனம் பலபடுமியல்புகளெல்லாம் என்னிடம் பெறுவன உயிர்கள்.

**மஹர்ஷய: ஸப்த பூர்வே சத்வாரோ மனவஸ்-ததா**
**மத்பாவா மானஸா ஜாதா யேஷாம் லோக: இமா:ப்ரஜா:**

6. மண்பிறந்த இவர் யார் வழிப்படுவர்
மனனின் வந்த மகருசியர் முன்
எண்ணி னோரெழுவ ரன்ன வாறு மநு
வென்னு நால்வ ரெனதியல் பினோர். 378

முன்னை மகரிஷிகள் எழுவரும் நான்கு மனுக்களும் மனத்தால் என்னியல்பு எய்தினர். அவர்களுடைய மரபினரே இம் மக்களெல்லாரும்.

**ஏதாம் விபூதிம் யோகஞ் ச மம யோ வேத்தி தத்வத:**
**ஸோSவிகம்பேன யோகேன யுஜ்யதே நாத்ர ஸம்சய:**

7. ஏவ னென்னதா மிவ்வி பூதியும்
யோகமும் முளவாறு தேர்கு வோன்
ஆவ னன்னவன் னசைவு றாதயோ
கதுபுணர்ப்பன் மற்றதனி லையமில். 379

இத்தகைத்தாகும் எனது பெருமையும் யோகந்தனையும் உள்ளவாறுணர்வோன் அசைவிலா யோகத்தமர்வான்; இதிலோர் ஐயமில்லை.

**அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே**
**இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமன்விதா:**

8. முழுவதற்கு முத்பத்தி யேதுநான்
முழுவதும்மெனா னடைபெறும் மென
முழுவதுந் தெரிந்தவ ருணர்ந்தவர்
முழுதொ டும்மெனைத் தொழுதல் செய்வரால். 380

நான் அனைத்திற்கும் தொடக்கம். என்னிடமிருந்தே எல்லாம் இயலும். இங்ஙன முணர்ந்த புலவர் என்னை அன்புடன் தொழுவார்.

**மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த; பரஸ்பரம்**
**கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச**

9. உளமென்கண் வைத்தவர்க ளுயிரென் னிடத்தவர்கள்
ஒருவர்க் கொருத்தர் தெளிவித்
துளவென்னை நித்தியமு முரைசெய்து சித்தமகி
ழுவருட் டிருத்தி யுறுவார். 381

அகத்தினை என்பால் வைத்து. உயிரை என்னுள்ளே புகுத்தி. ஒருவரை யொருவர் உணர்விப்பாராய். எக்காலுந் தம்முள் என்னைக் குறித்தியம்பு வார்: அன்னோர் மகிழ்ச்சியும் இன்பமும் அடைவார்.

**தேஷாம் ஸததயு-க்தானாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்**
**ததாமி புத்தியோகம் தம் யேன மாமுபயாந்தி தே**

10. என்று மென்னுடன் வாழ வெண்ணினா
ரென்னை யன்புசெய் துள்ள ரன்னருக்
கென்ன வேதுவா லென்னை யெய்துவா
ரீவலன் பொடப் புத்தியோகமே. 382

எப்போதும் யோகத் திருப்பாராகில் அன்புடன் என்னை வழிபடும் அன்னோர்க்கு யான் புத்தியோகம் அளிப்பேன். இதனால் என்னை யவர் எய்துவார்.

**தேஷா-மேவானுகம்பார்த்த-மஹ-மஜ்ஞானஜந் தம:**
**நாசயாம்-யாத்மபாவஸ்த்தோ ஜ்ஞானதீபேன பாஸ்வதா**

11. அவருக் கருளைச் செயவே யவர்தம்
அகனிற் கருதற் குறநின் றொருயான்
அவருக் கொளிசெய் யறிவுச் சுடரின்
அறிவற் றிதினெய் திருளைத் தெறுவேன். 383

அன்னவர்க்கிரங்கி யான் அன்னவர் ஆத்ம இயல்பு யானாகி ஒளியுடை ஞானவிளக்கால் அவரிடை அஞ்ஞானத்தால் தோன்று மிருளைத் தொலைப்பேன்.

*அர்ஜுன உவாச :*

**பரம் பரஹ்ம பரந்தாம பவித்ரம் பரமம் பவான்**
**புருஷம் சாச்வதம் திவ்ய-மாதிதேவ-மஜம் விபும்**

12. *பரமென் பிரமம் பரமென் கூடே*
*பரமென் சுசிநீ யுனைநித் தியனென்*
*புருடன் றிவியன் முதலென் கடவுள்*
*புகுவன் எவனும் பிறவா னெனவே.* 384

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

நீயே பரப்பிரம்மம், நீயே பர வீடு, தூய்மை யனைத்தினுஞ் சிறப்புடைய தூய்மை நீ. நின்னையே "நித்திய புருஷ" னென்றும், ஆதிதேவ னென்றும், பிறப்பிலானென்றும், இறைமைக் கடவுளென்றும்.

**ஆஹுஸ்த்வாம் ருஷய:ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ் ததா**
**அஸிதோ தேவலோ வ்யாஸ:ஸ்வயஞ் சைவ ப்ரவீஷிமே**

13. *இருடிய ரெலோருமுரை செய்குந ருன்னை*
*இவித மசிதன் றேவலனொடு வியாசன்*
*சுரமு நிவனா ரதனுமுரை செய்துள்ளார்*
*சயமு மிதுவேதான் சொலல்தருதி யெற்கே.* 385

முனிவரெல்லாரும் மொழிகிறார், தேவரிஷி நாரதரு மங்ஙனே நவில்கிறார்; அசிதரும் தேவலரும் வியாசரும் அங்ஙனமே செப்புகிறார். இங்கு நீ நேரே எனக்கு அதை உரைக்கின்றாய்.

**ஸர்வமேதத் ருதம் மன்யே யன்மாம் வதஸி கேசவ**
**ந ஹி தே பகவன் வ்யக்திம் விதுர்-தேவா ந தானவா:**

14. *எற்கெதைச் சொனாய் முற்று மிதுமெய்*
*யெனவு ணர்ந்துளேன் பகவ கேசவ*
*தெற்ற வேபுலன் செய்யு நின்றிறன்*
*தேவர் தேர்கிலா ரசுர ரில்லரென்.* 386

கேசவா, நினது 'கிளவி' யனைத்தையும் மெய்யெனக் கொண்டேன். பகவனே, விண்ணவரும் அசுரரும் நின் விளக்கத்தை யறிவாரோ? [கிளவி-சொல்]

**ஸ்வயமே-வாத்ம-னாத்மானம் வேத்த த்வம் புருஷோத்தம**
**பூதபாவன பூதேச தேவதேவ ஜகத்பதே**

*15. புருடோத்தம சகநாத பிராணிப்*
*பொருடோற் றியவ பிராணிக ளீச*
*சுரர் போற்றிய வொரு தேவ வுனாலே*
*சுயமாத் தெரிகுவை யாலுனை நீயே.* 387

புருஷோத்தமா, உன்னை நீயே அறிவாய். பூதங்களானாய்! பூதத் தலைவனே! தேவ தேவா! வையத் திறைவா!

**வக்து-மாஹஸ்-யசேஷேண திவ்யா-ஹ்யாத்மவிபூதய:**
**யாபிர்-விபூதிபிர்-லோகா-னிமாம்ஸ்-த்வம் வ்யாப்ய திஷ்ட்டஸி**

*16. எந்தெந்த விபூதிக ளோடுமியைந்*
*திவணுள்ள வுலோக நிறைந்துளைநீ*
*அந்தந்த நினாது விபூதிகடிப்*
*பியமா மவையாவுஞ் சொலற்குரியாய்.* 388

எந்த மகிமைகளால் நீ இவ்வுலகங்களைச் சூழ்ந்து நிற்கிறாயோ, அந்த நின் மகிமைகள் தேவத்தன்மையுடையன். அவற்றை எனக்கு மிச்சமின்றி உணர்த்த வேண்டுகிறேன்.

**கதம் வித்யா-மஹம் யோகின்ஸ்-த்வாம் ஸதா பரிசிந்தயன்**
**கேஷுகேஷு ச பாவேஷு சிந்த்யோऽஸி பகவன் மயா**

*17. யாது போதுமுனை யோகின் யான்பகவ*
*எண்ணுதற் கறிவ தெவ்விதம்*
*யாதி யாதியல்பி னென்றனா னினைவ*
*தற்குநீ யுரியை யாவையால்.* 389

யோகி! எப்போதும் உன்னையே சிந்தித்து நின்னை யுணருமாறெங்ஙனே? பகவனே! எவ்வெப் படிகளில் நின்னை யான் கருதல் வேண்டும்?

**விஸ்தரேணாத்மனோ யோகம் விபூதிஞ் ச ஜனார்த்தன**
**பூய: கதய த்ருப்திர்-ஹி ச்ருண்வதோ நாஸ்தி மேऽம்ருதம்**

*18. உன்யோகமா டின்னும் விபூதியையும்*
*உரையாய் விரிவா யமிழ்தஞ் செவிகொள்*
*எண்கண்ணிது போதுமெ னெண்ணமிலை*
*யிதுநீ யறிவாய் பிறவா மைசெய்வோய்.* 390

ஜனார்த்தனா, நின் யோகத்தையும் பெருமையையும் விரித்து மற்றொரு முறை சொல்க. அமிர்தம் போன்ற நின் சொற்கள் எனக்குத் தெவிட்டவில்லை.

*ஸ்ரீ பகவாநுவாச :*

**ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்ம-விபூதய :**
**ப்ராதான்யத: குருச்ரேஷ்ட்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே**

*19. உனக்கென் திவியப் பல்விபூ திகளுக்*
*குண்முக்கியமாயின வோது வல்யான்*
*எனக்குள்ள பரப்பு வியப்புளதா*
*யீறில் லதரோ குருவின்னு யர்வோய்.* 391

***ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:***

அச்ச! என் ஆத்மப் பெருமைகள் தேவத்தன்மை உடையனவே. அவற்றுள் பிரதானமானவற்றை நினக்குச் சொல்லுகிறேன். எனது விஸ்தாரத்துக்கு முடிவில்லை.

**அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசய-ஸ்த்தித:**
**அஹமாதிச்ச மத்யஞ் ச பூதானா-மந்த ஏவ ச**

*20. துயிலை நியமிப்பவ வனைத்துயிர்க ளுக்குமன*
*துக்குணிலை யுற்ற வுயிர்யான்*
*உயிர்களவை கட்கு முதலிடை கடையெனப் பெயர்கொள்*
*உவைகளுமெ யப் படுவல் யான்.* 392

அர்ஜுனா, உயிர்களனைத்தின் உள்ளே நிற்கும் ஆத்மா நான். அவ்வுயிர்களின் ஆதி நான் இடையும் அவற்றின் இறுதியும் யானே.

**ஆதித்யானா-மஹம் விஷ்ணுர்-ஜ்யோதிஷாம் ரவி-ரம்சுமான்**
**மரீசிர்-மருதா-மஸ்மி நக்ஷத்ராணா-மஹம் சசீ**

*21. ஆதித்த ருக்குள்ளும் யான்விண்டு கதிரோன்*
*ஆகின்றரவி சோதியாயுள்ள வற்றுள்.*
*வாதத் தொகைக் குள்ளு மாவேன் மரீசி*
*வானத் துடுக்களுள் யானச் சசிதான்* 393

ஆதித்யர்களில் நான் விஷ்ணு, ஒளிகளில் நான் கதிர் சான்ற ஞாயிறு. காற்றுகளில் மரீசி, நக்ஷத்திரங்களில் சந்திரன்.

**வேதானாம் ஸாமவேதோऽஸ்மி தேவானா-மஸ்மி வாஸவ:**
**இந்த்ரியாணாம் மனச்சாஸ்மி பூதானமஸ்மி சேதனா**

22. *சுருதியுட் சாம மறையாவேன்*
*சுரர்களுள் வாசவனு மாவேன்*
*இருதயம் பொறிகளுளு மாவேன்*
*எவையுயிர் களுள்ளு மறிவாவேன்.* 394

வேதங்களில் யான் சாம வேதம்; தேவரில் இந்திரன்; புலன்களில் மனம் யான்; உயிர்களிடத்தே உணர்வு நான்.

**ருத்ராணாம் சங்கரச்சாஸ்மி வித்தேசோ யக்ஷரக்ஷஸாம்**
**வஸூனாம் பாவகச்சாஸ்மி மேரு: சிகரிணா-மஹம்**

23. *சங்கர னாவ் லுருத்திரர்க் குள்ளே*
*தனபதி யானியக் கர்க்கரக்கர்க்கு*
*தங்கும் வசுக்களுட் பாவக னாவேன்*
*தடமுடி மலைகளுள் மேருவும் யானே.* 395

ருத்திரர்களில் நான் சங்கரன்; இயக்கர், அரக்கருள் யான் குபேரன். வசுக்களில் நான் தீ; மலைகளில் மேரு.

**புரோதஸாஞ் ச முக்க்யம் மாம் வித்தி பார்த்த ப்ருஹஸ்பதிம்**
**ஸேனானீனா-மஹம் ஸ்கந்த:ஸரஸா-மஸ்மி ஸாகர:**

24. *பிருதை மைந்த புரோகித ருண்முதற்*
*பேர்பெறும் பிருகற் பதியென்னையோர்*
*சரசினுள்குட் சமுத்திர மாகுவேன்*
*தானை நாயக ருட்கந்த னம்மயான்.* 396

பார்த்தா. புரோகிதர்களில் தலைவனாகிய பிருகஸ்பதி நான் என்றுணர். படைத்தலைவரில் நான் கந்தன். நீர் நிலைகளில் நான் கடல்.

**மஹர்ஷீணாம் ப்ருகு-ரஹம் கிரா-மஸ்ம்யேக-மக்ஷரம்**
**யஜ்ஞானாம் ஜபயஜ்ஞோऽஸ்மி ஸ்த்தாவராணாம் ஹிமாலய:**

25. *மகருசிகட் குள்யான் பிருகு*
*வாக்கினு ளேகாக்கர மாவேன்*
*தகுவேள் விகளுட் செபவேள்வி*
*தாவரத் தாவலி மாலயமே.* 397

மகரிஷிகளில் நான் பிருகு; வாக்குக்களில் நான் "ஓம்" என்ற ஓரெழுத்து. யக்ஞங்களில் நான் ஜபயக்ஞம்; ஸ்தாவரங்களில் நான் இமாலயம்.

**அச்வத்த: ஸர்வவ்ருக்ஷாணாம் தேவர்ஷீணாஞ் ச நாரத:**
**கந்தர்வாணாம் சித்ரரத: ஸித்தானாங் கபிலோ முனி:**

*26. எந்தவித தாருக்குள்ளு மசுவத்தம்*
*இயவுண்முநி வர்க்குள் நாரதநன்னாமன்*
*கந்தருவ ருக்குட் சித்ர ரதனாவல்*
*கபிலமுனி யாவேன் சித்தர்தமு ளம்ம.* 398

மரங்களனைத்திலும் நான் அரசமரம்; தேவரிஷிகளில் நான் நாரதன்; கந்தர்வருள்ளே சித்ரரதன்; சித்தர்களில் கபில முனி.

**உச்சை:ச்ரவஸ-மச்வானாம் வித்தி மாமம்ருதோத்பவம்**
**ஐராவதம் கஜேந்த்ராணாம் நராணாஞ் ச நராதிபம்**

*27. பரிகட்கு ளமிழ்தத்தின் வருமுச்ச*
*சிரவத்தை யானென்றுதேர்*
*கரிகட்கு முதன்மைக் கிந்திரனத்தி*
*நரருக்குள் நரபாலனும்.* 399

குதிரைகளினிடையே நான் அமிர்தத்தில் பிறந்த உச்சை சிரவ மென்றுணர். யானைகளில் என்னை ஐராவதமென்றும், மனிதரில் அரசனென்றும் அறி.

**ஆயுதானா-மஹம் வஜ்ரம் தேனூனா-மஸ்மி காமதுக்**
**ப்ரஜனச்-சாஸ்மி கந்தர்ப்ப:ஸர்ப்பாணா-மஸ்மி வாஸுகி:**

*28. ஆயுதத் தொருகுலிசம் யானுய*
*ரானினத் தொருசுரபி யான்*
*செய்செய் சித்தச னாவல் சர்ப்ப*
*வினத்துள் வாசுகி யாவலே* 400

ஆயுதங்களில் நான் வஜ்ரம்; பசுக்களில் நான் காமதேனு; பிறப்பிப்போரில் நான் மன்மதன்; பாம்புகளில் வாசுகி.

**அனந்தச்-சாஸ்மி நாகானாம் வருணோ யாதஸா-மஹம்**
**பித்ருணா-மர்யமா சாஸ்மி யம: ஸம்யமதா-மஹம்**

*29. வருணன் யான்புனலுள் ளருளு நாகமெனும்*
*வகையு ளாதுவ லநந்தனும்*
*அரிய மாபிதா ருக்கு ளாவல் முறை*
*யதுசெய் வாருள் யமன் யானரோ* 401

நாகர்களினிடை நான் அநந்தன்; நீர் வாழ்வோரில் வருணன்; பிதிர்க்களில் நான் அரியமான்; தம்மைக் கட்டினவர்களில் நான் யமன்.

**ப்ரஹ்லாதச்-சாஸ்மி தைத்யானாம் கால: கலயதா-மஹம்**
**ம்ருகாணாஞ் ச ம்ருகேந்த்ரோऽஹம் வைனதேயச்ச பக்ஷிணாம்**

30. *ஒருபிரக லாத னதிதிசுத ருளாவல்*
*ஓர்ந்தெணினர் தம்முட் காலனவன் யானால்*
*மிருக மவையிற்றுண் மிருகபதி யானால்*
*விநதை மகனுந்தான் பறவையின னுக்குள்.* 402

அசுரரில் பிரகலாதன் யான்; இயங்குவனவற்றில் காலம் யான்; விலங்குகளில் சிங்கம்; பறவைகளில் கருடன்.

**பவன: பவதாமஸ்மி ராம: சஸ்த்ரப்ருதா-மஹம்**
**ஜஷாணாம் மகரச்-சாஸ்மிஸ் ரோதஸா-மஸ்மி ஜாஹ்னவீ**

31. *யானிரா மன்படை கைக்கொள் வர்க்குளலை*
*சிற்பவற் றுள்வளி யாவனால்*
*மீனினத் துளொரு மகர மாவல் பல*
*வெள்ள முள்ளுமொரு சாநவி.* 403

தூய்மை செய்வனவற்றுள்ளே காற்று நான்; படை தரித்தோரில் நான் ராமன்; மீன்களில் நான் சுறா; ஆறுகளில் கங்கை.

**ஸர்க்காணா-மாதி-ரந்தச்ச மத்த்யஞ்சைவாஹ-மர்ஜுன**
**அத்த்யாத்மவித்யா வித்யானாம் வாத: ப்ரவததா-மஹம்**

32. *உய்த்துப் படைக்கும் மவைக் காதி மத்தி*
*யுடனீறு செய்விப்பதும் மர்ச்சு னாயான்*
*வித்தைக்கு ளேயம்ம வதியான்ம வித்தை*
*விவாதஞ்செய் வார்தம்முள் யான் மெய்மைவாதம்.* 404

படைப்புக்களின் ஆதியும் அந்தமும் நான், அர்ஜுனா, வித்தைகளில் நான் அத்யாத்ம வித்தை; பேசுவோரிடையே நான் பேச்சு.

**அக்ஷராணா-மகாரோऽஸ்மி த்வந்த்வ: ஸாமாஸிகஸ்ய**
**அஹ மேவாக்ஷய: காலோ தாதாஹம் விச்வதோமுக:**

33. *அக்கரங் கட்கு ளகாரம தாவேன்*
*அம்ம புணர்க்கு மவைக்குளொர் தொந்தம்*
*எக்குறை வும்மிலாக் காலமும் யானே*
*எங்கும் முகமுள தாதையும் யானால்.* 405

எழுத்துக்களில் நான் அகரம்; புணர்ப்புக்களில் இரட்டைப் புணர்ப்பு; நான் அழிவற்ற காலம்; எப்பாரிசத்தும் சுமப்போன் யானே.

**ம்ருத்யு: ஸர்வஹரச்-சாஹ-முத்பவச்ச பவிஷ்யதாம்**
**கீர்த்தி:ஸ்ரீர்-வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர்-மேதா த்ருதி க்ஷமா**

34. எல்லா மழிக்கும் மிருத்தோ டுதிக்கு
மெவைக்கும் பிறப்பென் றெணப்பட் டனன்யான்
நல்லா ரினுக்குட் டிருப்பெண் புகழ்ச்சி
நலச்சொன் னினைப்புப் பொறைதீர மேதை. 406

எல்லாவற்றையும் அழிக்கும் மரணம் நான். எதிர்காலப் பொருள்களின் பிறப்பு நான். பெண்களிடத்து நான் கீர்த்தி, வாக்கு, நினைவு, மேதை, ஸ்திதி, பொறை.

**ப்ருஹத்ஸாம ததா ஸாம்னாம் காயத்ரீ ச்சந்தஸா-மஹம்**
**மாஸானாம் மார்க்கசீர்ஷோऽஹம் ருதூனாம் குஸுமாகர:**

35. பிருகத் தெனுஞ்சாமஞ் சாமத்தவ் வண்ணம்
பிறகாயத் திரியான்பல் சந்தங்க ளுள்ளும்
இருதுக்கு ளேதான் மலர்க்கான வேனல்
யான்மார் கழித்திங்கள் மாதங்க ளுள்ளே. 407

அங்ஙனமே, சாமங்களில் நான் "பிருகத் சாமம்" என்ற பெரிய சாமம்; சந்தஸ்களில் நான் காயத்திரி; மாதங்களில் நான் மார்கழி; பருவங்களில் மலர் சான்ற இளவேனில்.

**த்யூதம் ச்சலயதாமஸ்மி தேஜஸ்-தேஜஸ்வினா-மஹம்**
**ஜயோऽஸ்மி வ்யவஸாயோऽஸ்மி ஸத்வம் ஸத்வவதா-மஹம்**

36. வஞ்சக ருக்குட் சூதாவேன்
மற்றொள் ளியரு ளொட்பம் யான்
நன்செய மாவேன் றுணிபாவேன்
நான்சத் துவருட் சத்துவமே. 408

வஞ்சகரின் சூது நான். ஒளியுடையோரின் ஒளி நான். நான் வெற்றி; நான் நிச்சயம்; உண்மையுடையோரின் உண்மை நான்.

**வ்ருஷ்ணீனாம் வாஸுதேவோஸ்மி பாண்டவானாந் தனஞ்ஜய:**
**முனீனாமப்-யஹம் வ்யாஸ: கவீனா-முசனாகவி:**

37. யாதவர்க் குள்வசு தேவ ருக்குமகன்
ஆவல் பாண்டவரு ளர்ச்சுனன்
ஓதியோர் முநிவருளும் வியாசமுநி
யுசநசக் கவிஞன் கவியுள் யான். 409

விருஷ்ணி குலத்தாரில் நான் வாசுதேவன்; பாண்டவர்களில் தனஞ்ஜயன். முனிகளில் வியாசன்; கவிகளில் சுக்கிர கவி.

**தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம்**
**மௌனஞ் சைவாஸ்மி குஹ்யானாம் ஜ்ஞானம் ஜ்ஞானவதா-மஹம்**

*38. ஒறுப்ப வர்க்குளே தண்ட மாகுவேன்*
*உயர்செயம் விரும்பினரு ணீதி யான்*
*மறைப்பின் மோனமு மேயெனா வுளேன்*
*மதியு ளாருளே ஞானம் யானரோ. 410*

ஆள்வோரிடத்தே கோல் நான்; வெற்றியை விரும்புவோரிடத்தே நீதி நான்; ரகசியங்களில் நான் மௌனம்; ஞான முடையோரிடத்தே நான் ஞானம்.

**யச்சாபி ஸர்வபூதானாம் பீஜம் ததஹ-மர்ஜுன**
**ந ததஸ்தி விநா யத்ஸ்யான்-மயா பூதம் சராசரம்**

*39. அருச்சுன பிராணி முழுதிற்கும் மொரு வித்தென்*
*றாயதெது வோவதுவும் யானென னிலைத்தே*
*இருப்பன வியங்குவ பிராணி பலவற்றுள்*
*என்னொழிய வுள்ளவெது வேனுமது வில்லை. 411*

எல்லா உயிர்களிலும் விதை எதுவோ அது நான். அர்ஜுனா, சராசரங்களில் என்னை யின்றியுள்ள பூதமொன்றில்லை.

**நாந்தோ஽ஸ்தி மம திவ்யானாம் விபூதீனாம் பரந்தப**
**ஏஷதூத்தேசத:ப்ரோக்தோ விபூதேர்-விஸ்வதரோ மயா**

*40. என்றிப்பிய மாகும் விபூதி களுக்*
*கிறென்பது மில்லை பரந்தபனே*
*என்னிப்பல் விபூதி பரந்ததெனா*
*லிவணோ வொருவா றுரைசெய் ததுவாம். 412*

பார்த்தா, என் திவ்ய மகிமைகளுக்கு முடிவில்லை. விஸ்தாரமான என் மகிமைகளில் கொஞ்சம் மாத்திரம் உனக்குரைத்தேன்.

**யத்யத் விபூதிமத் ஸத்வம் ஸ்ரீமத்தூர்ஜித-மேவ வா**
**தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோ஽ம்ச-ஸம்பவம்**

*41. எவ்வெவ்வுள சீவன் விபூதியதோ*
*ஏறுந் திருவத்துட னின்புளதோ*
*அவ்வவ் வுயிரென் னொளியின் றுளியுற்*
*பவமே யெனநீ தெளிவெய் துவையால். 413*

எதெது பெருமையுடைத்து, உண்மையுடைத்து அழகுடைத்து. வலிமையுடைத்து-அது வெல்லாம் எனது ஒளியின் அம்சத்தில் பிறந்ததென்றுணர்.

**அதவா பஹுனைதேன கிம் ஜ்ஞாதேன தவார்ஜுன**
**விஷ்டப்ப்யாஹ-மிதம் க்ருத்ஸ்ன-மேகாம்சேன ஸ்த்திதோ ஜகத்**

*42. அருச்சுன வுனக்கினி மிகப்பட வழங்க*
*லாய வறிவீது புகவேது பயனுண்டிவ்*
*வுருக்கொளுல கத்தனையு மென்வலிமை தம்மு*
*ளொன்றினோர் துளித்து ணையி னன்றுகொ டிருப்பேன். 414*

அன்றி, இதைப் பலவாறாகத் தெரிவதில் உனக்குப் பயன் யாது? எனது கலையொன்றால் இவ்வையகத்தை நிலைநிறுத்தியுள்ளேன்.

*பத்தாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## கீதைப் பொருட்டொகை

*அன்பு விளைத்துவளர்த் தற்குப் பயன்படுந்தே*
*வின்ப நிறைகுணங்க ளென்பதையும் – மன்பதைகள்*
*எல்லாம் பரற்கே யினிதுவய மென்பதையும்*
*பல்லா றுரைப்பதுநற் பத்து.*

# கீதைப் பாட்டு

## பதினொன்றாம் அத்தியாயம்

## விசுவரூப தரிசன யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

பதினொன்றினில் விசயன் பரமேசன் படிகாண
அதிதிப்பிய விழிதந்த துரைத்தவ் விதமவனை
எதிர்காணு வதற்கும் மடைதற்கும் மிவணேது
முதிர்பத்திமை யொன்றேயென மொழிகிற்பது மாதோ.

இங்ஙனம் கண்ணனுடைய பெருமைகளைக் கேட்ட அர்ஜுனன் அவற்றை நேரில் காண வேண்டுமென்ற விருப்பமுற்றுக் கண்ணனை வேண்ட அவர் அவற்றைக் காண்பதற்குரிய திவ்ய நேத்திரங்களை அளிக்கிறார். அர்ஜுனன் அவற்றால் கண்ணனுடைய விசுவரூபத்தைக் கண்டு மகிழ்கிறான். விசுவரூபத்தின் சொரூபம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அநேக வாய்களும், பல கண்களும், பல ஆயுதங்களும், சிறந்த ஆடை ஆபரணங்களும், சிறந்த வாசனைகளும் பொருந்திய அந்த விசுவரூபத்தில் வையக முழுதும் ஒருங்கே அடங்கியிருப்பதைக் கண்ட அர்ஜுனன் வியப்புற்றுக் கண்ணனைத் துதிக்கிறான். பிறகு அர்ச்சுனனது வேண்டுகோளின் பேரில், கண்ணன் தமது விசுவரூபத்தைச் சுருக்கிக்கொண்டு, முன்போல் கைகளில் சாட்டையும் சங்கு சக்கரங்களையுமேந்தி நின்று, தமது உண்மையான சொரூபத்தைக் காணவும் தம்மைப்பெறவும் பக்தி ஒன்றே சிறந்த மார்க்கமாதலால் தம்மையே நேசித்திருக்கும்படி அர்ச்சுனனுக்கு உபதேசிக்கிறான்.

அர்ஜுன உவாச :

**மதனுக்ரஹாய பரமம் குஹ்ய-மத்யாத்ம-ஸம்ஜ்ஞிதம்**
**யத் த்வயோக்தம் வசஸ்-தேன மோஹோऽயம் விகதோ மம**

1. எனையருள வத்யாத்தும மெனவொர் பேர்கொள்
எதுதலை மையோ டிரகசியமு மாய
துனது முகன் வந்த தநுமொழியி னாலே
உளவெனது மோகம் இதுதொலைவ தம்ம. 415

**அர்ஜுனன் சொல்லுகிறான் :**

என் மீதருள் பூண்டு, எனக்கிரங்கி, ஆத்ம ஞானமென்ற பரம ரகசியத்தை நீ எனக்கு உரைத்தது கேட்டு, என் மயக்கம் தீர்ந்துபோயிற்று.

**பவாப்யயௌ ஹி பூதானாம் ச்ருதௌ விஸ்தரசோ மயா**
**த்வத்த: கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம்**

2. முந்தா யுயிருன்க ணொடுங்குவதும்
முடியா துளமான் மியமும் விரிவாய்ச்
செந்தாமரை வள்ளிதழ்போல் விழியாய்
செவியின் கணெனாற் கொளலாய தெனோ. 416

உயிர்களின் தோற்றத்தையும் அழிவையும்பற்றி விரிவுறக் கேட்டேன். தாமரை யிதழ்போன்ற விழிகளையுடையோய், நின் கேடற்ற பெருமையையுங் கேட்டேன்.

**ஏவமேதத் யதாத்த த்வ-மாத்மானம் பரமேச்வர**
**த்ரஷ்டு-மிச்சாமி தே ரூப-மைச்வரம் புருஷோத்தம**

3. உனையெப்படி யோதினை நீபரமேச்
சுரவப்படி யாம்புரு டோத்தம வீ
துனதீச்சுர நீர்மையி னுக்குரிதா
முருவைத் தரிசிக்க வுளம் விழைவேன். 417

பரமேசுவரா, புருஷோத்தமா, ன்னைப்பற்றி நீ எனக்குச் சொல்லியபடியே, நின் ஈசுவர ரூபத்தைக் காண விரும்புகிறேன்.

**மன்யஸே யதி தச்-சக்யம் மயா த்ரஷ்டுமிதி ப்ரபோ**
**யோகேச்வர ததோ மே த்வம் தர்சயாத்மான-மவ்யயம்**

4. அந்தப் படிவம் விழிகாண வெனா
லாமொன்று நினைத்தி யெனிற் பிறகு
முந்தைப் பிரபாகிய யோகிறைவா
முற்றுந் தரிசிப்பி யெனக்குனைநீ. 418

இறைவனே, யோகேசுவரா, அதை நான் காணுதல் சாத்தியமென்று நீ கருதுவாயெனில், என்க்கு நின் அழிவற்ற ஆத்மாவைக் காட்டுக

*ஸ்ரீ பகவானுவாச :*

**பச்யமே பார்த்த ரூபாணி சதசோSத ஸஹஸ்ரச:**
**நாநாவிதானி திவ்யானி நானாவர்ணாக்ருதீனி ச**

5. ஒருநூறு விதமன்றி யோராயிரங்கூ
றுளபற்பல் திவியத்தி னுளபற்பல் வண்ணம்
பெருகுற்ற வடிவத்தி னுளவென்ற னுருவம்
பிருதைக்கு மகனாகி வரலுற்ற வாபார். 419

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

பல நூறாகவும், பல்லாயிரமாகவும், வகை பல, நிறம் பல, அளவு பலவாகும் என் திவ்ய ரூபங்களைப் பார்! பார்த்தா.

**பச்யாதித்யான் வஸூன் ருத்ரா-னச்வினௌ மருதஸ்-ததா**
**பஹூன்-யத்ருஷ்ட-பூர்வானி பச்யாச்சர்யாணி பாரத**

6. ஆதித்தர் வசுக்கட மோடுமுருத்
திரரச் சினி தேவர் மருத்தருடன்
ஓதற்படி பாரத பார் முன்விழி
யோராதுள வற்புத மோபலபார். 420

ஆதித்யர்களைப் பார்; வசுக்களைப் பார்; அசுவினி தேவரைப் பார்; மருத்துக்களைப் பார்; பாரதா, இதற்கு முன் கண்டிராத பல ஆச்சரியங்களைப் பார்.

**இஹைகஸ்த்தம் ஜகத் க்ருத்ஸ்னம் பச்யாத்ய ஸ-சராசரம்**
**மம தேஹே குடாகேச யச்சான்யத்-த்ரஷ்டு-மிச்சஸி**

7. நிதமுந்துயில் வென்றவ நின்றசரா
சரநீடிய யாவகை லோகமும்வே
றெதுகாண விரும்புதியோ எதையும்
என்மெய்யிதி னோர்புடை காணிவணே. 421

அர்ஜுனா, இன்று, இங்கே, என்னுடலில் சராசரமான உலகம் முழுதும் ஒருங்கு நிற்பதைப் பார்; இன்னும் வேறு நீ எதைக் காண விரும்பினும், அதை இங்கு காண்.

**ந து ம ாம் சக்யஸே த்ரஷ்டு-மனேனைவ ஸ்வ-சக்ஷு ஷா**
**திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோக-மைச்வரம்**

8. உனகண் ணிவையே கொடுமற் றெனைநோக்
குறவோ வியல்கிற் கிலைதிப் பியமே
யினதாகிய கண்ணை யளிப்பனினக்
கெனதீச்சுர நீர்மமையின் யோகிது பார். 422

உன்னுடைய இயற்கையான இக் கண்களால் என்னைப் பார்க்க முடியாது. உனக்கு ஞானக் கண் கொடுக்கிறேன். என்னுடைய ஈசுவர யோகத்தைப் பார்.

***ஸஞ்ஜய உவாச :***

**ஏவமுக்த்வா ததோ ராஜன் மஹா யோகேச்வரோ ஹரி:**
**தர்சயாமாஸ பார்த்தாய பரமம் ரூபமைச்வரம்**

9. அரியாய மகத்துவ யோகிறைவன்
அரசேயிது சொற்றதன் பின்பிருதைக்
கொருசேய் தரிசிக்க வளித்தனனீச்
சுரநீர் மையினோ டுயர்வா முருவே. 423

***சஞ்ஜயன் சொல்லுகிறான் :***

அரசனே, இவ்வாறுரைத்துவிட்டு, அப்பால் பெரிய யோகத் தலைவனாகிய ஹரி பார்த்தனுக்கு மிக உயர்ந்த தன் கடவுள் வடிவைக் காட்டினான்.

**அநேக வக்த்ரநயன-மநேகாத்புத-தர்சனம்**
**அநேக திவ்யாபரணம் திவ்யாநேகோத்யதாயுதம்**

10. ஒன்றல்பல கண்கள்முக மொன்றல்பல வற்புதமொ
டொன்றல்பல பார்வை களுமாய்
ஒன்றல்பல திப்பியம் உடைக் கலன் எடுத்தபடை
ஒன்றல் பல திப்பியமு மாய். 424

(அவ்வடிவம்) பல வாய்களும் பல விழிகளுமுடையது; பல அற்புதக் காட்சிகளுடையது; பல திவ்யாபரணங்கள் பூண்டது; பல தெய்விகப் படைகள் ஏந்தியது.

**திவ்ய-மால்யாம்பர-தரந் திவ்ய-கந்தானுலேபனம்**
**ஸர்வாச்சர்யமயந் தேவம் அனந்தம் விச்வதோமுகம்**

*11. திப்பிய மாகிய தார்துகில் பூண்டு*
*திப்பிய சந்தனம் பூசி யெலாமும்*
*அற்புத மேமய மாயொளி வீசி*
*யந்த மிலாதெங் கணும்முக மாகி.* 425

திவ்ய மாலைகளும் ஆடைகளும் புனைந்தது; திவ்ய கந்தங்கள் பூசியது; எல்லா வியப்புக்களும் சான்றது; எல்லையற்றது; எங்கும் முகங்களுடைய தேவரூபம்.

**திவி ஸூர்ய-ஸஹஸ்ரஸ்ய பவேத்யுகப-துத்திதா**
**யதி பா: ஸத்ருசீ ஸா-ஸ்யாத் பாஸஸ்-தஸ்ய மஹாத்மன:**

*12. ஆயிரவர் சூரியர்கள் சோதியொரு போதே*
*யவ்விணி னுதித்துவர லாகுமெனி னங்கண்*
*மேயவொளி பேருயிரெனப்படு மவன்றன்*
*வீறொளி பொரும்மெனின் னதும்பொருவு மேயோ.* 426

வானத்தின் ஒருங்கே ஆயிரம் இரவிகள் எழுவாராயின், அங்கு தோன்றும் ஒளியை அந்த மகாத்மாவின் ஒளிக்கு நிகராகக் கூறலாம்.

**தத்ரைகஸ்த்தம் ஜகத் க்ருத்ஸ்னம் ப்ரவிபக்த-மனேகதா**
**அபச்யத்-தேவதேவஸ்ய சரீரே பாண்டவஸ்-ததா**

*13. பாண்டு விற்கொரு சேயவ் வேளையிற்*
*பலசுரர்க்குமே தெய்வ மாமவன்*
*பூண்ட மெய்யினோர் புடையி னோக்கினான்*
*புவனம் யாவும் பற்பல பிரிப்பொடே.* 427

அங்கு பல பகுதிப்பட்டதாய், வையக முழுதும், அந்தத் தேவ தேவனுடைய சரீரத்தில் ஒருங்குற்று நிற்பதை அப்போது பாண்டவன் கண்டான்.

**தத: ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தனஞ்ஜய:**
**ப்ரணம்ய சிரஸா தேவம் க்ருதாஞ்ஜலி-ரபாஷத**

*14. பின்னத் தனஞ்சயன் வியப்பின் முழுகுற்றுப்*
*பெரிதுந்தன் மேனிமயிர் குச்செறிய நின்று*
*சென்னித் தலங்கொடு தெய்வத்தினை வணங்கிச்*
*செங்கைக்க ணஞ்சலி செயாவுரை செய்தானால்.* 428

அப்போது தனஞ்ஜயன் பெரு வியப்பெய்தி, மயிர் சிலிர்த்து, அக் கடவுளை முடியால் வணங்கிக் கைகளைக் கூட்"பிக்கொண்டு சொல்லுகிறான்.

**அர்ஜுன உவாச :**

**பச்யாமி தேவான்ஸ்-தவ தேவ தே ஹே**
**ஸர்வான்ஸ்-ததா பூதவிசேஷ ஸங்க்கான்**
**ப்ரஹ்மாண-மீசங் கமலாஸனஸ்த்தம்**
**ருஷீம்ச்ச ஸர்வா-னுரகாம்ச்ச திவ்யான்**

15. *அமரர் யாரு மவிதமெவர் முநிவரும்*
*அகில சீவர்பல் கணமொடு பிரமனும்*
*கமல வாசன னிடனுள தலைவனுங்*
*கடவுளோர் பலுன்மெயில் விணினுரகரும்.* 429

**அர்ஜுனன் சொல்லுகிறான்:**

தேவனே, நின் உடலில் எல்லாத் தேவர்களையும் காண்கிறேன். பூத வகைகளின் தொகுதிகளைக் காண்கிறேன். தாமரை மலரில் வீற்றிருக்கும் ஈசனாகிய பிரமனையும், எல்லா ரிஷிகளையும் தேவ சர்ப்பங்களையும் இங்கு காண்கிறேன்.

**அனேக பாஹூதரவக்த்ர-நேத்ரம்**
**பச்யாமி த்வாம் ஸர்வதோSனந்த-ரூபம்**
**நாந்தம் ந மத்த்யம் ந புனஸ்-தவாதிம்**
**பச்யாமி விச்வேச்வர விச்வரூப**

16. *அனைத்து நியமிப்பவ வனைத்துமெய் யமைத்தோய்*
*அளப்பில முகத்தின் விழியிற்கையின் வயிற்றின்*
*இணைத்தென விலாவடி வுனைத்தெரிவ லெங்கும்*
*ஈறுநடு மற்றுமுதல் தேறுகில னிற்கே.* 43)

பல தோளும், பல வயிறும், பல வாயும், பல விழிகளுமுடைய எல்லையற்ற வடிவிலே நின்னை எங்கணும் காண்கிறேன். எல்லாவற்றுக்கும் ஈசனே, எல்லாந் தன் வடிவாகக் கொண்டவனே, உனக்கு முடிவேனும், இடையேனும், தொடக்கமேனும் காண்கிலேன்.

**கிரீடினங் கதினஞ் சக்ரிணச் ச**
**தேஜோராசிம் ஸர்வதோ தீப்திமந்தம்**
**பச்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்**
**தீப்தானலார்க்க-த்யுதி-மப்ரமேயம்**

17. *சோதிமய வெள்ள மெவணுஞ் சுடர வெங்குஞ்*
*சூழவொளி ரங்கியிர விக்கொளிர்வை யாகி*
*யாதுமள வின்றிவிழி காணரிய நின்னை*
*யானறிவல் மோலிகதை யாழியுள னென்றே.* 431

மகுடமும் தண்டும் 'வலயமும் தரித்தாய், ஒளித் திரளாகி யாங்கணும் ஒளிர்வாய். தழல் படு தீயும் ஞாயிறும் போல அளவிடற் கரியதாக நினைக் காண்கிறேன். [வலயம் - சக்கரம்]

**த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம்**
**த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம்**
**த்வமவ்யய: சாச்வத-தர்ம-கோப்தா**
**ஸனாதனஸ்-த்வம் புருஷோ மதோ மே**

18. *தெரிதற் குரிதா முயரக் கரநீ*
*செகனிம் முழுதுக் குயர்புக் கிலுநீ*
*திரதன்ம மளித்திற வாயு மநா*
*தியுநீ புருட னெனலென் மதமே.* 432

அழிவிலாய், அறிதற்குரியனவற்றில் மிகவுஞ் சிறந்தாய்; வையத்தின் உயர் தனி உறையுளாவாய்; கேடிலாய்; என்று மியல் அறத்தினைக் காப்பாய்; 'சநாதன புருஷன்' நீயெனக் கொண்டேன்.

**அனாதி-மத்த்யாந்த-மனந்தவீர்ய-**
**மனந்தபாஹும்சசி-ஸூர்ய-நேத்ரம்**
**பச்யாமி த்வாம் தீப்தஹுதாச-வக்த்ரம்**
**ஸ்வதேஜஸா விச்வமிதம் தபந்தம்**

19. *அடியுமிடை முடியு மரியை யளவில்வலி*
*அளவில் புயமொடொளி ரழன் முகத்*
*துடுவிறைகிரவி விழியை யிவை முழுதுன்*
*னொளினடுவை நிணையுறுவல் கண்.* 433

ஆதியும் நடுவும் அந்தமு மில்லாய், வரம்பிலா விறலினை; கணக்கிலாத் தோளினை; ஞாயிறுந் திங்களு நயனமாக் கொண்டனை; எரியுங்கனல் போலியலு முகத்தினை; ஒளியால் முழுமையுலகையும் கொளுத்துவாய்; இங்ஙன முன்னைக் காண்கிறேன்.

**த்யாவா-ப்ருதிவ்யோ-ரித-மந்தரம் ஹி**
**வ்யாப்தந் த்வயைகேன திசச்ச ஸர்வா:**
**த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம்**
**லோகத்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மன்**

20. *தரையும் விணுமிவையி னிடைகொள் திசைமுழுதுந்*
*தழுவும் பெரியவுயி ரொருநினால்*
*திரிபுவன நின்வெருள் விளையும திசயமெய்*
*திகழுமிது தெரிபு பதறுமே.* 434

வானத்துக்கும் பூமிக்கும் நடுவேயுள்ள இடைவெளியும் எல்லாத் திசைகளும் நின்னால் நிரப்புற்றிருக்கின்றன. உன்னுடைய அற்புதமும் உக்கிரமான இவ்வடிவத்தைக் கண்டு மூன்று உலகங்களும் சோர்வெய்துகின்றன.

**அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விசந்தி**
**கேசித்-பீதா: ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி**
**ஸ்வஸ்தீத்-யுக்த்வா மஹர்ஷி-ஸித்த-ஸங்க்கா:**
**ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி:**

21. *சுரர்கள் குழுவோ விவைஃளுனை யடைவ சில்லோர்*
*தொழுகை தலையேறலொடு துதிசெய்குந ரஞ்சிப்*
*பொருள்கொள் புகழானிறைய மகருசியர் சித்தர்*
*பொலிகவென-வேபரவி யிசைபொழிவர் தொக்கே.* 435

இந்த வானவர் கூட்டமெல்லாம் நின்னுள்ளே புகுகின்றது. சிலர் அச்சமெய்தி நின்னைக் கைகூப்பிப் புகழ்கின்றனர். மகரிஷிகளும் சித்தர்களுமாகிய கூட்டத்தார் நின்னை வண்மையுடைய புகழுரைகள் சொல்லிப் புகழ்கின்றார்.

**ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்த்யா**
**விச்வேடச்விஔள மருதச்சோஷ்மபாச்ச**
**கந்த்தர்வ-யக்ஷாஸுர-ஸித்தஸங்க்கா**
**வீக்ஷந்தே த்வாம் விஸ்வமிதாச்சைவ ஸர்வே**

22. *வசுருத்திரர் சாத்தியரார் விசுவர்*
*மருதச்வினி சூரியர் கந்தருவர்*
*அசுரர் பிதுர் யக்கர்கள் சித்தர் கணம்*
*அதியற்புத மாயுனை நேர்க்கு மெலாம்.* 436

ருத்திரர், ஆதித்யர், வசுக்கள், சாத்யர், விசுவே தேவர், அசுவினி தேவர், மருத்துக்கள், உஷ்மபர், கந்தர்வர், யக்ஷர், அசுரர், சித்தர், இக்கூட்டத்தார்களெல்லாரும் நின்னை வியப்புடன் நோக்குகின்றனர். [இங்கு கூறப்படும் ருத்திரர் முதலாயினோர் தேவ வகுப்புக்களாவார்]

**ரூபம் மஹத் தே பஹுவக்த்ர-நேத்ரம்**
**மஹாபாஹோ பஹு பாஹூருபாதம்**
**பஹூதரம் பஹு-தம்ஷ்ட்ராகராளம்**
**த்ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதிதாஸ்-ததாஹம்**

*23. பலமுகங் கள்கண் பலகை யூருகால்*
*பலவயிற்றி னீளிய வளைந்தபற்*
*பலகொணின் பெரும்படிவு கண்டுபார்*
*பதறுறும் பெரும் புயவவ் வாறியான்.* 437

பெருந்தோளாய், பல வாய்களும், விழிகளும், பல கைகளும், பல கால்களும், பல வயிறுகளும் பல பயங்கரமான பற்களுமுடைய நின் பெருவடிவைக் கண்டு, உலகங்கள் நடுங்குகின்றன. யானும் அங்ஙனமே

**நப: ஸ்ப்ருசம் தீப்த-மனேக-வர்ணம்**
**வ்யாத்தானனந்த தீப்த-விசால-நேத்ரம்**
**த்ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதி தாந்தராத்மா**
**த்ருதிந் ந விந்தாமி சமஞ்ச விஷ்ணோ**

*24. பரவா னளாவிச் சுடர்வீசி வண்ணம்*
*பலவாகி யங்காந் துளவாயி னீள்கண்*
*எரிகாலு நிற்கண் டிதயந் நடுங்கி*
*யிறைவாமெய் வன்மையொடு சாந்தி யெய்தேன்.* 438

வானைத் தீண்டுவது, தழல்வது, பல வர்ணங்களுடையது, திறந்த வாய்களும் கனல்கின்ற விழிகளுமுடையது, இனைய நின் வடிவத்தைக் கண்டு விஷ்ணுவே, எனக்கு நிலைகொள்ளவில்லை, யான் அமைதி காணவில்லை.

தம்ஷ்ட்ராகராளானி ச தே முகானி
த்ருஷ்டைவவ காலானல-ஸந்நிபானி
திசோ ந ஜானே ந லபே ச சர்ம
ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ

*25. பிரளயத்தெரி நிகர்வுற வொளியெறி*
*பிறழெயிற் றினின்முகம் விழிகொடு திசை*
*தெரிவதற்கிலை மகிழ்வது மிலைபுவி*
*திகழ வைத்தவ சுரரிறை யருள்வையே.* 439

அஞ்சு தரும் பற்களை யுடைத்தாய், ஊழித் தீ போன்ற நின் முகங்களைக் கண்ட அளவிலே, எனக்குத் திசைகள் தெரியவில்லை; சாந்தி தோன்றவில்லை. தேவர்களின் தலைவனே: வையகத்துக்கு உறைவிடம் ஆவாய்; அருள் செய்க.

**அமீ ச த்வாந் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:**
**ஸர்வே ஸஹைவாவனிபால-ஸங்க்கை:**
**பீஷ்மோ த்ரோண: ஸூதபுத்ரஸ்-ததாஸௌ**
**ஸஹாஸ்மதீயை-ரபி யோதமுக்க்யை:**

*26. திருத ராட்டிரன் மகாரென வுளாரிவ ரெலாஞ்*
*செகமளிப் பவர்கணன் முழுதொடும் மதுவிதம்*
*துரோணர் வீடுமரொடிச் சூதபுத்தி ரனொடுநீ*
*தொகமுனைத் தலைவராய் நமிலுளா ருடனுமே.* 440

இந்தத் திருதராஷ்டிரனின் மக்களெல்லாரும் மற்ற அரசக் கூட்டத்தார்களுடன் நின்னுள்ளே (புகுகின்றனர்), பீஷ்மனும், துரோணனும், சூதன் மகனாகிய இந்தக் கர்ணனும், நம்முடைய பக்கத்து முக்கிய வீரர்களும்.

**வக்த்ராணி தே த்வரமாணா விசந்தி**
**தம்ஷ்ட்ராகராளானி பயானகானி**
**கேசித் விலக்னா தசனாந்தரேஷு**
**ஸந்த்ருச்யந்தே சூர்ணிதை-ருத்தமாங்கை:**

*27. கோரப்பல் பிறழ்ந்து பயங்கிளருன்*
*கோள்வாய் விரைவாய் நுழைகிற் பர்சிலர்*
*நேரிற் றுகள்பட்ட சிரங்களுடன்*
*னீள்பல்லிடை யொட்டினர் காணுவரால்.* 441

கொடிய பற்களுடைய பயங்கரமான நின் வாய்களில் விரைவுற்று வீழ்கின்றனர். சிலர் நின் பல்லிடைகளில் அகப்பட்டுப் பொடிபட்ட தலையினராகக் காணப்படுகின்றனர்.

**யதா நதீனாம் பஹவோSம்பு-வேகா:**
**ஸமுத்ர-மேவாபிமுகா த்ரவந்தி**
**ததா தவாமீ நரலோகா வீரா**
**விசந்தி வக்த்ராண்-யபிவிஜ்லந்தி**

*28. நதிமேய பலவாய புனல்வேக மெவ்வாறு*
*நரலைக்கு முகமாக வேயோடுமோ*
*அதுபோல நரலோக மதிவீர ரினையோர்நின்*
*னழல்வீசு சுடர்வாயி னுழைவாரரோ.* 442

பல ஆறுகளின் வெள்ளங்கள் கடலையே நோக்கி வந்து வீழ்வதுபோல், இந்த நரலோக வீரர் நின் சுடர்கின்ற வாய்களில் வந்து வீழ்கின்றனர்.

**யதா ப்ரதீப்தம் ஜ்வலனம் பதங்கா**
**விசந்தி நாசாய ஸம்ருத்தவேகா:**
**ததைவ நாசாய விசந்தி லோகாஸ்-**
**தவாபி வக்த்ராணி ஸம்ருத்த-வேகா:**

*29. எவ்வாறு பதங்க நிறைந்து விரைந்*
*தெரியுஞ் சுடரிற் கெடுமாறு புகும்*
*அவ்வா றெனவே யுலகோர் கெடுமா*
*றதிவேகமுடன் புகுவார்க ணின்வாய்.* 443

விளக்குப் பூச்சிகள் மிகவும் விரைவுடனெய்தி எரிகின்ற விளக்கில் வீழ்ந்து நாசமுறுதல் போலே, உலகங்கள் மிகவும் விரைவுடன் நின் வாய்களில் வந்து விழுந்து நாசமடைகின்றன.

**லேலிஹ்யஸே க்ரஸமான: ஸமந்தாத்**
**லோகான் ஸமக்ரான் வதனைர்-ஜ்வலத்பி:**
**தேஜோபி-ராபூர்ய ஜகத்-ஸமக்ரம்**
**பாஸஸ்-தவோக்ரா: ப்ரதபந்தி விஷ்ணோ**

*30. எரிவாய் களினா லுலகங்க ளெலாம்*
*இறைவா பருகிப் புறனக் குதியுன்*
*விரியுக்கிர வெல்லொளி லோகமெலாம்*
*வியாபிப் பதனோடு வெதுப்புமரோ.* 444

கனல்கின்ற நின் வாய்களால் எப்புறத்தும் எல்லா உலகங்களையும் நீ தீண்டுகிறாய். விஷ்ணு! நின் உக்கிரமான சுடர்கள் தங் கதிர்களால் வைய முழுவதையும் நிரப்பிச் சுடுகின்றன.

**ஆக்க்யாஹி-மே கோ பவா-னுக்ரரூபோ**
**நமோऽஸ்து தே தேவவர ப்ரஸீத**
**விஜ்ஞாது-மிச்சாமி பவந்த-மாத்யம்**
**ந ஹி ப்ரஜானாமி தவ ப்ரவ்ருத்திம்**

*31. அதிபயங் கரமெயா யாரைநீ சொல்லெனக்*
*கருள்வை நிற்றெண்ட னிட்டேன் சுரர்க்கரியவ*
*மதிகொள வில்லனன் றோவிவண் நின்செயல்*
*மனம்விரும் புவன்முதற் பொருணினைத் தெரியவே.* 445

உக்கிர ரூபத் தரித்த நீ யார்? எனக்குரைத்திடுக, தேவர்களிற் சிறந்தாய், நின்னை வணங்குகிறேன். அருள் புரி, ஆதியாகிய உன்னை அறிய விரும்புகிறேன். இங்கு உனது தொழிலை அறிகிலேன்.

*ஸ்ரீ பகவானுவாச :*

**கலோऽஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ**
**லோகான் ஸமாஹர்த்து-மிஹ ப்ரவ்ருத்த:**
**ருதேऽபி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே**
**யேऽவஸ்த்திதா: ப்ரத்யனீகேஷுயோதா:**

*32. கணனஞ்செய் வனானேன் புவிகுறை யும்படி புரிவேன்*
*கழிபல்லுயி ரடநேரிவ ணெழுவேனுரு மிகுவேன்*
*அணிநின்றெதிர் படையின்னிகன் முனைகின்றவ ரேவர்*
*அனைவோர்களு மிலராகுவ ரமர்நீ யொழியினுமே.* 446

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

உலகத்தை அழிக்கத்தலைப்பட்ட காலமே நான் மனிதர்களை இங்குக் கொல்லத் தொடங்கியுள்ளேன். இங்கிரு திறத்துப் படைகளிலே நிற்கும் போராட்கள் அனைவரினும் உன்னைத் தவிர வேறு யாரும் மிஞ்சமாட்டார்கள்.

**தஸ்மாத் த்வமுத்திஷ்ட்ட யசோ லபஸ்வ**
**ஜித்வா சத்ரூன் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம்**
**மயைவைதே நிஹதா: பூர்வமேவ**
**நிமித்த-மாத்ரம் பவ ஸவ்யஸாசின்**

*33. நிலைமற்றிதி னெழுவாய்பகை வெல்லுற்றிசை புனையாய்*
*நிறைவுற்றபல் வளமா ரரசிது துய்க்குவை நீதான்*
*தொலைவுற்றனர் முனமேயிவ ணெதிர்நிற்ப ரெனாலே*
*துணைமட்டினு மாவாய்கணை யிடனுய்க்கவும் வல்லாய்.* 447

ஆதலால் நீ எழுந்து நில்; புகழெய்து; பகைவரை வென்று செழிய ராஜ்யத்தை ஆள். நான் இவர்களை ஏற்கெனவே கொன்றாய்விட்டது. *இடக்கை வீரா, நீ வெளிக் காரணமாக மட்டும் நின்று தொழில் செய். [இடக்கை வீரன் - இது பார்த்தன் பெயர்]

**த்ரோணஞ் ச பீஷ்மஞ் ச ஜயத்ரதஞ் ச**
**கர்ணந் ததான்யா-னபி யோதவீரான்**
**மயா ஹதான்ஸ்-த்வம் ஜஹி மா வ்யதிஷ்ட்டா**
**யுத்த்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்னான்**

*34. என்றனா லதமுண்ட கன்னனொடுந்*
*துரோண னொடுச்சயத்*
*திரதன் வீடுமனென வுளாரையு*
*மின்னவா றிகல்வீரராய்*
*நின்ற வந்நியர் தம்மையுங்கொல்வை*
*நீகளத்தயர் வெய்தலை*
*நேரெதிர்ந்த வொனாரை வெல்குவை*
*போர்தொடங்குவை யாவையால்.* 448

துரோணனையும், பீஷ்மனையும், ஜயத்ரதனையும், கர்ணனையும் மற்ற யுத்த வீரர்களையும் நான் கொன்றாய் விட்டது. (வெளிப்படையாக) நீ கொல். அஞ்சாதே; போர் செய்; செருக்களத்தில் நின் பகைவரை வெல்வாய்.

*ஸஞ்ஜய உவாச :*

**ஏதச்-ச்ருத்வா வசனம் கேசவஸ்ய**
**க்ருதாஞ்ஜலிர்-வேபமான: கிரீடீ**
**நமஸ்க்ருத்வா பூய ஏவாஹ க்ருஷ்ணம்**
**ஸகத்கதம் பீதபீத: ப்ரணம்ய**

*35. உறுகேசவன் வாய்மொழி யின்னதுகேட்*
*டொருகண்ணனை முன்றொழு தஞ்சிவெரீஇ*
*மறுகாலடி வீழ்ந்து கைகூம்பவொலி*
*வாய்தீதம்ப நடுங்கு கிரீடி சொல்வான்.* 449

*சஞ்ஜயன் சொல்லுகிறான் :*

கேசவன் சொல்லிய இவ்வார்த்தையைக் கேட்டுப் பார்த்தன் மெய்ந் நடுக்கத்துடன் அஞ்சலி புரிந்தான். மீட்டும் கண்ணனை நமஸ்காரம் பண்ணி, அச்சத்துடன் வாய் குழறி வணங்கிச் சொல்லுகிறான்.

அர்ஜுன உவாச :

**ஸ்த்தானே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா**
**ஜகத் ப்ரஹ்ருஷ்யத்-யனுரஜ்யதே ச**
**ரக்ஷாம்ஸி பீதானி திசோ த்ரவந்தி**
**ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்க்கா:**

36. இருடி கேசநின திசையினான் மகிழ்வர்
இனிமை கூர்வ ருலகோர்திசை
வெருவி யோடுவ ரரக்கர் சித்தர்கண
மிகவணங்கு முழுதுந் தகும். 450

அர்ஜுனன் சொல்லுகிறான் :

இருஷீகேசா, உன் பெருங்கீர்த்தியில் உலகங் களிப்பதும் இன்புறுவதும் பொருந்தும். ராட்சதர் அச்சமுற்றுத் திசைகளில் மறைகிறார்கள். சித்தக் குழாத்தினர் அனைவரும் நின்னை வணங்குகிறார்கள். [இருஷீகேசன் - இது கண்ணன் பெயர்]

**கஸ்மாச்ச தே ந நமேரன் மஹாத்மன்**
**கரீயஸே ப்ரஹ்மணோऽப்யாதிகர்த்ரே**
**அனந்த தேவேச ஜகந்நிவாஸ**
**த்வமக்ஷரம் ஸதஸத்-தத்பரம் யத்**

37. சுரரீச வநந்தா செகன்வாச மமர்ந்தோய்
தொலையாவுயிர் சதசத்தவை மேலெதுவதுநீ
பெரியோனு மயற்கும் முதலுந் தலைவனுமாம்
பெருமாவுயிர் நின்னை யெவனோ தொழல் செய்யார். 451

மகாத்மாவே, நின்னை எங்ஙனம் வணங்காதிருப்பார்? நீ ஆதி கர்த்தா. பிரம்மனிலும் சிறந்தாய். அநந்தா, தேவேசா, வையத்தின் உறைவிடமே, நீ அழிவற்ற பொருள்; நீ சத்; நீ அசத்; நீ அவற்றைக் கடந்த பிரம்மம்.

**த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்-**
**த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம்**
**வேத்தாஸி வேத்யஞ் ச பரஞ் ச தாம**
**த்வயா ததய விச்வ-மனந்தரூப**

38. ஆதியங் கடவுளி புருடனி பழையனி
அகிலலோ கம்பினவக் குயரும்வைப் பிடமுநீ
நீதெரிந்தவன் தெரிந்ததுவு மெல்லாநினால்
நிறைபுமா ளவின் மெய்யாய் பரந்தாமனே. 452

நீ ஆதிதேவன், தொல்லோன், நீ இந்த அகிலத்தின் பரம நிலையம்; நீஅறிவோன், நீ அறிபடு பொருள். நீ பரமபதம். அநந்த ரூபா, நீ இவ்வுலகினுட் பரந்து கிடக்கிறாய்.

**வாயுர்-யமோSக்னிர்-வருண: சசாங்க:**
**ப்ரஜாபதிஸ்-த்வம் ப்ரபிதாமஹச்ச**
**நமோ நமஸ்தேSஸ்து ஸஹஸ்ர-க்ருத்வ:**
**புனச்ச பூயோSபி நமோ நமஸ்தே**

*39. வாயுவு முயலுடன் மதியெமன் றீயொடு*
*வருணனும் பிரமனும் பிரபிதா மகனுநீ*
*ஆயிரந் தரநமோ நமவுனக் காகுக*
*அதிகமுந் திருமவுமே நமோ நமவரோ.* 453

நீ வாயு, யமன், அக்கினி, வருணன், சந்திரன்; முப்பாட்டனாகிய பிரம்மன் நீ. உன்னை ஆயிரமுறை கும்பிடுகிறேன், மீட்டு மீட்டும் உனக்கு "நமோ நம"

**நம: புரஸ்தா-தத ப்ருஷ்ட்டதஸ்தே**
**நமோSஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ**
**அனந்த-வீர்யாமித-விக்ரமஸ்-த்வம்**
**ஸர்வம் ஸமாப்னோஷி ததோSஸி ஸர்வ:**

*40. நிற்குநம முன்னுமதன் மேலுமொரு பின்னும்*
*நிற்குநம வெங்குமுள தெங்கணு முளோயே*
*விக்கிரம மெண்ணரியை வீரிய மிறாதாய்*
*மேவெவையு நின்கணிறும் ஆனவையதி னெல்லாம்.* 454

உன்னை முன் புறத்தே கும்பிடுகிறேன்; உன்னைப் பின் புறத்தே கும்பிடுகிறேன். எல்லாமாவாய், உன்னை எப்புறத்துங் கும்பிடுகிறேன். நீ எல்லையற்ற வீரியமுடையாய், அளவற்ற வலிமையுடையாய், சர்வத்திலும் நிறைந்திருக்கிறாய்; ஆதலால் நீ சர்வன்.

**ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்**
**ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி**
**அஜானதா மஹிமானந் தவேதம்**
**மயா ப்ரமாதாத் ப்ரணயேன வாபி**

*41. ஈதுனாது மான்மிய மெணாதிருந்த வென்றனால்*
*ஏடகண்ண ஏடதோழ ஏடயாத வாவெனா*
*யாதுமோர் வணக்கமே யிலாது தோழ னென்றுனைத்*
*தெண்ணியே மயக்கி னன்பினோனும் யாதுரைத்ததோ.* 455

இப்படிப்பட்ட நின் பெருமையை அறியாமல், நின்னைத் தோழனென்று கருதித் துடிப்புற்று, "ஏ கண்ணா, ஏ யாதவா, ஏ தோழா" என்று தவறுதலானேனும் அன்பாலேனும் நான் சொல்லி யிருப்பதையும்

**யச்சாவஹாஸார்த்த-மஸத்-க்ருதோSஸி**
**விஹார-சய்யாஸன-போஜனேஷு**
**ஏகோSதவாப்-யச்யுத தத்ஸமக்ஷம்**
**தத்-க்ஷாமயே த்வா-மஹ-மப்ரமேயம்**

*42. தனியின் மற்றுள பலர்முனர்ப் பரிகாசமா விளையாடலாற்*
*சயனமீதுமொ ராசனத்தினு மசனவேளையு மச்சுத*
*தனியிகழ்ச்சியி னெதுசெயப்பட லாயினாயது தன்னையும்*
*யாரளக்கவு மாகலாவுனை நானிரப்பல் பொறுக்கென. 456*

விளையாட்டிலும், படுக்கையிலும், இருப்பிலும், உணவிலும், தனியிடத் தேனும், அன்றி (மற்றவர் முன்னே யெனினும்) நான் உனக்கு வேடிக்கையாகச் செய்திருக்கும் அவமதிப்புகளையும் அவற்றையெல் லாம் பொறுக்கும்படி வேண்டுகிறேன், அளவற்றாய்!

**பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய**
**த்வமஸ்ய பூஜ்யச்ச குருர்-கரீயான்**
**ந த்வத்-ஸமோSஸ்த்-யப்ப்யதிக: குதோSன்யோ**
**லோகத்ரயேSப்-யப்ப்ரதிம-ப்ரபாவ**

*43. சமமிலாத பிரதாப மேயவ*
*சரித்துநிற்கு முலகிற்குநீ*
*தாதை யோடுகுரு வாகுவாய் பெரிய*
*தாயபூசை தகுவாயரோ*
*அமையு லோகமொரு மூன்றி லேனுமுனை*
*யலதுவேறொருவ ருவமையா*
*மவரிலாத பொழுதேது சொல்ல*
*நியாதிகராகியவ ரென்பதே. 457*

சராசரமாகிய இவ்வுலகத்துக்கு நீ தந்தை யாவாய். இவ்வுலகத்தால் தொழத் தக்கனை; மிகவும் சிறந்த குரு நீ. உனக்கு நிகர் யாருமில்லை. எனில் உனக்குமேல் வேறு யாவர்? மூன்று உலகங்களிலும் ஒப்பற்ற பெருமை உடையவனே!

**தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம்**
**ப்ரஸாததய த்வா-மஹ-மீச-மீட்யம்**
**பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்க்யு:**
**ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும்**

44. *அதினினைச் சரணடைந் துடல் கிழக்குற விழுந்*
*தருள்கெனப் புகழ்தருங் கடவுணிற் கறைவல்யான்*
*புதல்வ னுக்கொரு பிதாதுணை துணைக்கெனநசை*
*புரியெனக் கினியை யாமிறை பொறைக்குரி யையால்.* 458

ஆதலால், உடல் குனிய வணங்கி, நின்பால் அருள் கேட்கிறேன். ஈசா வேண்டுதற்குரியாய், மகனைத் தந்தை போலும், தோழனைத் தோழன் போலும், அன்பனை யன்பன் போலும் நீ என்னைப் பொறுத்தல் வேண்டும்.

**அத்ருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோஸ்மி த்ருஷ்ட்வா**
**பயனே ச ப்ரவ்யதிதம் மனோ மே**
**ததேவ மே தர்சய தேவ ரூபம்**
**ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ**

45. *தேவ அமரேச செகன் மேவுமிடனாகவவை*
*தேர்ந்துமகிழ் வெய்தினன் முன்கண்டிலது கண்டே*
*ஆவென் மனமோ நடுநடுங்கும் வெருவாலும்*
*அவ்வடிவமே தரிசனந் தருதியெற்கே.* 459

இதற்குமுன் காணாததை இன்று கண்டு மகிழ்ச்சியுறுகிறேன்; எனினும், என் மனம் அச்சத்தால் சோர்கிறது. தேவா, எனக்கு நின் முன்னை வடிவத்தைக் காட்டுக. தேவேசா, ஜகத்தின் நிலையமே, எனக்கருள் செய்க.

**கிரீடினங் கதினம் சக்ரஹஸ்தம்**
**இச்சாமி த்வாந் த்ரஷ்டு-மஹந் ததைவ**
**தேனைவ ரூபேண சதுர்ப்புஜேன**
**ஸஹஸ்ரபாஹோ பவ விச்வமூர்த்தே**

46. *திகிரியங் கரமுடன் கதையுடன் முடியொடுன்*
*தெரிசனஞ் செயவிரும் புவன்முனஞ் சிவணயான்*
*செகமெலாம் வடிவுளாய் புயமொரா யிரமுளாய்*
*திரும வீரிருகைபவ் வுருவமே மருவுவாய்.*

முன்போலவே, கிரீடமும் தண்டும் கையில் சக்கரமுமாக நின்னைக் காண விரும்புகிறேன். அகில மூர்த்தியே, ஆயிரந் தோளாய், முன்னை நாற்றோள் வடிவினை எய்துக.

*ஸ்ரீ பகவானுவாச :*

**மயா ப்ரஸன்னேன தவார்ஜுனேதம்**
**ரூபம் பரம் தர்சித-மாத்ம-யோகாத்**
**தேஜோமயம் விச்வ-மனந்த-மாத்யம்**
**யன்மே த்வதன் யேன ந த்ருஷ்டபூர்வம்**

*47. சோதிமய மாகி முழுதாகி முதலாகித்*
*தொலைவில் பரமாமென் வடிவேது முனம் நின்னின்*
*ஏதிலறி யாதவிது நீதரிச னந்தான்*
*எய்திய தருச்சுனவென் யோகின் மகிமையென்னால். 461*

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

அர்ஜுனா, யான் அருள் கொண்டு ஆத்ம யோகத்தால் எனது பர வடிவை நினக்குக் காண்பித்தேன். ஒளி மயமாய், அனைத்துமாய், எல்லையற்றதாய், ஆதியாகிய இவ்வடிவத்தை இதற்கு முன் உன்னைத் தவிர வேறு யாரும் பார்த்ததே கிடையாது.

**ந வேத-யஜ்ஞாத்த்யயனைர்-ந தானைர்-**
**ந ச க்ரியாபிர்-ந தபோபி-ருக்ரை:**
**ஏவம் ரூப: சக்ய அஹம் ந்ருலோகே**
**த்ரஷ்டுந் த்வதன்யேன குருப்ரவீர**

*48. உருவ மிஃதுடையயான் மனித்ரவுல*
*குக்கு ளுன் னலதொ ரநியனால்*
*ஓதலானுமறை வேள்வியானும் விழியுறுவ*
*தற்கியல் கிலன்கொடை*
*தருதலா னுமிலை கரும நீடுபுரி*
*தருதலானுமிலை கொடியமா*
*தவசி னாலுமிலை குருகுலாதிபரு*
*ளதிக வீர பிரதாபனே. 462*

வேதங்களாலும், வேள்வியாலும், கல்விகளாலும், தானங்களாலும் கிரியைகளாலும், மனித உலகத்தில் என்னை இவ்வடிவத்தில் உன்னை யன்றி வேறு யாராலும் பார்க்க முடியாது. குருகுலத்தில் சிறந்த வீரா!

**மா தே வ்யதா மா ச விமூட-பாவோ**
**த்ருஷ்ட்வா ரூபங் கோர மீத்ருங்-மமேதம்**
**வ்யபேதபீ: ப்ரீதமனா: புனஸ்-த்வம்**
**ததேவ மே ரூபமிதம் ப்ரபச்ய**

*49. என்னிப் படியாய பயங்கரமெய்*
*யிதுகண்டிடர் நிற்குறனீ மருளாய்*
*அன்புற்ற மனத்தினை யச்சம்விடுத்*
*ததுவே வடிவென்னிது பார்திரும.* 463

இப்படிப்பட்ட என் கோர வடிவத்தைக் கண்டு கலங்காதே; மயங்காதே. அச்சம் நீங்கி இன்புற்ற மனத்துடன் எனது முன்னை வடிவத்தை நீ இதோ பார்!

*ஸஞ்ஜய உவாச :*

**இத்யர்ஜுனம் வாஸுதேவஸ்-ததோக்த்வா**
**ஸ்வகம் ரூபம் தர்சயாமாஸ பூய:**
**ஆச்வாஸயாமாஸ ச பீதமேனம்**
**பூத்வா புன: ஸௌம்ய-வபுர்-மஹாத்மா**

*50. பினுமர்ச் சுனனுக் கறைதந்த விதம்*
*பெருமா வுயிராம் வசுதேவர்மகன்*
*மனமஞ் சிவனுக் கெழில்விஞ் சுருவம்*
*மருவித் திருமத் தெளிவித்தனனே.* 464

*சஞ்ஜயன் சொல்லுகிறான் :*

இங்ஙனம் வாசுதேவன் அர்ஜுனனிடம் கூறி, மீட்டுந் தன் பழைய வடிவத்தைக் காட்டினான். அந்த மகாத்மா மறுபடி தன் இனிய வடிவமெய்தி அச்சமுற்றிருந்த பார்த்தனை ஆறுதல் கொள்ளச் செய்தான்.

*அர்ஜுன உவாச :*

**த்ருஷ்ட்வேதம் மானுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜனார்த்தன**
**இதானீ-மஸ்மி ஸம்வ்ருத்த: ஸ சேதா: ப்ரக்ருதிங் கத:**

*51. இனிதாய் நினதாகிய மானுடமெய்*
*யிதுகண் டிதுபோ தறிவின்னுடனே*
*நனிகூடின னாயினனா லியல்புந்*
*நணினேன் ஜெனனம் மனுமோர் பெயூரோய்.* 465

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

ஜனார்த்தனா, நினது தண்மை பொருந்திய இம்மானிட வடிவத்தைக் கண்டு இப்போது யான் அமைதியுற்றேன். என் உணர்வு மீண்டது; இயற்கை நிலை யெய்தினேன்.

**ஸ்ரீ பகவானுவாச :**

**ஸுதுர்-தர்ச-மிதம் ரூபம் த்ருஷ்டவானஸி யன்-மம**
**தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சன-காங்க்ஷிண:**

52. என்வடிவ மேதுவிழி காணுதல் செய்தாயோ
இவ்வடிவம் யாரும் விழிகாண வியலாதால்
இன்ன வடிவங்கண் தரிசிப்பது குறித்தே
இயவுளரு மாவல் புரிவார் நிதமுமேதான். 466

**ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:**

காண்பதற்கரிய என் வடிவத்தை இங்கு கண்டனை. தேவர்கள்கூட இவ்வடிவத்தைக் காண எப்போதும் விரும்பி நிற்கிறார்கள்.

**நாஹம் வேதைர்-ந தபஸா ந தானேன ந சேஜ்யயா**
**சக்ய ஏவம் விதோ த்ரஷ்டுந் த்ருஷ்டவானஸி மாம்யதா**

53. எவ்வாறெனை நோக்கினை யாவையிவ்வா
றெதிர்காண மறைக்கு மியல்கிலன் யான்
அவ்வேள்வி களானு மியல்கிலனீ
கையினா லியலேன் தவசா லியலேன். 467

என்னை நீ கண்டபடி, இவ்விதமாக, வேதங்களாலும், தவத்தாலும், தானத்தாலும், வேள்வியாலும் என்னைக் காணுதல் இயலாது.

**பக்த்யா த்வனன்யயா சக்ய அஹ-மேவம் விதோऽர்ஜுன**
**ஜ்ஞாதுந் த்ரஷ்டுஞ் ச தத்வேன ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப**

54. இவ்வா றுளயான் பிறிதெண் ணலிலா
தியல்பத் தியினோ வெனினர்ச்சுனனே
செவ்வே யறிதற் கெதிர்கா ணவுமுட்
சேர்தற்கு மியல்வல் பரந்தபனே. 468

பிறிதிடஞ் செல்லாத பக்தியால் மாத்திரமே என்னை இவ்விதமாக அறிதலும், உள்ளபடி காணுதலும், என்னுட் புகுதலும் இயலும்.

**மத்கர்மக்ருன் மத்பரமோ மத்பக்த: ஸங்கவர்ஜித:**
**நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸ மாமேதி பாண்டவ**

55. எனக்கு வினைசெய்பவ னெனைப் பரம மென்போன்
எனக்குரிய பத்திமைய னெனத்தொடர்பும் விட்டோன்
எனைத்துயி ரினும்பகை யிலானெவ னவன்றான்
எனைப் பெறுவன் பாண்டுவின் மனக்கிய சேயே. 469

என்தொழில் செய்வான், எனைத் தலைக் கொண்டோன், என்னுடைய அடியான், பற்றெலாம் இற்றான், எவ்வுயி ரிடத்தும் பகைமை யிலாதான் யாவன், பாண்டவா! அவனென்னை எய்துவான்.

*பதினொன்றாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## கீதைப் பொருட்டொகை

ஒப்பிலாத தெய்வந்தன் னுண்மையியல் பைக்காணத்
திப்பியக்க ணீந்ததிற னோடவ்வா-றப்பரனைப்
பார்த்தற்கு மெய்தற்கும் பத்தியொன்றே யேதுவென
ஓர்த்தற் குரைப்பதுபன் னொன்று.

# கீதைப் பாட்டு

## பன்னிரண்டாம் அத்தியாயம்

# பக்தி யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

*ஈரா றெனுமியல் பக்திமையின் மேன்மை யுபாசிப்*
*பாரா தனையின் சீர்மையதிற் சத்தியிலாருக்*
*கோரான்ம நிலைக்ககண் ணுறுமுறை மற்றதனுக்குச்*
*சார்பா வனவிறை யன்பர்க ணார்வஞ்செயல் சாற்றும்*

*ஞான யோக பக்தி யோகங்களுள் ஞானயோகம் தாமதித்தே பலனளிக்கு மென்றும், அதில் மனதை நிறுத்துவது கஷ்டமான தென்றும், பக்தி யோகமோ கடுகப் பலனையளிக்கு மென்றும், அதில் மனதை நிறுத்துவது சுலபமானதென்றும் கூறப்படுகிறது. பிறகு பக்தி யோகத்தைப் பெறுவதற்குரிய உபாயங்கள் கூறப்படுகின்றன. பக்தர்கள் பிறரிடத்தில் சிநேக பாவத்துடனும் அகங்காரமற்றும், இன்ப துன்பங்களைச் சமமாய் எண்ணியும், கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடனும் இருக்கவேண்டும். தன்னைப் பிறர் இகழ்ந்து பேசினாலும் புகழ்ந்து பேசினாலும் மனதில் மாறுதலடையக் கூடாது. இவ்விதமான பக்தர்களிடத்தில் தான் கடவுளுக்கு அதிகப் பிரீதி.*

*அர்ஜுன உவாச :*

**ஏவம் ஸதத-யுக்தா யே பக்தாஸ்-த்வாம் பர்யுபாஸதே**
**யே சாப்யக்ஷர-மவ்யக்தம் தேஷாம் கே யோகவித்தமா:**

எவரென்று முனோடியை பத்தியர்நிற்
கிவிதம் முழுதும் வழிபட் டியல்வோர்
எவரக்கரமா மவியத்த முள்ளோர்
இவருள்ளெவர் யோகடை மேலவரோ.

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

இங்ஙனம் எப்போதும் யோகத்தமர்ந்து நின்னை வழிபடும் தொண்டர்களா, அல்லது நாசமற்ற "அவ்யக்த" வஸ்துவை வழிபடுவோரா, இவ்விரு திறத்தாரில் யோக ஞானத்திலே மேம்பட்டார் யாவர்?

*ஸ்ரீ பகவானுவாச :*

**மய்யாவேச்ய மனோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே.**
**ச்ரத்தயா பரயோபேதாஸ்-தே மே யுக்ததமா மதா:**

*2. மனமென்க ணிருத்தின ராகிநிதம்*
*மருவற் குயர்வாய சிரத்தை யிரைந்*
*தெனையேவ ருபாசனை செய்வரெனால்*
*எணலாயின ரன்னவர் யோகருண்மேல். 471*

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*
என்னிடத்தே மனத்தைச் செலுத்தி நித்திய யோகிகளாய், உயர்ந்த நம்பிக்கையுடன் என்னை வழிபடுவோர் யாவர், அவர்களே யோகத்தில் சிறந்தோரென நான் கருதுகிறேன்.

**யே த்வக்ஷர-மநிர்த்தேச்ய-மவ்யக்தம் பர்யுபாஸதே**
**ஸர்வத்ரக-மசிந்த்யஞ் ச கூடஸ்த்த-மசலந் த்ருவம்**

*3. அழிவில்லது சொல்குறி யில்லதறி*
*தற்காகில தெங்கனு முள்ளதெனக்*
*கழிதந்து முதற்பொது வாயதனைக்*
*கல்லாது நிலைப்பதை யார் நினைவார். 472*

இனி, அழிவற்றதும், குறிப்பற்றதும், அவ்யக்தமும் (தெளிவற்றதும்), எங்கும் நிறைந்ததும், கருதொணாததும், நிலையற்றதும், அசைவற்றதும், உறுதி கொண்டதுமாகிய பொருளை யாவர் வழிபடுகின்றனரோ,

**ஸந்நியம்யேந்த்ரிய-க்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய:**
**தே ப்ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூ-ஹிதே ரதா:**

*4. குழுமுபொறி முற்று நியமநெறி செய்து*
*குலவெவணு மொத்த மதியுடைய ராகி*
*முழுவ துயிர்கட்கு நலன்வளர ஆவல்*
*முதிருமவ ரம்ம அடைவ ரெனையே தான்.*

இந்திரியக் குழாத்தை நன்கு கட்டுப்படுத்தி எங்கும் சமபுத்தி யுடையோராய், எல்லா உயிர்களுக்கும் நன்மை விரும்புவோராகிய அவர்களும் என்னையே அடைகிறார்கள்.

**க்லேசோSதிகரஸ்-தேஷா-மவ்யக்தாஸக்த-சேதஸாம்**
**அவ்யக்தா ஹி கதிர்-து: க்கந் தேஹவத்பி-ரவாப்யதே**

5. *அவியத்த மதைப்பற்றி விருப்புற்ற மனத்தர்*
*அவருக் கிடரதிகப் பெரிதாகிற்பது மாதோ*
*அவியத்த மதைப்பற்றிய கதியோ இடருற்றே*
*அடையத் தகுமன்றே வுடலடையப் படுமவரால்.* 474

ஆனால், 'அவ்யக்த'த்தில் மனம் ஈடுபட்டோர்க்குத் தொல்லை யதிகம். உடம்பெடுத்தோர் 'அவ்யக்த' நெறியெய்துதல் மிகவும் கஷ்டம்.

**யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பரா:**
**அனன்யேனைவ யோகேன மாந் த்யாந்த உபாஸதே**

6. *எல்லாவித கன்மமு மென்னிடன் விட்டு*
*எனையே தலையாம் பயனென்று நினைந்*
*தல்லாதன வேறிலை யாகியயோ*
*கதினேயெனை யார்கொ லெணித் தொழுவார்.* 475

எல்லாத் தொழில்களையும் எனக்கெனத் துறந்து, என்னைப் பரமாகக்கொண்டு, பிறழாத யோகத்தால் என்னை நினைத்து வழிபடுவோர் யாவர்?

**தேஷா-மஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு-ஸம்ஸார-ஸாகராத்**
**பவாமி ந சிராத் பார்த்த மய்யாவேசித-சேதஸாம்**

7. *கருத்தினைப் பிருதைக்கு மைந்த வென்*
*கண்ணிருத்தின ரவரை யான்*
*மிருத்தெனும் பவவாரி நின்று*
*விரைந் தெடுப்பவ னாவலே.* 476

என்பால் அறிவைப் புகுத்திய அன்னோரை நான் மரண சம்சாரக் கடலினின்றும் விரைவில் தூக்கி விடுவேன்.

**மய்யேவ மன ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேசய**
**நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்த்வம் ந ஸம்சய:**

8. *என்கணேபுக வுய்ப்பை நெஞ்சினை*
*என்கண் வைக்க வுணர்ச்சியை*
*என்கணே நிலைசெய் யிதன்மிசை*
*என்க ணேயுளை யையமில்.* 477

மனதை என்பால் நிறுத்து; மதியை என்னுட் புகுத்து; இனி நீ என்னுள்ளே உறைவாய்; ஐயமில்லை.

**அத சித்தம் ஸமாதாதும் ந சக்னோஷி மயி ஸ்த்திரம்**
**அப்ப்யாஸயோகேன ததோ மாமிச்சாப்துந் தனஞ்ஜய**

9. *அப்படிக்கல தெனதிடன் மனதினை*
*யசைவறப் புகவிடவலி யிலையெனின்*
*நற்பயிற்சியொ டியைதலி னெனைநண*
*நசையினைக் கொள்வை பொருளைவெல் பவவதின்.* 478

என்னிடம் ஸ்திரமாக நின் சித்தத்தைச் செலுத்த நின்னால் முடியாதென்றால், பழகிப் பழகி என்னை யடைய விரும்பு.

**அப்ப்யாஸேப்-யஸமர்த்தோஸி மத்கர்ம-பரமோ பவ**
**மதர்த்தமபி கர்மாணி குர்வன் ஸித்தி-மவாப்ஸ்யஸி**

10. *எனைப் பயிற்சியி னடையவும் வலியிலை*
*யெனிற் சிறப்பென வெனதொழி லிடையிரு*
*எனக்கெனப் பணிவிடை புரிவது செய்தும்*
*இசைத்த சித்தியை யடைதலை யுடையைநீ.* 479

பழகுவதிலும் நீ திறமை யற்றவனாயின், என் பொருட்டுத் தொழில் செய்வதை மேலாகக் கொண்டிரு. என் பொருட்டுத் தொழில்கள் செய்து கொண்டிருப்பதனாலும் சித்தி பெறுவாய்.

**அதைததப்-யசக்தோஸி கர்த்தும் மத்யோக-மாச்ரித:**
**ஸர்வகர்ம-பலத்யாகந் தத: குரு யதாத்மவான்**

11. *எற்பற்றிய யோக மியைந்துபின*
*ரிவையுஞ் செயவல்லவ னல்லையெனின்*
*இப்பெற்றியி னெஞ்ச மடக்கி னையா*
*யெல்லா வினையும் பயன்வீடு செய்வாய்.* 480

இதுவும் நின்னால் செய்யக் கூடவில்லை யென்றால், என்னுடன் லயித்திருப்பதை வழியாகக்கொண்டு, தன்னைத்தான் கட்டுப்படுத்தி எல்லாச் செய்ல்களின் பயன்களையுந் துறந்துவிடு.

**ச்ரேயோ ஹி-ஜ்ஞான-மப்ப்யாஸாத் ஜ்ஞானாத்-த்யானம் விசிஷ்யதே**
**த்த்யானாத் கர்மபலத்யாகஸ்-த்யாகாச் சாந்தி-ரனந்தரம்**

12. *தினமும் பயிறலினும் மறிவதி மேன்மைய தறிவிற்*
*றியானம் மிக மேலென்ப தியானத்தி னுஞற்றும்*
*வினையின்பயன் விடுதன் முதன்மைத்தாம் விடுதலினால்*
*விரவத்தகு மன்றோபிற கிதையத்துறு சாந்தி.* 481

பழக்கத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது. ஞானத்தைக் காட்டிலும் தியானம் சிறந்தது தியானத்தைக் காட்டிலும் செய்கைப் பயன்களைத் துறந்து விடுதல் மேம்பட்டது. அத்துறவைக் காட்டிலும் சாந்தி உயர்ந்தது.

**அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச**
**நிர்மமோ நிரஹங்கார: ஸமது: க்கஸுக: க்ஷமீ**

13. *எல்லாவுயிர் மீதும் வெறுப்பிலனட்*
*பினனா யருளேயுளன் யானெனதென்*
*றில்லாதவ னாகி நலத்திடையும்*
*இடரின்கணு மொத்தியலும் பொறையோன்.* 482

எவ்வுயிரையும் பகைத்தலின்றி, அவற்றிடம் நட்பும் கருணையும் உடையவனாய், யானென்பதும் எனதென்பதும் நீங்கி, இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கொண்டு பொறுமையுடையவனாய்,

**ஸந்துஷ்ட: ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிச்சய:**
**மய்யர்ப்பித-மனோ-புத்திர்-யோ மத்பக்த: ஸ மே ப்ரிய:**

14. *இன்பொடெப் பொழுதும் யோகி னின்றுமன*
*னியல்வறத் துணிபு திடமரீஇ*
*என்கண் வைத்த மனமதியன் யாவனென*
*தன்பனெற் கினிய னவனரோ.* 483

எப்போதும் மகிழ்ச்சி யுடையவனாய், தன்னைக் கட்டியவனாய், திட நிச்சய முடையவனாய், என்னிடத்தே மனத்தையும் மதியையும் அர்ப்பணஞ் செய்து என் தொண்டனாகிய யோகி எனக் கினியவன்.

**யஸ்மான்-னோத்விஜதே லோகோ லோகான்-னோத்விஜதே ச ய:**
**ஹர்ஷாமர்ஷ-பயோத்வேகைர்-முக்தோ ய: ஸ ச மே ப்ரிய:**

15. எவனிடைப்புவி வெருளுவ திலைபுவி
யிடையெவற்கொரு வெருள்வது மிலையெவன்
உவகை யிற்சினன் வெருளுவர் வுறுதலி
னொழிய லுற்றவ னவனுமெ னினியவன். 484

எவனை உலகத்தார் வெறுப்பதில்லையோ, உலகத்தாரை எவன் வெறுப்பதில்லையோ, களியாலம் அச்சத்தாலும் சினத்தாலும் விளையும் கொதிப்புகளினின்றும் எவன் விடுபட்டானோ, அவனே எனக் கினியவன்.

**அனபேக்ஷ: சுசிர்-தக்ஷ உதாஸீனோ கதவ்யத:**
**ஸர்வாரம்ப-பரித்யாகீ யோ மத்பக்த: ஸ மே ப்ரிய:**

16. எவன் விருப்பிலன் சுசியினன் விரகுளன்
எதனிடத்தினு மயலவ னெனவிடர்
இவர்த லற்றவ னெத னையு முயறலில்
எனது பத்திய னவனென தினியவன். 485

எதனையும் எதிர்பார்த்த லின்றித் தூயோனாய், திறமுடையோனாய், பற்றுதலற்றவனாய், கவலை நீங்கியவனாய், எல்லா ஆடம்பரங்களையுந் தீமையையுந் துறந்த தொண்டனே எனக் கினியவன்.

**யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந சோசதி ந காங்க்ஷதி**
**சுபாசுப-பரித்யாகீ பக்திமான் ய: ஸ மே ப்ரிய:**

17. உவர் வெறுப்பிலன் மகிழ்தலு மிலனிடர்
உளநினைக்கலன் விழைவினை யுறுகிலன்
இவர் சுபத்துட னசுபமும் விடுபவன்
எவனென் பத்திய னவனென தினியவன். 486

களித்தலும், பகைத்தலும், துயர்ப்படுதலும், அவாவுறுதலும் இன்றி நன்மையையுந் தீமையையுந் துறந்த தொண்டனே எனக் கினியவன்.

**ஸம: சத்ரௌ ச மித்ரே ச ததா மானாபமானயோ:**
**சீதோஷ்ண-ஸுகது: க்கேஷு ஸம: ஸங்கவிவர்ஜித:**

18. பகைநண் பினிலப்படி மானமுடன்
பன்னும் மவமான மிடைச் சமனாய்ச்
சுகதுக்க மழல்குளிரோர் படியாய்த்
தொடர்பேதும் விடுத்தவ னாகியரோ.

பகைவனிடத்தும், நண்பனிடத்தும், மானத்திலும், அவமானத்திலும், குளிரிலும், வெப்பத்திலும், இன்பத்திலும், துன்பத்திலும் சமப்பட்டான், பற்று விட்டான்.

**துல்ய-நிந்தா-ஸ்துதிர்-மௌனீ ஸந்துஷ்டோயேன-கேனசித்**
**அனிகேத: ஸ்த்திரமதிர்-ப்பக்திமான் மே ப்ரியோ நர:**

19. *புகழும் பழியுஞ் சமமெண் ணினன்வாய்*
*புகலா தெதுவோர் பொருளின் னிடனும்*
*மகிழ்வான் றிரபுத்திய னில்விழையா*
*மனிதன்னென தன்புள னென் பிரியன்.* 488

புகழையும் இகழையும் நிகராகக் கொண்ட மௌனி, யாது வரினும் அதில் மகிழ்ச்சி யுறுவான், குறியற்றான், ஸ்திர புத்தியுடையான். இத்தகைய பக்தன் எனக் கினியவன்.

**யே து தர்ம்யாம்ருத-மிதம் யதோக்தம் பர்யுபாஸதே**
**ச்ரத்ததானா மத்பரமா பக்தாஸ்-தே஽தீவ மே ப்ரியா:**

20. *அறநிலைப்படு மமிழ்தினை நிகரிதை*
*அறைமுறைப்படி முதலேன் எனைஏவர்*
*உறுசிரத்தையி னனிவழிபடுதலை*
*உடைய பத்தரென் மிகுவிழைவினரவர்.* 489

இந்தத் தர்மரூபமான அமிர்தத்தை யான் சொல்லியபடி வழிபடுவோர், நம்பிக்கையுடையோர், என்னை முதலாகக் கொண்டோர், அத்தகைய பக்தர் எனக்கு மிகவு மினியர்.

*பன்னிரண்டாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## *கீதைப் பொருட்டொகை*

*பத்திமையின் மேம்பா டுபாசனையின் மேன்மையிதிற்*
*சத்தியிலார்க் கான்மநிலை சாருமுறை-மெத்தனுக்*
*கங்கமா வேண்டுவன வன்பன்க ணார்வமிகல்*
*துங்கவீ ராறு சொலும்.* (16)

# கீதைப் பாட்டு

## பதின்மூன்றாம் அத்தியாயம்

## க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

பதின்மூன் றுதனிடனா மெயின்பண்புந் தனையெய்தற்
கிதுதா னெறியென லோகுயிரின் சோதனை பந்தம்
அதனேதிது வெனவோர் வதுமான்மா வறிவுடனே
மதிகூர்தர வுணர்விப்பது மன்னும் மிவணம்மா.

இதில் தேகம், ஆத்மா இவைகளுடைய சொரூபமும் இவைகள் ஒன்றோடொன்று சேர்வதற்குக் காரணமும் கூறப்படுகின்றன. தேகம் என்பது பிரகிருதியின் விகாரமாகும். அது ஐந்து பூதங்களும் பதினோரு புலன்களும் அடங்கியது. இத்தேகத்தின் சேர்க்கையால் தான் ஆத்மாவுக்கு அற்ப விஷயங்களில் விருப்பமும், இன்பம், துன்பம், கோபம், தாபம் முதலியவைகளும் உண்டாகின்றன. கைவல்ய நிலை பெற்ற ஆத்மாவுக்கு இவை ஒன்றும் இல்லை. அத்தகைய நிலையைப் பெற வேண்டுமானால் கர்வம், டம்பம் இவைகளை விடவேணும். ஆசாரியனைப் பணிந்து அவனருளால் தூய்மை பெற்றுப் புலன்களை அடக்க வேண்டும். வேறு பலனைக் கோராமல் கடவுளைத் தியானிக்க வேண்டும். ஆத்மாவுக்கு உண்மையில் பிறப்பு இறப்பு கிடையாது. தேக சம்பந்தமே பிறப்பெனவும், அதன் பிரிவே இறப்பெனவும் கூறப்படும். அறிவற்ற தேகமானது ஆத்ம சம்பந்தத்தால் பற்பல காரியங்களைச் செய்கிறது. இவ்வித ஆத்ம சொருபத்தைக் கர்ம யோகத்தினாலும் ஞானயோகத்தினாலும் பெறலாம். தாவர ஜங்கமங்களெல்லாம் ஆத்ம பிரகிருதியின் சேர்க்கையால் உண்டாகின்றன.

*அர்ஜுன உவாச :*

**ப்ரக்ருதிம் புருஷம் சைவ க்ஷேத்ரம் க்ஷேத்ரக்ஞ மேவச**
**ஏதத்வேதி துமிச்சாமி ஞானம் ஞேயம் . ச கேசவா**

1. பல பதிப்புக்களில் இச்சுலோகம் காணப்படுவதில்லை. இம்முதல் சுலோகத்திற்கு மகாவித்துவானின் தாழிசை மொழிபெயர்ப்பு இல்லை.

490

*அர்ஜுனன் சொல்லுகிறான் :*

பிரகிருதி, புருஷன், க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன், ஞானம், ஞேயம் என்னுமிவற்றை அறிய விரும்புகிறேன்.

[பிரகிருதி - இயற்கை; புருஷன் - ஆத்மா; க்ஷேத்திரம் - இடம்; க்ஷேத்திரக்ஞன் - இடத்தை அறிவோன்; ஞானம் - அறிவு; ஞேயம் - அறியப்படு பொருள்.]

*ஸ்ரீ பகவானுவாச :*

**இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ர-மித்-யபிதீயதே**
**ஏதத் யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:**

*2. உடலமிஃ திடனென வுள்ளுவதால்*
*உணர்பவ னெவனிதை யன்னனே*
*இடனறி பவனென வன்னதின்*
*இயல்பறிபவர் சொல்வர் குந்திசேய். 491*

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

குந்தி மகனே, இந்த உடம்பு க்ஷேத்திரம் என்று சொல்லப்படுகிறது இதனை அறிந்து நிற்போனை க்ஷேத்திரக்ஞனென்று பிரம்ம ஞானிகள் சொல்லுகிறார்கள்.

**க்ஷேத்ரஜ்ஞஞ் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத**
**க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞயோர்-ஜ்ஞானம் யத்தத் ஜ்ஞானம் மதம் மம**

*3. உடல முழுவதினு முடலை யறிதல்செயு*
*முயிரு முணர்தகுதி யானென*
*உடலொ டுடலறியு முயிரை யுணர்வதெது*
*உணர்வ தெனது கொள்கை பாரத. 492*

பாரதா, எல்லா க்ஷேத்திரங்களிலும் க்ஷேத்திரக்ஞன் நானே என்றுணர். க்ஷேத்திரமும் க்ஷேத்திரக்ஞனும் எவை என்றறியுஞ் ஞானமே உண்மையான ஞானமென்பது என் கொள்கை.

**தத் க்ஷேத்ரம் யச்ச யாத்ருக் ச யத்விகாரி யதச்ச யத்**
**ஸ ச யோ யத்ப்ரபாவச்ச தத் ஸமாஸேன மே ச்ருணு**

4. அவ்விடன் யாதெப்படித் தெவ்விகார
மார்கிற்ப தெப்படி யார்நிற்ப தோதான்
எவ்வுருவிற் றவனும் மெவன் மகிமையே
தனதையென் னிடனே சிறிதேகேள். 493

அந்த க்ஷேத்திரமென்பது யாது? எவ்வகைப்பட்டது? என்ன மாறுதல்களுடையது? எங்கிருந்து வந்தது? க்ஷேத்திரக்ஞன் யார்? அவன் பெருமை எப்படிப்பட்டது? இவற்றை நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன். கேள்.

**ருஷிபிர்-பஹுதா கீதம் ச்சந்தோபிர்-விவிதை: ப்ருதக்**
**ப்ரஹ்மஸூத்ர-பதைச்சைவ ஹேதுமத்ப்பிர்-விநிச்சிதை:**

5. இருடியாய்க் கொள்வரான் மறைவகைகளின்
இயலுமேது வினுடனொரு துணிபுசெய்
பிரமசூத்திர மொழிகளி னுரைசெயப்
பெறுவதாயது பலபல பிரிவினில். 494

அது (க்ஷேத்திரம்) ரிஷிகளால் பல வகைகளிலே பலவேறு சந்தங்களில் பாடப்பட்டது. ஊகம் நிறைந்தனவும், நல்ல நிச்சயமுடையனவுமாகிய பிரம்ம சூத்திர பதங்களில் இசைக்கப்பட்டது.

**மஹாபூதான்-யஹங்காரோ புத்தி-ரவ்யக்த-மேவ ச**
**இந்த்ரியாணி தசைகஞ் ச பஞ்ச-சேந்த்ரிய-கோசரா:**

6. ஐந்துவித மாயபெரும் பூத மகங்காரம்
ஆனதொரு புந்தி யவியத்தமுட னேயும்
இந்திரியம் பத்துடனொன் றிந்திரியந் தம்மால்
எய்தவெளி தாயபுலம் ஐவகையு மேதான். 495

மகா பூதங்கள், அகங்காரம், புத்தி, அவ்யக்தம், பதினோரு இந்திரியங்கள், இந்திரிய நிலங்கள் ஐந்து.

**இச்சா-த்வேஷ: ஸுகம் து:க்கம்: ஸங்காதச் சேதனாத்ருதி:**
**ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகார-முதாஹ்ருதம்**

7. விழைவுடன் வெறுப்பது சுகந்துயர்
விளைவதா யுயிர்க்கிட னெனப்பல
குழுவுமிவ் வுடல்பல விகாரமுங்
கொளுவதோத வாயுறு தொகுத்தரோ. 496

வேட்கை, பகைமை, இன்பம், துன்பம், உடம்பு, உணர்வு, உள்ளத்துறுதி- இவையே க்ஷேத்திரமும் அதன் வேறு பாடுகளுமாம் என உனக்குச் சுருக்கிக் காட்டினேன்.

**அமானித்வ-மதம்ப்பித்வ-மஹிம்ஸா க்ஷாந்தி-ரார்ஜவம்**
**ஆசார்யோபாஸனம் சௌசம் ஸ்த்தைர்ய-மாத்ம-விநிக்ரஹ:**

8. கருவ மின்மைபொறை யிடர்செய் யாமையொடு
கபடிலா மைகுரு வழிபடல்
மருவிடம்ப மதிலாமை யோடுநனி
மனமடங்கல் சுசி யுடைமையே. 497

கர்வமின்மை, டம்ப மின்மை, ஹிம்சை செய்யாமை, பொறுமை, நேர்மை, ஆசாரியனை வழிபடுதல், தூய்மை, ஸ்திரத்தன்மை, தன்னைக் கட்டுதல்.

**இந்த்ரியார்த்தேஷு வைராக்ய-மனஹங்கார ஏவ ச**
**ஜன்ம-ம்ருத்யு-ஜரா-வ்யாதி-து:க்க-தோஷானுதர்சனம்**

9. பொறிதொ டும்விடய மீது காமுறல்
புகாமை யானென விலாமையே
பிறவி சாவுகிழ நோய்களான் வருவ
பீழை யாயபிழை தினமெணல். 98

இந்திரிய விஷயங்களில் விருப்பமின்மை, அகங்காரம் இல்லாமை, பிறப்பு, இறப்பு, நரை, நோய், துக்கம், தோஷம் இவற்றின்கண் இசைந்த காட்சியுடைமை.

**அஸக்தி-ரனபிஷ்வங்க: புத்ர-தார-க்ருஹாதிஷு**
**நித்யஞ் ச ஸமசித்தத்வ-மிஷ்டாநிஷ்டோபபத்திஷு**

10. தொட்ட பெண்டுசே யில்ல மாதியிற்
றொடர் பிலாமை பற்றின்மை நித்தமும்
இட்ட மோடுதன் னிட்ட மின்றியேய்
இட்ட மெய்தினும் செற்ற தெய்தினும். 499

பற்றின்மை, மகனையும் மனைவியையும், வீட்டையும் தன்னுடைமை யெனக் கருதாமை, விரும்பியனவும் விரும்பாதனவும், எய்துமிடத்தே சமசித்த முடைமை.

**மயி சானன்யயோகேன பக்தி-ரவ்யபிசாரிணீ**
**விவிக்ததேச-ஸேவித்வ-மரதிர்-ஜனஸம்ஸதி**

11. வேறொன்று கலவாமை யானென் னிடத்தே
விபிசார மில்லாத வனபுஞ் செனங்கள்
வேறாரு மில்லா விடத்தே யிருப்பும்
மிகுகின்ற சென சங்கம் விழையா நினைப்பும். 500

பிறழ்ச்சியற்ற யோகத்துடன் என்னிடத்தும் தவறுதலின்றிச் செலுத்தப்படும் பக்தி, தனியிடங்களை மேவுதல், ஜனக்கூட்டத்தில் விருப்பமின்மை.

**அத்த்யாத்மஜ்ஞான-நித்யத்வம் தத்வஜ்ஞானார்த்த-தர்சனம்**
**ஏதத் ஜ்ஞானமிதி ப்ரோக்த-மஜ்ஞானம் யததோ$ன்யதா**

12. *உயிர்நிதமு மெய்தும் மறிவினுட னாதல்*
*உளது தெரிதந்து பயனையெதிர் காண்டல்*
*பயிலுமிது தானும் பகர்வ தறிவென்று*
*பகருமிதின் வேறா மெதுவும் மறியாமை.* 501

ஆத்ம ஞானத்தில் எப்போதும் நழுவாமை, தத்துவ ஞானத்தில் பொருளுணர்வு - இவை ஞான மெனப்படும். இவற்றினின்றும் வேறுபட்டது அஞ்ஞானம்.

**ஜ்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி யத்-ஜ்ஞாத்வாம்ருத-மச்னுதே**
**அனாதிமத் பரம் ப்ரஹ்ம ந ஸத்தன்-னாஸ-துச்யதே**

13. *எதுதா னறியத் தகுமே. வமிழ்தம்*
*எதையோர்த் துணுமோ வதையோ துவலே*
*அதுவா தியிலா தென்னையே பரமா*
*யதுவே சதசத்தெனலில் பிரமம்.* 502

ஞேயம் எது வென்பதைச் சொல்லுகிறேன். அதை அறிந்தால் நீ சாகாமல் இருப்பாய். அநாதியாகிய பரப்பிரம்மம். அதை 'சத்' என்பதுமில்லை, 'அசத்' என்பதுமில்லை.

**ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோ$க்ஷி-சிரோமுகம்**
**ஸர்வத: ச்ருதிமல்-லோகே ஸர்வ-மாவ்ருத்ய திஷ்ட்டதி**

14. *எங்கணுங் கரங்களுட னெங்கணும் பதங்களுடன்*
*எங்கணு முகந்தலை கணாய்*
*எங்கணு மிருந்த செவியின்னுடன் வசுந்தரையின்*
*எங்கணு நிறைந்தமர் வதால்.* 503

அது எங்கும் கைகால்களுடையது; எங்கும் கண்ணும் தலையும் வாயுமுடையது; எங்கும் செவியுடையது; உலகத்தில் எதனையும் சூழ்ந்து நிற்பது.

**ஸர்வேந்த்ரிய-குணாபாஸம் ஸர்வேந்த்ரிய-விவர்ஜிதம்**
**அஸக்தம் ஸர்வப்ருத் சைவ நிர்க்குணம் குணபோக்த்ருச**

15. எல்லா விதவிந் திரியங்களுடை
இயல்பா னொளிர்கின்ற தெலாப் பொறியும்
இல்லாத திசைந்தில தேந்துமியா
வையுநிர்க் குணமாய்க் குணமுண் பதுவே. 504

எல்லா இந்திரிய குணங்களும் வாய்ந்தொளிர்வது; எல்லா இந்திரியங்களுக்கும் புறம்பானது; பற்றில்லாதது; அனைத்தையும் பொறுப்பது; குணமற்றது; குணங்களைத் துய்ப்பது.

**பஹி-ரந்தச்ச பூதானா-மசரஞ் சரமேவ ச**
**ஸூக்ஷ்மத்வாத் தவிஜ்ஞேயம் தூரஸ்த்தஞ் சாந்திகே ச தத்**

16. அதுபூத மகத்தும் வெளிக்கணுநின்
றலையா தலைகிற்பது மாவதுவே
அதுதானதி நுட்பமு மாதலினே
அறிதற்கரி தண்ணிது சேய்த்தே. 505

பூதங்களுக்கு உள்ளும் புறமுமாவது; அசரமும் சரமுமாவது; நுண்மையால் அறிவரியது; தூரமானது; அருகிலிருப்பது.

**அவிபக்தஞ் ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்த்திதம்**
**பூதபர்த்ரு ச தத்-ஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு-ப்ரபவிஷ்ணு ச**

17. அதுபூத மிடைப்பல வாதலிலா
தவையுட் பலபோல விருப்பதுமாம்
அதுபூத மனைத்தையு மேந்து முணா
வாரும் வெளியிற் றளுமென் றறிவாய். 506

உயிர்களில் பிரிவுபட்டு நில்லாமல் பிரிவுபட்டதுபோல் நிற்பது. அதுவே பூதங்களைத் தாங்குவது என்றறி; அவற்றை உண்பது, பிறப்பிப்பது.

**ஜ்யோதிஷாமபி தத் ஜ்யோதிஸ்-தமஸ: பரமுச்யதே**
**ஜ்ஞானம்-ஜ்ஞேயம் ஜ்ஞான-கம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய விஷ்டிதம்**

18. அதுதா னொளியுள் பொருள்கட் குமொளி
யாகுந் தமசுக் குயர்வென்பதறி
வதுவென் றறிதக்கது ஞான மதால்
அடைதலத் திருப்ப தெலாவுளனும். 507

ஒளிகளுக்கெல்லாம் அஃதொளி; இருளிலும் உயர்ந்த தென்ப. அதுவே ஞானம்; ஞேயம்; ஞானத்தால் எய்தப்படுபொருள்; எல்லாவற்றின் அகத்திலும் அமர்ந்தது.

**இதி க்ஷேத்ரம் ததா ஜ்ஞானம் ஜ்ஞேயஞ் சோக்தம் ஸமாஸத:**
**மத்பக்த ஏதத் விஜ்ஞாய மத்பாவாயோபபத்யதே**

*19.* இவ்வாறு சுருக்க மெய்யும் மவித
மேஞானமும் ஞேயமு மோதியதாம்
இவ்வாறு தெரிந்ததென தன்பினனாய்
என்றன் னியல்பைப் பெறல் தக்கவனாம். 508

இங்ஙனம் க்ஷேத்திரம், ஞானம், ஞேயம் என்பனவற்றைச் சுருக்கமாகச் சொன்னேன். என் பக்தன் இதையறிந்து எனது தன்மையை அடைகிறான்.

**ப்ரக்ருதிம் புருஷஞ் சைவ வித்த்யனாதீ உபாவபி**
**விகாராம்ச்ச குணாம்ச்சைவ வித்தி ப்ரக்ருதி - ஸம்ப்பவான்**

*20.* சீவனுடனே பகடி சேரவிவ் விரண்டுந்
தேறுக வாதியின வென்று குணனோடு
மேவிய வெறுப்பு விழைவாகிய விகாரம்
வெம்பகடி நின்றுமுள வென்றுதெரி வாயால். 509

பிரகிருதி, புருஷன் இவ்விரண்டும் அநாதி என்றுணர். வேறுபாடுகளும் குணங்களும் பிரகிருதியிலே பிறப்பன என்றுணர்.

**கார்ய-காரண-கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதி-ருச்யதே**
**புருஷ: ஸுகது:க்கானாம் போக்த்ருத்வே ஹேது-ருச்யதே**

*21.* புகுகாரிய மெய்யொடு காரணமாம்
பொறியும் வினை செய்வதி னோர் பகடி
தகுமேது வெனப்படு மின்பமிடர்
தமையுண் பதினே துயிரென் பதுவே. 510

கார்ய காரணங்களை ஆக்கும் ஹேது பிரகிருதி என்பர். சுக துக்கங்களை உணரும் ஹேது புருஷ னென்பர்.

**புருஷ: ப்ரக்ருதிஸ்த்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜான் குணான்**
**காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோனி ஜன்மஸு**

*22. உடனின் றுளவாய குணங்கடமை*
*உடனின்று கொடேயுயி ருண்ணுமிதற்*
*குடனல்லது கெட்ட துறும் பிறவிக்*
*குளவேது குணத்தை விரும்புவதே.* 511

புருஷன் பிரகிருதியில் நின்றுகொண்டு, பிரகிருதியினிடம் பிறக்கும் குணங்களைத் துய்க்கிறான். குணங்களினிடம் இவனுக்குள்ள பற்றுதலே இவன் நல்லனவும் தீயனவுமாகிய ஜன்மங்களில் பிறப்பதற்குக் காரணமாகிறது.

**உபத்ரஷ்டானுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர:**
**பரமாத்மேதிசாப்யுக்தோ தேஹேऽஸ்மின் புருஷ: பர:**

*23. இப்பான் மை மெயிற்பர னான வுயிர்*
*இதுகாணுவ னேவுவ னேந்துவனாம்*
*துய்ப்போனு மகேச்சுரனும் பரமாத்*
*துமனும் மெனவம்ம சொலப்படுவோன்.* 512

மேற்பார்ப்போன், அனுமதி தருவோன், சுமப்பான், உண்பான், மகேசுவரன் - இங்ஙனம் உடம்பிலுள்ள பரம புருஷன் பரமாத்மா வென்றே சொல்லப்படுகிறான்.

**ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிஞ் ச குணை: ஸஹ**
**ஸர்வதா வர்த்தமானோऽபி ந ஸ பூயோऽபிஜாயதே**

*24. எவனிப் படியே குணனோடு பகடி*
*யையும் புருடன் றனையுந் தெரிவன்*
*இவனெப்படி யேனு மிருப்பவ*
*னாயினுமே திருமப்பிற வானவனே.* 513

இங்ஙனம் புருஷனையும், பிரகிருதியையும், அதன் குணங்களையு மறிந்தோன் எல்லா நெறிகளிலும் இயங்குவானெனினும், அவனுக்கு மறு பிறப்பில்லை.

**த்த்யானே-னாத்மனி பச்யந்தி கேசிதாத்மான-மாத்மனா**
**அன்யே ஸாங்க்க்யேன யோகேன கர்மயோகேன சாபரே**

*25. அகத்தார் தியானத்தி னானே சிலோர் மெய்*
*யகத்தான்மனைக் காணுவார் சாங்கியத்தின்*
*அகத்தியோகினால் வேறுளார் காண்பர் சில்லோர்*
*அதைக் காணுவார் கன்ம யோகத்தி னானும்.* 514

சிலர் ஆத்மாவில், ஆத்மாவால் ஆத்மாவை அறிகிறார்கள்; பிறர் சாங்கிய யோகத்தால் அறிகிறார்கள்; பிறர் கர்ம யோகத்தால்.

**அன்யே த்வேவ-மஜானந்த: ச்ருத்வான்யேப்ய உபாஸதே**
**தேடபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ச்ருதிபராயணா:**

26. இவ்வாறு தெரிகிற்கிலார் வேறுளாரோ
இவண்மற் றறிந்தோ ரிடன்கேட் டறிந்தே
இவ்வா றுபாசிப்பர் கேள்விக் கண்மேலா
கியநிட்டை யவருங் கடப்பர் மிருத்தை. 515

இங்ஙன மறியாத மற்றைப் பிறர் அன்னியரிடமிருந்து பெற்ற சுருதிகளை வழிபடுகிறார்கள். அவர்களும் அந்த சுருதிகளின்படி ஒழுகுவாராயின் மரணத்தை வெல்வார்.

**யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்வம் ஸ்த்தாவர-ஜங்கமம்**
**க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ ஸம்யோகாத் தத் வித்தி பரதர்ஷப**

27. பரதர்க்குள் விடையொப்பை படர்வற்ற படர்வுற்ற
பகுதிக்கண் விரவுற் றெவுயி ரெத்துணை
உருவிற் பிறவி யுற்ற தவைமுற்று முடலத்தொ
டுயிருற்று வரலுற்ற வெனவுட் கொள்வாய். 516

பரதக் காளையே, ஸ்தாவரமாயினும் ஜங்கமமாயினும் ஒருயிர் பிறக்குமாயின், அது க்ஷேத்திரமும் க்ஷேத்திரக்ஞனும் சேர்ந்தமையால் பிறந்ததென்றறி.

**ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்ட்டந்தம் பரமேச்வரம்**
**விநச்யத்-ஸ்வவிநச்யந்தம் ய: பச்யதி ஸ பச்யதி**

28. எல்லாவித பூதங்களி லேயும் பரமேசன்
எனவுள்ளவ னாயுஞ்சம மாநிற்பவனாயும்
நில்லாதவை யழியும் பொழுதுந் தானழியாது
நிலை கிற்பதை யெவன்காணுவனோ காணுமவன்றான். 517

எல்லா பூதங்களிலும் சமமாக நிற்போன் பரமேசுவரன். அழிவனவற்றில் அவன் அழியான். அவனைக் காண்போனே காட்சியுடையான்.

**ஸமம் பச்யன் ஹி ஸர்வத்ர ஸமவ-ஸ்த்தித-மீச்வரம்**
**ந ஹிநஸ்த்-யாத்ம-னாத்மானம் ததோ யாதி பராங் கதிம்**

29. எவனுஞ் சமமாக நிலைத்துளவீச்
சுரனானவனைச் சமமா வறிவோன்
அவனோ தனைநெஞ்சின் வருத்துகிலான்
அடைவன் னுயர்வாய கதிக்கனதால். 518

எங்கும் சமானமாக ஈசன் நிற்பது காண்பான், தன்னைத் தான் துன்பப்படுத்திக் கொள்ளமாட்டான். அதனால் பரகதி அடைகிறான்.

**ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணானி ஸர்வச:**
**ய: பச்யதி ததாத்மான-மகர்த்தாரம் ஸ பச்யதி**

*30. எவைபல் வினையும் பகடிப் பொருளே*
*இவனே புரியும் மெனவும் மவிதம்*
*இவைகட் குயிர்கத்த எலன் னெனவும்*
*எவன்காண் பவனோ அவன்காண் பவனால். 519.*

எங்கும் தொழில்கள் இயற்கையாலேயே செய்யப்படுகின்றன. ஆதலால் தான் கர்த்தா இல்லையென்று காண்பவனே காட்சி யுடையான்.

**யதா பூத-ப்ருதக்பாவ-மேகஸ்த்த-மனுபச்யதி**
**தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா**

*31. ஒருபொருளி லேதான் உயிர்கள் பலவேறா*
*யுளவியல் பிருப்பதெனவு மதனாலே*
*பரவு மெனவும் யாதமய முணர்வானப்*
*பயில்பொழுது மேவும் பிரமமதை யம்மா. 520*

பல வகைப்பட்ட பூதங்கள் ஒரே ஆதாரமுடையன என்பதை அறிவானாயின், அப்போது, அதினின்றும் விஸ்தாரமான பிரம்மத்தை அடைகிறான்.

**அனாதித்வாந்-நிர்குணத்வாத் பரமாத்மாய-மவ்யய:**
**சரீரஸ்த்தோऽபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே**

*32. குந்திதரு மைந்த பரமாத்தும னிவன்மெய்*
*குடிகொளுவ னாயினும் மநாதியுண்மை யாலே*
*அந்தமடை கிற்கிலன் குணங்க ளின்மையாலே*
*அவ்வினை யியற்றவிலன் மற்றிழுகலன்றான். 521*

ஆதியின்மையால், குணமின்மையால், இந்தப் பரமாத்மா கேடற்றான். இவன் உடம்பிலிருந்தாலும் செயலற்றான்; பற்றற்றான்.

**யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யா-தாகாசம் நோபலிப்யதே**
**ஸர்வத்ராவஸ்த்திதோ தேஹே ததாத்மா நோபலிப்யதே**

*33. எல்லாப் பொருளும் புகும்விண் ணெவிதம்*
*இழுகல் லிலையோ வதிநுண் மையினால்*
*எல்லாத் தநுவும் முளதாயுமுயிர்*
*இழுகல்லிலை யாகுவ தவ் விதமே. 522*

எங்குமிருந்தாலும் ஆகாசம் தன் நுண்மையால் பற்றற்று நிற்பதுபோல், உடம்பில் ஆத்மா எங்கணு மிருந்தாலும் பற்றுறுவதிலன்.

**யதா ப்ரகாசயத்-யேக: க்ருத்ஸ்னம் லோக-மிமம் ரவி:**
**க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்னம் ப்ரகாசயதி பாரத**

*34. ஒரு சூரிய னெவ்விதமா யிவ்வெலா*
*வுலகும் மொளிசெய் குவ னவ்விதமே*
*பரதன் மரபோ யுடல்கொள் ளுயிரோ*
*படரும் மொளிதா னுடலெங் கணுமே. 523*

சூரியன் ஒருவனாய், இவ்வுலக முழுதையும் எங்ஙனம் ஒளியுறச் செய்கிறானோ, அதுபோல் க்ஷேத்திரத்தை யுடையோன் க்ஷேத்திர முழுதையும் ஒளியுறச் செய்கிறான்.

**க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞயோ-ரேவ-மந்தரம் ஜ்ஞான சக்ஷுஷா**
**பூத-ப்ரக்ருதி-மோக்ஷஞ் ச யேவிதுர்-யாந்தி தே பரம்**

*35. இவ்வா றுடலோ டுயிர் வேற்றுமையும்*
*எப்பூதமுமாம் பகடிக் குளிருந்*
*தவ்வீடுறு தன்மையு ஞானவிழி*
*யாலோர் வரெவர் பரமார்வரவர் 524*

ஞானக் கண்ணால் இவ்வாறு க்ஷேத்திரத்துக்கும் க்ஷேத்திரக்ஞனுக்கு முள்ள வேற்றுமையை அறிவோர் பூத பிரகிருதியினின்றும் விடுதலை பெற்றுப் பரம்பொருளை அடைகின்றனர்.

*பதின்மூன்றாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## கீதைப்பொருட்டொகை

*தன்னூ னியல்புந் தனைத்தான் பெறுமாறும்*
*பன்னான்ம சோதனையும் பந்தத்திற்-கின்னதுதான்*
*எதுவெனத் தெளிவோ டோரான்ம ஞானமுமிங்*
*கோதும் பதின்மூன் றொருங்கு. (17)*

# கீதைப் பாட்டு

## பதினான்காம் அத்தியாயம்

# குணத்ரய விபாக யோகம்

## கீதை இயற்பொருள் விளக்கம்

ஈரே ழெனுமியன் முக்குண மிவண் கட்டலும் வினையிற்
கார்நா யகமவை யென்பது மவைதீதற விடலும்
சேர்மூன்று கதிக்கும் பரதெய்வந் நிபமெனலும்
தேராதவருந் தேர்வுறவுரை செய்வது மாதோ.

தேக சம்பந்தமே ஆத்மாவின் சுகதுக்கங்களுக்கும் கோபதாபம் முதலிய குணங்களுக்கும் காரணமென்று முற்கூறிய விஷயம் இதில் விவரிக்கப்படுகிறது. உலகத்தைப் படைக்க எண்ணங் கொண்ட கடவுள் முதலில் பிரகிருதியையும் ஜீவனையும் சேர்க்கிறார். பிறகு பிரகிருதி ஆத்மாவின் மும்மைக் காமத்துக் கேற்ப தேவ மனுஷ்ய பசு பக்ஷி ரூபங்களைப் பெற்று சத்வ ரஜஸ் தமோ குணங்களால் ஆத்மாவைப் பிணிக்கிறது. அவற்றுள் சத்வம் மனிதனுக்கு ஞான வொளியையும் நன்மார்க்கத்தில் விருப்பத்தையும் அளிக்கிறது. ரஜஸ் அவா, பற்றுதல் முதலிய குணங்களை யளித்து கர்மங்களில் தூண்டுகிறது தமஸ் மயக்கம், சோம்பல், உறக்கம் முதலியவற்றை யளிக்கிறது. இம் மூன்று குணங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயங்களில் தலையெடுத்து நிற்கும். அப்போது மனிதனுக்கு அதற்கேற்ற குணங்கள் உதிக்கின்றன. முற்கூறிய கடவுளைத் தியானிப்போன் இம்மூன்று குணங்களையும் வென்று சித்தி பெறுவான்.

ஸ்ரீ பகவானுவாச :

**பரம் பூய: ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞானானாம் ஜ்ஞான-முத்தமம்**
**யத் ஜ்ஞாத்வா முனய: ஸர்வே பராம் ஸித்தி-மிதோ கதா:**

1. எதுதெரிந்து முனிவர ரெலோருமிவ
ணினுமுயர்ந்த பத மெய்தினார்
இதுவிளம்பியதின் வேறு மீளவறி
வினுளுயர்ந்த வறிவுரை செய்வேன். 525

**ஸ்ரீபகவான் சொல்லுகிறான்:**

ஞானங்களனைத்திலும் மேலான பரம ஞானத்தை உனக்கு மீட்டு முரைக்கிறேன். அதை யறிந்து முனிவரெல்லாரும் இவ்வுலகத்திலேயே ஈடேற்றம் பெற்றிருக்கிறார்கள்.

**இதம் ஜ்ஞான-முபாச்ரித்ய மம ஸாதர்ம்ய-மாகதா:**
**ஸர்க்கேடபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்தி**

2. இதுஞான மடைந்து பினெற் கிணையா
கியநல் லியல்பேய்வர் சிருட்டியிலும்
உதியார் பிறவிக்க ணொரூழியிலும்
உறுகண் ணெதுவும் பெறலில் லையரோ. 526

இந்த ஞானத்தை யடைந்து அதனால் என்னியல்பு பெற்றோர், படைப்புக் காலத்தில் பிறவார். ஊழியிலும் சாகமாட்டார்.

**மம யோனிர்-மஹத்-ப்ரஹ்ம தஸ்மின் கர்ப்பம் ததாம்யஹம்**
**ஸம்ப்பவ: ஸர்வபூதானாம் ததோ பவதி பாரத**

3. பிறவிக் கிடனா யெனதாய பெரும்
பிரமம் மதிலே கருநல் குவல்யான்
உறுமற்றதனா லுலகம் முழுதும்
உதயம் மடையும் பரதன் மரபோய். 527

பெரிய பரப்பிரம்மமே எனக்காதாரம்; அதில் நான் கருத்தரிக்கிறேன். பாரதா, எல்லா உயிர்களும் அதிலே தான் பிறக்கின்றன.

**ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்ப்பவந்தி யா:**
**தாஸாம் ப்ரஹ்ம-மஹத் யோனி-ரஹம் பீஜப்ரத: பிதா**

4. எல்லாவித சாதியினும் வடிவோ
டெவை தோன்றுவ குந்தியின் மைந்த வவைக்
கெல்லா மொருயோனி பெரும் பிரமம்
யானோ விதைநல்குறு தாதையரோ. 528

எல்லாக் கருக்களிலும் பிறக்கும் வடிவங்களனைத்திற்கும் பிரம்மமே பெரிய காரணம். நான் விதை தரும் பிதா.

**ஸத்வம் ரஜஸ்-தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்ப்பவா:**
**நிபத்னந்தி மஹாபாஹோ தேஹே தேஹின-மவ்யயம்**

*5. கனப்புயத்தனே பகடியிற் கியற்*
*கையின் விளைந்த சத்துவ ரசோதமம்*
*எனப்படுங்குண முடலிடைக் கெடா*
*தியல்ப தாகிவாழ் உயிர் பிணிக்குமே. 529*

சத்வம், ரஜஸ், தமஸ்-இந்த குணங்கள் பிரகிருதியில் எழுவன. பெருந்தோளாய், இவை உடம்பில் அழிவற்ற ஆத்மாவைப் பிணிக்கின்றன.

**தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசக-மனாமயம்**
**ஸுகஸங்கேன பத்னாதி ஜ்ஞானஸங்கேன சாநக**

*6. மற்றவற்றுளே சத்துவந்நிரு*
*மலவியற்கையா லொளிர்தரும் பிணி*
*அற்ற தாயது சுகமவாவலான்*
*அறிவ வாவலா னனக கட்டுமே. 530*

அவற்றுள்ளே சத்வம் நிர்மலத் தன்மையால் ஒளி கொண்டது; நோவற்றது. பாவமற்றோய், அது இன்பச் சேர்க்கையாலும் ஞானச் சேர்க்கையாலும் கட்டுப்படுத்துவது.

**ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணா-ஸங்க-ஸமுத்பவம்**
**தந்-நிபத்னாதி கௌந்தேய கர்மஸங்கேன தேஹினம்**

*7. குந்திசேய் ரசோ குணம்விருப்பினுக்*
*குற்ற காரணம் பற்றொடுந் தொடர்*
*அந்திலுற்பன மென்று தேர்வினை*
*யடைத லானஃதுயிர் பிணிக்குமே. 531*

ரஜோகுணம் விருப்ப இயல்புடையது; அவாவின் சேர்க்கையால் பிறப்பது குந்தி மகனே, அது ஆத்மாவைத் தொழிற் சேர்க்கையால் கட்டுகிறது.

**தமஸ்த்-வஜ்ஞானஜம் வித்தி மோஹனம் ஸர்வதேஹினாம்**
**ப்ரமாதாலஸ்ய-நித்ராபிஸ்-தந்நிபத்நாதி பாரத**

8. உறுதமோ குணமோ வஞான நின்
றுளதெலா வுயிரையு மயக்குமென்
றறிதுயில் பிரமாத மேமடி
யாலதைப் பிணிக்குவது பாரத. 532
[பிரமாதம் - அஜாக்ரதை]

தமோகுணம் அஞ்ஞானத்தின் பிறப்ப தென்றுணர். (இதுவே) எல்லா ஜீவர்களையும் மயங்கச் செய்வது தவறுதலாலும், சோம்பராலும், உறக்கத்தாலும் இது கட்டுப்படுத்துகிறது, பாரதா!

**ஸத்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத**
**ஜ்ஞானமாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத**

9. சத்துவஞ் சுகத்தாசை பாரத
தான் செயும் ரசோ குணம் வினைக்கணே
அத்தமோ குணமறிவை யோமறைத்
தாசையைப் பிரமாத மேற்செயும். 533

சத்வம் இன்பத்திலே பற்றுதல் விளைவிக்கிறது. பாரதா, ரஜோ குணம் செய்கையில் பற்றுறுத்துகிறது தமோ குணம் ஞானத்தைச் சூழ்ந்து (ஜீவனை) மயக்கத்தில் பிணிக்கிறது.

**ரஜஸ்-தமச்-சாபிபூய ஸத்வம் பவதி பாரத**
**ரஜ: ஸத்வம் தமச்சைவ தம: ஸத்வம் ரஜஸ்-ததா**

10. சத்துவக்குணம் பாரதா ரசோ
தம மடக்கிமேம் படுமவ்வாறு தான்
சத்துவந் தமங்களை ரசோ குணம்
சத்துவம் ரசோ குணனையுந்தமம். 534

பாரதா, (சில வேளை) ரஜோ குணத்தையும் தமோ குணத்தையு ம் அடக்கி சத்வம் இயல்கிறது. (சில வேளை) சத்வத்தையும் தமோ குணத்தையும் அடக்கி ரஜோ குணம் நிற்கிறது. அங்ஙனமே சத்வத்தையும் ரஜோ குணத்தையும் அடக்கித் தமஸ் மிஞ்சுகிறது.

**ஸர்வத்வாரேஷு தேஹேSஸ்மின் ப்ரகாச உபஜாயதே**
**ஜ்ஞானம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்வமித்யுத**

11. மேனி மற்றிதிற் பொறிகள் முற்றிலும்
மெய்விளங்குதற் கெந்த வேளையில்
ஞான முள்ளதா மந்த வேளையில்
நன்கு சத்துவம் பொங்குமென்றறி. 535

இந்த உடம்பில் எல்லா வாயில்களிலும் ஞான ஒளி பிறக்குமாயின், அப்போது சத்துவ குணம் வளர்ச்சி பெற்ற தென்றறியக் கடவாய்.

**லோப: ப்ரவ்ருத்தி-ராரம்ப: கர்மணா-மசம: ஸ்ப்ருஹா**
**ரஜஸ்-யேதானி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப**

12. பரதரேறு லோபம் பயன்னில
பண்ணல் கன்மவாரம்பம் வெம்பொறி
கரைகடந்து போவது பல் பற்றிவை
கலவுமே ரசோ குணன் வளர்ந்துழி. 536

அவா, முயற்சி, தொழி லெடுப்பு, அமைதியின்மை, விருப்பம். இவை ரஜோ குணம் மிகுதிப் படுவதிலிருந்து தோன்றுகின்றன, பாரதர் காளையே!

**அப்ரகாசோSப்ரவ்ருத்திச்ச ப்ரமாதோ மோஹ ஏவ ச**
**தமஸ்-யேதானி ஜாயந்தே விவ்ருத்தே குருநந்தன**

13. பெருமயல் பிரமாத மொட்பமில்
பெற்றியே முயலாமை மற்றிவை
ஒருதமோ குணன் வளரு மவ்வுழி
உளவரோ குரு மரபின் மைந்தனே. 537

ஒளியின்மை, முயற்சியின்மை, தவறுதல், மயக்கம்-இவை தமோ குணம் ஓங்குமிடத்தே பிறப்பன, குரு குலச் செல்வமே!

**யதா ஸத்வே ப்ருவ்ருத்தே து ப்ரலயம் யாதி தேஹப்ருத்**
**ததோத்தமவிதாம் லோகா-னமலான் ப்ரதிபத்யதே**

14. எந்தவேளை சத்துவம் வளர்ந்ததவ்
விடையுடம்புளான் மரண மெய்துமேல்
முந்து முத்தமம் முணரு வோருள
முழுது நிர்மல வுலக மேவுவான். 538

சத்வம் ஓங்கி நிற்கையிலே சரீரி இறப்பானாயின், மாசற்றனவாகிய உத்தம ஞானிகளின் உலகங்களை அடைகிறான்.

**ரஜஸி ப்ரலயங் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே**
**ததா ப்ரலீனஸ்-தமஸி மூடயோநிஷு ஜாயதே**

15. இறப்பையே யிராசத குணத்தடைந்
திவண்வரும் வினைத்தொடர் புளாருளே
உறப்பிறப்ப னவ்வவிதந் தமோகுணத்
தூடு செத்தவன் மூடயோனியில். 539

ரஜோகுணத்தில் இறப்போன் கர்மப் பற்றுடையோரிடையே பிறக்கிறான். அவ்வாறே, தமசில் இறப்போன் மூட கர்ப்பங்களில் தோன்றுகிறான்.

**கர்மண: ஸுக்ருதஸ்-யாஹு: ஸாத்விகம் நிர்மலம் பலம்**
**ரஜஸஸ்து பலம் து:க்க-மஜ்ஞானம் தமஸ: பலம்**

16. நயஞ்செய் வினைக்குப் பயன்சத்துவத்தி
னாலுள்ளதா நிர்மலம்மென் றுரைப்பார்
பயன்றுன்பமே ராசசத்துக் கெனுங்கால்
பயன்றாம சத்திற் கஞானம் மரோதான். 540

சத்துவ இயல்புடைய நிர்மலத் தன்மையே நற்செய்கையின் பயனென்பர். ரஜோ குணத்தின் பயன் துன்பம். தமோ குணத்தின் பயன் அறிவின்மை.

**ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் ரஜஸோ லோப ஏவ ச**
**ப்ரமாத-மோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞானமேவ ச**

17. அறிவு சத்துவத் தாலுதிக்குமால்
ஆசை ராசசத்தா லுதிப்பதே
அறிவிலாமையே மோகமேபிர
மாதமே தமசா லுதிப்பவே. 541

சத்வத்திலிருந்து ஞானம் பிறக்கிறது; ரஜோ குணத்தினின்றும் அவா; தமோ குணத்திலிருந்து தவறுதலும், மயக்கமும், அஞ்ஞானமும் தோன்றுகின்றன.

**ஊர்த்தவம் கச்சந்தி ஸத்வஸ்த்தா மத்த்யே திஷ்ட்டந்தி ராஜஸா :**
**ஜகன்ய-குண-வ்ருத்திஸ்த்தா அதோ கச்சந்தி தாமஸா :**

18. சத்துவ குணத்த ருயரச் செல்வ ரிராச
சத்தரிடை நிற்பது செய்வாரிழி தொழிற்கட்
டைத்தகுண வீனவியல் புள்ளவர் கடாம
சத்தரதி நீசக தியிற் றவழ்வரம்மா 542

சத்வ குணத்தில் நிற்போர் மேலேறுகிறார்கள். ரஜோ குணமுடையோர் இடையே நிற்கின்றார்கள். தாமஸர் மிகவும் இழிய குணங்களும் செயல்களுமுடையோராய்க் கீழே செல்வர்.

**நான்யங் குணேப்ப்ய: கர்த்தாரம் யதா த்ரஷ்டானுபச்யதி**
**குணேப்ப்யச்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோSதிகச்சதி**

19. உணரவல சீவன் குணனைவிட வேறாய்
ஒருதலைமை யெந்தப் பொழுதுணர கில்லான்
குணணைவிட வேறா யுளதனை யுணர்ந்தான்
குலவுவனரோ வென்னியல்பை யவனம்மா. 543

குணங்களைத் தவிர வேறு கர்த்தா இல்லையென்பதைக் கண்டு குணங்களுக்கு மேலுள்ள பொருளையும் ஜீவன் அறிவானாயின் என் இயல்பை அறிவான்.

**குணானேதா-னதீத்ய த்ரீன் தேஹீ தேஹ-ஸமுத்பவான்**
**ஜன்ம-ம்ருத்யு-ஜரா-து:க்யைர்-விமுக்தோSம்ருத-மச்னுதே**

20. தேகமுள சீவனுடலிற் செனன மாகுந்
திரிகுண மிவற்றை யொருவிப் பிறவிசாவோ
டாகுறு கிழத்தன மிவற்றின் விளைதுன்பம்
அறவிடுதல் பெற்றமுத முறவநு பவிப்பன். 544

உடம்பிலே பிறக்கும் இந்த மூன்று குணங்களையுங் கடந்து பிறப்பு, சாவு, மூப்பு, வருத்தம் என்பனவற்றினின்றும் விடுபட்டோன் அமிர்த நிலையடைகிறான்.

அர்ஜுன உவாச :

**கைர்-லிங்கைஸ்-த்ரீன் குணா-னேதா-னதீதோ பவதி ப்ரபோ**
**கிமாசார:கதஞ்-சைதான்ஸ்-த்ரீன் குணா-னதிவர்த்ததே**

21. இவைமூன்று குணங்கள் கடந்தவனுக்கு
கேதோ வடையாள மெதோ வொழுகா
றிவைமூன்று குணங்கள் கடந்ததுதா
னெவ்வாறு கொலம்ம எலாமுதல்வோய். 545

அர்ஜுனன் சொல்லுகிறான்:

இறைவனே, மூன்று குணங்களையுங் கடந்தோன் என்ன அடையாளங்களுடையவன்? எங்ஙனம் ஒழுகுவான்? இந்த மூன்று குணங்களையும் அவன் எங்ஙனம் கடக்கிறான்?

*ஸ்ரீ பகவானுவாச :*

**ப்ரகாசஞ் ச ப்ரவ்ருத்திஞ் ச மோஹமேவ ச பாண்டவ**
**ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி ந நிவ்ருத்தானி காங்க்ஷதி**

*22. அறிவி னொட்பமும் வினைமுயற்சியோ*
*டகமருட்கை யுண்டெனின் வெறுக்கலன்*
*பிறவிவற்றை யில்லாது பெட்டிலன்*
*பெரிய பாண்டுவின் னுரிய மைந்தனே.* 546

**ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:**

ஒளி, தொழில், மயக்கம்-இவை தோன்றும்போது இவற்றைப் பகைத்திடான்; நீங்கியபோது இவற்றை விரும்பான்;

**உதாஸீனவ-தாஸீனோ குணைர்-யோ ந விசால்யதே**
**குணாவர்த்தந்த இத்யேவ யோऽவதிஷ்ட்டதி நேங்கதே**

*23. எவன்னேதிலன் போலிருந்தே குணங்கள்*
*இவற்றா லலைப்புண் கிலானோ குணங்கள்*
*இவற்றி னிருக்கின்ற வென்றே நினைத்திங்*
*கெவன்வாய் திறக்கின் றிலானோ செயானோ.* 547

புறக்கணித்தான் போலேயிருப்பான். குணங்களால் சலிப்படையான். "குணங்கள் சுழல்கின்றன" என்றெண்ணி அசைவற்று நிற்பான்;

**ஸம-து:க்க ஸுக: ஸ்வஸ்த்த: ஸம-லோஷ்டாச்ம-காஞ்சன:**
**துல்ய-ப்ரியாப்ரியோ தீரஸ்-துல்யநிந்தாத்ம-ஸம்ஸ்துதி:**

*24. சுகதுக்க சமத்தொடு தன்கணிலைஇச்*
*சுடுமட்சில் பொலங்கல் பொரப்பிரியம்*
*தகவப் பிரியங் கொளுநன் மதியிற்*
*றனையே யிகழ்வோ புகழ்வோ சமனாய்.* 548

துன்பத்தையும் இன்பத்தையும் நிகராகக் கொண்டோன். தன்னிலையில் நிற்பான்; ஓட்டையும் கல்லையும் பொன்னையும் நிகராகக் காண்பான்; இனியவரிடத்தும், இன்னாதாரிடத்தும் சமானமாக நடக்குந் தீரன்; இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் நிகராகக் கணிப்பான்.

**மானாபமானயோஸ்-துல்யஸ்-துல்யோ மித்ராரிபக்ஷயோ:**
**ஸர்வாரம்ப-பரித்யாகீ குணாதீத: ஸ உச்யதே**

*25. அவமானமு மானமுமோர் படியாய்*
*அற்றாருட னுற்றவர்கட் சமமாய்த்*
*தவவாள் வினையாவு மொழித்த வவன்*
*தான்றாயவ னென்பன் குணங்களையே.* 549

மானத்தையும் அவமானத்தையும் நிகராகக் கருதுவான்; நண்பரிடத்தும் பகைவரிடத்தும் நடுநிலைமை பூண்டான். எல்லாவிசுத் தொழிலெடுப்புக் களையுந் துறந்தான்-அவனே குணங்களைக் கடந்தவனென்று சொல்லப்படுகிறான்.

**மாஞ் ச யோऽவ்யபிசாரேண பக்தியோகேன ஸேவதே**
**ஸ குணான் ஸமதீத்யைதான் ப்ரஹ்ம பூயாய கல்பதே**

*26. எவன் வேறியார் கண்ணு மேவாதபத்தி*
*யோகத்தி னாலுமெனைச் சேவை செய்வன்*
*அவனிக் குணங்கடமைத் தாவினானாய்*
*அடையத் தகுமம்ம பிரமத்தியற்கை.* 550

வேறுபாடில்லாத பக்தி யோகத்தால் என்னை வழிபடுவோனும் குணங்களைக் கடந்து பிரம்மத் தன்மை பெறத்தகுவான்.

**ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹ-மம்ருதஸ்-யாவ்யயஸ்ய ச**
**சாச்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச**

*27. இறவாது விகாரம் மிலையாகும் பிரமத்திற்*
*கெவ்வேது வின்யான்றங்கிட மவ்வேது வினழியா*
*அறனால் விளைதற்கும்மொரு முடிபே துணிவுடையார்*
*அடையின்ப மதற்குந் நிலையிட னாகுவலம்மா.* 551

சாவும் கேடுமற்ற பிரம்மத்துக்கு நானே நிலைக்களன். என்றும் இயலும் அறத்துக்கும் தனிமை யின்பத்துக்கும் நானே இடம்.

*பதினான்காம் அத்தியாயம் நிறைவேறியது.*

## கீதைப் பொருட்டொகை

*முக்குணங்கள் கட்டு முறையு மவைக்குவினை*
*புக்க தலைமை பொருந்துவது-மிக்கவற்றைத்*
*தீதுகெட விடலுஞ் சேர்முக் கதிக்குந்தே*
*வேதுவென லுஞ்சொலு மீரேழு.* (18)

# கீதைப் பாட்டு

## பதினைந்தாம் அத்தியாயம்

# புருஷோத்தம யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

மூவைந் தில்சித் தராரு யிருக்கும் மலமற்ற
சீவன் கடமக்கும் முயர்புரு டோத்தம னெங்கும்
மேவுந் திறனா லேந்தும் விதத்தா லுடையானாம்
தாவில் லியல்பால் வேறெனல் சாற்றும் மதிகொளவே.

*பிரகிருதி ஆத்மா-இவ்விரண்டையும் தன் வசப்படுத்திக்கொண்டு நிற்கும் கடவுள் எவ்விதத்திலும் இவைகளைவிட மேலானவர். ஆகையால் புருஷோத்தமனென்று பெயர் பெற்றிருக்கிறார். அரசம் வித்து முளையாகவும் கன்றாகவும் பிறகு பெரிய மரமாகவும் மாறி வானளாவியிருப்பதுபோல் பிரகிருதியும் ஆத்மாவுடன் சேர்ந்து மகத்து. அகங்காரம். இந்திரியங்கள், ஐந்து பூதங்கள் என்பனவாக மாறிப் பிறகு தேவமனுஷ்ய யக்ஷ ராக்ஷஸாதி ரூபங்களுடன் எங்கும் பரவியிருக்கின்றது. இந்த பிரகிருதியாகிய மரத்தைப் பற்றில்லாமை என்ற கோடாரியால் முதலில் வெட்டி முறிக்கவேண்டும். பிறகு அயர்வு நீங்கும் பொருட்டுக் கடவுளைச் சரணம் புகுந்து யோகத்திலிறங்க வேண்டும். சம்சாரி, முக்தன் என்று ஆத்மாக்கள் இரண் வகைப்பட்டவர்கள். கடவுளோ இவ்விரண்டு வித ஆத்மாக்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டவ ர். அவரே உலகத்தில் மறைந்து நின்று உலகத்தைத் தாங்கி நிற்பவர்.*

*ஸ்ரீ பகவானுவாச :*

**ஊர்த்த்வ-மூல-மத:சாக-மச்வத்தம் ப்ராஹு-ரவ்யயம்**
**ச்சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி யஸ்தம் வேத ஸ வேதவித்**

1. *மீதுள வேரதுவாய்க் கீழ்வளர் சாகையதாய்*
*வீடி யழிந்திலதா யாதரசைச் சொனதோ*
*வேதமெதற் கிலைகளா மதையா ருணர்தல்*
*மேயினன் மற்றையவன் வேத முணர்ந்தவனால்.* 552

***ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:***
அவ்யக்தம் மேலே வேர்களும் கீழே கிளைகளுமுடையதோர் அரச மரத்தைப் போன்றது என்பர். அதன் இலைகளே வேதங்கள்; அதை அறிவோனே வேதமறிவோன். [அவ்யக்தம் - ஜகத்தின் தெளிவுபடாத உள் நிலை].

**அதச்-சோர்த்த்வம் ப்ரஸ்ருதாஸ்-தஸ்ய சாகா**
**குண-ப்ரவ்ருத்தா விஷய-ப்ரவாலா:**
**அதச்ச மூலான்-யனுஸந்ததானி**
**கர்மானுபந்தீனி மனுஷ்யலோகே**

2. *அம்மரத் துள்ளன குணங்களினால் வளரும்*
*ஐம்புல மாயதளிர் பம்பிய சாகைகள் கீ*
*ழும்மிசையும் பரவுங் கீழும் மனித்தவுல*
*குட்பல வாயவினைக் கட்டெனும் வேரடரும்.* 553

அதன் கிளைகள் குணங்களால் ஓங்கி விஷயத் தளிர்களுடன் கீழும் மேலும் பரந்து கிடக்கின்றன. அதன் வேர்கள் கீழ் நோக்கிப் பல்கி மனித உலகத்தில் கர்மத் தொடுப்புக்களாகின்றன.

**ந ரூப-மஸ்யேஹ ததோபலப்ப்யதே**
**நாந்தோ ந சாதிர் ந ச ஸம்ப்ரதிஷ்ட்டா**

3. *இந்த மரத்துருவை யந்தவிதம் மிவுலகில்*
*லறிவந் ததிலை யீறு முணர்ந்ததிலை*
*முந்திய வாதியையுஞ் சிந்தை தெரிந்ததிலை*
*மொய்த்த விருப்பிடனு முய்த்தறி யப்படலில்.* 554

ஆதலால் இவ்வுலகத்தில் இதற்கு வடிவங் காணப்படுவதில்லை; முடிவும், ஆதியும், நிலைக்களனும் புலப்படுவதில்லை. நன்கு ஊன்றிய வேருடைய இந்த அரச மரத்தைப் பற்றின்மை யென்னும் வலிய வாளால் வெட்டியெறிந்து விட்டு.

**அச்வத்த-மேனம் ஸுவிரூடமூல-**
**மஸங்க-சஸ்த்ரேண த்ருடேன ச்சித்வா**
**தத: பதம் தத் பரிமார்க்கிதவ்யம்**
**யஸ்மின் கதா ந நிவர்த்தந்தி பூய:**

*3-4 ஒன்றும நேகமும் வேர்துன் றசுவத்தமிதை*
*யுறுதிநிரா சையென் வாள்ஒச்சி யெறிந்ததனால்*
*நன்றெவ ணேகியவர் பின்னறயு மீள்வதிலை*
*நாடுறு மவ்விடனைத் தேடுவதே தகுமால்.* 554-555

**தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே**
**யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ**

*4. உலகப் பிரவர்த்தி யெவன்புடைநின்*
*றொழுகப் பெறலாய தநாதியாய்த்*
*தலைமைப்பொரு ளாகிய வப்புருடன்*
*றனையே சரணா வுறவேண்டுவதே.* 556

அப்பால் ஒருவன் புகுந்தோர் மீள்வதற்ற பதவியைப் பெறலாம். (அப் பத முடையோனாகிய) எவனிடமிருந்து ஆதித் தொழில் பொழிவுற்றதோ, அந்த ஆதி புருஷனைச் சார்ந்து நிற்கிறேன்.

**நிர்-மான-மோஹா ஜித-ஸங்க-தோஷா**
**அத்த்யாத்ம-நித்யா விநிவ்ருத்-காமா:**
**த்வந்த்வைர்-விமுக்தா: ஸுகது:க்க ஸம்ஜ்ஞை-**
**கச்சந்த்-யமூடா:பத-மவ்யயம் தத்**

*5. மயன்மான மறநின்று தொடுகுற்றம் வென்றார்*
*மதியான்ம னிடை நிச்ச லுறவாசை யற்றார்*
*துயரின்ப மெனுநாம முளதொந்தம் விட்டார்*
*துனுமூட மிலர்சேர்வ ரதுகேடில் பதமே.* 557

செருக்கும் மயக்குமு மற்றோர், சார்புச் குற்றங்களையெல்லாம் வென்றோர், ஆத்ம ஞானத்தில் எப்போதும் நிற்போர், விருப்பங் களினின்றும் நீங்கியோர், சுக துக்கக் குறிப்புக்களையுடைய இரட்டை களினின்றும் விடுபட்டோர், மடமை யற்றோர்-இன்னோர் அந்த நாசமற்ற பதத்தை எய்துகின்றனர்.

**ந தத்-ப்பாஸயதே ஸூர்யோ ந சசாங்கோ ந பாவக:**
**யத்-கத்வா ந நிவர்த்தந்தே தத்-தாம பரமம் மம**

6. அதை ரவி விளக்கலிலை சசியொளி செயற்குமிலை
 அழலொளி தரற்கு மிலையால்
 எதையடைதல் பெற்று மறுபடியிவ னுதிப்பதிலை
 எனதது பரந்தாமமால். 558

அதற்கு சூரியனும் சந்திரனும் தீயும் ஒளியேற்றுவதில்லை. எதனை எயய்தினோர் மீள்வதில்லையோ, அதுவே என் பரமபதம்.

**மமைவாம்சோ ஜீவ-லோகே ஜீவபூத: ஸநாதன:**
**மன: ஷஷ்ட்டானீந்த்ரியாணி ப்ரக்ருதி-ஸ்த்தானி கர்ஷதி**

7. என்னதே யெனும் மமிச மாயநா
 திப்படச் சமுசார லோகமேன்
 மன்னு சிவனோப கடியின் வதி
 மனமோ டாறெனும் பொறியை யீர்க்குமே. 559

எனது அம்சமே ஜீவலோகத்தில் என்றுமுள்ள ஜீவனாகி, இயற்கையிலுள்ளனவாகிய மனதுட்பட்ட ஆறு இந்திரியங்களையும் கவர்கிறது.

**சரீரம் யதவாப்னோதி யச்சாப்-யுத்க்ராம-தீச்வர:**
**க்ருஹீத்வைதானி ஸம்யாதி வாயுர்-கந்தானிவாசயாத்**

8. பொறியாள் பவனா முயிரெவ் வுடலிற்
 புகுவா னெதினின்று புறப்படுவான்
 எறிகால் தொடுமவ் விடனின்று மணத்
 தினை யீர்ப்பது போலிவை யீர்த்தெழுமே. 560

கந்தங்களைக் காற்றுத் தோய்வினால் பற்றிச் செல்வதுபோல், ஈசுவரன், யாதேனுமோருடலை எய்துங் காலத்தும் விடுங்காலத்தும், இந்த இந்திரியங்களைப் பற்றிச் செல்லுகிறான்.

**ச்ரோத்ரஞ் சக்ஷு: ஸ்பர்சனஞ்ச ரஸனம் க்க்ராண மேவ ச**
**அதிஷ்ட்டாய மனச்சாயம் விஷயானுபஸேவதே**

9. செவிவாய் விழிமூக் கொடு நாமனனும்
 இவன்மே விடனாய் விடயங்க ளுணும். 561

கேட்டல், காண்டல், தீண்டுதல், சுவை, மோப்பு, மனம்-இவற்றில் நிலைகொண்டு ஜீவன் விஷயங்களைத் தொடர்ந்து நடக்கிறான்.

**உத்க்ராமந்தம் ஸ்த்திதம் வாபி புஞ்ஜானம் வா குணான்விதம்**
**விமூடா நானுபச்யந்தி பச்யந்தி ஜ்ஞானசக்ஷுஷ:**

10. விடயமுணு மேனுங் குணமொ டுளதேனும்
வெளியில் வருமேனு மகமமரு மேனும்
மடமை மிகுவார்தாம் தெரிதருத லில்லை
மதிவிழியுளாரோ தெளிதருவ ரம்ம. 562

அவன் புறப்படுகையிலும், நிற்கையிலும், உண்ணுகையிலும், குணங்களைச் சார்ந்திருக்கையிலும், அவனை மூடர் காண்பதில்லை. ஞான விழியுடையோர் காண்கின்றனர்.

**யதந்தோ யோகினச்சைனம் பச்யநத்யாத்மன் யவஸ்த்திதம்**
**யதந்தோऽப்யக்ருதாத்மானோ நைனம் பச்யந்த்-யசேதஸ:**

11. முயறல்லுள யோகியர் மெய்யினிலே
முறைநின்ற விதைத்தெரி கிற்பரரோ
முயல்வோ ரெனினு முளமா சுகழா
மூடர் தெரிகிற்பவ ரில்லையிதை. 563

முயற்சியுடைய யோகிகள் இவனைத் தம்முள்ளேயே காண்கின்றனர். முயற்சியுடையோராயினும் தம்மைத் தாம் சமைக்காத அஞ்ஞானிகள் இவனைக் காண்கிலர்.

**யதாதித்ய-கதம் தேஜே ஜகத்-ப்பாஸயதேऽகிலம்**
**யச்-சந்த்ரமஸி யச்சாக்னௌ தத்-தேஜோ வித்தி மாமகம்**

12. ஆதித்த னிடம்புகு மெவ்வொளியெல்
லாலோகமு நின்று விளக்குவதோ
ஏதச் சசியின் னுளதேது நெருப்
பின்கண்ணுள தவ்வொளி யென்னது தேர். 564

சூரியனிடமிருந்து உலக முழுமைக்கும் சுடர் கொளுத்தும் ஒளியும், சந்திரனிடத்துள்ளதும், தீயிலுள்ளதும்-அவ்வொளி யெல்லாம் என்னுடையதே யென்றுணர்.

**காமாவிச்ய ச பூதானி தாரயாம்-யஹ-மோஜஸா**
**புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வ: ஸோமோ பூத்வா ரஸாத்மக:**

13. பூமிக்க ணுழைந்துகொ டோள்வலியாற்
பூதங்களை யேந்துவல் யானிரத
மேமிக்குள சந்திர னாகியெலா
விதவோட தியும்வளர் விப்பலரோ. 565

நான் பூமியுட் புகுந்து உயிர்களை வீரியத்தால் தாங்குகிறேன்; ரச வடிவமுள்ள சோமனாகிப் பூண்டுகளையெல்லாம் வளர்க்கிறேன்.

**அஹம் வைச்வானரோ பூத்வா ப்ராணினாம் தேஹ-மாச்ரித:**
**ப்ராணாபான-ஸமாயுக்த: பசாம்-யன்னஞ் சதுர்விதம்**

14. *வயிற்றின் வளர்சாடர வெந்தழலாய்*
*மன்னும் முயிர்மெய் தொறுமே வியிருந்*
*துயிர்க்கின்ற பிராண னபானனுடன்*
*ஒருநால் வகையா முணவும் மடுவேன்.* 566

நானே வைசுவாநரனாய், உயிர்களின் உடல்களைச் சார்ந்திருக்கிறேன். பிராணன் அபானன் என்ற வாயுக்களுடன் கூடி நால்வகைப்பட்ட அன்னத்தை ஜீர்ண மாக்குகிறேன். [வைசுவா நரன் - எல்லா நரரிடத்துமுள்ள கடவுள்]

**ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ**
**மத்த: ஸ்ம்ருதிர்-ஜ்ஞான-மபோஹனஞ் ச**
**வேதைச்ச ஸர்வை-ரஹமேவ வேத்யோ**
**வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம்**

15. *உறைபவனும் யானே முழுவதினு முள்ளத்*
*தூசுமறி வெண்ணம் உண்டெனிட னின்று*
*மறைமுழுவ தாலுந் தெரிதகுவன் யானே*
*மறைமுடிபு செய்வேன் மறையுணர்வன் யானே.* 567

எல்லாருடைய அகத்திலும் நான் புகுந்திக்கிறேன். நினைவும், ஞானமும், இவற்றின் நீக்கமும்-என்னிடமிருந்து பிறக்கின்றன. எல்லாத் தேசங்களிலும் அறியப்படும் பொருள் யான்; வேதாந்தத்தை ஆக்கியோன் யான்; வேத முணர்ந்தோன் யானே.

**த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்-சாக்ஷர ஏவ ச**
**க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்தோऽக்ஷர உச்யதே**

16. *அழிவை யுளனென்ன அழிவை யிலனென்ன*
*அவனியினி லுள்ளார் புருட ரிருவேறாய்*
*அழிவையுள தெல்லாப் பிராணி யுயிருந்தான்*
*அழிவை வயிலன் கூட மாகவுள னென்பான்.* 568

உலகத்தில் இரண்டு வகைப் புருஷருளர்: அக்ஷர புருஷன், க்ஷர புருஷன் என. க்ஷர புருஷன் என்பது எல்லா உயிர்களையுங் குறிக்கும்; கூடஸ்தனே அக்ஷர புருஷன். [க்ஷரம் - அழிவது; அக்ஷரம் - அழியாதது. கூடஸ்தன் - சிகரத்திலுள்ளோன். மாறுதலற்றோன்]

**உத்தம: புருஷஸ்த்-வன்ய: பர:மாத்மேத்-புதாஹ்ருத:**
**யோ லோகத்ரய-மாவிச்ய பிபர்த்-யவ்யய ஈச்வர:**

17. ஒருபர மாத்தும னென்றுரை தருதற்குரிய
உத்தம புருடனெனின் மற்றிவரிற் பிறனால்
ஒருவித மாறுதலு முறுகில னீச்சுரன்மூ
வுலகையு நுழைபவ னேந்துவ னெவனம்மவரோ. 569

இவரில் வேறுபட்டோன் உத்தம புருஷன். அவனே பரமாத்மா எனப்படுவோன். அவன் மூன்று உலகுகளினும் புகுந்து அவற்றைத் தரிக்கிறான்; கேடற்ற ஈசுவரன்.

**யஸ்மாத் க்ஷர-மதீதோऽஹ-மக்ஷராதபி சோத்தம:**
**அதோऽஸ்மி லோகே வேதே ந ப்ரதித: புருஷோத்தம:**

18. எவ்வேது வினாலழி வுள்ளதனுக்
கெட்டே னழியாதினு முத்தமன்யான்
அவ்வேதுவி னாலுகத் துமறை
யதிலும்புருடோத் தமனா மிளிர்வேன். 570

நான் அழிவு கடந்தோனாதலாலும், அக்ஷர புருஷனைக் காட்டிலும் சிறந்தோனாதலாலும், உலகத்தாராலும் வேதங்களாலும் புருஷோத் தமனென்று கூறப்படுகிறேன்.

**யோ மாமேவ-மஸம்மூடோ ஜானாதி புருஷோத்தமம்**
**ஸ ஸர்வவித்-ப்பஜதி மாம் ஸர்வபாவேன பாரத**

19. எவனிப் படியே புருடோத் தமனாம்
எனைமூட மிலாதவனா வறிவன்
அவன்முற்று முணர்ந்தவன் பாரதபா
வனையா வையினுந் தொழுவோ னெனையே. 571

மடமை தீர்ந்தவனாய், எவன் யானே புருஷோத்தமனென்பதை அறிவானோ, அவனே எல்லா மறிந்தோன். அவன் என்னை எல்லாத் தன்மையாலும் வழிபடுகிறான்.

**இதி குஹ்யதமம் சாஸ்த்ர-மித-முக்தம் மயானக**
**ஏதத்-புத்த்வா புத்திமான் ஸ்யாத் க்ருதக்ருத்யச்ச பாரத**

*20. இதுவோ ரகசிய தமமா கியநூல்*
*இவிதந் சொலலா யதெனா லநக*
*இதுபாரத தேர்ந்தவன் புந்தியனாம்*
*இவண்செய்வன செய்தவனும் எனவாம். 572*

குற்றமற்றோய், இங்ஙனம் மிகவும் ரகசியமான இந்தச் சாஸ்திரத்தை உனக்கு உரைத்தேன். பாரதா, இதையுணர்ந்தோன் புத்திமானாவான்; அவனே செய்யத்தக்கது செய்தான்.

பதினைந்தாம் அத்தியாயம் நிறைவேறியது

## கீதைப் பொருட்டொகை

*அசித்தா ருயிர்க்கு மமல வுயிர்க்கும்*
*இசைத்தபுரு டோத்தமனே யெங்கும் - வசித்தலினாற்*
*றாங்குதலாற் சாமியாந் தன்மையினால் வேறாக*
*ஈங்குரைப்ப தைம்மூன் றெடுத்து. (19)*

# கீதைப் பாட்டு

## பதினாறாம் அத்தியாயம்

## தைவாசுர சம்பத் விபாக யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

ஈரெட் டெனுமியல் தேவரியல்பா சுரரியல்பை
ஓரற்கு வகுத்தோதுதன் முன்னிட்டு மறைக்கே
நேருற்று லயப்பட் டியல்கெனுந் தத்துவ நெறியைச்
சேர்புற் றொழுகலினு முணர்தலினும் முறுதிக்கே.

முற்கூறிய தத்துவங்களைத் தெய்வத் தன்மை வாய்ந்தவர்களே உணர்வார்கள். அசுரத் தன்மை வாய்ந்தவர்கள் அறியார்கள். தெய்வத்தன்மையுடையோர் மனது தெளிவுற்றிருக்கும். அவர் பிறருக்குத் தீங்கு செய்யார், கோப மறியார், பொறுமை இரக்கம் பெற்றிருப்பார். அசுரத் தன்மையுடையோரோ டம்பமும், கொழுப்பும், கர்வமும், கோபமும். அயர்வும் பொருந்தியிருப்பார். தெய்வத்தன்மையுடையோர் சம்சார பந்தத்தினின்றும் விடுபடுவார். மற்றவரோ பின்னும் அதில் கட்டுப்படுவார். மேலும் அசுரத்தன்மையுடையோர் வையகம் பொய்யென்றும் ஈசுவரனற்றதென்றும் உரைப்பார்கள். தாங்களே இறைவனென்றும், தாங்களே வல்லவர்களென்றும், தாங்களே செல்வம் படைத்தவர்களென்றும், தங்களுக்கு நிகர் எவருமில்லையென்றும் எண்ணிக்கொண்டு கெட்ட காரியங்களைச் செய்து நரகத்தில் விழுவார்கள். அவர்களுக்கு சாஸ்திரத்தில் நம்பிக்கை கிடையாது. தெய்வத் தன்மை வாய்ந்தவர்களுக்கோ சாஸ்திரமே பிரமாணமாகும்.

ஸ்ரீ பகவானுவாச :

**அபயம் ஸத்வ-ஸம்சுத்திர்-ஜ்ஞான-யோக-வ்யவஸ்த்திதி:**
**தானம் தமச்ச யஜ்ஞச்ச ஸ்வாத்த்யாயஸ்-தப ஆர்ஜவம்**

1. சத்துவ சுத்தியுளத் தச்சமி லாதநிலை
தன்னறி யோகமிசை மன்னுவ தோடுகொடை
சித்தம டங்கன்மறை செப்புதல் வேள்விசெயல்
செய்தவ மேவல்தனுட் பொய்கப டின்மையொடு. 573

**ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:**
அஞ்சாமை, உள்ளத் தூய்மை, ஞான யோகத்தில் உறுதி, ஈகை, தன்னடக்கம், வேள்வி, வேதங் கற்றல், தவம், நேர்மை,

**அஹிம்ஸா ஸத்ய-மக்ரோதஸ்-த்யாக: சாந்தி-ரபைசுனம்**
**தயா பூதேஷ்-வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீ-ரசாபலம்**

2. தீங்கிழை யாமைபிறர் தீங்குரை யாமை மெய்ம்மை
செய்புதல் கோபமின்மை தியாக முயிர்க்கருளல்
பாங்குறு சாந்தநிலை பசைதிலி லாமைமென்மை
பாவமியற் றுழிநாண் சபல மிலாதபடி 574

கொல்லாமை வாய்மை, சினவாமை, துறவு, ஆறுதல், வண்மை, ஜீவதயை, அவாவின்மை, மென்மை நாணுடைமை, சலியாமை.

**தேஜ: க்ஷமா த்த்ருதி: சௌச-மத்ரோஹோ நாதிமானிதா**
**பவந்தி ஸம்பதம் தைவீ-மபிஜாதஸ்ய பாரத**

3. தேசு பொறைக்கணிலை திடம்பரி சுத்திதடை
செய்தலி லாமைதருக் கெய்த விலாமையெனப்
பேசிவை தேவர் செல்வம் பேணி யுதித்தவற்குப்
பெரிதுற லாகுமரோ பரதகுலத் தவனே. 575

ஒளி, பொறை, உறுதி, சுத்தம், துரோகமின்மை - இவை தெய்வ சம்பத்தை எய்தியவனிடம் காணப்படுகின்றன, பாரதா!

**தம்ப்போ தர்ப்போऽபிமானச்ச க்ரோத: பாருஷ்யமேவச**
**அஜ்ஞானஞ் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பத-மாஸுரீம்**

4. பெருமித மிடம்பஞ் சினனொடு மிடுக்குப்
பெருகிய குரூரந் தெளிவை யடையாமை
பிருதை மகனேயா சுரருடைய செல்வம்
பேணியுத யஞ்செய் தானுடைய வாமே. 576

டம்பம், இறுமாப்பு, கர்வம், சினம், கடுமை, அஞ்ஞானம் - இவை அசுர சம்பத்தை எய்தியவனிடம் காணப்படுகின்றன; பார்த்தா!

**தைவீஸம்பத் விமோக்ஷாய நிபந்த்தாயாஸுரீ மதா**
**மா சுச: ஸம்பதந் தைவீ-மபிஜாதோSஸி பாண்டவ**

5. *அமரர்க்குள செல்வம்விடு படுதற்கெண லாயிற்*
*றசுரர்க்குள செல்வந்தனை யுறுதற்கெண லாயிற்*
*றமரர்க்குள திருவெண்ணி யுதித்துள்ளனை யம்மா*
*ஆண்டைக் கிடரடை கிற்கிலை பாண்டுக் கினியோயே.* 577

தேவ சம்பத்தால் விடுதலை யுண்டாம். அசுர சம்பத்தால் பந்தமேற்படும்; பாண்டவா, தேவ சம்பத்தை எய்திவிட்டாய்; துயரப்படாதே.

**த்வெள பூத-ஸர்க்வெள லோகேSஸ்மின் தைவ ஆஸுர ஏவ ச**
**தைவோ விஸ்தரச: ப்ரோக்த ஆஸுரம் பார்த்த மே ச்ருணு**

6. *பிருதைக்கொரு புதல்வா வுலகிதனிற் சுரரியல்பைப்*
*பெற்றுள்ளது மசுரரியல் புற்றுள்ளது மென்ன*
*இருமைப் படுவது சீவர் பிறப்புச் சுரரில்போ*
*தியதாயது விரிவாயென திடனாசுர வியல்கேள்.* 578

இவ்வுலகத்தில் உயிர்ப்படைப்பு இரண்டு வகைப்படும். தேவ இயல் கொண்டது, அசுர இயல் கொண்டது. தேவ இயல் கொண்டதை விரித்துச் சொன்னேன். பார்த்தா, அசுர இயல் கொண்டதைச் சொல்லுகிறேன், கேள்.

**ப்ரவ்ருத்திஞ் ச நிவ்ருத்திஞ் ச ஜனா ந விது-ராஸுரா:**
**ந செளசந் நாபி சாசாரோ ந ஸத்யந் தேஷு வித்யதே**

7. *பற்றியொழு கும்வழியும் விட்டொழுகு மாறும்*
*பகுத்துணர்த லில்லை யசுரத்தன்மை கொள்மக்கள்.*
*மற்றவ ரிடத்திலொரு சுத்தியிலை யாகும்*
*வாய்மையிலை நன்றொழுகு மாறுமிலை யாலோ.* 579

அசுரத் தன்மை கொண்டோர் தொழிலியல்பையும் வீட்டியல்பையும் அறியார், தூய்மையேனும், ஒழுக்கமேனும், வாய்மையேனும் அவர்களிடம் காணப்படுவதில்லை.

**அஸத்ய-மப்ரதிஷ்ட்டந் தே ஜக-தாஹு-ரநீச்வரம்**
**அபரஸ்பர-ஸம்ப்பூதம் கிமன்யத் காம-ஹைதுகம்**

8. *அவரிவ் வுலகத்தை யசத்தியமென்*
*றாதாரமிலாத தநீச்சரமென்*
*பவர்வே றிருவர் புணரா தநியம்*
*படலேதொரு காரண மென்பரவர்.*

அவர்கள் இவ்வுலகம் உண்மையற்றதென்றும் நிலையற்ற தென்றும் கடவுளற்றதென்றும் சொல்லுகிறார்கள். இது தொடர்பின்றிப் பிறந்த தென்றும், வெறுமே காமத்தை ஏதுவாக உடையது என்றும் சொல்லுகிறார்கள்.

**ஏதாந் த்ருஷ்டி-மவஷ்டப்ப்ய நஷ்டாத்மானோSல்ப-புத்தய:**
**ப்ரபவந்த்-யுக்ர கர்மாண: க்ஷயாய ஜகதோSஹிதா:**

9. *இந்தவித மாயவுணர் வெய்தியுயிர் காணார்*
*ஈனவறி வோர்கொடுமை யானவினை யாளர்*
*நந்துசுப மேவரிய பாவிய ருலோக*
*நாசமடை தற்குரிய காரணர்க ளாவர்.* 581

இந்தக் காட்சியில் நிலை பெற்று அற்ப புத்தியுடைய அந்த நஷ்டாத்மாக்கள் உலகத்துக்குத் தீங்கு சூழ்வோராய் அதன் நாசத்துக் காகக் கொடிய தொழில் செய்கின்றனர்.

**காம-மாச்ரித்ய துஷ்பூரம் தம்ப்ப-மான மதான்விதா:**
**மோஹாத் க்ருஹீத்வாSஸத்க்ராஹான் ப்ரவர்த்தந் தேSசுசி வ்ரதா:**

10. *நிரப்பமுடி யாமலுள காமவச மாகி*
*நின்றுள மருட்கையுட னன்றல்வழி யானே*
*பொருட்டொகை படைத்தசுசி போர்த்த விரதத்திற்*
*பொங்குவ ரிடம்பமத மானமொடு போவர்.* 582

நிரம்பவொண்ணாத காமத்தைச் சார்ந்து, டம்பமும், கர்வமும், மதமும் பொருந்தியவராய், மயக்கத்தால் பொய்க் கொள்கைகளைக் கொண்டு அசுத்த நிச்சயங்களுடையோராய்த் தொழில் புரிகிறார்கள்.

**சிந்தா-மபரிமேயாஞ் ச ப்ரலயாந்தா-முபாச்ரிதா:**
**காமோபபோகபரமா ஏதாவதிதி நிச்சிதா:**

11. *ஊழிமுடி காறுமள வில்லபல வெண்ணம்*
*உள்ளவர்க ளாகியுள காமசுக போகம்*
*வாழி தலைமைத்தென மதித்திவள வேதான்*
*வாழ்வென நினைத்ததுணி புள்ளவர்க ளம்மா.* 583

பிரளயமட்டுந் தீராத எண்ணற்ற கவலைகளிற் பொருந்தி, விருப்பங்களைத் தீர்த்துக்கொள்வதில் ஈடுபட்டோராய், 'உண்மையே இவ்வளவுதான்' என்ற நிச்சயமுடையோராய்,

**ஆசாபாச-சதைர்ப்-பத்தா: காமக்ரோத-பராயணா:**
**ஈஹந்தே காமபோகார்த்த-மன்யாயேனார்த்த-ஸஞ்சயான்**

12. *ஆசை யென்றுள பாசநூ றுகளிற் பிணித்தவ ராகியும்*
*ஆயகாம வெகுட்சியிற் றலையாய நிட்டைய ராகியும்*
*நேசவின் பழுணற் பொருட் டநியாய மாகிய நெறியினி*
*னிதியினைத்தொகை பெருகுதற்கென வதிகரே முயல் கிற்பரால்* 584

நூற்றுக்கணக்கான ஆசைக் கயிறுகளால் கட்டுண்டு, காமத்துக்கும் சினத்துக்கும் ஆட்பட்டோராய்க் காமபோகத்துக்காக அநியாயஞ் செய்து பொருட் குவைகள் சேர்க்க விரும்புகிறார்கள்.

**இத-மத்ய மயாலப்த்த-மிமம் ப்ராப்ஸ்யே மனோரதம்**
**இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புனர்த்தனம்**

13. *ஈதெனாலிது போதி னெய்திய*
*திம்மநோரத மெய்துவேன்*
*ஈது செல்வ மிருப்ப தாமிது*
*வும்மெனக்கினு மெய்துமால்* 585

"இன்று இன்ன லாபமடைந்தேன்; இன்ன மனோரதத்தை இனி எய்துவேன்; இன்னதை யுடையேன்; இன்ன பொருளை இனிப் பெறுவேன்.

**அஸௌ மயா ஹத: சத்ருர்-ஹனிஷ்யே சாபரானபி**
**ஈச்வரோஹ-மஹம் போகீ ஸித்தோऽஹம் பலவான் ஸுகீ**

14. *பகைத்தவ னிவன்னுயிர் விடுத்தது மெனாலே*
*பகைப்பவர் பிறர்க்குமத மேபுரிய கிற்பேன்*
*செகத்தலைவன் யானுரிய போகமுளன் யானால்*
*சித்தன் வலியுள்ளவன் சுகாநுபவி யானே.* 586

"இன்ன பகைவரைக் கொன்றுவிட்டேன்; இனி மற்றவர்களைக் கொல்வேன்; நான் ஆள்வோன்; நான் போகி; நான் சித்தன்; நான் பலவான்; நான் சுக புருஷன்.

**ஆட்ட்யோऽபிஜனவா-னஸ்மி கோऽன்யோऽஸ்தி ஸத்ருசோ மயா**
**யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்-யஜ்ஞான-விமோஹிதா:**

15. *செல்வமுள னல்லகுல சென்மமுள னாவேன்*
*இவணுபவ னென்றனொடு வேறெவனு மானோ*
*நல்குறுவல் வேட்பல் களிகூர் வலெனவேயஞ்*
*ஞானமத னாலதிக மோகமுள ராவர்.* 587

"நான் செல்வன், இனப்பெருக்க முடையோன்; எனக்கு நிகர் யாவருளர்? வேட்கிறேன்; கொடுப்பேன்; களிப்பேன்" என்ற அஞ்ஞானங்களால் மயங்கினோர்,

**அனேக-சித்த-விப்ராந்தா மோஹஜால-ஸமாவ்ருதா:**
**ப்ரஸக்தா: காம-போகேஷு பதந்தி நரகேऽசுசௌ**

16. *ஒன்ற லாதபல நினைவினாலுள மருண்டு*
*மோக நிரையூடு போர்த்*
*தன்பு காமம்விளை போக மீது மிகு*
*வாரசுத்த நரகாழ்வ ரால்.* 588

பல சித்தங்களால் மருண்டோர், மோகவலையிலகப் பட்டோர், காம போகங்களில் பற்றுண்டோர் - இவர்கள் அசுத்தமான நரகத்தில் விழுகிறார்கள்.

**ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா தன-மான-மதான்விதா:**
**யஜந்தே நாம-யஜ்ஞைஸ்-தே தம்பே-னாவிதி-பூர்வகம்**

17. *தமைப் புகழு கிற்பவர் வணக்கிமெய் யசைக்கார்*
*தனத்திலபி மானமுள தான்மிகு தருக்கிற்*
*சமைத்தவ ரிடம்பமதனால் விதியிலாமே*
*தமக்கொரு பெயர்க்கென விழைப்பரவர் வேள்வி.* 589

இவர்கள் தற்புகழ்ச்சியுடையோர், முரடர், செல்வச் செருக்கும் மதமுமுடையோர்: டம்பத்துக்காக விதி தவறிப் பெயர் மாத்திரமான வேள்வி செய்கின்றனர்.

**அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதஞ் ச ஸம்ச்ரிதா:**
**மாமாத்ம-பர-தேஹேஷு ப்ரத்விஷந்தோऽப்ய ஸூயகா:**

18. *அகங்க ரிப்புவலி கருவ மாசைசினன்*
*அடைவர் தம்மெயினி லயன்மெயிற்*
*புகுமெனைத்தவ வெறுத்தல் செய்பவர்*
*பொறாமை தாமுடைய ரம்மவோ.* 590

அகங்காரத்தையும், பலத்தையும், செருக்கையும் விருப்பத்தையும், இனத்தையும் பற்றியவர்களாகிய இன்னோர் தம் உடம்புகளிலும் பிற உடம்புகளிலும் உள்ள என்னைப் பகைக்கிறார்கள்.

**தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான்**
**க்ஷிபாம்-யஜஸ்ர-மசுபா-னாஸுரீஷ்வேவ யோனிஷு**

19. *அவரென் னைவெறுப்பவர் வெங்கொடியர்*
*அதமர் நரகுக்குள மாவரரோ*
*சுவனமில்ல வகைப்புக வீழ்ப்பல் பவம்*
*தொலையா நிதமாசுர யோநி யிலே.* 591

இங்ஙனம் பகைக்கும் கொடியோரை-உலகத்தில் எல்லாரிலும் கடைப் பட்ட இந்த அசுப மனிதரை நான் எப்போதும் அசுரப் பிறப்புக்களில் எறிகிறேன்.

**ஆஸுரீம் யோனி-மாபன்னா மூடா ஜன்மனி ஜன்மனி**
**மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்-யதமாங் கதிம்**

20. குந்திக் கொருசுத வசுரப் பிறவிபு
கும்மற்றவர் சன்ம சன்மத்தும்
புந்தித் தெளிவிலர் முந்தைக் கிழிகதி
புகுவா றெற்பெறு கிற்காதே. 592

பிறப்புத்தோறும் அசுரக் கருக்களில் தோன்றும் இம்மூடர் என்னை யெய்தாமலே மிகவும் கீழான கதியைச் சேர்கிறார்கள், குந்தியின் மகனே!

**த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசன-மாத்மன:**
**காம: க்ரோதஸ்-ததா லோபஸ்-தஸ்மா-தேதத் த்ரயம் த்யஜேத்**

21. சினமொடுறு காமமது பொரவு லோபம்
திரிவித சுபாவமிவை யுயிரினுக்கு
நனிகெடுதல் செய்யு நரகவழி யஃதால்
நவிலுமிவை மூன்றும் மறவிடுதல் வேண்டும். 593

ஆத்ம நாசத்துக்கிடமான இம் மூன்று வாயில்களுடையது நரகம்: (அவையாவன) காமம், சினம், அவா. ஆதலால், இம்மூன்றையும் விடுக.

**ஏதைர்-விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ்-த்ரிபிர்-நர:**
**ஆசரத்-யாத்மன: ச்ரேயஸ்-ததோ யாதி பராங் கதிம்**

22. இருளினுக் குறூஉம் வாயிலாயுள
இவைகள் மூன்றினால் விடுபடுந்நரன்.
ஒருதனக் குயர்ந்தது புரிந்தவன்
உயர்கதிக்கதா லுறுவன் குந்திசேய். 594

இந்த மூன்று இருள் வாயில்களினின்றும் விடுபட்டோன் தனக்குத்தானே நலந் தேடிக் கொள்கிறான்; அதனால் பரகதி அடைகிறான்.

**ய: சாஸ்த்ரவிதி-முத்ஸ்ருஜ்ய வர்த்ததே காம காரத:**
**ந ஸ ஸித்தி-மவாப்னோதி ந ஸுகம் ந பராங் கதிம்**

23. எவன் சாத்திர விதியினை விட்டொருதன
திச்சைப்படி செய்திருப்பானோ
அவனோர் சித்தியு மடையா னின்பமும்
அடையான் பரகதி யடையானே. 595

சாஸ்திர விதியை மீறி, விருப்பத்தால் தொழில் புரிவோன் சித்தி பெறான்; அவன் இன்ப மெய்தான்; பரகதி அடையான்.

**தஸ்மாச்-சாஸ்த்ரம் ப்ரமாணம் தே**
**கார்யாகார்ய-வ்யவஸ்த்திதௌ**
**ஜ்ஞாத்வா சாஸ்த்ரவிதானோக்தங்**
**கர்ம கர்த்து-மிஹார்ஹஸி**

24. அதனா னினக்கொன்று செய்தற்கு விடுதற்
கறிபாகுபா டோது பிரமாண நூல்
விதியாக வோதுங் கன்மங்கண் டுணர்ந்தே
வினைசெய்வதற்குப் பொருந்தா யிவண்டான். 596

ஆதலால், எது செய்யத் தக்கது. எது செய்யத் தகாதது என்று நிச்சயிப்பதில் நீ சாஸ்திரத்தைப் பிரமாணமாகக் கொள். அதையறிந்து சாஸ்திர விதியால் கூறப்பட்ட தொழிலைச் செய்யக் கடவாய்.

*பதினாறாம் அத்தியாயம் நிறைவேறியது.*

## கீதைப் பொருட்டொகை

தேவ ரசுரர்குணஞ் செப்புதன்முன் னிட்டுமறைக்
கேவயமா யாருமியல் கவென - யாவகைய
உண்மை யொழுக்கமுட னுண்மையறி வும்முறுதி
நண்ண வுரைப்பதுநா னான்கு. (20)

# கீதைப் பாட்டு

## பதினேழாம் அத்தியாயம்

## சிரத்தாத்ரய விபாக யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

பதினே ழெனு மியல்நூல் விதிபகரா தனமுழுதும்
பொதியா சுரமெனவும் விதிபுகல் கிற்பனவும் பல்
விதமாவன குணனா லெனவுஞ் சாசன வினையும்
வதிமூன் றடையாளம் முளவெனவும் வகைகூறும்.

*அவரவர் குணங்களுக்கேற்ப சிரத்தையும் சாத்விகம், ராஜசம், தாமசம் என மூவகைப்படும். சாத்விக சிரத்தையுடையோர் சாஸ்திரத்தைத் தழுவித் தேவர்களை வணங்குவார். ராஜச சிரத்தையுடையோர் யக்ஷர்களையும் ராக்ஷதர்களையும் வணங்குவார். தாமச சிரத்தையுடையோர் பூத பிரேத பிசாசங்களை வணங்குவார். அவர்களுக்குக் கிட்டும் பலன்களும் குணங்களுக்குத் தக்கபடியே வேறுபட்டிருக்கும். அப்படியிருக்க சாஸ்திரத்தை மீறுவோரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் நினைத்த பலன் கிட்டா தென்பது மாத்திரமன்றி; அவர்களுக்குக் கேடுமுண்டாகும். அவரவர் குணங்களுக்கேற்ப உண்ணும் உணவும், செய்யும் தவமும், கொடுக்கும் தானமும் மூவகைப்பட்டிருக்கும்.*

அர்ஜுன உவாச :

**யே சாஸ்த்ரவிதி-முத்ஸ்ருஜ்ய யஜந்தே ச்ரத்தயான் விதா:**
**தேஷாம் நிஷ்ட்டா து கா க்ருஷ்ண ஸத்வ-மாஹோ ரஜஸ்தம:**

1. *எவர்நூல் விதியைப் புறன்விட் டொருவேள்*
*வியினைப் புரிகிற்பர் சிரத்தையியைந்*
*தவர்நிட்டை யெதோ கண்ண சத்துவமோ*
*அலதாயி ளிராசதமோ தமசோ.* 597

**அர்ஜுனன் சொல்லுகிறான்:**

கண்ணா, சாஸ்திர விதியை மீறி, ஆனாலும் நம்பிக்கையுடன், வேள்வி செய்வோருக்கு என்ன நிலை கிடைக்கிறது? ஒளி நிலையா? கிளர்ச்சி நிலையா? அல்லது இருள் நிலையா? (சத்துவமா, ரஜசா, தமசா?)

ஸ்ரீ பகவானுவாச :

**த்ரிவிதா பவதி ச்ரத்தா தேஹினாம் ஸா ஸ்வபாவஜா**
**ஸாத்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ச்ருணு**

2. *சத்து வத்ததி ராசசத்தது*
*தாம சத்ததா மூவகைப்படும்*
*இத்தனைப் பிராணியின் சிரத்தையும்*
*இயல்பினே வருமென்க ணஃதுகேள்.* 598

**ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:**

ஜீவர்களிடம் இயற்கையால் நம்பிக்கை மூன்று வகையாகத் தோன்றுகிறது. சாத்விகம், ராஜசம், தாமசம் என ; அதைக் கேள்.

**ஸத்வானுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி பாரத**
**ச்ரத்தா-மயோऽயம் புருஷோ யோ யச்-ச்ரத்த: ஸ ஏ வ ஸ:**

3. *எவர்த மக்குமொரு சிரத்தைமன தினுக்கொ ரநுகுணத்*
*தினிலிருக்கும் புருடன் மற்றையிவன் சிரத்தைமயனரோ*
*எவனொருத்த னெதுவிதத் தினொரு சிரத்தை யுடையனவ்*
*வியல்பி னைக்கொ டவனிருப்ப னலதுவேறில் பரதர்சேய்.* 599

பாரதா, யாவருக்கும் தத்தம் உள்ளியல்புக்கு ஒத்தபடியாகவே நம்பிக்கை அமைகிறது. மனிதன் சிரத்தை மயமானவன். எவன் எந்தப் பொருளில் நம்பிக்கையுடையவனோ, அந்தப் பொருளேதான் ஆகிறான். [சிரத்தை - நம்பிக்கை]

**யஜந்தே ஸாத்விகா தேவான் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா:**
**ப்ரேதான் பூதகணாம்சான்யே யஜந்தே தாமஸா ஜனா:**

4. இயவுளர் தம்மைச்சத் துவமுளர் தொழுவார்
இராசச முள்ள ரியக்க ரரக்கரைப்
பயில்பிறர் தாமச மாக்கள் பிரேதம்
பலவொடு பூத கணந்தொழு வாரே. 600

ஒளி யியல்புடையோர் வானவர்க்கு வேள்வி செய்கின்றனர். ரஜோ குணமுடையோர் யக்ஷர்களுக்கும் ராக்ஷஸருக்கும் வேள்வி செய் கிறார்கள். மற்றத் தமோ குணமுடையோர் பிரேத, பூத கணங்களுக்கு வேள்வி செய்கிறார்கள்.

**அசாஸ்த்ர-விஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ-ஜனா:**
**தம்பாஹங்கார-ஸம்யுக்தா: காம-ராக-பலான்விதா:**

5. அகங்கார டம்ப மவற்றோடு கூடி
அகக்காம மோடும் பலத்தாசை வைத்து
மிகுங்கோர மாகுந் தவந்தன்னை நூலில்
விதிக்கா துழக்குஞ் சனந்தா மியாரே. 601

(சிலர்) சாஸ்திர நியமத்தை மீறி, டம்பமும் அகங்காரமுமுடையவராய், விருப்பத்திலும் விழைவிலும் சார்புற்றவர்களாய், கோரமான தவஞ்செய்கிறார்கள்.

**கர்சயந்த: சரீரஸ்த்தம் பூதக்ராம-மசேதஸ:**
**மாஞ் சைவாந்த: சரீரஸ்த்தம் தான் வித்த்யாஸுர-நிச்சயான்**

6. ஞானத்தை யில்லார் மெய்யுட்பூத சங்கந்
நலிகிற்பர் தேகத்தி னுள்ளே யிருக்கின்
றேனுக்கு மேதான் வருத்தம் விளைப்பார்
இவரா சுரத்தே துணிந்தா ரெனத்தேர். 602

இங்ஙனம் அறிவு கெட்டோராய்த் தம் உடம்பிலுள்ள பூதத் தொகுதிகளையும் அகத்திலுள்ள என்னையும் வருத்துகிறார்கள். இவர்கள் அசுர நிச்சயமுடையோரென்றுணர்.

**ஆஹாரஸ்-த்வபி ஸர்வஸ்ய த்ரி விதோ பவதி ப்ரிய:**
**யஜ்ஞஸ்-தபஸ்-ததா தானம் தேஷாம் பேத-மிமம் ச்ருணு**

7. *அனைத்துயிர்க ளுக்குமொரு மூன்று விதமாக*
*அருந்துமுண வும்பிரிய மாகுமது படிமூ*
*வினைப்படுவ வேள்விதவ மீகையிவை யிற்றின்*
*வேறுபட வைத்ததிற னீதுசெவி கொள்வாய்.* 603

ஒவ்வொருவருக்கும் பிரியமான உணவும் மூன்று வகைப்படுகிறது. வேள்வியும், தவமும், தானமும் அங்ஙனமே மும்மூன்று வகைப்படுகின்றன. அவற்றின் வேற்றுமையைக் கேள்.

**ஆயு: ஸத்வ-பலாரோக்ய-ஸுகப்ரீதி-விவர்த்தனா:**
**ரஸ்யா: ஸ்நிக்த்தா: ஸ்த்திரா ஹ்ருத்யா ஆஹாரா: ஸாத்விகப்ரியா:**

8. *ஆயுளொடு ஞானம்வலி நோய்க ளடையாத*
*அந்நிலை சுகானுபவ மன்பிவை வளர்க்கும்*
*தூயசுவை கொண்டுபசை தொக்குறுதி மிக்குத்*
*தோற்ற மினிதாமுணவு சாத்துவிக ரிச்சை.* 604

உயிர், சக்தி, பலம், நோயின்மை, இன்பம், பிரீதி-இவற்றை மிகுதிப்படுத்துவன. சுவையுடையன, குழம்பாயின, உறுதியுடையன, உள முகந்தன-இவ்வுணவுகள் சத்துவ குணமுடையோருக்குப் பிரிய மானவை.

**கட்வம்ல-லவணாத்யுஷ்ண-தீக்ஷ்ண-ரூக்ஷ-விதாயின:**
**ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா து:க்கசோகாமய-ப்ரதா:**

9. *காரம் புளியுப்போ டதிவெப்ப மிகுகுளிராற்*
*காயம் முலரச் செய்வது தாகந் நனிதருவ*
*தாருந் துயர்சோர்வே பிணியுதவுந் திறனுள்ள*
*உணவுப் பொருள்க ளிராசத குணமிக்க வரிச்சை.* 605

கசப்பும், புளிப்பும், உப்பும், உறைப்பும் மிகுந்தன, அதிகச் சூடு கொண்டன, உலர்ந்தன, எரிச்சலுடையன-இவ்வுணவுகளை ரஜோ குணமுடையோர் விரும்புவர். இவை துன்பத்தையும் துயரையும் நோயையும் விளைப்பன.

**யாதயாமங் கதரஸம் பூதி பர்யுஷிதஞ் ச யத்**
**உச்சிஷ்ட-மபி சாமேத்த்யம் போஜனம் தாமஸ-ப்ரியம்**

10. *காலங் கழிந்திரதஞ் சால வழிந்தது துர்க்*
*கந்தம் வளர்ந்து சுவையுங் கெட மாறியது*
*மேலும் பிறன்மிச்சி லாயுஞ்சுசி யில்லதெது*
*வேண்டும்மு ணாவதுதா னீண்டிய தாமசர்க்கே.* 606

பழையது, சுவையற்றது, அழுகியது, கெட்டுப்போனது, எச்சில், அசுத்தம்- இத்தகைய உணவு தமோ குணமுடையோருக்குப் பிரியமானது.

**அபலாகாங்க்ஷிபிர்-யஜ்ஞோ விதி-த்ருஷ்டோய இஜ்யதே**
**யஷ்டவ்ய-மேவேதி மன:ஸமாதாய ஸ ஸாத்விக:**

*11. விதிதெரிய வந்தவெது வேள்விபல னாசை*
*விட்டவர்க ளானிஃது வேட்டற்கு மேயென்*
*றதிகவன மேவிய மனத்தினுடன் வேட்ப*
*தாயதது சத்துவ நிலாயது மிகத்தான்.* 607

பயனை விரும்பாதவர்களாய், வேள்வி புரிதல் கடமையென்று மனந்தேறி, விதிகள் சொல்லியபடி இயற்றுவாரின் வேள்வி சத்துவ குணமுடைத்து.

**அபிஸந்த்தாய து பலம் தம்ப்பார்த்த-மபி சைவ யத்**
**இஜ்யதே பரதச்ரேஷ்ட்ட தம் யஜ்ஞம் வித்தி ராஜஸம்**

*12. பாரதர்க் கரசெது பலத்தொரு*
*பற்று வைத்து மிடம்பமென்*
*கார ணத்தினும் வேட்ப தோவதி*
*ராசசத் ததெனத் தெரி.* 608

பயனைக் குறித்தெனினும், ஆடம்பரத்துக் கெனினும் செய்யப்படும் வேள்வி ராஜச மென்றுணர்; பாரதரிற் சிறந்தாய்!

**விதிஹீன-மஸ்ருஷ்டான்னம் மந்த்ரஹீன-மதக்ஷிணம்**
**ச்ரத்தா-விரஹிதம் யஜ்ஞம் தாமஸம் பரிசக்ஷதே**

*13. நியமியாது மந்திர மிலாதனம்*
*நெறியிலாது தக்கணை யிலாததாய்*
*உயர் சிரத்தையும் ஒழியும் வேள்விதான்*
*உரைசெய் கிற்பர்தாம தமுடைத்தென.* 609

விதி தவறியது, பிறர்க்குணவு தாராதது, மந்திர மற்றது, தக்ஷிணையற்றது, நம்பிக்கையின்றிச் செய்யப்படுவது - இத்தகைய வேள்வியைத் தாமச மென்பார்.

**தேவ-த்விஜ-குரு-ப்ராஜ்ஞ-பூஜனம் சௌச-மார்ஜவம்**
**ப்ரஹ்மசர்ய-மஹிம்ஸா ச சாரீரம் தப உச்யதே**

*14. சுரர்க ளொடுபனவர் குரவர் தெளிஞரடி*
*தொழுதல் கபடமறல் சுசிகொளல்*
*பிரம சரியமுட னுயிரையிடர் செய்வது*
*பெயர்த லுடல்கொடுசெய் தவமெனல். 610*

தேவர், அந்தணர், குருக்கள், அறிஞர்-இவர்களுக்குப் பூஜை செய்தல், தூய்மை, நேர்மை, பிரம்மசரியம், கொல்லாமை-இவை உடம்பைப் பற்றிய தவமெனப்படும்.

**அனுத்வேக-கரம் வாக்யம் ஸத்யம் ப்ரிய-ஹிதஞ் ச யத்**
**ஸ்வாத்யாயாப்யஸனஞ் சைவ வாங்மயம் தப உச்யதே**

*15. வெருள்தர விலதாய் மெயினிலை வதுவாய்*
*விழைவித மிசையே புரிகுவ தெதுவோ*
*உருமறை சொலியே பயில்தருவதுமே*
*உரைபெறு வதுவா யுறுதவ மெனவே. 611*

சினத்தை விளைக்காததும், உண்மை யுடையதும், இனியதும், நலங்கருதியதுமாகிய சொல்லல், கல்விப் பயிற்சி-இவை வாக்குத் தவமெனப்படும்.

**மன:ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌன-மாத்மவிநிக்ரஹ:**
**பாவ-ஸம்சுத்தி-ரித்யேதத் தபோ மானஸ-முச்யதே**

*16. மனதின்றெளி வெவரிடனும் மலருதல்*
*மவுனந் தனது யிருடனன் கமருதல்*
*நினைவினன் னியல்பி னிலமலங் கொளலென*
*நிகழின் னவைமன நிலையுந் தவமெனல். 612*

மன அமைதி, மகிழ்ச்சி, மௌனம், தன்னைக் கட்டுதல், எண்ணத் தூய்மை-இவை மனத் தவ மெனப்படும்.

**ச்ரத்தயா பரயா தப்தம் தபஸ்-தத் த்ரிவிதம் நரை:**
**அபலாகாங்க்ஷிபிர்-யுக்தை: ஸாத்விகம் பரிசக்ஷதே**

*17. இயையு முணர்வுற்றுப் பயனை விழைவற்றே*
*இவனுயர் சிரத்தை யொடுநரர் தவத்தே*
*தபர்வர் திரிவர்க் கப்படுமது தவத்தை*
*அறைகுவர் சாற்சத் துவமுள தெனத்தான். 613*

பயனை விரும்பாத யோகிகளால் மேற்கூறிய மூன்று வகைகளிலும் உயர்ந்த நம்பிக்கையுடன் செய்யப்படும் தவம் சாத்விக மெனப்படும்.

**ஸத்கார-மான-பூஜார்த்தந் தபோ தம்ப்பேன சைவ யத்**
**க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸஞ் சல-மத்த்ருவம்**

*18. தவமேது வெகுமான மிசைபூசை யெண்ணி*
*டம்பத்தி னாலே செயப்பட்ட தஃதோ*
*இவணே சலித்துக் கெடத் தக்க தாகும்*
*இயம்பப்படும் ராசசம் மென்று மாதோ.* 614

மதிப்பையும் பெருமையையும் பூஜையையும் நாடிச் செய்வதும், ஆடம்பரத்துக்காகச் செய்வதுமாகிய தவம் ராஜசமெனப்படும்; அஃது நிலையற்றது; உறுதியற்றது.

**மூட-க்ராஹே-ணாத்மனோ யத் பீடயா க்ரியதே தப:**
**பரஸ்யோத்ஸாதனார்த்தம் வா தத்-தாமஸ-முதாஹ்ருதம்**

*19. மூடர் பிடிவாதத் தாலொரு தனக்கு*
*மொய்த்திடர் விளைப்பதா லயலவற்குப்*
*பீடைசெய வெண்ணி யாதுதவ மேவும்*
*பேசலுறுமஃது தாமச மெனத்தான்.* 615

மூடக் கொள்கையுடன் தன்னைத் தான் துன்பப்படுத்திக் கொண்டு செய்வதும், பிறரைக் கெடுக்குமாறு செய்வதுமாகிய தவம் தாமச மெனப்படும்.

**தாதவ்ய-மிதி யத்தானம் தீயதேऽனுபகாரிணே**
**தேசே காலே ச பாத்ரே ச தத்தானம் ஸாத்விகம் ஸ்ம்ருதம்**

*20. கால மிடந்தகுதி சாலுந் திறத்ததினுப*
*காரம் புரிந்தில னுக்கீதல் தகும் மெனவே*
*மேலெது தான முதவிற்றது சத்துவமே*
*மிக்க தெனக்கருதப் பட்டுள தம்மவரோ.* 616

கொடுத்தல் கடமையென்று கருதிக் கைம்மாறு வேண்டாமல், தகுந்த இடத்தையும் காலத்தையும் பாத்திரத்தையும் நோக்கிச் செய்யப்படும் தானத்தையே சாத்விக மென்பர்.

**யத் து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திச்ய வா புன:**
**தீயதே ச பரிக்லிஷ்டம் தத்தானம் ராஜஸம் ஸ்ம்ருதம்**

*21. எதிருதவு தற்கும் பயனடைவ தைத்தன்*
*னிதயமிசை யேவைத் தெனினு நலதின்றி*
*எதுதருத லுற்ற ததுகொடைமை தன்னை*
*எணல்தகு மிராசச குணமுள தென்றே.* 617

கைம்மாறு வேண்டியும், பயனைக் கருதியும், கிலேசத்துடன் கொடுக்கப்படும் தானத்தை ராஜச மென்பர்.

**அதேசகாலே யத்தான-மபாத்ரேப்ப்யச்ச தீயதே**
**அஸத்க்ருத-மவஜ்ஞாதம் தத்தாமஸ-முதாஹ்ருதம்**

*22. தேசமில் தேசத்தினுங் காலமில் காலத்தினுஞ்*
*செம்மை யிலாதவர்க்கு நன்மை யிலாதபடி*
*ஏசவ மானமுட னேது கொடுத்ததஃ*
*தேய்ந்தது தாமச மென்றாய்ந்து சொலப்படுமே.* 618

தகாத இடத்தில், தகாத காலத்தில், தகாதார்க்குச் செய்யப்படுவதும், மதிப்பின்றி இகழ்ச்சியுடன் செய்யப்படுவதுமாகிய தானம் தாமச னெப்படும்.

**ஓம்-தத்-ஸதிதி நிர்த்தேசோ ப்ரஹ்மணஸ்-த்ரிவித: ஸ்ம்ருத:**
**ப்ராஹ்மணாஸ்-தேன வேதாச்ச யஜ்ஞாச்ச விஹிதா: புரா**

*23. ஓம் தத்சத் தெனமூ விதமாகும்*
*உரைகண் மறையோ டெணலா யினவால்*
*ஆமந் தணரும் மறை வேள் விகளும்*
*அவையான முனமே செயலா யவரோ.* 619

'ஓம் தத் ஸத்' என்ற மூன்மைப் பெயர் பிரம்மத்தைக் குறிப்பதென்பர். அதனால், முன்பு பிராமணங்களும், வேதங்களும், வேள்விகளும் வகுக்கப்பட்டன.

**தஸ்மா-தோமித்-யுதாஹ்ருத்ய யஜ்ஞ-தான-தப:க்ரியா:**
**ப்ரவர்த்தந்தே விதானோக்தா: ஸததம் ப்ரஹ்ம வாதினாம்**

*24. அதனான மறையோது வர்தம் விதியின்*
*அறையப் படும்வேள்வி தவங்கொடைகள்*
*முதலாகிய கன்மமு மோமெனவே*
*மொழிசெய் தெதுபோ தினுமே நிகழும்.* 620

ஆதலால், பிரம்மவாதிகள் விதிப்படி புரியும் வேள்வி, தவம், தானம் என்ற கிரியைகள் எப்போதும் 'ஓம்' என்று தொடங்கிச் செய்யப்படுகின்றன.

**ததித்-யனபிஸந்த்தாய பலம் யஜ்ஞதப: க்ரியா:**
**தானக்ரியாச்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி:**

*25. வேட்கை பயன்கண் வையாது தவச்செயல்*
*வேள்விச் செயல்பல தானச் செயல்களும்*
*வீட்டை விழைந்தவ ராலொரு தத்தென*
*விண்டு செயப்படு கின்றன மாதோ. 621*

'தத்' என்ற சொல்லை உச்சரித்துப் பயனைக் கருதாமல், பல வகைப்பட்ட வேள்வியும் தவமும் தானமுமாகிய கிரியைகள் மோக்ஷத்தை விரும்புவோரால் செய்யப்படுகின்றன.

**ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே**
**ப்ரசஸ்தே கர்மணி ததா ஸச்சப்த: பார்த்த யுஜ்யதே**

*26. பிருதை மைந்த சத்தென விசைத்தவிப்*
*பெயரிருப்பினு நலகு ணத்தினும்*
*பெருவழக் குறாஉம் விதஞ் சத்தெனும்*
*பெயர்சுபச் செயறனில் வழங்குமே. 622*

'ஸத்' என்ற சொல் உண்மை யென்ற பொருளிலும், நன்மை யென்ற பொருளிலும் வழங்கப்படுகிறது. பார்த்தா, புகழ்தற்குரிய செய்கையைக் குறிப்பதற்கும் 'ஸத்' என்ற சொல் வழங்குகிறது.

**யஜ்ஞே தபஸி தானே ச ஸ்த்திதி: ஸதிதி சோச்யதே**
**கர்ம சைவ தர்த்தீயம் ஸதித்-யேவாபிதீயதே**

*27. நிகழ்வேள்வி யீகை தவமின்ன வற்றின்*
*னிலைபேறு சத்தென் றுரைபேறு கொள்ளும்*
*மிகவவ் வவர்க்குத் தகுபல் பயன்செய்*
*வினைதானு மேசத் தெனவே சொலற்காம். 623*

வேள்வி, தவம், தானம் இவற்றில் உறுதி நிலையும் 'ஸத்' எனப்படுகிறது. பிரம்மத்தின் பொருட்டாகச் செய்யும் கர்மமும் 'ஸத்' என்றே சொல்லப்படும்.

அச்ரத்தயா ஹுதந் தத்தம் தபஸ்-தப்தம் க்ருதஞ் ச யத்
அஸதித்-யுச்யதே பார்த்த ந ச தத் ப்ரேத்ய நோ இஹ

28. சிரத்தை யற்றெது வேட்ட தீந்தது
தவமுழந்தது செய்ததோ
உரைப்பர் பார்த்த வசத்தெனப்பய
னூங்கதற்கிலை யீங்கு மில். 624

அசிரத்தையுடன் செய்யும் வேள்வியும், தானமும், தவமும், கர்மமும் 'அஸத்' எனப்படும். பார்த்தா, அவை மறுமையிலும் பயன்படா; இம்மையிலும் பயன்படா.

பதினேழாம் அத்தியாயம் நிறைவேறியது

## கீதைப் பொருட்டொகை

ஆசுரமோ நூல்விதியா வத்தனையு நூல்விதித்த
பேசு குணனாற் பிறபிறவாம் - சாசனத்திற்
சொற்ற வினைக்குந் தொகுமூன் றடையாளம்
உற்ற வெனும்பதினே ழோர்ந்து. (21)

# கீதைப் பாட்டு

## பதினெட்டாம் அத்தியாயம்

## மோக்ஷ சந்யாச யோகம்

### கீதை இயற்பொருள் விளக்கம்

ஈரொன்ப தெனியல் கன்ம மெவைக்கும் புரிகர்த்தன்
ஓர்தெய் வதமென வோர்வது முயர்சத்துவ மொன்றே
யாகும் பரிபாலிப்ப துமவ்வக் குலதன்மஞ்
சாரும் பயனொடு நூல்புகல் சாரம் மிதுவென்னும்.

சந்நியாச மென்றாலும் தியாக மென்றாலும் ஒன்றே. ஆனால், காம்யகர்மத்தை அடியோடு விட்டுவிடுவது சந்நியாசமென்றும் நித்திய நைமித்திக கர்மங்களில் பற்றுதலையும் பலனையும் துறப்பது தியாகமென்றும் அறிய வேண்டும். எல்லாக் கர்மங்களையும் அடியோடு விட்டுவிட வேண்டுமென்று சிலர் கூறுவார்கள். அது கீதையின் கருத்தன்று. நித்திய, நைமித்திக கர்மங்களைச் செய்தே தீர வேண்டும் செய்யாவிடில் பாபம் நேரிடும். மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஈசுவரன் முக்கிய காரணமாவான். அப்படியிருக்கத் தானே அவற்றைச் செய்துவிடுவதாக நினைப்பவன் மூடன். ஞானம், கர்மம் உறுதி, இன்பம் என்றிவை ஒவ்வொன்றும் சாத்விகம், ராஜசம், தாமசம் என்று மூவகைப் பட்டிருக்கும். கடவுளைத் தமக்குரிய கர்மங்களால் ஆராதித்தால் சித்திபெறலாம்.

இவ்விதம் கண்ணனுடைய உபதேசத்தைக் கேட்டு அர்ஜுனன் மயக்க மற்று நல்லறிவு பெற்றுப் போர்புரியத் தொடங்கினான் என்று சஞ்ஜயன் திருதராஷ்ரனுக்குக் கூறினான். [சந்நியாசம் - துறவு; தியாகம் - விடுதல்]

*அர்ஜுன உவாச :*

**ஸந்ந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்த்வ-மிச்சாமி வேதிதும்**
**த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேச ப்ருதக் கேசிநிஷூதன**

1. *சநியா சத்தினதுந் தியாக மதன்றனதுந்*
*தத்துவ மேதனியாத் தெற்றென வோர்வுறவே*
*மனமாசைப் படுவல் மாபுய கேசியினை*
*மாயப் பொருமிருடி கேசப் பெயருடையோய்.* 625

*அர்ஜுனன் சொல்லுகிறான்:*

உயர் புயத்தோய், கண்ணா, கேசியைக் கொன்றாய், *சந்நியாசத்தின் இயல்பையும் தியாகத்தின் இயல்பையும் பிரித்துக் கேட்க விரும்புகிறேன்.

*ஸ்ரீ பகவானுவாச :*

**காம்யானாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்ந்யாஸம் கவயோ விது:**
**ஸர்வகர்ம-பல-த்யாகம் ப்ராஹுஸ்-த்யாகம் விசக்ஷணா:**

2. *காமியபலன் மருவு கன்மம் விடலைத்தான்*
*கவிஞர்சிலர் தேர்வர் சநியாச மெனவம்ம*
*ஆம்வினைகள் யாவையினு மேபயன் விடுத்தல்*
*அறிஞர்சில ரோதுவர் தியாகமென மாதோ.* 626

*ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :*

விருப்பத்தால் செய்யப்படும் சலுகைகளைத் துறப்பது சந்நியாசமென்று புலவர் தெரிந்துளர். எல்லாவிதச் செயல்களின் பலன்களையுந் துறந்துவிடுதல் தியாகமென்று ஞானிகள் கூறுவர்.

**த்யாஜ்யந் தோஷவதித்-யேகே கர்ம ப்ராஹுர்-மனீஷிண:**
**யஜ்ஞ-தான-தப:கர்ம ந த்யாஜ்யமிதி சாபரே**

3. *ஒருசில ரறிஞர் தீதென வினையும்*
*ஒழிவது தகுமென் றறைகுநர் மற்றோர்*
*தருகொடை வேள்வி தவவினை யொழிதல்*
*தகவிலை யென்றே யறைகுந ரம்மா.* 627

சில அறிஞர் செய்கையைக் குற்றம் போலே கருதி விட்டுவிட வேண்டும் என்கிறார்கள். வேறு சிலர், 'வேள்வி, தானம், தவம் என்ற செயல்களை விடக்கூடாது' என்கிறார்கள்.

**நிச்சயம் ச்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தய
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர! த்ரிவித: ஸம்ப்ரகீர்த்தித:**

4. *பரத சத்தம புருட ரிற்புலி
பகர்த லுற்ற தியாக மற்றதிற்
றெரியெ னிச்சயங் கேள்தி யாகமுத்
திறமெனா வுரைசெய்த தல்லவோ.* 628

பாரதரில் சிறந்தவனே, புருஷப் புலியே, தியாக விஷயத்தில் நான் நிச்சயத்தைச் சொல்லுகிறேன்; கேள். தியாகம் மூன்று வகையாகக் கூறப்பட்டது.

**யஜ்ஞ-தான-தப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்
யஜ்ஞோ தானந் தபச்சைவ பாவனானி மனீஷிணாம்**

5. *வேள்வியோடு தானந் தவம்மெனும்
வினைவிடத் தகாபுரிவ தேயது
வேள்வி யோடு தானந் தவம்மறி
வினர்தமக் களிப்பனபல் தூய்மையும்.* 629

வேள்வி, தானம், தவம் என்ற செயல்களை விடக் கூடாது. அவற்றைச் செய்யவே வேண்டும். வேள்வியும், தானமும், தவமும் அறிவுடையோரைத் தூய்மைப்படுத்துகின்றன.

**ஏதான்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலானி ச
கர்த்தவ்யானீதி மே பார்த்த நிச்சிதம் மத-முத்தமம்**

6. *பிருதை மைந்தவிவ் வினைக டாமுமோ
பெறுபயன் றொடர்பற விடல்செய்து
புரிவதற்குமற் றுரிய வென்பதென்
புடைதுணிந்த உத்தம மதம்மரோ.* 630

ஆனால், பார்த்தா, இச் செயல்களைக்கூட ஒட்டின்றியும், பயன்களை வேண்டாமலும் செய்யவேண்டும் என்பது உன் உத்தமமான நிச்சயக் கொள்கை.

**நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே
மோஹாத்-தஸ்ய பரித்யாகஸ் தாமஸ:பரிகீர்த்தித:**

7. *விடத்தகாதகன் மங்க டம்மையோ
விடுத லென்பதுண் டாவதில் லையால்
மடத்தி னாலவை விட்டொ ழித்தல்தா
மதத்தி னாவதென் றுரைசொலப்படும்.* 631

நியமத்தின்படியுள்ள செய்கையைத் துறத்தல் தகாது. மதிமயக்கத்தால் அதனை விடுவிடுதல் தமோ குணத்தால் நேர்வதென்பர். [நியமம் ஒழுங்கு. சட்டம், சாஸ்திர விதி]

**து:க்க-மித்யேவ யத்கர்ம காயக்லேச-பயாத் த்யஜேத்**
**ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத்**

*8. இடராக வேகொண்டு காயக் கிலேசத்*
*தினையஞ்ச லானே கன்மம்மே தொழித்து*
*விடுவோ னவன்ராச சத்தன்மை யாலே*
*விடல்செய்த லான்விட்ட பேறெய்தி லானே.* 632

உடம்புக்கு வருத்தம் நேருமென்ற பயத்தால், ஒரு செய்கையைத் துன்பமாகக் கருதி, அதனை விட்டுவிடுவோன் புரியும் தியாகம் ரஜோ குணத்தின்பாற்பட்டது. அதனால் அவன் தியாகப் பயனை அடையமாட்டான்.

**கார்ய-மித்யேவ யத்கர்ம நியதங் க்ரியதேऽர்ஜுன**
**ஸ்ங்கம் த்யக்த்வா பலஞ் சைவ ஸ த்யாக: ஸாத்விகோ மத:**

*9. செயத்தகும் மெனவே யருச்சுனா*
*செய்வதற் குரித்தாய கன்மம்யா*
*தியற்றுமோ பயன்றொடர்பு விட்டஃ*
*தெண்ணல்சத் துவத்தியல் தியாகமே.* 633

நியமத்துக் கிணங்கிய செய்கையை, 'இது செய்தற்கு உரியது' என்னும் எண்ணத்தால் செய்து, அதில் ஒட்டுதலையும் பயன் வேண்டலையும் ஒருவன் விட்டுவிடுவானாயின், அவனுடைய தியாகமே சாத்விகம் எனப்படும். [ஒட்டுதல் - விருப்பம்]

**ந த்வேஷ்ட்-யகுசலம் கர்ம குசலே நானுஷஜ்ஜதே**
**த்யாகீ ஸத்வ-ஸமாவிஷ்டோ மேதாவீ ச்சின்னஸம்சய:**

*10. ஐய மற்றவன் அறிவன் சத்துவத்*
*தானிறைந்து தியாக முள்ளவன்*
*எய்துமற்ற சுபச்செயல் வெறுத்*
*திலனுவக்கலன் சுப வினைக்குமே.* 634

சத்வ குணத்திலிசைந்து, மேதாவியாய், ஐயங்களையறுத்த தியாகி இன்பமற்ற செய்கையைப் பகைப்பதில்லை, இன்பமுடைய செய்கையில் நசையுறுவதில்லை. [நசை - பற்றுதல்]

**ந ஹி தேஹப்ருதா சக்யம் த்யக்தும் கர்மாண்-யசேஷத:**
**யஸ்து கர்மபல-த்யாகீ ஸ த்யாகீத்-யபிதீயதே**

11. உடலேய் பவனால் வினைசே டமிலா
தொழிதற் கியலாத தன்னோ வினையின்
புடையே யெவனோ பயனோ வுமவன்
புகலப் படுமம்ம தியாகியென. 635

(மேலும்) உடம்பெடுத்தவனால் செய்கைகளை முழுதுமே விட்டுவிட முடியாது. எவன் செய்கைகளின் பயனைத் துறக்கிறானோ, அவனே தியாகி யெனப்படுவான்.

**அனிஷ்ட-மிஷ்டம் மிச்ரஞ் ச த்ரிவிதம் கர்மண:பலம்**
**பவத்-யத்யாகினாம் ப்ரேத்ய ந து ஸந்ந்யாஸினாம் க்வசித்**

12. வினைசெய்து விடல்செய் திலாருக் குவப்பும்
வெறுப்புங் கலப்பும் மெனப்பட்ட முக்கூற்
றினையுள்ள செயலின் பயனுண்டு விட்டார்க்
கெதுபோது மவையுண் டெனப்பட்ட தில்லை. 636

வேண்டப்படாதது, வேண்டப்படுவது, இரண்டும் கலப்பானது என மூன்று வகைப்பட்ட கர்மப் பயன்களைத் தியாகிகளல்லாதோர் இறந்த பின்னர் எய்துகின்றனர். சந்நியாசிகளுக்கு எங்கும் பயன் கிடைப்பதில்லை.

**பஞ்சைதானி மஹாபாஹோ காரணானி நிபோத மே**
**ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தானி ஸித்தயே ஸர்வ கர்மணாம்**

13. அறிவின் வன்மையாற் செய்து கொண்முடி
பதிலெலா வினைகளும் விளைப்பதற்
கறைதல் செய்த காரணமு மைந்திவை
யறிக வென்னிடன் பெரிய தோளனே. 637

எல்லாச் செயல்களும் நிறைவேறுதற்குரிய காரணங்கள் சாங்கிய சாஸ்திரத்தில் ஐந்தாகக் கூறப்பட்டன. அவற்றை என்னிடம் கேட்டுணர், பெருந்தோளாய்.

**அதிஷ்ட்டானம் ததா கர்த்தா கரணஞ் ச ப்ருதக்விதம்**
**விவிதாச்ச ப்ருதக் சேஷ்டா தைவஞ் சைவாத்ர பஞ்சமம்**

14. *இடனாய மெய்யவ் விதஞ்சீவன் வெவ்வே*
*றெனப்பட்ட கரணங்கள் பலவாய வகைமைப்*
*படும்வாயு செய்யும் வியாபார மோடு*
*பகரின் னவற்றைந் தெனப்பட்ட தெய்வம்.* 638

அவை இடம், கர்த்தா, பலவிதக் கரணங்கள், வெவ்வேறு வகைப்பட்ட செயல் முறைகள், இயற்கை என ஐந்து. [கர்த்தா-தொழில் செய்வோன், கரணம்-கருவி, உட்கரணங்களாவன: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; புறக் காரணங்கள் புலன்களும் பூதக் கருவிகளுமாம். "தைவம்" இயற்கை]

**சரீர-வாங்-மனோபிர்-யத்-கர்ம ப்ராரபதே நர:**
**ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ:**

15. *நீதி யாயும் விபரீத மாயு நர*
*னேது கன்ம முடல்வாய்மனம்*
*ஆதியாக முயல்கிறப னோவது*
*வினைக்கிவ் வைந்து முளவேதுவாம்.* 639

மனிதன் உடம்பாலும் வாக்காலும் மனத்தாலும் எந்தச் செயலைத் தொடங்கினாலும், அது நியாயமாயினும் விபரீதமாயினும், இவ்வைந்துமே அச்செயலின் ஏதுக்களாம்.

**தத்ரைவம் ஸதி கர்த்தார-மாத்மானம் கேவலம் து ய:**
**பச்யத்-யக்ருத புத்தித்வாந் ந ஸ பச்யதி துர்மதி:**

16. *இவ்வா றிருக்கத் தனைத்தான் தனித்தே*
*எவன் கர்த்த னங்கண் ணெனக்காணு மன்னான்*
*செவ்வே திருத்தஞ் செயாதுள்ள புந்தித்*
*திறந்தான் மதிக்கே டுளன்காண வில்லான்.* 640

இங்ஙன மிருக்கையில், தனிப் பொருளாகிய ஆத்மாவைத் தொழில் செய்வோனாக எவன் புத்திக் குறைவால் காணுகிறானோ, அந்த மூடன் காட்சியற்றவனே யாவான்.

**யஸ்ய நாஹங்க்ருதோ பாவோ புத்திர்-யஸ்ய ந லிப்யதே**
**ஹத்வாபி ஸ இமான் லோகாந் ந ஹந்தி ந நிபத்த்யதே**

17. எவனினைப் பகங்கார மற்றதோ
எவனுணர்ச்சி தானிழுக லில்லையோ
அவனு லோகமற் றிவையடல் செய்து
மட்டி லானரோ கட்டுறானமா. 641

'நான்' எனுங் கொள்கை தீர்ந்தான், பற்றுதல்கள் அற்ற மதியுடையான் அவன் இவ்வுலகத்தாரை யெல்லாங் கொன்ற போதிலும் கொலையாளி யாகான். கட்டுப்படமாட்டான்.

**ஜ்ஞானம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்ம-சோதானா**
**கரணம் கர்ம கர்த்திதேதி த்ரிவித: கர்ம-ஸங்க்ரஹ:**

18. தெரிவு தேர்பொருள் தெரிப வன்னெனாத்
திரிவி தப்படுங் கரும சோதனை
திரவி யம்வினை செய்ப வன்னெனாத்
திரிவி தப்படும் வினையொ முக்கமும். 642

அறிவு, அறியப்படு பொருள், அறிவோன்-என இம்மூன்றும் செயல்களைத் தூண்டுவன. கருவி, செய்கை, கர்த்தா எனக் கர்மத்தின் சமைப்பு மூன்று பகுதிப்பட்டது.

**ஜ்ஞானம் கர்ம ச கர்த்தாச த்ரிதைவ குணபேதத:**
**ப்ரோச்யதே குண-ஸங்க்க்யானே யதாவச்-ச்ருணு தான்யபி**

19. குணப்பாகு பாட்டிற் குணக்காரி யத்தைக்
குறித்தெண்ணின் ஞானங் கருத்தன் செயன்முக்
கணப்பட்ட தென்றே சொலப்பட்ட தாமக்
கணக்குஞ் செவிக்கொள்வை யுண்மைப் படிக்கே. 643

குணங்களை யெண்ணுமிடத்தே, ஞானம், கர்மம், கர்த்தா-இவை குண பேதங்களால் மும்மூன்று வகைப்படும். அவற்றையும் உள்ளபடி கேள்.

**ஸர்வபூதேஷு யேனைகம் பாவ-மவ்யய-மீக்ஷதே**
**அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஜ்ஞானம் வித்தி ஸாத்விகம்**

20. பற்பல் பிரிவிற் படுமெலா வகைய சிவர்
பாலுமொரு தன்மையின் விபாக மழிவின்றி
நிற்பதொரு வத்துவை யெதாலறி வனோவந்
நிலையறிவு சாத்துவிக மெனவறிதி மாதோ. 644

பிரிவுபட்டு நிற்கும் எல்லா உயிர்களிலும் பிரிவற்ற நாசமற்ற, ஒரே இயல்பைக் காணும் ஞானம் சாத்விக மென்றறி.

**ப்ருதக்த்வேன து யஜ்-ஜ்ஞானம் நானாபாவான் ப்ருதக்-வி தான்**
**வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்-ஜ்ஞானம் வித்தி ராஜஸம்**

*21. சருவவித பூதமொடு முன்மருவு முயிர்கள்*
*தாம்பலவு மாய்வே றாதலின் வெவ்வேறாய்*
*மருவுமென யாதோ வறிவதது ஞானம்*
*மதியுணரு வாய்ரா சதமுடைய தென்றே.* 645

உயிர்களனைத்திலும் வெவ்வேறு வகைப்பட்ட பல இயல்புகள் இருப்பதாகப் பிரித்துக் காணும் ஞானம் ராஜச மென்றுணர்.

**யத் து க்ருத்ஸ்னவ-தேகஸ்மின் கார்யே ஸக்த-மஹைதுகம்**
**அதத்வார்த்தவ-தல்பஞ் ச தத்-தாமஸ-முதாஹ்ருதம்**

*22. யாதோர் செயற்க ணெலாம் போல வாசை*
*யெழல்செய்யுமே தில்லதா யுண்மை யிலதாம்*
*ஓதற்ப மாயு மிராநிற்கும் மஃதோ*
*உளராக்கப் படுந்தாம சம்மென்று மாதோ.* 646

காரணங் கருதாமல், யாதேனும் ஒற்றைக் காரியத்தை அனைத்துமாகக் கருதிப் பற்றுத லெய்துவதும், உண்மையிய லறியாததும், அற்பத் தன்மையுடையதும் ஆகிய ஞானம் தாமசமென்று கூறப்படும்.

**நியதம் ஸங்க-ரஹித-மராக-த்வேஷத: க்ருதம்**
**அபல-ப்ரேப்ஸுனா கர்ம யத்-த்த் ஸாத்விக-முச்யதே**

*23. விதித்துள்ள தாயுந் தொடக்கற்ற தாயும்*
*விருப்பும் வெறுப்புச் செயாவாறு கன்மம்*
*எதைத்தான் பலத்தாசை யில்லா னியற்றும்*
*இயம்பப் படுஞ்சத் துவம்பெற்ற தஃதா.* 647

பயன்களை வேண்டாதா னொருவன் பற்றுதலின்றி, விருப்பு வெறுப்பின்றிச் செய்யும் விதி தழுவிய செய்கை சாத்விக மெனப்படும்.

**யத்து காமேப்ஸுனா கர்ம ஸாஹங்காரேண வா புன:**
**க்ரியதே பஹுளாயாஸம் தத்-ராஜஸ-முதாஹ்ருதம்**

*24. பயன்விழை கிற்பவ னாலு மகங்கரிப்*
*பாலியைந் துள்ளவ னாலும் பலப்பல*
*துயரடையப் படுகன்ம மெதோ செய்வன்*
*சொலலது தக்க திராச தமிக்கது.* 648

விருப்பங்களுக்கு வசப்பட்டவனால் அல்லது அகங்காரமுடையவனால் செய்யப்படும் மிகுந்த ஆயாசத்துக்கிடமான செய்கை ராஜச மெனப்படும்.

**அனுபந்த்தம் க்ஷயம் ஹிம்ஸா-மனபேக்ஷ்ய ச பௌருஷம்**
**மோஹா-தாரப்ப்யதே கர்ம யத்தத் தாமஸ-முச்யதே**

*25. செலவி னையிடை யூற்றினை யுறுதுயரைத்*
*திறலினை யாலோசனை புரியாத*
*நிலையிலஞ் ஞானத் தாலெது கரும்ம்*
*நிகழுவதது தாமத மெனல் கொளுமே. 649*

செய்கையின் பின்விளைவையும், அதனால் பிறருக்கு நேரக்கூடிய நாசத்தையும், துன்பத்தையும் செய்வானது திறமையையும் கருதாமல், அறிவின்மையால் தொடங்கப்படும் கர்மம் தாமச மெனப்படும்.

**முக்தஸங்கோSனஹம்-வாதீ த்த்ருத்-யுத்ஸாஹ-ஸமன்வித:**
**ஸித்த்யஸித்த்யோர்-நிர்விகார: கர்த்தா-ஸாத்விக உச்யதே**

*26. தொடர்விட் டியானென்று சொல்லாது தீரத்*
*தொடுகூடி யுற்சாக முடனே கிடைத்தல்*
*கிடையாமை யானே விகாரம்மில் கர்த்தன்*
*கிளக்கப் படுஞ்சத் துவத்துள்ள னென்றே. 650*

நசைகளற்றான், நானென்பதற்றான், உறுதியுங் களிதரும் ஊக்கமுமுடையான், வெற்றி தோல்வியில் வேறுபாடற்றான் - இங்ஙனமாகித் தொழில்களியற்றுவோன் ஒளியியல் புடையா னென்ப.

**ராகீ கர்மபலப்ரேப்ஸுர்-லுப்த்தோ ஹிம்ஸாத்ம கோSசுசி:**
**ஹர்ஷசோகான்வித: கர்த்தா ராஜஸ: பரிகீர்த்தித:**

*27. பெட்டலுளன் கன்மபலன் பேணின னுலுத்தன்*
*பிறரையிடர் செய்யு மியல்புள்ள வனசுத்தன்*
*உட்டுயர் மகிழ்ச்சியிவை தொட்டுள கருத்தன்*
*உரைபெறுவ னாவனிர சோகுண முளனா. 651*

வேட்கை யுடையோன், செய்கைப் பயன்களை விரும்புவோன், லோபி, இடர் செய்வோன், தூய்மை யற்றோன், களிக்குந் துயிலுக்கும் வசப்பட்டோன்-இவ்வண்ணமாகித் தொழில் செய்வோன் ரஜோ குணத்தானென்பர்.

**அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த்த: சடோ நைஷ்க்ருதி கோSலஸ**

**விஷாதீ தீர்க்கஸூத்ரீ ச கர்த்தா தாமஸ உச்யதே**

28\. *வினைகளுக் கியைபிலன் றெரியும்வித் தேயுமிலன்*
*மெயுமசைக் கலன்மறைந் திடர்செய்வன் றுயர்வன்வஞ்*
*சனைமனத் தெண்ண நீடியதுடன் மடிமைகொள்*
*தலைவன் மற்றவன் றமோகுண மிகுத்தவனெனல்.* 652

யோகநிலை பெறாதோன், அநாகரிகன், முரடன், வஞ்சகன், பொறாமை யுடையோன், சோம்பேறி, ஏக்கம் பிடித்தவன், காலத்தை நீடித்துக் கொண்டே போவோன்-இவ்வண்ணமாகித் தொழில் செய்வோன் தமோ குணமுடையா னெனப்படுவான்.

**புத்தேர்-ப்பேதம் த்த்ருதேச்-சைவ குணதஸ்-த்ரிவிதம் ச்ருணு ப்ரோச்யமான-மசேஷேண ப்ருதக்த்வேன தனஞ்ஜய**

29\. *தனஞ்சயா தனித்தனி யுரைக்கலாந்*
*தகைய புத்தியின் றயிரியத்தின்*
*குணம் விராவலான் மூவகைப்படுங்*
*கூறுபாடுகேள் சேட மின்றியே.* 653

குண வகையால் மூன்று விதமாகிய புத்தியின் வேற்றுமைகளையும், மிச்ச மின்றிப் பகுத்துரைக்கிறேன்; தனஞ்ஜயா, கேள்.

**ப்ரவ்ருத்திஞ் ச நிவ்ருத்திஞ் ச கார்யாகார்யே பயாபயே பந்த்தம் மோக்ஷஞ் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த்த ஸாத்விகீ**

30\. *விட்டொழுகு மாறுந் தொட்டொழுகு மாறும்*
*விதிவினை விலக்குவினை யபயமச்சம்*
*கட்டுவதும் வீடுங் காணுவ தெதோவக்*
*காட்சியொரு பார்த்த சாத்துவிக மேவும்.* 654

தொழிலெது, ஒழிவு, யாது, செய்யத் தக்கது யாது, தகாதது யாது, அச்சமெது, அஞ்சாமை யெது, பந்த மெது விடுதலையெது- என்பவற்றைப் பகுத்தறியும் புத்தியே, பார்த்தா, சாத்விக புத்தியாம்.

**யயா தர்ம-மதர்மஞ் ச கார்யஞ் சாகார்யமேவ ச அயதாவத் ப்ரஜானாதி புத்தி: ஸா பார்த்த ராஜஸீ**

31\. *எதனா னறமும் மறமும் புரிகா*
*ரியமுந் தவிர்வும் முளவா றலதாய்*
*மதிகொள் ளுவனம் மதிராசதமே*
*மருவும் பிருதைக் கொருமா மகனே.* 655

தர்மத்தையும் அதர்மத்தையும் காரியத்தையும் அகாரியத்தையும் உள்ளபடி அறியாத புத்தி ராஜச மெனப்படும், பார்த்தா.

**அதர்மந் தர்மமிதி யா மன்யதே தமஸாவ்ருதா**
**ஸர்வார்த்தான் விபரீதாம்ச்ச புத்தி: ஸா பார்த்த தாமஸீ**

*32. தமசான மறையுண் டறமென்றுமறந்*
*தனையெண்ணி யெலாவித மாய பொருள்*
*தமையும் விபரீத மதாயெதுதேர்*
*தருமற்றது தாமச மர்ச்சுனனே.* 656

பார்த்தா இருளால் கவரப்பட்டதாய், அதர்மத்தை தர்மமாகக் கருதுவதும் எல்லாப் பொருள்களையும் நேருக்கு மாறாகக் காண்பதும் ஆகிய புத்தி தாமச புத்தியாம்.

**த்த்ருத்யா யயா தாரயதே மன: ப்ராணேந்த்ரியக்ரியா:**
**யோகேனாவ்யபிசாரிண்யா த்த்ருதி: ஸா பார்த்த ஸாத்விகீ**

*33. இருதயத்தின் பிராணனி னைம்பொறி*
*யின்செயல் லபிசாரமில் யோகுடன்*
*பிருதை மைந்த தயிரியம் யாதினாற்*
*பேணு மத்திறல் சத்துவம் பெற்றதே.* 657

மனம், உயிர், புலன்கள் இவற்றின் செயல்களைப் பிறழ்ச்சியில்லாத யோகத்துடன் தரிக்க வல்லதாகிய மன உறுதியே சாத்விகமாவது, பார்த்தா.

**யயா து தர்மகாமார்த்தான் த்த்ருத்யா தாராயதேऽர்ஜுன**
**ப்ரஸங்கேன பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த்த ராஜஸீ**

*34 அதிக நசையானே பயனைவிழை வுற்றான்*
*அறம்பொருள்க ளின்பைப் பிருதை தரு மைந்த*
*எதுதயிரி யத்தி னானிறுவுவோனவ்*
*விழுறயிரியம் ராசத முளதுமஹதோ.* 658

பார்த்தா, பற்றுத லுடையோனாய்ப் பயன்களை விரும்புவோன் அறம் பொருளின்பங்களைப் பேணுவதில் செலுத்தும் உறுதி ராஜச உறுதியாம்.

**யயா ஸ்வப்னம் பயம் சோகம் விஷாதம் மதமேவ**
**ந விமுஞ்சதி துர்மேதா த்த்ருதி: ஸா பார்த்த தாமஸீ**

35. துருமதி யுளோனெத் தயிரிய மதானே
துயில் கவலை துன்பம் பயமதமு மேதான்
பிருதைதரு மைந்த விடுகிலனோ வந்தப்
பெறுதயி ரியந்தா மதமுடைய தந்தோ. 659

பார்த்தா, உறக்கத்தையும் அச்சத்தையும் துயரத்தையும் ஏக்கத்தையும் மதத்தையும் மாற்றத் திறமையில்லாத மூட உறுதி தமோ குணத்தைச் சார்ந்தது.

**ஸுகம் த்விதானீந் த்ரிவிதம் ச்ருணு மே பரதர்ஷப**
**அப்யாஸாத் ரமதே யத்ர து:க்காந்தஞ் ச நிகச்சதி**

36. பரத ரேறிதே போதின் மூவகைப்
படுசுகத் தையென் னிடனிருந்து கேள்
ஒருபயிற்சியா லெதிலினிப்பனோ
உறுகணுக் கிறுதியு மடுக்குமோ. 660

பாரதக் காளையே, இப்போது மூன்று விதமாகிய இன்பங்களைச் சொல்லுகிறேன், கேள். எதனிலே ஒருவன் பயிலப் பயில உவகை மிகுதியுறப் பெறுவானோ, எதனில் துக்க நாச மெய்துவானோ.

**யத்த-தக்ரே விஷமிவ பரிணாமேऽம்ருதோபமம்**
**தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்த-மாத்மபுத்தி-ப்ரஸாதஜம்**

37. எது சுகம் முதலில் விடநிகர் வதுவாய்
இறுதியி லமிழ்தோ டிணைதரு மதுவோ
மதியுயிர் தழுவுந் தெளிவினில் விளைவாய்
வருசுக மொரு சத் துவமுள தெனலாம். 661

எது தொடக்கத்தில் விஷத்தை யொத்ததாய், விளைவில் அமிர்த மொப்ப மாறுவதோ, அந்த இன்பமே சாத்விகமாகும்; அஃது தன் மதியின் விளக்கத்திலே பிறப்பது.

**விஷயேந்த்ரிய-ஸம்யோகாத் யத்த-தக்ரேऽம்ரு தோபமம்**
**பரிணாமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம்**

38. எவ்வது விடயம்மொடு பொறிகளுமே
இயைதலின் முதலி லமிழ்திணை வதுவாய்
அவ்விறுதியினே விடநிகர் வதுவோ
அதுசுக மொருரா சதமென வெணலாம். 662

விஷயங்களிலே புலன்களைப் பொருத்துவதனால் தொடக்கத்தில் அமுதைப் போலிருந்து விளைவில் நஞ்சுபோலாறதாய் முடியும் இன்பம் ராஜச மெனப்படும்.

**யதக்ரே-சானுபந்த்தே ச ஸுகம் மோஹன-மாத்மன:**
**நித்ராலஸ்ய-ப்ரமாதோத்தம் தத்-தாமஸ-முதாஹ்ருதம்**

*39. ஏதுசுக முதலினும் வளர்தரு பொழுதத்*
*தினுமயலினை யுதவியது தனக்கே*
*அதிமடி துயிலொடு மறவி யிவற்றோ*
*டளைகுவ தநுதமசுளதென லாகும்.* 663

தொடக்கத்திலும் இறுதியிலும் ஒருங்கே ஆத்மாவுக்கு மயக்கம் விளைவிப்பதாய், உறக்கத்தினின்றும் சோம்பரினின்றும் பிறக்கும் இன்பம் தாமசமென்று கருதப்படும்

**ந ததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வா புன:**
**ஸத்வம் ப்ரக்ருதிஜைர்-முக்தம் ய தேபி: ஸ்யாத் த்ரிபிர்-குணை:**

*40. மண்ணிலே யலது விண்ணிலே யமரர்*
*வகையிலே யெனினும் பகடியின்*
*கண்வரும் முயிரி னிந்த முக்குணம*
*கன்ற தாகுமெது வஃதிலை.* 664

இயற்கையில் தோன்றும் இம்மூன்று குணங்களினின்றும் விடுபட்ட உயிர் மண்ணுலகத்திலுமில்லை; வானுலகத்தில் தேவருள்ளேயுமில்லை.

**ப்ராஹ்மண-க்ஷத்ரிய-விசாம் சூத்ராணாஞ் ச பரந்தப**
**கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவ-ப்ரபவைர்-குணை:**

*41. அந்தணாளர் சத்திரியர் வைசியர்*
*அம்ம சூத்திரர்க் கவரியற்கையின்*
*வந்தபல் குணத்தால் வினைத்திறன்*
*வகைமை பெற்றதா லிகலை யட்டவ.* 665

பரந்தபா! பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களுடைய தொழில்கள் அவரவரின் இயல்பில் விளையும் குணங்களின்படி வகுப்புற்றனவாம்.

**சமோ தமஸ்-தப: சௌசம் க்ஷாந்தி-ரார்ஜவ-மேவ ச**
**ஜ்ஞானம் விஜ்ஞான-மாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வபா வஜம்**

*42. பொறி யொடுங்குவது மன னடங்குவது*
*பொறை தவஞ்சுசி பொய்யாநிலை*
*அறிதன் மேலறிதல் மறைமெய் யென்றனமறை*
*யவர்களுக் கியல்பினாம் வினை.* 666

அகக் கரணத்தை யடக்குதல், புறக் கரணத்தை யடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, ஞானம், கல்வி, ஆத்திகம் இவை இயல்பிலே தோன்றும் பிராம்மண கர்மங்களாகும்.

**சௌர்யந் தேஜோ த்த்ருதிர்-தாக்ஷ்யம் யுத்தே சாப்ய பலாயனம்**
**தான-மீச்வரபாவச்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்**

*43. தயிரியம் விரகு சவுரியம் மொளியெத்*
*தருணமுஞ் சமரி னடிபினிடாமை*
*இயல்வது தருத லீச்சுர நீர்மை*
*இறையவ ரியல்பின் வருவினை யாகும்.* 667

சூரத்தன்மை ஒளி, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, ஈகை, இறைமை - இவை இயற்கையிலே தோன்றும் க்ஷத்திரிய கர்மங்களாம்.

**க்ருஷி-கௌரக்ஷ்ய-வாணிஜ்யம் வைச்யகர்ம ஸ்வபாவஜம்**
**பரிசர்யாத்மகங் கர்ம சூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம்**

*44. பயிர்விளைத்தல் பசுவினை யளித்தல் பல*
*பண்டம் விற்றல் கொளல் செய்தல் தாம்*
*வயிசியப் பிறவி யுடையருக் கியல்பின்*
*வருவதற்குரிய கருமமாம்.*

*புரிபணி விடையின் னுருவுள வினைசூத்*
*திரனிடனுந்தன் னில்பினில் வருமே.* 668

உழவு, பசுக் காத்தல், வாணிகம் இவை இயற்கையிலே பிறக்கும் வைசிய கர்மங்களாம். தொண்டு புரிதல் சூத்திரனுக்கு அவனியற்கையால் ஏற்பட்ட தொழில்.

**ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:**
**ஸ்வகர்மநிரத: ஸித்திம் யதா விந்ததி தச்-ச்ருணு**

45. தன்றன் கருமத்தில் விழைந்து நரன்
சஞ்சித்தியை யெய்துவன் றன்றன்வினை
என்றும் புரிகிற் பவனெவ் விதஞ்சித்
தியையெய்துவ னோவது கேள்வி கொள்வாய். 669

தனக்குத் தனக்கு உரிய கர்மத்தில் மகிழ்ச்சியுறும் மனிதன் ஈடேற்றம் பெறுகிறான். தனக்குரிய தொழிலில் இன்புறுவோன் எங்ஙனம் சித்தி யடைகிறானென்பது சொல்லுகிறேன், கேள்.

**யத:ப்ரவ்ருத்திர்-ப்பூதானாம் யேன ஸர்வமிதந் ததம்**
**ஸ்வகர்மணா தமப்ப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:**

46. எவனின் றுயிர்கட் குதயம் முளதோ
எவனாலிவ் வனைத்து நிறைந்துளவோ
அவனைத் தனதாய கன்மத்தி னருச்
சனைசெய் தடைவன் னரன்சித் தியையே. 670

உயிர்களுக் கெல்லாம் பிறப்பிடமாய், இவ்வையக மனைத்திலும் நிறைந்திருக்கும் கடவுளைத் தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஈடேறுகிறான்.

**ச்ரேயான் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வனுஷ்ட்டி தாத்**
**ஸ்வபாவநியதங் கர்ம குர்வந் நாப்னோதி கில்பிஷம்**

47. தற்கொடு செயத்தகு தன்மங்குண மிலேனுஞ்
சாலவொழு குற்றவயல் ஞான தருமத்தின்
முற்பட வுயர்ந்த தியல்பாய் மெய்விதி கன்மம்
முயலுபவ னெய்தலிலை பவமதனை யம்மா. 671

பிறர்க்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும் தனக்குரிய தர்மத்தை குணமின்றிச் செய்தலும் நன்று. இயற்கையி லேற்பட்ட தொழிலைச் செய்வதனால், ஒருவன் பாவ மடைய மாட்டான்.

**ஸஹஜங் கர்ம கௌந்தேய ஸதோஷ-மபி ந த்யஜேத்**
**ஸர்வாரம்ப்பா ஹி தோஷேண தூமேனாக்னி-ரிவாவ்ருதா:**

48. இயற்கையி னிகழ்த்தும் வினைகே டுடையதேனும்
இகழ்ந்து விடற்கிலை குந்திமக னேயோ.
முயற்சியின் றொடக்க முழுமைக்கு மலவோதான்
மூடுவது கேடுபுகை சூடெரியினம்மா. 672

[ஈண்டுக் கேடு - துக்கம் ; சரீர சிரமம் முதலியன]

குந்தி மகனே, இயல்பான தொழில் குறையுடைய தாயினும், அதைக் கைவிட லாகாது. தீயைப் புகை சூழ்ந்திருப்பதுபோல் எல்லாத் தொழில்களையும் குறைகள் சூழ்ந்தே நிற்கின்றன.

**அஸக்தபுத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகத-ஸ்ப்ருஹ:**
**நைஷ்கர்ம்யஸித்திம் பரமாம் ஸந்ந்யாஸேனோதிகச்சதி**

*49. எல்லா விடத்தின்கணும் பற்றில் புத்தி*
*யினையுள்ளனா யுள்ளம் வென்றாசை விட்டோன்*
*எல்லாம் விடுக்கிற்பதாலே வினைக்கண்*
*இல்லான் சுபாவப் பெரும்பேறு மேவும். 673*

யாங்காணும் வீழ்விலா மதியுடையோனாய், தன்னை வென்று விருப்பந் தவிர்ந்து, பின்னர்ச் செயலிலாப் பெரி துயர்ந்த வெற்றியைத் துறவினால் எய்துவான்.

**ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாப்னோதி நிபோத மே**
**ஸமாஸேனைவ கௌந்தேய நிஷ்ட்டா ஜ்ஞானஸ்ய யா பரா**

*50. சித்தி யெய்தினோன் புத்தியிற் குயர்*
*சேரிடம் மெதோ பிரம மற்றதை*
*எத்தினா லெய்து மத்தை யென்னிடன்*
*இனித றிந்துகொள் சிறிது குந்திசெய். 674*

*சித்தி யடைந்தவன் எங்ஙனம் பிரம்மத்தில் கலப்பதாகிய மிகச் சிறந்த ஞான நிலை யெய்துவா னென்பதைக் கூறுகிறேன், கேள்.*

**புத்த்யா விசுத்தயா யுக்தோ த்த்ருத்யாத்மானம் நியம்ய ச**
**சப்தாதீன் விஷயான்ஸ்-த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதஸ்ய ச**

*51. மலிசுத்த புத்தி யொடுகூடி நின்றும்*
*மனதைத் தன்றீரத் தொடுதன்கண் வைத்தும்*
*ஒலிமுற் கொள விடயங்களை விட்டு மேவற்*
*குளவும் வெறுத்தற் குளவும் விடுத்தே. 675*

தூய்மை பெற்ற புத்தியுடையவனாய், உறுதியால் தன்னைக் கட்டுப்படுத்தி, ஒலி முதலிய விஷயங்களைத் துறந்து, விருப்பு வெறுப்புக்களை எறிந்துவிட்டு,

**விவிக்தஸேவீ லக்க்வாசீ யத-வாக்-காய-மானஸ:**
**த்த்யானயோக-பரோ நித்யம் வைராக்யம் ஸமுபாச்ரித:**

52. தனிவதிந்து சிறிதை யுண்டு
தநுவுளஞ் சொல் நிலைசெய்து
மனன யோகினித மமர்ந்து
மனநிரா சைநனி கொள்வான் 676

தனி இடங்களை நாடுவோனாய், ஆசைகள் குன்றி வாக்கையும் உடம்பையும் மனத்தையும் வென்று, தியான யோகத்தில் ஈடுபட்டு, எப்போதும் பற்றின்மையை நன்கு பற்றியவனாய்,

**அஹங்காரம் பலந் தர்ப்பம் காமங் க்ரோதம் பரிக்ரஹம்**
**விமுச்ய நிர்மம: சாந்தோ ப்ரஹ்ம-பூயாய கல்பதே**

53. மனமகங் கொளுதல் கருவ மாசை சினன்
வலியும் பற்றுமற விட்டெதுந்
தனதெனா ததொடு சாந்த மேவி யவன்
றகுவனே பிரம மாமென. 677

அகங்காரம், வலிமை, செருக்கு, காமம், சினம், இரத்தல் - இவற்றை விட்டு, மமகாரம் நீங்கி, சாந்த நிலை கொண்டவன் பிரம்மமாகத் தகுவான். [மமகாரம் - உடைமையுணர்ச்சி]

**ப்ரஹ்மபூத: ப்ரஸன்னாத்மா ந சோசதி ந காங்க்ஷதி**
**ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம்**

54. பிரம மாகிமலர் கின்ற வுள்ளமொடு
பீழை விட்டுவிழை வற்றவன்
சருவ சீவ ரிடனுஞ்சமம் புரிவன்
சார்வ னென்னதுயர் பத்திமை. 678

பிரம்ம நிலை பெற்றோன், ஆனந்த முடையோன், துயரற்றோன், விருப்பற்றோன், எல்லா உயிர்களையும் சமமாக நினைப்போன், உயர்ந்ததாகிய என் பக்தியை அடைகிறான்.

**பக்த்யா மாமபிஜானாதி யாவான் யச்சாஸ்மி தத்வத:**
**ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே ததனந்தரம்**

55. யானெத் தகையுள்ளவ னெவ்வளவேன்
ஆவல் லெனை யன்பினிலுள்ளது போற்
றானற்கறிவன் னெனையுள் ளதுபோற்
றன்னுள் ளறிவுற்றபி னெய்து மதால். 679

யான் எவ்வளவுடையேன், யாவன், என என்னை யொருவன் உள்ளபடி பக்தியாலேயே அறிகிறான். என்னை உள்ளபடி அறிந்துகொண்ட பின்னர் 'தத்' (அது) எனப்படும் பிரம்மத்தில் புகுவான்.

**ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்-வ்யபாச்ரய:**
**மத்-ப்ரஸாதா-தவாப்னோதி சாச்வதம் பதமவ்யயம்**

*56. எனையடைந் தெலா வினையு மெந்தவே*
*ளையுமியற்றுவோ னெனத ருட்படிக்*
*கினைவ தில்லதாய் நிலைவ தேதனா*
*தியல்ப தாகுமே விடனை யெய்துமே. 680*

எல்லாத் தொழில்களையும் எப்போதும் செய்துகொண்டிருந்தாலும், என்னையே சார்பாகக் கொண்டோன் எனதருளால் அழிவற்ற நித்திய பதவியை எய்துகிறான்.

**சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பர:**
**புத்தியோக-முபாச்ரித்ய மச்சித்த: ஸததம் பவ**

*57. மதியோக மடைந்தறி வால் வினையா*
*வையு மென்னிடன் விட்டெனையே பரமா*
*மதிசெய்தெது போழ்தினு மற்றெனிடன்*
*மதியைத் தனிவைத்தவ னாகுகவே. 681*

அறிவினால் செயல்களை யெல்லாம் எனக்கெனத் துறந்து விட்டு, என்னிடத்தே ஈடுபட்டு, புத்தி யோகத்தில் சார்புற்று, எப்போதும் என்னைச் சித்தத்தில் கொண்டு இரு.

**மச்சித்த: ஸர்வதுர்க்காணி மத்ப்ரஸாதாத்-தரிஷ்யஸி**
**அத சேத் த்வ-மஹங்காராந் ந ச்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி**

*58. என்கண்மதி வைத்தவ னாகியெலா*
*இடருந் நனி தாவுவை யென்னருளாற்*
*பின்னுள்ள தகந்தையி னாலிதுநீ*
*பேணற்கிலை யென்னி னொழிந்தனையால். 682*

என்னைச் சித்தத்தில் கொண்டிருப்போனாய் எல்லாத் தடைகளையும் எனதருளால் கடந்து செல்வாய். அன்றி நீ அகங்காரத்தால் இதனைக் கேளாது விடுவாயெனில் பெரிய நாசத்தை அடைவாய்.

**யதஹங்கார-மாச்ரித்ய ந யோத்ஸ்ய இதி மன்யஸே**
**மித்த்யைஷ வ்யவஸாயஸ்-தே ப்ரக்ருதிஸ்-த்வாம் நியோக்ஷ்யதி**

59. *அகந்தையுற் றியானமர் பொரே னெனா*
*அறிவு தேர்குவா யாயினின்னது*
*மிகுந்த நிச்சயம் மிதுபொய் யாமுனை*
*வினையி னேவுமே பகடி தானுமே.* 683

நீ அகங்காரத்திலகப்பட்டு, "இனிப் போர் புரியேன்", என்று துணிவாயாயின், நினது துணிவு பொய்மைப்பட்டுப்போம். இயற்கை உன்னைப் போரிற் பிணிக்கும்.

**ஸ்வபாவஜேன கௌந்தேய நிபத்த: ஸ்வேன கர்மணா**
**கர்த்தும் நேச்சஸி யன்-மோஹாத் கரிஷ்யஸ்-யவசோऽபி தத்**

60. *இயற்கையா னெய்தும் வினையினிற் பிணிப்*
*பினையடைந் தெதை மயலினிற் செய*
*நயக்கிலா யதை யவச மாகியும்*
*நனிசெய் கிற்பைகுந் தியினினித்த சேய்.* 684

இயற்கையில் தோன்றிய ஸ்வகர்மத்தால் கட்டுண்டிருக்கும் நீ, மயக்கத்தால் அதனைச் செய்ய விரும்பா யெனினும், தன் வசமின்றியேனும் அதைச் செயயலாவாய்.

**ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்ட்டதி**
**ப்ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா**

61. *தழுவிப் பொறியின் மிசையே றியதிற்*
*றங்கும் முயிர் யாவையு மாயையினாற்*
*சுழல்வித் துயிர்யா வையினும் மிதயத்*
*துளைபுக்குள னீச்சுர னர்ச்சுனனே.* 685

அர்ஜுனா, எல்லா உயிர்களுக்கும் ஈசன் உள்ளத்தில் நிற்கிறான்; மாயையால் அவன் எல்லா உயிர்களையும் சக்கரத்திலேற்றிச் சுழற்றுகிறான்.

**தமேவ சரணங் கச்ச ஸர்வபாவேன பாரத**
**தத் ப்ரஸாதாத் பராம் சாந்திய ஸ்த்தானம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்**

62. *எல்லாவித பாவனை யானுமவன்*
*றனையேசர ணெய்தவ னின்னருளால்*
*வெல்பாரத மேதகு சாந்தியுடன்*
*விடாதுள வீடு முறப்பெறுவாய்.* 686

பாரதா, எல்லா வடிவங்களிலும் அவனையே சரணெய்து. அவனருளால் பரம சாந்தியாகிய நித்திய ஸ்தானத்தை எய்துவாய்.

**இதி தே ஜ்ஞான-மாக்க்யாதம் குஹ்யாத்-குஹ்யதரம் மயா**
**விம்ருச்யைத தசேஷேண யதேச்சஸி ததா குரு**

63. இப்படிக் கிரக சியமதின்னிரக
சிய தரத்தறி வுனக்கெனால்
செப்ப லுற்றதிதை மற்று முன்னியெது
செயவிரும் புதிகொ லது செயாய். 687

இங்ஙனம் ரகசியத்திலும் ரகசியமாகிய ஞானத்தை உனக்குரைத்தேன். இதனை முற்றிலும் ஆராய்ச்சி செய்வது எப்படி இஷ்டமோ அப்படிச் செய்.

**ஸர்வ-குஹ்யதமம் பூய: ச்ருணு மே பரமம் வச:**
**இஷ்டோSஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்**

64. எல்லா ரகசிய முள்ளும் முயரிய
எனதுத் தமமொழி யின்னுங் கேள்
சொல்வே னினதித மென்கட் டிடமொடு
தொடர் நண்பினை யெனு மதனாலே. 688

மீட்டுமொரு முறை எல்லாவற்றிலும் ஆழ்ந்த ரகசியமாகிய எனது பரம வசனத்தைக் கேள். நீ திடமான நண்பன். ஆதலால் உனக்கு ஹிதத்தைச் சொல்லுகிறேன்.

**மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு**
**மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜானே ப்ரியோSஸி மே**

65. என்பத்திமை யுள்ளவ னாகி யென்கண்
இதயத்தினை வைத்திடுபூசி யெனை
என்னைப் பணி யெய்துவை மெய்யெனையே
எற்கன் புளைநிற் கிடுவேன் சபதம். 689

உன் மனத்தை எனக்காக்குக. என் தொண்டனாகுக. எனக்கென வேள்வி செய்க. என்னையே வணங்குக. என்னை யெய்துவாய். உண்மை இஃதே. உனக்கிது சபதமுரைக்கிறேன். நீ எனக்கினியை.

**ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ**
**அஹம் த்வா ஸர்வ-பாபேப்ப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:**

*66. அறம னைத்தையும் அறவிடுத்தெனை*
*யொருவ னைச்சர ணடைகயான்*
*மறம னைத்தினு முனைவிடுத்தல் செய்*
*குவனிடர்ப் படுவது செயாய்.* 690

எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்னையே சரண்புகு. எல்லாப் பாவங்களி னின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன். துயரப்படாதே.

**இதந் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசன**
**ந சாசுச்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோ'ப்ப்யஸூயதி**

*67. ஈதுதவம் மிலனுக் கோதுவ தில்லையுனால்*
*எற்பயில் பத்தியி லறகெப் பொழு தத்துமிலை*
*ஈது செவிக்கொள வேட்டில னிடையில்லையெனை*
*ஏவன் வெறுப்ப துளனாவ னவற்கிலையே.* 691

இதை எப்போதும் தவமிலாதோனுக்கும் பக்தியில்லாதோனுக்கும், கேட்க விரும்பாதோனுக்கும் என்பால் பொறாமையுடையோனுக்கும் சொல்லாதே.

**ய இமம் பரமம் குஹ்யம் மத்-பக்தேஷ்-வபிதாஸ்யதி**
**பக்திம் மயி பராங் க்ருத்வா மாமேவைஷ்யத்-யஸம்சய:**

*68. என்பத்தியினர்க் குயர்வாயரக*
*சியமற்றிதை யேவ னுரைப்ப னவன்*
*என்பத்தியி னுத்தம மெய்தியெனை*
*யேயெய்துவ னாகுவ னைய மிலை.* 692

இந்தப் பரம ரகசியத்தை என் பக்தர்களிடையே சொல்லுவேன். என்னிடத்தே பரம பக்தி செலுத்தி என்னையே எய்துவான்; ஐயமில்லை.

**ந ச தஸ்மான் மனுஷ்யேஷு கச்சின்மே ப்ரியக்ருத்-தம:**
**பவிதா ந ச மே தஸ்மா-தன்ய: ப்ரியதரோ புவி**

*69. அவனின் மற்றொருவன் மனிதருக் குளென*
*ததிவிருப் பவினை செய்வனில்*
*அவனின் மற்றொருவ னவனியிற் பிரிய*
*தரனெனக்கினி யுளனுமிலை.* 693

மானுடருள்ளே, அவனைக் காட்டிலும் எனக்கினிமை செய்வோன் வேறில்லை. உலகத்தில் அவனைக் காட்டிலும் எனக்கு உகந்தவன் வேறெவனுமாகான்.

**அத்த்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாத-மாவயோ:**
**ஜ்ஞானயஜ்ஞேன தேனாஹ-மிஷ்ட: ஸ்யாமிதி மே மதி:**

*70. எவனோ வறமோ டுளதா கியவிவ்*
*விருவே முரையாடலை யோது வன்மற்*
*றவனா லறிவெச்சம தால் வழிபட்*
*டவனாகுவல் யானென லென்னினை வே.* 694

நம்முடைய இந்தத் தர்மமயமான சம்பாஷணையை எவன் படிப்பானோ, அவன் செய்யும் அந்த ஞான யக்ஞத்தால் நான் திருப்தி பெறுவேன்; இஃதென் கொள்கை.

**சரத்தாவா-னனஸூயச்ச ச்ருணுயா-தபி யோ நர:**
**ஸோऽபி முக்த: சுபான் லோகான் ப்ராப்னுயாத் புண்ய கர்மணாம்**

*71. எவனரன் பொறாமை யிலபடி சிரத்தை*
*யினையுடைய னாகி யிதுசெவி யினுண்பன்*
*உவனும் விடுபட்டுப் புணியவினை யாளர்க்*
*குரிய சுபலோக மிசையடைவ னம்ம.* 695

நம்புதல் கொண்டு, பொறாமை போக்கி இதனைக் கேட்பது மட்டுமே செய்வானெனினும், அவனும் விடுதலையடைவான். அப்பால் புண்ணியச் செயலினர் நண்ணு நல்லுலகங்களெய்துவான்.

**கச்சிதேதச்ச்ருதம் பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா**
**கச்சி-தஜ்ஞான-ஸம்மோஹ: ப்ரனஷ்டஸ்-தே தனஞ்ஜய**

*72. பிருதை சேய்தனஞ் சயவுனா லொரே*
*பெற்றி யாயுள சித்தமோடிது*
*சுருத மாயதோ புனதஞ் ஞானமே*
*தொடரு மோகமுந் தொலைய லாயதோ.* 696

பார்த்தா, சித்தத்தை ஏகாந்தமாக்கி இதை நீ கேட்டு வந்தனையா? தனஞ்ஜய, உன் அஞ்ஞான மயக்கம் அழிந்ததா?

*அர்ஜுன உவாச :*

**நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்-லப்த்தா த்வத்-ப்ரஸா தான் மயாச்யுத ஸ்த்திதோऽஸ்மி கத-ஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ**

*73. அச்சுதா வுனாதருளின் மோகம்வீ*
*டியதெனா லறிவடைய லாயதோ*
*டெச்சந் தேகமு மில்லையாம் நிலைக்*
*கிற்ப னாவனின் சொற்படிச் செய்வேன். 697*

***அர்ஜுனன் சொல்லுகிறான் :***

மயக்க மழிந்தது நின்னருளாலே, அச்சுதா, நான் நினைவு அடைந்தேன் ஐயம் விலகி நிற்கிறேன்; நீ செய்யச் சொல்வது செய்வேன்.

***ஸஞ்ஜய உவாச :***

**இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்த்தஸ்ய ச மஹாத்மன: ஸம்வாத-மிமமச்ரௌஷ-மத்புதம் ரோமஹர்ஷணம்**

*74. சீரறிவுடைப் பிருதை சேயினதும் வாசு*
*தேவனதுமா மிதுவிதந் திகழுமிந்த*
*ஆருமயிர் குச்செறியு மற்புதசம் வாதம்*
*அம்மசெவி யிற்பெறவு மாயினன ரோயான். 698*

***சஞ்ஜயன் சொல்லுகிறான் :***

இப்படி நான் வாசுதேவனுக்கும் மகாத்மாவாகிய பார்த்தனுக்கும் நிகழ்ந்த அற்புதமான - புளகந் தரக்கூடிய - அந்த சம்பாஷணையைக் கேட்டேன்.

**வ்யாஸ-ப்ரஸாதாச்-ச்ருதவா-னேதத் குஹ்ய-மஹம் பரம் யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம்**

*75. அதிரகசிய யோகிதனை வியாசன்*
*அருளுடைமை யின்யா னுளபடி யோக*
*முதலென வுளனாகிய கண்ணன் சுயமே*
*மொழிதரு வணமே செவிகொள லானேன். 699*

யோகக் கடவுளாகிய கண்ணன் இந்தப் பரம ரகசியமான யோகத்தைத் தான் நேராகவே சொல்லும்போது நான் அதை வியாசனருளால் கேட்டேன்.

**ராஜன் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாத-மிம-மத்புதம் கேசவார்ஜுனயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர் முஹு:**

*76. கேசவ னர்ச்சுன னென்றிவர்*
*கிளந்த வியத்தகு புண்ணிய*
*வாசகம் மீதெண்ணி யெண்ணியே*
*மகிழ்வ லடிக்கடி மன்னவ. 700*

அரசனே, கேசவார்ஜுனரின் வியப்புக்குரிய இந்த புண்ய சம்பாஷணையை நினைத்து நினைத்து, நான் மீட்டு மீட்டும் களிப்பெய்துகிறேன்.

**தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே:**
**விஸ்மயோ மே மஹான் ராஜன் ஸ்ருஷ்யாமி ச புன: புன:**

77. *அரியினதத்தகு மிகவுய ரற்புதம்*
*அவிர்வடி வெண்ணி யெணிப்*
*பெரிய வியப்புறு மரச வடிக்கடி*
*பெருகு மகிழ்ச்சி யென்கண்.* 701

அரசனே, ஹரியின் மிகவும் அற்புதமான அந்த ரூபத்தை நினைத்து நினைத்து எனக்குப் பெரிய ஆச்சரியமுண்டாகிறது; மீட்டு மீட்டும் களிப்படைகிறேன்.

**யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்த்தர:**
**தத்ர ஸ்ரீர்-விஜயோ பூதிர்-த்த்ருவா நீதிர்-மதிர்-மம**

78. *எங்குள னாவன்யோ கேச்வரன் கண்ணன்*
*எங்குளனாவன் வில்லேந்தினன் பார்த்தன்*
*அங்குள வென்றுஞ் சீதேவி நல்வென்றி*
*அஞ்செல்வ நீதிக ளென்பதென் னெண்ணம்.* 702

கண்ணன் யோகக் கடவுள், எங்குளன், வில்லினை யேந்திய விஜயன் தன்னொடும் அங்கு திருவும் ஆக்கமும் வெற்றியும் நிலை தவறாத நீதியும் நிற்கும்; இஃதென் மதம்.

பதினெட்டாம் அத்தியாயம் நிறைவேறியது.

## *கீதைப்பொருட்டொகை*

*எத்தொழிற்குஞ் செய்கர்த்த னீச்சுவர னென்னுணர்வும்*
*சத்துவமே போற்றத் தகுவதூஉம் - நித்தமுந்தடிந்*
*தன்மந்தரு பயனுஞ் சாத்திரத்தின் சாரமுமே*
*பன்னும் பதினெட்டுப் பாத்து.* (22)

*கீதைப் பாட்டு நிறைவேறியது*

தீர்த்தம் படிதறவஞ் செய்வேள்வி தானமுத
லோர்த்தொழினில் செய்கைவினை யோகந்தம் - பேர்த்தவுளம்
வென்றவர்தாந் தூய்மை மிளிருயிர்க்க ணேநிலைத்தல்
கன்றலிலா ஞானயோ கம். (23)

பரம்பா லொருவந்தம் பாயும் விருப்பா
னிரம்புந்தி யானாதி நிட்டை - ஒருபத்தி
யோகமிவை மூன்றி யோகினுக்கு மொன்றொடொன்று
சேர்கையுள தென்று தெளி. (24)

அத்த னொருவனுக்கே யாரா தனமாகு
நித்தியறை மித்திகமாய் நீள்கரும - மத்தனைக்கும்
இவ்வியைபுண் டிம்மூன்றும் யோகநெறியைக் கொடுபோய்
அவ்வுயிர்கா ணத்துணைக ளாம். (25)

அனைத்தஞ் ஞானத்தைய மில்லாக்கிப் பரற்கா
ளனத்தன்னைக் கண்டு பரமென்னுங் - கனத்தபத்தி
எய்தியஃ தொன்றா லிறைவன் றிருவடியை
எய்துவனா லம்ம விவன். (26)

செல்வமதை வேண்டிற் றிருந்துபத்தி யோகந்தான்
செல்வ முழுதிற்குஞ் சேர்துணையாம் - நல்லுயிரை
வேண்டினிம் மூன்று விதயோகுங் கைவலியத்
தீண்டு துணையா மெனல். (27)

மற்றுமோர் தெய்வம் வழிபடா வேகாந்தஞ்
சொற்றவதி காரிகட்குச் சூழ்பொதுவாம் - முற்றுவரை
ஓர்பரமே வேண்டி யுளனே லழியாமை
சேருமதை யேயடைவன் றேர். (28)

ஞானியோ வேகாந்தி கட்குணனி சிறந்தோன்
மேனியிற்றே வின்வயஞ் சீவிப்பவனா - மானபரன்.
தன்னைப் புணர்வுந் தணவுந்த னின்புதுன்பென்
றன்னவன்பா லேகநினை வாம். (29)

இறையைத் தியானித் தெதிர்கண்டு போற்றித்
தறையிற் பணிந்துதி தந்து - முறையிசைத்துத்
தற்பெற்றோ னன்னானைச் சார்ந்துமனம் புத்திபொறி
நற்பிரா ணன்வினைசெய் நன். (30)

தன்கன்ம மாதி தகுபத்தி யீறாக
இன்னவையன் பொன்றா லியற்றுவிக்க - மன்னினனாய்ச்
செய்கவிலை யேதுவெனுஞ் சிந்தைவிடல் மற்றதனைத்
தெய்வமிசை யஞ்சலனாய்ச் சேர்த்து. (31)

ஏகாந்த மாயழிவே யில்லா வடிமையொன்றி
னார்காத லுள்ளோ னருட்கடவுள் - வார்கழலிற்
றோயுமெனநூல் சொலலே தலையிதுவே
தூயகீ தார்த்தத் தொகை. (32)

## ஆக்கியோன் பெயர்

இரும்புவியோர் தேற யமுனைத் துறைவன்
அரும்பியந லாரிய கீதார்த்தப் - பெருந்தொகையைக்
காசி னயித்துருவன் காசிப னிராகவன்பெய்
ஏசில் தமிழ்ப்பா விவை. (33)

# கண்ணன் திருவருள் போற்றல்

1. கண்ண நின்கழற் காதல் செய்திலன்
காலமுற் றும்யான் வீடுணசை செய்தேன்
புண்ணியா நினாதருள் கொலோ வெனைப்
புகலு வித்தனை பொருவில் வித்தையே.

2. வாதம் வந்தபோ தோடும் வங்கமே
மாரி தந்தபோ தேரி கொள்வதாம்.
ஆதவன் வரிற் காண்ப கண்கள் போல்
அருள் தெய்வம் பெயினடிமை தோயுமே.

3. கண்ணனுக் கர்ப்பணஞ் செய்யவோர்
கைம்முத லற்றவன் யானரோ
எண்ண முரைசெய லோடெனை
என்று முடைய னவனன்றோ.

4. கஞ்ச மஞ்சுநின் பதங்கமழ்ந்த கந்த முண்டுதன்
சஞ்சலந் தவிர்ந் தெனெஞ்சவண்டு தங்கலென்றரோ.
வெஞ்சினங்கொள் வஞ்சர்துஞ்ச வென்றுதஞ்ச மென்றவள்
வஞ்சினம் புரிந்த குந்தி மைந்தர் பங்கி னம்பனே.

5. ஒருமுதற் கடவு ளேழுலகு மாரமுதெனா
உளனிடைப் பருகு மாறுரைசெய் கீதையினைநீள்
திருவுடைத் தமிழ்சொனான் சிதைவில் தாழிசையினே
திகழ்நயித் துருவ காசிப னிரா கவனரோ.

6. இறைபடைத்த பூவை யிறைபடைத்த நாரை
இறைபடைத்த கண்ணா லினிதாய்ந் -திறைபடைத்த
கையா லிறையடிக்கே கட்டுதல் போலவ்வடிக்கே
எய்யாது கட்டினே னீ து.

நைத்ருவ காசிபன் ஸ்ரீ ராகவன் செய்த
கீதைப் பாட்டு நிறைவேறியது.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

(எண்: பாட்டுத் தொடர் எண்)*

## அ


| | |
|---|---|
| அக்கரங் கட்குளகாரம் | 405 |
| அகங்கரிப்புவலி கருவ | 590 |
| அகங்காரடம்பமவற்றோடு | 601 |
| அகத்தார் தியானத்தினானே | 514 |
| அகந்தையுற்றியானமர் | 683 |
| அகமடக்கமிலனா | 269 |
| அகமிப்படி யெப்பொழுது | 248 |
| அச்சுதா வுனதருளின் | 697 |
| அசித்தா ருயிர்க்கு | கீ.பொ.19 |
| அடியுமிடை முடிவு | 433 |
| அணையிலிருந்து மன | 245 |
| அத்தனொருவனுக்கே | கீ.பொ.25 |
| அதனா லுயர்பா | 204 |
| அதனா லெனையெப் | 317 |
| அதனான மறையோதுவர் | 620 |
| அதனா னினக்கொன்று | 596 |
| அதிக நசையானே | 658 |
| அதிக னெனலாகுந் | 279 |
| அதிபயங்கர மெயாயாரை | 445 |
| அதிபூத மாறுமியல் | 314 |
| அதிரகசிய யோகிதனை | 699 |
| அதிற்புத்தி யுற்றா | 221 |
| அதினினைச் சரணடைந் | 458 |
| அதுதா னொளியுள்பொருள் | 507 |
| அதுபூத மகத்தும் | 505 |
| அதுபூத மிடைப்பல | 506 |
| அதை யோகமென்னும் | 256 |
| அதைரவி விளக்கலிலை | 558 |
| அந்தக் கருமங்கள் | 347 |
| அந்தணாளர் சத்திரியர் | 665 |
| அந்தப் படிவம்விழி | 418 |
| அப்படிக்கல தெனதிடன் | 478 |
| அப்படிக் குருசிரத்தை | 302 |
| அப்பழைய தாகியுள | 165 |
| அம்மர துள்ளன | 553 |
| அமரர்க்குள செல்வம்விடு | 577 |
| அமரர் யாருமவித | 429 |
| அயலிற் சயியாமன | 260 |
| அயிறன் மிதமாகி | 250 |
| அரசுஞ் சுகத்தோ | 32 |
| அரியாய மகத்துவ | 423 |
| அரியினதத்தகு மிகவுய | 701 |
| அருச்சுன பிராணிமுழு | 411 |
| அருச்சுன வுனக்கினி | 414 |
| அருச்சுனற் கிடர் | பாயி.25 |
| அரைதலை கிரீவ மிவை | 246 |
| அவ்வாறருளா | 48 |


---

* எண்களின்முன் பாயி. என்பது பாயிரம்;
கீ.இ. என்பது கீதை இயற்பொருள் விளக்கம்;
கீ.பொ. என்பது கீதைப் பொருட்டொகை;
கண். என்பது கண்ணன் திருவருள் போற்றல்.

| | |
|---|---|
| அவ்விடன் யாதெப்படி | 493 |
| அவமானமு மானமு | 549 |
| அவரப் பெருக்கத் | ப59 |
| அவரிவ் வுலகத்தை | 580 |
| அவருக் கருளைச் | 383 |
| அவற்கிவண் ணொரு | 273 |
| அவனின் மற்றொருவன் | 693 |
| அவியத்தமதிற் | 330 |
| அவியத்த மதைப்பற்றி | 474 |
| அழல் சோதி பகல் | 334 |
| அழிவில்லது சொல்குறி | 472 |
| அழிவையுள னென்ன | 568 |
| அறநிலைப்படு மமிழ் | 489 |
| அறமனைத்தையும் | 690 |
| அறமார் செருவிது | 80 |
| அறமேவிய வந்தணரவ் | 371 |
| அறமோ தெரியா | 54 |
| அறிதந் தவனாய் | 107 |
| அறிய வேண்டுவது | 179 |
| அறியாதவராய் | 145 |
| அறிவிற் பகுத்தறிவி | 241 |
| அறிவா னொளிர்வுற்ற | 189 |
| அறிவின் வன்மையாற் | 637 |
| அறிவி னொட்பமும் | 546 |
| அறிவு சத்துவத்தா | 541 |
| அன்பு விளைத்து | கீ.பொ.14 |
| அன்புள்ள நினக்கிதம் | 373 |
| அனைத்தஞ் ஞானத்தையு | கீ.பொ.26 |
| அனைத்து நியமிப்பவ | 430 |
| அனைத்துயிர் களுக்குமொரு | 603 |

ஆ

| | |
|---|---|
| ஆசாரியர் தாதையர் | 34 |
| ஆசுரமோ நூல்விதியோ | கீ.பொ.21 |
| ஆசை யென்றுள பாச | 584 |
| ஆதலிற் பொறி | 160 |
| ஆதித்தர் வசுக்கடமோடு | 420 |
| ஆதித்தருக்குள்ளும் | 393 |
| ஆதித்தனிடம்புகு | 564 |
| ஆதிபர னேவிசயன் | பாயி.24 |
| ஆதிபர னோதுமுயர் | பாயி.8 |
| ஆதியங் கடவுணீ | 452 |
| ஆயிரவர் சூரியர்கள் | 426 |
| ஆயுதத் தொருகுலிசம் | 400 |
| ஆயுளொடு ஞானம்வலி | 604 |
| ஆராதனம் வேள்வி | 131 |
| ஆரெற் கிலையைப் | 364 |
| ஆவற்படுகில் | 155 |
| ஆழமொடு நீளமு | பாயி.18 |
| ஆறனியல் யோகு | கீ.இ.6 |
| ஆன்மா வினிலா | 149 |

இ

| | |
|---|---|
| இகல் தொடங்குமிவ | 22 |
| இங்கிவ் வுடற்கணதி | 312 |
| இசையுமிட னியன்றவர் | 4 |
| இடர் செய்வதிலா | 377 |
| இடர்வ ருத்துமன | 47 |
| இட ராகவே கொண்டு | 632 |
| இடனாய மெய்யவ் | 638 |
| இணங்கிப் புவிபுரப்ப | கீ.பொ.7 |
| இதயந் திருமல | 112 |
| இதயமொடு பொறி | 159 |
| இதரதேவரன்புடையர் | 361 |
| இதன்கட் டொக்க | 87 |
| இதன்பின் கவிக்கேதனன் | 20 |
| இதனால் விழைவற்று | 138 |

| | |
|---|---|
| இதுகாமம் ரசோ | 156 |
| இது கொலும்மென | 66 |
| இது சாங்கிய புத்தி | 86 |
| இது ஞான மடைந்து | 526 |
| இதுவே ரகசிய | 572 |
| இந்தக் கன்மத்தின்கணே | 97 |
| இந்த மரத்துருவை | 554 |
| இந்தவித மாயவுணர் | 581 |
| இப்பகடி யின்வச | 346 |
| இப்படிக் கிரகசிய | 687 |
| இப்பான்மை மெயிற்பர | 512 |
| இயவுளர் தம்மைச்சத் | 600 |
| இயற்கையா னெய்தும் | 684 |
| இயற்கையி னிகழ்தும் | 672 |
| இயையு முணர்வுற்றுப் | 613 |
| இரண்டெனிய னித்த | கீ.இ.2 |
| இருடி கேச கோவிந்த | 56 |
| இருடிகேச நினதிசை | 450 |
| இருடிய தெலாமுரை | 385 |
| இருடியாய்க் கொள்வரான் | 494 |
| இருதயத்தின் பிராணணின் | 657 |
| இருதளத்து நாப்ப | 57 |
| இருப்ப சத்தினுக் | 63 |
| இருப்பற்றியங்கும் | 267 |
| இரும்புவியோர் தேற | கீ.பொ.33 |
| இருமைவிட லாயினவை | 229 |
| இருவினைத்தளை பாறிய | பாயி.20 |
| இருனினுக் குறூஉம் | 594 |
| இவ்வண்ண மாமென்ற | 272 |
| இவ்வாறிருக்கத் தனைத் | 640 |
| இவ்வாறறிவின் | 162 |
| இவ்வாறு சமர்ப்பண | 366 |
| இவ்வாறு சுருங்கமெய்யும் | 508 |
| இவ்வா றுடலோடுயிர் | 524 |
| இவ்வாறு தெரிகிற் கிலார் | 515 |
| இவ்வாறுளயான் | 468 |
| இவ்வுட லிளமை | 60 |
| இவன் புலப்படா | 72 |
| இவன் வெட்டுறாதவ | 71 |
| இவனிறப் பதிலை | 68 |
| இவனெப் பொழுதத்து | 67 |
| இவனைப் படைகள் | 70 |
| இவை மூன்று குணங்கள் | 545 |
| இறப்பையே யிராசத | 539 |
| இறவாது விகாரம்மிலை | 551 |
| இறைக் கலையிதாகும் | 340 |
| இறைபடைத்த பூவை | கண்6 |
| இறைவன் மகிமை | கீ.பொ.13 |
| இறையைத் தியானித் | கீ.பொ.30 |
| இன்பொ டெப் பொழுதும் | 483 |
| இன்னும் வேறுபல் | 9 |
| இனிதாய் நினதாகிய | 465 |


## ஈ


| | |
|---|---|
| ஈதுதவ மிலனுக் கோதுங் | 691 |
| ஈதுனாது மான்மிய | 455 |
| ஈதெனா லிது போதி | 585 |
| ஈதேயலாமற் றெருள் | 275 |
| ஈரா றெனு மியல் | கீ.இ.12 |
| ஈரெட் டெனு மியல் | கீ.இ.16 |
| ஈரேரெழனு மியல் | கீ.இ.14 |
| ஈரொன்ப தெனியல் | கீ.இ.18 |


## உ


| | |
|---|---|
| உடலத்தின் மனத்தி | 215 |
| உடலமிஃ திடனென | 491 |

உடல முழுவதினு 492
உடலான் வினையோ 134
உடலேய் பவனால் 635
உடனின் றுளவாய 511
உண்பிக்க விண்ணோரை 130
உணரவல சீவன் 543
உணவா னுயிரின் 133
உய்த்துப் படைக்குமவைக் 404
உயிர்கட் கிறைமுனம் 129
உயிர்நிதமு மெய்தும் 501
உயிரிற் புணர்வுள் 216
உயிரின்க ணொர் நிச் 88
உருவமிஃதுடைய யான் 462
உரைய வற்குமதி 12
உலகப் பிரவர்த்தி 556
உலகீ தெலாமும் 342
உவர் வெறுப்பிலன் 486
உவையனைத்தையுந் 108
உளமென்கண் வைத் 381
உளனா லுயிர்களை 238
உற்றியங்குமுலகை 348
உறவே தகவில் கீ.இ.1
உறுகேசவன் வாய்மொழி 449
உறுதமோ குணமோ 532
உறைபவனும் யானே 567
உன்யோகமோ டின்னும் 390
உன்றன் னிதயத் 100
உன்னொப்ப வெனக்கு 167
உனக்குரிய தன்மம் 78
உனக்கென் திவியப் 391
உனகன் ணிவையேகொடு 422
உனையெப்படி யோதினை 417

ஊ

ஊக்கத்துடன் முயல் 278
ஊடுபோர்த்துளேன் 305
ஊழிமுடிகாறுமள 583

எ

எங்கணுங் கரங்களுட 503
எங்குஞ் சமநோக்கிய 262
எங்குள னாவன்யோகீ 702
எங்ஙனம் பலவிறகை 199
எஞ்ஞான மறிந்து 282
எட்டெனியல் செல்வ கீ.இ.8
எடுக்கும் மருந்தில் 252
எடுத்துமுய லாததெது 184
எத்தயிரி யத்தனை 62
எத்துண வேள்விகட்குத் 362
எத்தொழிற்குஞ் செய்கர்த்த கீ.பொ.22
எதனால் நிறைந்த 64
எதனானறமும் மறமும் 655
எதனைச் சரியாச மெனச் 235
எதனை யெய்திவே 255
எதிருதவுதற்கும் 617
எதுசுகம் முதலில் 661
எதுசுகம் முதலினும் 663
எது செய்குதியோ 365
எதுதா னறியத் தகுமோ 502
எது தெரிந்து முனிவர 525
எது பிரமற்குப் 327
எதுவே துயர்வோன் 140
எதுவோ சுகந்தான் 254
எதையோர்ந்த சுபத்தின் 339
எந்தப்பொழுதத்தி 251

| | | | |
|---|---|---|---|
| எந்தெந்த விபூதிக | 388 | எவனுஞ்சமமாக | 518 |
| எந்தவித தாருக்குள்ளு | 398 | எவர்க்காக யாம்ராச | 33 |
| எந்தவிதம் வானிடை | 344 | எவர்கட் குயிர்பற் | 220 |
| எந்தவேளை சத்துவம் | 538 | எவர்தமக்கு மொரு | 599 |
| எப்போது புலங்க | 105 | எவர்நூல் விதியைப் | 597 |
| எப்பொழுது மற்புடைமை | 352 | எவர்மானிட ரென்மத | 150 |
| எப்போழ்து புறப்படும் | 333 | எவரிடத்தினு மினி | பாயி.17 |
| எப்போழ்தினுமவ் | 316 | எவரென் மதமீ | 151 |
| எரியெவ் வணமறை | 157 | எவரென்று முனோடியை | 470 |
| எரிவாய் களினாலுலகங் | 441 | எவைபல் வினையும் | 519 |
| எல்லாப் பொருளும் புகும் | 522 | எவன்கன்ம பலங்கள் | 182 |
| எல்லா மழிக்குமிருத் | 406 | எவன் சாத்திர விதியினை | 595 |
| எல்லா ரகசியமுள்ளும் | 688 | எவன் மகிழ்வனோ | 228 |
| எல்லாரது மெய்கொலை | 77 | எவன் விருப்பிலன் | 485 |
| எல்லாவபி மானமும் | 183 | எவன் வினைசெயும் | 125 |
| எல்லா விடத்தின்கணும் | 673 | எவன் வினையிலே வினை | 180 |
| எல்லாவித சாதியினும் | 528 | எவன் வேறியார்கண்ணு | 550 |
| எல்லாவித கன்மமுமென் | 475 | எவன் னேதிலன் போலிருந்தே | 547 |
| எல்லாவித சாதியினும் | 528 | எவனதெல்லாவினை | 181 |
| எல்லாவித பாவனை | 686 | எவன ைதம்பொறிகள் | 115 |
| எல்லாவித பூதங்களி | 517 | எவனான் பொறாமை | 695 |
| எல்லாவுயிர் மீதும் | 482 | எவனிடைப் புவிவெருளுவ | 484 |
| எல்லா வுலகுக்கு | 233 | எவனிப்படியே குணனோடு | 513 |
| எல்லாவித விந்தியங்க | 504 | எவனிப்படியே புருடோத் | 571 |
| எலாவுயிர்க்கு மிர | 116 | எவனிவ்விதமே | 135 |
| எவ்வது விடயம்மொடு | 662 | எவனின் னுயிர்கட்குதயம் | 670 |
| எவ்வாறு பதங்க | 443 | எவனினைப் பயங்கர | 641 |
| எவ்வா றெனை நோக்கினை | 467 | எவனுண்மன்பதையி | 332 |
| எவ்வெக் காலத்திற் | 169 | எவனெவற்றினும் | 104 |
| எவ்வெவ் விதத்திற் | 259 | எவனென்னிடத்தே | 280 |
| எவ்வெவ்வுளசீவன் | 413 | எவனென்னை எல்லா | 263 |
| எவ்வேது வினாவழி | 570 | எவனொன்று படுதன்மை | 264 |
| எவ்வோர் நிலை சாங்கி | 209 | எவனோ வறமோடு | 694 |

| | |
|---|---|
| எற்கெதைச் சொனாய் | 386 |
| எற்பற்றிய யோக | 480 |
| எற்பற்றுளனிற் | 281 |
| எற்புண ராதவனுக் | 113 |
| என்கண் மதி வைத்தவ | 682 |
| என்கணேபுக வுய்ப்பை | 477 |
| என்படைக் கெவர் | 7 |
| என்பத்திமையுள்ள | 689 |
| என்பத்தியினர்க் குயர் | 692 |
| என்வடிவ மேது விழி | 466 |
| என்றனா லதமுண்ட | 448 |
| என்றாய் பதுமா | பாயி.16 |
| என்றிப்பிய சென்மமும் | 171 |
| என்றிப்பிய மாகும் | 412 |
| என்றுதான் பொறி | 237 |
| என்று மென்னுடன் | 382 |
| என்னதே யெனு மமிச | 559 |
| என்னிட னுயிர்த்தொகை | 343 |
| என்னிப் படியாய | 463 |
| என்னை மதுசூதன | 35 |
| எனக்கு வினைசெய்பவ | 469 |
| எனது தேரையிரு | 21 |
| எனைப்பயிற்சியி | 479 |
| எனையுள்ள முளோ | 372 |
| எனை யடைந்தெலா | 680 |
| எனை யடைந்துள பெரு | 325 |
| எனையருள வத்யாத்தும | 415 |
| எனையிப்படி யோர்ந்து | 177 |
| எனையேனிவண் சிற | 375 |

ஏ

| | |
|---|---|
| ஏகாந்த மாயழிவே | கீ.பொ.32 |
| ஏதக்கரம் புகல்வார் | 321 |
| ஏதறிந்து திரும்ப | 197 |
| ஏதுதான் விழைவினைச் | 36 |
| ஏவ னென்னதா | 379 |
| ஏழெளியலில்லிறை | கீ.இ.7 |

ஐ

| | |
|---|---|
| ஐந்துவித மாயபெரும் | 495 |
| ஐந்தெனிய லிற்கரும | கீ.இ.5 |
| ஐயமற்றவன் அறிவன் | 634 |
| ஐயோ பெரும்பாவஞ் | 45 |

ஒ

| | |
|---|---|
| ஒத்ததெவ் வகைப்பட்ட | 367 |
| ஒத்துள்ளுணர்வின் | 223 |
| ஒப்பில் கலப்புடைய | 121 |
| ஒப்பிலாத் தெய்வந்தன் | கீ.பொ.15 |
| ஒப்புமை வுயிர்க்குடைமை | 265 |
| ஒருசில ரறிஞர் | 627 |
| ஒருசூரிய னெவ் விதமா | 523 |
| ஒருநிலை கொளாதான் | 271 |
| ஒருநூறு விதமன்றி | 419 |
| ஒருபகல் வரிந் | 328 |
| ஒருபர மாத்துமனென் | 569 |
| ஒருபாண்டு மகாரணி | 2 |
| ஒருபிரக லாத னதிதிசுத | 402 |
| ஒரு பிறப்பினை | 74 |
| ஒருபொருளி லேதான் | 520 |
| ஒருமுதற் கடவு | கண்-5 |
| ஒருவன் பவமொழிவிக் | 219 |
| ஒருவன் வியப்புளதென | 76 |
| ஒருவ னொருக்காலும் | 124 |
| ஒவ்வொரு பொறிக்குமுரி | 153 |
| ஒறுப்பவர்க்குளே | 410 |

ஒன்பதெ னியற்கணிறை கீ.இ.9
ஒன்றல் பல கண்ணர் 424
ஒன்றலாத பலநினை 588
ஒன்று மநேகமும் 554-555

ஓ

ஓம்தத்சத் தெனமூ 619
ஓராயிரவர் மனிதர்க் 283

க

கஞ்ச மஞ்சுநின் கண்.4
கண்டுகேட் வுணர்வுற்று 212-213
கண்ணனுக் கர்ப்பணம் கண்-3
கண்ணநின்கழற் கண்-1
கணனஞ்செய்வானேன் 446
கதி தரிப்பவன் 356
கந்தை யாய துகில் 69
கருத்தினைப் பிருதைக்கு 476
கருவ மின்மை பொறை 497
கற்ப முடியும் போதி 345
கன்மத் தொகையெற் 176
கன்மம் விடுஞான 205
கனப்புயத்தனே பகடியிற் 529

கா

காசிக் கதிபதி 5-6
காண்டிவமென் கைப்பிடி 30
காதாதிய பொறியை 188
காமிய பலன் மருவு 626
காரம் புளிப்போடதி 605
காலங் கழிந்திரதஞ் 606
காலமிடந் தகுதி 616

கி

கிட்டிய தனஞ்சய 95
கிருது நானுயர் 354

கு

குடிகெடுத்தவர் 43
குடிதீய வினைகுற்ற 38
குணத்தின் கன்மத்தின் 147
குணத்தினும் வினைக் 175
குணப்பாகு பாட்டிற் 643
குந்திக் கொருசுத 592
குந்திசேய் ரசோ 531
குந்திதரு மைந்த 521
குந்தி புத்திரனான 326
குந்திமக னாகிவரு 61
குந்திவயின் வந்தவ 16
குருகையம் பதி பாயி.23
குருதனய வதின்முன் 276
குருமரபி னல்லவரு 193
குருவே நினதடி 3
குலநாசம் வினைகுற்ற 39
குலவறங் கெட 44
குலனோகு குடிகொன்ற 42
குழுமு பொறிமுற்று 473
குறைத்த லிலாப் 81

கெ

கெடுக்க வியலாத 65

கே

கேசவ நிமித்தமென 31
கேசவ னர்ச்சுன 700

| | |
|---|---|
| கேட்கவவதாரங் | கீ.பொ.8 |

### கொ

| | |
|---|---|
| கொலப்படுவை யாயினுங் | 84 |

### கோ

| | |
|---|---|
| கோரப்பல் பிறழ்ந்து | 441 |

### ச

| | |
|---|---|
| சகமிதற்கு நான் | 355 |
| சங்கர னாவலுருத் | 395 |
| சத்துவ குணத்தருயரச் | 542 |
| சத்துவ குணம் பாரதா | 534 |
| சத்துவ சுத்தியுளத் | 573 |
| சத்துவத்ததிராசத் | 598 |
| சத்துவஞ் சுகத்தாசை | 533 |
| சநியா சத்தினதும் | 625 |
| சமமிலாத பிரதாப | 457 |
| சருவவித பூதமொடு | 645 |
| சலிக்கின்ற நெஞ்சைத் | 268 |

### சா

| | |
|---|---|
| சாங்கியமும் யோகமுமே | 208 |
| சாங்கியர்க்கென | 122 |
| சாதுக்களைப் பரி | 170 |

### சி

| | |
|---|---|
| சித்தியெய்தினோன் | 674 |
| சிந்திப்பின் விளைகின்ற | 257 |
| சிந்தைய நதித | பாயி.3 |
| சிரத்தை யற்றெது | 624 |
| சிரத்தையித் தருமத் | 341 |
| சிரத்தையொடு கூடிய | 270 |
| சிலர்பிறர் ஞான | 353 |
| சிலர் யோகியர் தெய்வத | 187 |
| சிறையிற் றிகழ்போதுந் | பாயி.19 |
| சினமொடுறு காமமது | 593 |

### சீ

| | |
|---|---|
| சீரறிவுடைப் பிருதை | 698 |
| சீவனுடனே பகடி சேர | 509 |

### சு

| | |
|---|---|
| சுகதுக்க சமத்தொடு | 548 |
| சுசியா மிடத்தினிலை | 244 |
| சுரர்கள் குழு வோவிவை | 435 |
| சுரர்களொடு பனவர் | 610 |
| சுரரீச வநந்தா செகன் | 451 |
| சுருதியுட் சாமமறை | 394 |
| சுற்றத்தொடுந் திருத | 37 |

### செ

| | |
|---|---|
| செகமாந்தர் பராவமிழ் | பாயி.13 |
| செய்கரும யோகின் | கீ.பொ.9 |
| செய்ததினவற்கொரு | 137 |
| செயத்தகும் மெனவே | 633 |
| செயன் முடித்துவிடு | 123 |
| செல்வமதை வேண்டிற் | கீ.பொ.27 |
| செல்வ மழியாத | கீ.பொ.12 |
| செல்வமுளனல்லகுல | 587 |
| செலவினை யிடையூற் | 649 |
| செவிவாய் விழிமூக்கொடு | 561 |

### சோ

| | |
|---|---|
| சோகிக்க வொண்ணாத | 58 |

சோதிமய மாகிமுழு 461
சோதிமய வெள்ள 431

### ஞா

ஞானத்தி னாலைய 203
ஞானத்தை யில்லார் 602
ஞான தவத்தினி 172
ஞானநிலை நின்றமன 185
ஞானமோடு நிக 200
ஞானியோ வேகாந்தி கீ.பொ. 29

### த

தத்தங் கருமஞ் கீ.பொ.1
தமசான மறையுண் 656
தமைப் புகழுகிற்பவர் 589
தயிரியம் விரகு சவுரியம் 667
தரும மாநிலக் 1
தரையும் விணு மிவையி 434
தரை விசும்பெலா 19
தவமேது வெகுமான 614
தவளமேனி நில பாயி.2
தழுவிப் பொறியின் 685
தற்கொடு செயத்தகு 671
தன்கன்ம மாதி கீ.பொ.31
தன்ம சிந்தையனாம் 369
தன்மெய் விடுமுன் 227
தன்வயப்படும் பொறிக 111
தன்றன் கருமத்திற் 669
தன் வளத்தினில் 277
தன்னூ னியல்புந் கீ.பொ.17
தனஞ்சயா தனித்தனி 653
தனியின் மற்றுளபலர் 456
தனிவதிந்து சிறிதை 676

### தி

திகிரியங் கரமுடன் 460
திடமுடைப்படை 46
திப்பியமாகிய தார் 425
திரமியையு மாறுயிரை 261
திரிலோகு முளனாமெனக் 141
திரிவிதத்த கலைஞர் 358
திருதராட்டிரன் மகாரென 440
திருவைத் திருமாலை கீ.பொ காப்பு
தினமும் பயிறலினும் 481

### தீ

தீங்கிழையாமை பிறர் 574
தீதுசேர் துராசார 368
தீதுவினை சூழவரு 41
தீர்த்தம் படிதறவஞ் கீ.பொ.23

### து

துய்ப்ப தொழிவுற்றுட 106
துயரினசையாத 103
துயிலை நியமிப்பவ 392
துயிலை யாளு மவனி 24
துருமதி யுளோனெனத் 659
துளையொன்பதுடைப் 217
துன்ப மின்பமோ 85
துன்னிய நல்யோகத் கீ.பொ-2
துன்னுகுல நாசமுறு 40

### தெ

தெரிதந்தவனுந் 152
தெரிதற்குரிதா முயரக் 432
தெரிந்துகொள லில்லவன் 202

தெரியார் கருமத்தினி 144
தெரிவு தேர்பொருள் 642
தெருளதாய் மறைவரும் பாயி.7

## தே

தேசு பொறைக்கணிலை 575
தேகமுள சீவனுடலிற் 544
தேசமில் தேசத்திலுங் 618
தேவ அமரேச செகன் 459
தேவர் சங்கமுமென் 374
தேவ ரசுரர் குணஞ் கீ.பொ.20
தேவரை யெய்துவர் 363

## தொ

தொட்ட பெண்டுசே 499
தொடர்விட் டியானென்று 650

## ந

நதிமேய பலவாய 442
நயஞ்செய் வினைக்குப் 540
நலசித்தியினை 139
நலவிருப்புளார் நடுவ 242
நள்ளா விடத்துச் செய் கீ.பொ.5
நன்றொழுக லுற்றுவிடு 154

## நா

நாதமுனி பேரர் பாயி.9
நான் கெனியலிற் பிருதை கீ.இ.4
நான் விவச்சுவாவுக்கு 163

## நி

நிகழ் வேள்வி ஈகை 623
நித்த வுயிர்க்க கீ.பொ.6
நிதமும் துயில் வென்றவ 421
நியமி யாது மந்திர 609
நிரப்ப முடி யாமலுள 582
நிரப்புதற் கரிது போது 158
நிலைமற் றிதினெழுவாய் 447
நிலையாக விரதம் 190
நிலையாய சமாதிகொ 101
நிற்கு நம முன்னுமதன் 454
நிறைந் தசைவிலாது 117
நின்றுயிரை யே நினையு 102
நின்னிடத் திதமிலா 83
நின்னுடன் வீடுமர் 8

## நீ

நீதியாயு விபரீத 639

## நெ

நெடுநீள் சினனால் 110

## ப

பகடிக்கு ணானே 148
பகடியுயிர்கள் கீ.பொ.4
பகல்வரின் னவசமாகி 329
பகைத்தவ னிவன்னுயிர் 586
பகைநண்பினிலப்படி 487
பஞ்சசனுடற்கண் வரு 15
பத்திமையின் மேம்பா கீ.பொ.16
பத்தியினுக்குயிரை பாயி.28
பக்தெனியல் பத்திவினை கீ.இ.10
பதின்மூன்றுதனிடனா கீ.இ.13
பதினொன்றில் விசயன் கீ.இ.11
பதினேழெனுமியல் நூல் கீ.இ.17

| | |
|---|---|
| பயன்விழை கிற்பவ | 648 |
| பயிர்விளைத்தல் பகவினை | 668 |
| பயில்வுற்ற யோகிற் | 318 |
| பரதசத்தம புருடர் | 628 |
| பரதத்துவத்தின் | கீ.பொ.3 |
| பரதர்க்குள் விடையொப்பை | 516 |
| பரதரேறிதே போதின் | 660 |
| பரதரேறு லோபம் | 536 |
| பரதன் வழிவந்து | 291 |
| பரம்பரையினில்வண | 164 |
| பரம்பொலொருவந்தம் | கீ.பொ.24 |
| பரமவக்கரம் | 313 |
| பரமென் பிரமம் | 384 |
| பரவா னளாவிச் | 438 |
| பரிகட்குளமிழ்தத்தின் | 399 |
| பலதுறைக்குளு | பாயி.14 |
| பலமுகங் கள்கண் | 437 |
| பற்பல் பிரிவிற் | 644 |
| பற்றற் குறுவிடயங் | 118 |
| பற்றி யொழுகும் வழியும் | 579 |
| பற்றினிற் பெயரு | 114 |


### பா


| | |
|---|---|
| பாடுபெறு வேதமுடி | பாயி.6 |
| பாண்டுவிற்கொரு சேயவ் | 427 |
| பார்முழுது ஞானவொளி | பாயி-11 |
| பாரதர்க் கரசெது | 608 |
| பாரத பரந்தப | 307 |
| பாராசரியன்னசிதன் | பாயி.5 |
| பாரையு நடாவிமிசை | பாயி-4 |
| பாவ காரியர் | 198 |


### பி


| | |
|---|---|
| பிந்தியாயது நின் | 166 |
| பிரகலாதர் | பாயி-1 |
| பிரமக் கருவிப் | 186 |
| பிரமந் தெரிந் தோன் | 224 |
| பிரமப் பெயரைக் | 323 |
| பிரமமடை விக்குமிது | 119 |
| பிரமமாகி மலர்கின்ற | 678 |
| பிரம மென்பதில் | 214 |
| பிரம வாயிலாய்ப் | 194 |
| பிரளயத் தெரி நிகர்வுற | 439 |
| பிராண னெனப்படு | 191-192 |
| பிருகத் தெனுஞ்சாமஞ் | 407 |
| பிருதைக் கொருபுதல்வா | 578 |
| பிருதை சேய்தனஞ் | 696 |
| பிருதைசேய் பரந்தப | 50 |
| பிருதை சேயமரர் | 351 |
| பிருதைமக னங்கண் | 26-27 |
| பிருதை மைந்த | 622 |
| பிருதைமைந்த புரோகித | 396 |
| பிருதை மைந்த விவ்வினை | 630 |
| பிறப்பிற் கன்மத்திற் | 90 |
| பிறவா துளனாகியு | 168 |
| பிறவிக்கிடனா யெனதாய | 527 |
| பின்பு சங்குபல | 13 |
| பின்னர்த் தனஞ்சயன் | 428 |
| பினர் வெண்பரிகள் | 14 |
| பின்னு நிச்சலும் | 73 |
| பினுமர்ச்சுனனுக்கறை | 464 |


### பு


| | |
|---|---|
| புகழும் பழியுஞ் | 488 |

புகுகாரிய மெய்யொடு 510
புகுங்குணத்தினாற் 146
புகையும் மிரவும் 335
புத்தி யோகினிற் 96
புத்தி வினைக்குயர்வா 120
புந்தி கெட்டவன் 23
புந்தி விவேகமோக 376
புரிவை முனிவைப் 230
புருடோத்தம சகநாத 387
புலப்படா முதற் 75
புவியிற் பகையடு 55
புறனிற் பொறிதொடலைப் 231

பூ

பூசைகொ ணயித்துருவ பாயி.22
பூமிக்க னுழைந்துகொ 565

பெ

பெட்ட லுளன்கன்ம 651
பெருக்கு மகிமைக்குரவ 52
பெரும்புய முனிந்திலன் 207
பெருமயல் பிரமாத 537
பெருமித மிடம்பஞ் 576

பொ

பொருண்மயத்தவேள் 195
பொறிகடா முதன்மை 161
பொறிதாம் மனதா 126
பொறிதொடும் விடய மீது 498
பொறியாள் பவனா 569
பொறியு மனமும்புத்தியு 232
பொறியைந்து 201
பொறியொடுங்குவது 666

போ

போகமொடு செல்வமிசை 91
போர்பொருவ திற்பெரிது 28-29

ம

மகருசிகட் குள்யான் 397
மகிழ்விற் றுயர்க்கனுறு 240
மடவர் படைப்பது 49
மடியிலா மலெப் 142
மண்ணியே யலது 664
மண்பிறந்த இவர் 378
மண்புனல் தழல் 284
மண்ணிற் பணிவுற் 196
மதியோக மடைந்தறி 681
மதுசூதன சமமாதல 266
மயன்மானமற நின்று 557
மரண தருணத்து 320
மரணத்தொடுமுடன் 309
மலிகத்த புத்தியொடு 675
மற்றஃ தவியத்தமு 331
மற்றவற்ளே சத்துவந் 530
மற்றுமோர் தெய்வம் கீ.பொ.28
மறைமுக் குணமுற் 92
மன்னுயிர்க் குயர் 349
மனதின்தெளி வெவரிடனும் 612
மனம் விழைவறுத் 243
மனம் வென்றுபொறி 211
மனமகங் கொளுதல் 677
மனமென் கணிருத்தின 471
மனித ரேவரெனை 360
மனிதன் னெவனோ 136

மி

மிருசமன மனமுடனும் 247
மிகுவிடுப்பவற் குளதில் 249

**மீ**

மீதுள வேரதுவாய்க் 552

**மு**

முக்குணங்கள் கட்டு கீ.பொ.18
முந்தாயுயிருண்க 416
முந்துஞான பாயி.12
முயறல்லுள யோகியர் 563
முயறலின்றியு 79
முழுவதற்கு முத்பத்தி 380
முன்விசயன் துயரம் பாயி.25
முனர்ச் சோகம் பாயி.27

**மூ**

மூடர் நராதமர் 295
மூடர் பிடிவாதத் 615
மூவைந்தில் சித்தரா கீ.இ.15
மூன்றெனியல் பாரொடு கீ.இ.3

**மே**

மேனிமற்றிதிற் பொறிகள் 535

**மோ**

மோகக் கலக்கமுன் 99
மோகம் விளைப்பது 350

**யா**

யாகத்தினைப் பண்ணி 132
யாங்கனம் புனனிறை 93
யாதவர்க்குள் வசுதேவ 409
யாது போது முனை 389
யாது வினை யாதுவினை 178
யாதோர் செயற்கனொளார் 646
யாம் வெல்லுதுமோ 53
யார்தா மெனினும் 370
யாருக்கு மதிப்பவ 82
யாரெப்படி யென்னை 173
யானிரா மன்படைகைக் 403
யானுள்ள னில்லையென 59
யானெத் தகையுள்ளவ 679
யானெரிப்பலர்ச் 357
யானே கன்மத்தை 143

**யோ**

யோக சேவையா 253
யோகப்பயிற்சி விதி கீ.பொ.10
யோகின் னழுவுற்றவன் 274
யோகிளேற விழை 236

**வ**

வசுருத்திரர் சாத்தியரார் 436
வஞ்சக ருக்குட்கு 408
வயிற்றின் வளர்சாடர 566
வருணன் யான்புனலுள் 401
வழிகளிவையுணர் 337
வழியா மொளியு 336
வளையொடு சக்கரமும் பாயி.15

**வா**

வாதம் வந்தபோ கண்.2
வாயுவு முயலுடன்மதி 453
வாழிய மேதைச் பாயி.21

## வி


| | |
|---|---|
| விட்டொழுகு மாறுந் | 654 |
| விடத்தகாத கன்மங்க | 631 |
| விடயங் கருதும் | 109 |
| விடயமுனு மேனு | 562 |
| விடயமைந்து பொறி | 226 |
| விடவொ ணாதவினை | 127 |
| விதித்துள்ள தாயுந் | 647 |
| விதி தெரிய வந்தவெது | 607 |
| விநயம் வித்தைகணிறை | 222 |
| வில்லிற் றலைமைகொள் | 17-18 |
| விழைவுடன் வெறுப்பது | 496 |
| வினைகளுக் கியைபிலன் | 652 |
| வினைசெய்து விடல்செய் | 636 |
| வினையி லேயதி | 94 |
| வினையின் பயனைக் | 234 |
| வினையி னாகுபயன் | 174 |
| வினையிற் றலைமை | 218 |
| வினையுண்டு பண்ணும் | 98 |
| வினையோக மில்லாது | 210 |
| வினையோகமுடன் | 206 |


## வீ


| | |
|---|---|
| வீடுமர் காத்தது | 10-11 |
| வீடுமர் துரோணர் | 25 |
| வீரியத்தி னாசெய்து | 258 |


## வெ


| | |
|---|---|
| வெருள்தர விழுவர் | 611 |
| வெளியிற் பொறிதொடுதற் | 225 |
| வென்றுபகை கொன்றமது | 51 |


## வே


| | |
|---|---|
| வேட்கை பயன்கண் | 621 |
| வேதம் சொலப்பெற்ற | 89 |
| வேதவுரை கொண்டுநல் | பாயி.10 |
| வேது மீதுபல | 338 |
| வேள்வி தெரிவுற்றியலு | 192-193 |
| வேள்விப் பொருட்டுள்ள | 128 |
| வேள்வியோடு தானந் | 629 |
| வேறொன்று கலவாமை | 500 |


